குருதிப்பிரளயம்

Pr. Romilton

குருதிப்பெருமழையின் இரைச்சலொன்று இங்கு தேசத்திலே கேட்கப்படுகிறது.
அதின் கையளவு மேகங்கள் ஆங்காங்கே இப்பொழுதே தெரிகிறது...

குருதிப் பிரளயம்

Pr. S. Romilton

முதல் பதிப்பு : நவம்பர் 2022

புத்தகங்கள் கிடைக்குமிடம் :
அடைபட்ட அக்கினி
246-B, Pocket-C, Mayur Vihar,
Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

சில வரிகள் உங்களுடன்...

பாஸ்டர்.
ரொமில்ட்டன்

இந்திய எழுப்புதலின்
பெருமழைக்கு முன்னே குருதிப்
பெருமழையின் இரைச்சலொன்று
இங்கே தேசத்திலே
கேட்கப்படுகிறது. அதின் கையளவு
மேகங்கள் மாநிலங்கள் எங்கிலும்
ஆங்காங்கே காணப்படத்
தொடங்கிவிட்டன..

குருதிப்பெருமழையொன்று
சொரிந்து, இரத்த வெள்ளம் வந்து,
கலவரக்காற்று கர்த்தருடைய
வீடாகிய சபையின் மேல்
மோதியடிக்கப் போகும் நாட்கள்
இதோ!

கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போடப்பட்ட சபைகள் மாத்திரமே இக்குருதிப் பிரளயத்துக்குத் தாக்குப்பிடித்துத் திடமாய் நிற்கும்.

ஆவிக்குரிய, புத்தியுள்ள, பக்தியுள்ள சிற்பாசாரிகளினாலே அஸ்திபாரம் போடப்பட்டு, ஆவியினாலும் வசனத்தாலும் கட்டப்பட்ட வேலைப்பாடுகளும் அக்கினியினாலே வெளிப்படப்போகும் நாட்கள் இதோ வருகிறது ! அது தூரத்திலில்லை..

உலக நன்மைகள், மேன்மைகள், ஆட்டபாட்டக் கொண்டாட்ட ஆராதனைகள் மற்றும் ஆசீர்வாதச் செழுமை கொழுமை வளமை இளமை என்னும் மணலின் மேல் கட்டப்பட்ட சபையாகிய வீடுகளும் ஊழியங்களும் வெந்து பொசுங்கப் போகும் நாட்கள் அவை! அக்கினியில் அகப்பட்டுத் தப்பப்போவது எத்தனையோ அறியோம் !

உலக வரலாறு, சபை சரித்திரம், வேதவாக்கியங்கள், நாட்டின் சமகால நிகழ்வுகள் மற்றும் "சீக்கிரம் சம்பவிக்கப்போகும் இவைகளைக்" குறித்த ஒரு எச்சரிப்பின் செய்திகள் அடங்கிய புத்தகம் இது....

"ஜலப்பிரளயமல்ல..
வரப்போவது ஒரு
குருதிப் பிரளயம் ! "

"இந்தக் காரியங்களைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருக்கிறது. அதைச் சகித்து இளைத்துப்போனேன்.. எனக்குப் பொறுக்கக் கூடாமற்போயிற்று..."
[எரே 20:9]

ஜெபத்துடனும்
மிகுந்த எச்சரிப்புடனும்,
Pr. S. Romilton

புத்தக ஆசிரியரைப்பற்றி...

டெல்லியில் மிஷினரி பாஸ்டராகக் கடந்த 30 வருடங்களாகக் குடும்பமாக ஊழியம் செய்து வரும் பாஸ்டர் ரொமில்ட்டன் கிறிஸ்தவ இலக்கியம் மற்றும் எழுத்துப் பணிகளில் தீராத ஆர்வம் கொண்டவர்.

கர்த்தருடைய பாரத்தைத் தனது நெஞ்சில் சுமந்து திரியும் இவர், கடந்த பத்து ஆண்டுகளாக உண்மையான ஆவிக்குரிய எழுப்புதல், இன்றைய தமிழ்க் கிறிஸ்தவ உலகால் அறியப்படாத இரத்த சாட்சிகளின் சரித்திரங்கள், மிஷினரி வரலாறுகள் மற்றும் ஆவிக்குரிய யுத்தம் சம்பந்தமான அரிய பல புத்தகங்கள் மற்றும் தேசத்தின் சமகால சம்பவங்களை வேதத்தின் சம்பவங்களோடு இணைத்து எச்சரிப்பின் செய்திகளாகக் கட்டுரைகளாகவும் புத்தகங்களாகவும் படைத்துப் பதிவிட்டு வருகிறார்.

இவரது ஜெபமும் பாரமும் கர்த்தருடைய இருதயத்தின் பாரத்தை எழுத்து வடிவில் சபைகளுக்குக் கொண்டு சேர்ப்பதே !

இவர் ஒரு ஆவிக்குரிய எழுத்தாளர் மட்டுமல்லாது, நூல் மொழி பெயர்ப்பாளரும் கூட.

"இவரது எழுத்து வீச்சும், மொழி (பெயர்ப்பு) நடையும் பிரமிக்க வைப்பவை. நேரடியாய் நெஞ்சைக் குறிவைக்கும் வாள்வீச்சு வார்த்தைகள் இவருடையவை.. எளிதாய் யாரும் தொட்டுவிடத் துணியாத, அல்லது தொட்டுத் தோல்வி கண்ட லியோனார்டு ரேவன்ஹில் (எழுப்புதல் தாமதிப்பது ஏன்?) போன்றோரது சாகச மற்றும் சவாலிடும், செறிவுள்ள ஆங்கில மொழிநடைக்கு சரிநிகராய் சமர் புரிந்து வெற்றிகண்ட எழுத்து இவருடையது." என்கிறார் இவரது ஆத்ம நண்பரும் போதகருமான ஏனோக்கு ஜேம்ஸ் (Holy of Holies Ministries) அவர்கள்.

இனிமேல் சம்பவிக்கப்போகிறது என்ன?, இந்து தேசம் முதல் இந்துத்துவா வரை, மீண்டும் ஒரு மிஸா, மிஷன் 2024, என்று தணியும் இந்த எழுப்புதல் தாகம்? மற்றும் முற்பிதாக்களின் எழுப்புதல் ஏடுகள் ஆகிய புத்தகங்களின் வரிசையில் இப்போது **"குருதிப் பிரளயம்..."**



இப்புத்தகம் பற்றி...

Pastor. Karthi Gamaliel
Karthi Gamaliel Ministries
Mount Church, Tuticorin

08.11.2022

கர்த்தர் நல்லவர்.

இந்தக் கடைசிக்கால எழுப்புதலிலே தேவன் அருமையான பாஸ்டர். ரொமில்ட்டன் அவர்களைத் தமது எழுத்தாணியாய்த் தெரிந்து கொண்டதற்காகக் கர்த்தருக்கு நான் நன்றி சொல்லுகிறேன்.

கடந்த பல தலைமுறைகளிலே, காலங்களிலே பல தேவ மனிதர்களுக்குள்ளே தாம் போட்ட பரிசுத்த எழுப்புதல் அக்கினி இந்த நாட்களிலேயும், இந்தத் தலைமுறையிலேயும் பற்றிப்பிடிக்க வேண்டுமென்கிற தமது இடைவிடா இருதயத்துடிப்பு மற்றும் பாரத்தை பாஸ்டர் ரொமில்ட்டன் மூலமாகத் தேவன் இந்த உலகத்துக்கு இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

விசேஷமாக இந்த அருமையான **"குருதிப் பிரளயம்"** என்கிற இப்புத்தகத்தை, விலையேறப்பெற்ற ஒரு துலக்கமான அக்கினியாஸ்திரமாய் இந்த தேவ மனிதர் வெளியிட்டு எய்கிறார் என்றே நான் காண்கிறேன்.

இதிலே உள்ள "குப்பைத் தொட்டியில் வேதாகமம்" என்கிற பகுதியை நான் வாசித்தபோது என் இருதயம் கொளுந்துவிட்டு எரிந்தது. கம்யூனிச பல்கேரியாவிலே வேதாகமம் கிடைக்காத அந்த இரும்புத்திரையின் நாட்களிலே, பாதி எரிந்து, கிழிந்து நைந்துபோன நிலையிலிருந்த வேதாகமங்களைக் குப்பைத்தொட்டிகளிலிருந்து பொறுக்கி எடுத்து, அவைகளை அந்தரங்க சபைகளுக்குக் கொடுத்து, அந்தரங்க சீஷனாகிய அரிமத்தேயா ஊரானாகிய யோசேப்பு போன்று உயிரைத் தங்கள் கையில் பிடித்து ஊழியம் செய்துவந்த அந்த நாட்கள் மீண்டும் இங்கேயும் வரக்கூடும். அப்படிப்பட்ட நாட்களுக்கு சபைகளை ஆயத்தப்படுத்தும் வகையிலேயே வெளியிடப்படும் இந்தக் "குருதிப் பிரளயம்" என்ற விலையேறப்பெற்ற புத்தகத்துக்காய்க் கர்த்தருக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

"அம்புகளை எய்யுங்கள். அம்புச் செலவைப் பாராதேயுங்கள்.." என்கிற வார்த்தையின்படி, அருமையான இந்த தேவ மனிதர் தமது பெலவீனமான உடல்நிலையின் உடல் உழைப்புச் செலவையோ, நேரச் செலவையோ, பொருட்செலவையோ, நீண்டநேர கண் விழிப்புச் செலவுகளையோ பாராதபடி இந்தப் புத்தகத்தை அம்பாய் எய்து கொண்டிருக்கிறார். இது தேசத்துக்குள்ளே, திருச்சபைகளுக்குள்ளே, தேவ மனிதர்களுக்குள்ளே கர்த்தருடைய ஜனத்திற்குள்ளே, தேவன் உண்டாக்க நினைக்கும் ஒரு எழுப்புதல் பிரளயத்தைப், பிரவாகத்தை உண்மையாகவே உண்டாக்கிவிடுவதாக!

தேவனே எழுந்தருளும் ..! கர்த்தாவே உயிர்ப்பியும் ..!

ஆமென்.
எழுப்புதலில் எம் கண்ணீர்த்துளிகள்...

அட்டவணை

1. வதந் தீ 07

2. ஜலப்பிரளயமல்ல... குருதிப்பிரளயம் 19

3. இரத்த ஞானஸ்நானம் 29

4. ஏசாயா-53 இன்றைய கண்ணோட்டத்தில் 39

5. வருகைக்கு முன்னான வசந்தம்
   வசந்தத்துக்கு முன்னான வன்முறை 49

6. கையளவு கார்மேகங்கள் 59

7. எதார்த்தம் எப்படியிருக்கும் ? 65

8. ஹிட் லைக் ஹிட்லர் 91

9. நியூரெம்பர்க் சட்டமும்
   இங்கே வரப்போகும் சட்டங்களும் 139

10. கர்த்தருடைய தீர்க்கதரிசிகள்
    யாரும் இங்கே இல்லையோ ? 147

11. இதோ வருகிறது - தண்டனையின் பிரம்பு ! 155

12. எங்களிலே நீர் வைத்த உமது நம்பிக்கையை
    நாங்கள் பொய்த்துப் போகப்பண்ணி, உமது
    எதிர்பார்ப்புக்களையெல்லாம் சுக்கு
    நூறாக்கிவிட்டோம் ஆண்டவரே ! 163

13. சமயம் வாய்க்காத சமயத்திலும்... 183

14. அரங்கேறப்போகும் காட்சிகள் 197

15. சபைக்கு ஒரு எமர்ஜென்ஸி 223

CHAPTER - 1
வதந் தீ

கல்லெறியப்பட்ட ஸ்தேவான்



CHAPTER-1

வதந் தீ

ஜூன் 24, 1899...

அமெரிக்காவின் டென்வர் நகர நான்கு பிரபல தினசரிப் பத்திரிகைகளின் சீனியர் நிருபர்கள் நால்வர் லோக்கல் இரயில் நிலையம் ஒன்றில் தங்கள் பத்திரிகையின் அடுத்த நாள் தலைப்புச் செய்திக்காக, முக்கியப்புள்ளிகள் யாராவது நேர்காணலுக்காகக் கண்ணில் சிக்கமாட்டார்களா என்று காத்திருக்கின்றனர். நெடுநேரம் காத்திருந்து ஆளோ செய்தியோ அகப்படாமல், அவர்களுக்கான டெட் லைன் (deadline) நேரம் நெருங்க நெருங்க, அவர்களில் ஒருவர், "வாங்க வேற ஏதாவது யோசிப்போம்.." என்று அருகிலுள்ள Bar ஒன்றுக்குள் நுழைய, அங்கே அடுத்த நாளுக்கான தலைப்புச் செய்தியொன்று அந்நால்வரில் ஒருவரின் கற்பனையில் உதிக்க, அதையே மற்ற மூவரும் ஆமோதித்து, அதுவே முடிவாகிறது.

அடுத்த நாள் நான்கு பிரபல தினசரிகளின் தலைப்புச் செய்தி இது தான் :

சீனப் பெருஞ்சுவர் தகர்ந்து விழுகிறது..
சுவரை இடிக்கிறார் சிக்காகோ காண்ட்ராக்டர் !

தொடர்ந்து பல நாட்கள், பல பத்திரிகைகள் இதையே திரும்பத் திரும்ப பக்கம் பக்கமாக எழுதித்தள்ளுகின்றன..

செய்தி சீனாவைச் சென்றடைய, கொதித்தெழுகிறது சீனா..

"எங்கள் தேசத்தின் பெருமையும், சர்வதேச அடையாளமும், உலக அதிசயங்களில் ஒன்றுமான எங்கள் சீனப்பெருஞ்சுவரை நாங்களே இடிக்கப்போகிறோமா? அதுவும் காண்ட்ராக்ட் அமெரிக்காவுக்கா? இல்லாத ஒன்றை இட்டுக்கட்டி பெரும் பிரளயமாக்கிய மேற்கத்திய வெள்ளைக்கார நாய்களை வெட்டித்தள்ளுங்கள் !" என்று சீனா முழுவதும் இவ்வதந்தி, தீயாய்ப் பரவ, அதிலிருந்து எழும்பிய நெருப்பு நாவுகள், வட சீனா முதல் நாடு முழுவதும் Boxer Rebellion என்ற

பெயரில் பரவி 1900 - 1901 ஆகிய இரண்டு வருடங்களிலும் சீனா முழுவதிலிமிருந்த வெளிநாட்டவர்களை, முக்கியமாக வெளிநாட்டு மிஷினரிகளையும், உள்நாட்டு விசுவாசிகளையும், போதகர்களையும், சபைகளையும் கொன்று குவித்து, இரத்த வெள்ளம் ஒன்றை தேசம் முழுவதும் பெருக்கெடுத்து ஓடச்செய்தது..

வெவ்வேறு நாடுகள் அந்தக் காலத்தில் சீனாவில் கால்பதித்து, வெவ்வேறு விதத்தில் தங்கள் நாட்டை ஆக்கிரமித்து அபகரித்துக் கொண்டிருந்ததையும், ஏற்கனவே மிஷினரிகளின் பணிகளினால் தங்கள் மூதாதையர்களின் மூடநம்பிக்கைகள் அற்றுப்போனதையும் கண்டு, குமுறிக் கொதி நிலையிலிருந்த சீனர்களுக்கு, வதந்தியாய் வந்த செய்தி, வெந்தியாய் மாற... இரண்டே வருடங்களில் சூறையாடப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுக் கிறிஸ்தவத் தலைகளின் எண்ணிக்கை 20,000 முதல் 30,000 வரை என்கிறது ஒரு கணக்கீடு. தலைகள் ஆங்காங்கே காட்சியாக வைக்கப்பட்டதற்கு இன்றைய கூகுள் சாட்சி !

தலைப்புச் செய்தியான ஒரே ஒரு வதந்தி! அதினாலே காவு வாங்கப்பட்ட உயிர்கள் தான் எத்தனை எத்தனை !

இந்த Boxer Rebellion ஐத் தொடர்ந்து, கன்ஃபூஷியிஸம், கம்யூனிஸம் மற்றும் மாவோயிஸத்தினால் சீன சபை எவ்வளவாய் நசுக்கப்பட்டதோ, அவ்வளவாய் அண்டர் க்ரவுண்ட் இரகசிய சபைகள் பெருகிக் கொண்டே போக, சீன எழுப்புதலொன்று அங்கே சத்தமின்றி வெடித்தது! ஆனால் அதற்கு அவர்கள் செலுத்திய விலைக்கிரயத்தை எந்தக் கணக்கில் சேர்ப்பது?

- பிரசங்கித்தார் என்பதால் வாட்ச்மன் நீயின் நாவு அறுக்கப்பட்டது.

- சிறையிலிருந்தே இரகசிய சபைகளுக்குக் கடிதங்கள் எழுதி அவைகளை திடப்படுத்தினார் என்று, அவரது கைகள் வெட்டப்பட்டது.

- கிட்டத்தட்ட 31 ஆண்டுகள் சிறையிலிருந்து இரத்தசாட்சியானார் வாட்ச்மன் நீ !

- 13 வருடங்கள் கடுங்காவலிலிருந்த பிரதர் யூனை தேவன் அற்புதமாய்த் தப்புவியாதிருந்திருந்தால் Heavenly Man என்ற அற்புதமான புத்தகம் நமக்கு இன்று கிடைத்திருக்க வாய்ப்பில்லை!

- பிரதர் யூனுடன் ஜெயிலில் அடைபட்டிருந்த Zhang Rongliang என்ற இரகசிய சபையின் மூத்த போதகர் தனது கொடிய அனுபவங்களை, "I Stand with Christ" என்ற தனது புத்தகத்தில் இரத்தம் சொட்டச் சொட்ட எழுதுகிறார்..

- இரகசிய போலீஸின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுஅதிசயமாய்த் தப்பிச் சென்ற Bob Fu, God's Double Agent ஆனது பெரிய கதை!

- Fire & Blood என்ற தலைப்பில் Paul Hattaway எழுதிய சீனக்கிறிஸ்தவ இரத்தசாட்சிகளின் சரித்திரத்தின் 30 வால்யூம் புத்தகங்களையும் ஒன்றாய் நிறுத்து எடை போட்டால் குறைந்தது 60 கிலோ தேறும்! அத்தனை பெரிய பெரிய வால்யூம்கள்! அவ்வளவும் இரத்தமும் சதையுமாய் !

Pearl Harbour

ஜப்பானிய கமாண்டர்களும், அமெரிக்கக் கடற்படை கேப்டன்களும் சிங்கப்பூர் மலேஷியப் பகுதிகள் ஒன்றிலே இரவு நேர பார்ட்டி ஒன்றில் குடிபோதையில் மிதந்திருந்த நேரம், அமெரிக்கப் கப்பல் படைக் கேப்டன் ஒருவன், ஜப்பானியக் கமாண்டர்களைப் பார்த்து எகத்தாளமாய்ச் சொல்கிறான்...

"உங்களால எங்க நாட்டுக் கப்பல் ஒண்ணக்கூடத் தொடமுடியாது !"

அதில் கருவிய வன்மமே "அமெரிக்க Pearl Harbour மீது ஜப்பானின் குண்டு வீச்சும், அதற்குப் பதிலடியாக ஜப்பானின் ஹிரோஷிமா நாகசாகியின் மேல் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதலும், அதைத் தொடர்ந்த இரண்டாம் உலகப் போரும்.." என்கிறது வரலாறு..

ஒரே ஒரு சிறு பொறி!
நாவும் நெருப்பு தான். எவ்வளவு பெரிய காட்டையும் (நாட்டையும்) கொளுத்திவிடுகிறது !

வரலாறு பின்னோக்கி...

ரோம் நகர்.. கிபி 64..

தீ ! தீ ! தீ ! நகரம் பற்றியெரிய, எங்கும் ஓலக்குரல்கள்..

மிஞ்சியதெல்லாம் குவியல் குவியலாய்ச் சாம்பல். ஒரு வாரம் தன் இராட்சத ஜூவாலைகளால் நகரத்தையே நரகமாக்கிப் போட்ட வரலாறு காணா கபளீகரம்! தெய்வக் குற்றமென்று முதலில் எண்ணிய ரோமர்கள் மத்தியில் ஒருவித பீதியும் வதந்தியும் பரவியது..

"ரோமை எரித்து விட்டான் நீரோ !"

"நிச்சயமாய் அவனே தான். இதுக்கு முன்னால அவன் ஆடாத ஆட்டமா?"

"ஏய் நான் பார்த்தேன்.. அவன் தன் அரண்மனை பால்கனியிலிருந்து கைதட்டி ரசித்துச் சிரித்ததை..!"

"டேய், அவன் டான்ஸ் ஆடி fiddle வாசித்ததை நான் என் கண்ணால பார்த்தேன்டா.." எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றினான் இன்னொருவன்..

"அவன் முழு சிட்டியையும் அழிச்சிட்டு, தான் பேருக்கு ஒண்ணு கட்டப்போறான் தெரியுமா?"

இப்படியே மூலைக்கு மூலை ரோம் நகரில் வதந்தி காட்டுத்தீயாய்ப் பரவ, எங்கும் ஓங்கி ஒலித்தது குரல்கள்..

"நீரோ ஒழிக!"

பார்த்தான் நீரோ..

தன்னையும் தன் ஆட்சியையும் தக்க வைத்துக்கொள்ள இனி ஒரே ஒரு வழிதான்! அறிவித்தான்.."இதோ என் சுத்தமான கைகள் ! நகரை எரித்தது நானல்ல, இந்தக் கிறிஸ்தவர்களே!"

சொல்லிவிட்டுத் திருப்பிவிட்டான் கிறிஸ்தவர்களுக்கு எதிராகத் தன் முழு பெலத்தையும்..

அவனது இராணுவ வீரர்கள் சல்லடையாய்த் தேடினார்கள் கிறிஸ்தவர்களை வீடு வீடாய்.. கட்டவிழ்த்து விடப்பட்டது ஆதி சபை விசுவாசிகளுக்கு விரோதமாய் ஒரு மதக்கலவரம் ! மகாக் கலவரம் !

அடுத்தடுத்து வந்த ரோம அரசர்கள் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பத்து உபத்திரவக் கட்டங்களைத் தன் நாட்களில் முதலாவது முன்னின்று தொடங்கி வைத்தான் இந்த நீரோ !

வரலாற்று ஆசிரியர் யூசிபியஸ் எழுதுகிறார்...

நகரம் முழுவதும் குவியல் குவியலாய்க் கிறிஸ்தவர்களின் உடல்கள் ..
தெருவெல்லாம் ஆணும் பெண்ணும் குழந்தைகளின் சரீரங்கள்..
நிர்வாணமாய், நிர்ப்பாக்கியமாய், சிதறிப்போய்...சின்னா பின்னமாய்...

மரண தண்டனையெல்லாம் ஒரு தண்டனையே அல்ல என்று நினைத்த காலம்.. எவ்வளவு குரூரமாய்ச் சித்ரவதை செய்ய முடியுமோ அவ்வளவு அளவு கடந்து...

- உடல் நார் நாராய்க் கிழிக்கப்பட்டு...
- உயரமான கட்டிடங்களிலிருந்து முகங்குப்புறத் தள்ளி விடப்பட்டு...
  மரம் அறுக்கும் வாளால் நீளவாக்கில் உடல்கள் அங்குலம் அங்குலமாய் அறுக்கப்பட்டு...
- கல்லெறிந்து கொல்லப்பட்டு...
- எரிபிழம்பாய்த் தகதகக்கும் இரும்புத் தகடுகள் மேல் படுக்க வைக்கப்பட்டு...
- வனவிலங்குகளுக்கு இரையாக்கப்பட்டு...
- பைத்தியம் பிடித்த காளை மாடுகளின் கொம்புகளால் குத்தி வீசப்பட்டு...
- தேள், பாம்பு போன்ற விஷ ஜந்துகளால் நிரம்பிய சாக்கு மூட்டைக்குள் விசுவாசிகள் திணித்து சாகடிக்கப்பட்டு...
- Gladiators என்று சொல்லப்பட்ட அடிமைகளின் வாள்களுக்கு இரையாக்கப்பட்டு...
- செத்த உடல்களை அடக்கம் பண்ண ஆளின்றி, ரோமாபுரியின் வீதியெங்கும் குவியல் குவியல்களாய்க் கிறிஸ்தவர்களின் அழுகி நாறிய பிரேதங்கள் !
- பேதுருவும் பவுலும் கொல்லப்பட்டது இந்த நீரோவின் ரோமாவிலே!
- ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் தங்கள் கழுத்தைக் கொடுத்தது இங்கேயே!
- மார்சிலகுஸ் பால்லியோவும் சின்னாவும், பெர்பெச்சுவாவும் கொல்லப்பட்ட கொலோசியம் இங்கேயே!

இவை எல்லாவற்றுக்கும் மத்தியிலும் அப்போஸ்தல உபதேசத்தால் கலந்த கண் நீரும் செந்நீரும் பாய்ச்சப்பட்டு வேரூன்றி வளர்ந்து தீயாய்ப்

பரவியது ஆதிசபையின் எழுப்புதல் தீ! ஒருவனாலும் அணைக்க முடியாத ஒரு வெந்தீ !

எகிப்திலே பார்வோனின் அரண்மனை..

தன் அமைச்சரவை சகாக்களுடன் அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி அமர்கிறான் பார்வோன்.. எடுத்த எடுப்பிலேயே நேராக விஷயத்துக்கு வருகிறான்..

" இதோ இந்த இஸ்ரவேலர் நம்மைக் காட்டிலும் ஏராளமாய் பலத்துக்கொண்டே போகிறது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? நாளொன்று வரும்.. இப்படியே இவர்கள் பெருகிக்கொண்டே போனால், யுத்தமென்று ஒன்று வெடிக்கும் நாளிலே, இவர்கள் நம் பகைஞரோடு சேர்ந்து நமக்கே உலை வைத்து, நம் கைமீறி தேசத்தைவிட்டுத் தப்பி விடுவார்களாதலால், இவர்களைக் குறித்து நாம் இன்று ஒரு முடிவு எடுத்தாக வேண்டும்!

பல அம்ச முடிவுகளின் கடைசி அம்சம்.."பிறக்கும் எபிரேய ஆண் பிள்ளைகளையெல்லாம் நைல் நதியிலே வீசியெறியுங்கள்!"

பல வருடங்களுக்குப் பின்பு எழும்பப்போகும் மோசே என்ற எழுப்புதலுக்கு விலை, எபிரேய ஆண் குழந்தைகளின் இரத்தமென்கிற கிரயமாகி, அந்தப் பிஞ்சுப் பாலகர்களின் இரத்தத்தால் நைல் நதி குருதிப்புனலானது !

- "யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்ற ஒரே ஒரு கேள்வி, எருசலேமில் ஏரோதின் அரண்மனையை மட்டுமல்ல, எருசலேம் வீதிகளின் மூலை முடுக்குகளையெல்லாம் கலங்கடித்துக் கொண்டிருந்தது.

யூத ராஜ சிங்கத்தின் எழுப்புதலுக்குப் பல வருடங்கள் முன்பாகவே பெத்லகேமின் 2 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகள் தங்கள் இரத்தத்தையே அதற்கு விலையாகக் கொடுக்க, கல்வாரியின் குருதி நதிக்கு முன்பாக, பெத்லகேமாம் அப்பத்தின் வீட்டிலிருந்து இரத்த நதியொன்று புறப்பட்டது. புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலிருந்து இங்கு வரை இன்று வரை கேட்கப்படுகிறதே!

- "நாளை இந்நேரம் உன் தலையை நான் வாங்காதேபோனால்,

என் தேவர்கள் அதற்குச் சரியாய் எனக்குச் செய்யக்கடவர்கள்.." என்று எலியாவின் தலைக்கே விலை வைத்த யேசபேல், யேகோவாவின் தீர்க்கதரிசிகளை மட்டும் விட்டு வைப்பாளோ? எலியா தேடப்பட்டான்..அவனோடு தேவனுடைய தீர்க்கதரிசிகளும் வேட்டையாடப்பட்டனர்.

எலியாவின் எழுப்புதல் பெருமழைக்கு முன்னே யேசபேலின் கையினாலே பலியிடப்பட்ட யேகோவா தேவனுடைய தீர்க்கதரிசிகளின் இரத்தம் யேசபேலின் இரத்தத்துக்காய்ப் பழிவாங்க பூமியிலிருந்து கூக்குரலிட்டுக் கூப்பிடவே செய்தது!

வானத்திலிருந்து அக்கினி இறக்கி யேகோவாவே தேவனென்று எலியா நிரூபிக்குமுன், அங்கே கர்மேலிலே ஏற்கனவே தீர்க்கதரிசிகளின் உயிர்களின் இரத்தக்கிரயமொன்று அந்த எழுப்புதலுக்குப் பலியாய் செலுத்தப்பட்டிருந்தது!

- தங்கள் அக்கிரமங்களின் நிமித்தமே இஸ்ரவேலர்

பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனாலும், அந்த 70 வருட சிறையிருப்புக்குப் பின் வந்த எஸ்றா - நெகேமியா கால எழுப்புதலுக்கு முன்னோடியாய் அவர்கள் பாபிலோனிலே செலுத்திய விலைக்கிரயம் ஒன்று இருந்ததில்லையோ?

அந்த பாபிலோன் ஆறுகள் அருகே அவர்கள் சீயோனை நினைத்து மட்டுமல்ல, அந்த பாபிலோனிய வீதிகளிலே தங்கள் குழந்தைகள் கல்லின் மேல் மோதியடிக்கப்பட்டு பாபிலோன் ஆறுகள் இரத்தமாய் மாறிப்போனதையும் பார்த்துப் பார்த்தும் அவர்கள் கதறவில்லையோ? பிள்ளைகளின் இரத்தமே பின்னாட்களின் எழுப்புதலுக்கு விலையாய்ச் செலுத்தப்பட்டதே !

தேவனின் சிட்சையே எழுப்புதலுக்கு விலைக்கிரயமாகவும் மாறுகிறதென்பதை வேதமும் சபை சரித்திரமும் உரக்கவே சொல்கிறதில்லையோ?

- "அப்படியானால் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று பொதுஜனமும், "போதகரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று ஆயக்காரரும்," நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று போர்ச்சேவகரும் கூட்டங்கூட்டமாய்க் கேட்டுக் கொண்டே வனாந்திரத்திலிருந்த யோவானிடம் வந்து ஞானஸ்நானம் பெற வர, அங்கே யோர்தானிலே, 400 வருடமாய்ச் செத்துக் கிடந்த ஒரு

தேசத்தையே அனாயாசமாக உயிரோடு தூக்கியெழுப்பி நிறுத்திக் கொண்டிருந்தான் அந்தக் காட்டுத் தீர்க்கன் !

எழுப்புதல் காலங்களில் இருதயம் குத்தப்பட்ட ஜனம் கேட்கும் ஒரே கேள்வி, "ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? "சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்பதே !

யோவான் தன் கால எழுப்புதலுக்குத் தன் தலையையே விலையாய்த் தந்தான்.

ஏரோதின் பிறந்த நாளிலே வெட்டப்பட்டது கேக் அல்ல.. யோவானின் தலை!

கந்தமால்

2008... ஒரிசாவின் கந்தமால்...

ஆதிவாசிகள் கூட்டங்கூட்டமாய்க் கிறிஸ்தவர்களாய் மாறிக் கொண்டேபோகிறார்கள் என்று நீறுபூத்த நெருப்பாய்க் கனன்று கொண்டிருந்த வன்மமும் பகையும் வன்முறையாய் வெடித்தது ஜூன் 25 அன்று..

81 வயது சுவாமி லக்ஷ்மன் ஆனந்தா, யாரோ சில விஷமிகளால் கொல்லப்பட, செய்தி வதந்தியாய்ப் பரப்பப்படுகிறது..
"ஸ்வாமியைக் கொன்றவர்கள் கிறிஸ்தவர்களே!"

காரணம், சில நாட்களுக்கு முன்பு தான் சுவாமி சூளுரைத்திருந்தார்..
"போப்பின் மகள் இத்தாலிய சோனியாவின் சூழ்ச்சியே இந்த மதமாற்றங்களுக்கெல்லாம் காரணம்! நான் உயிரோடிருக்குமட்டும் இதை நடக்கவிட மாட்டேன்" என்று..

நாள் நட்சத்திரம் பார்த்துப் பண்டிகையின் நன்னாள் ஒன்றிலே சந்நியாசி ஒருவரைப் பலிகடாவாக்குவது தேவர்களைப் பிரியப்படுத்தும் என்பது ஐதீகம் என்பதால், யாரோ சிலரால் சுவாமி சுட்டுக் கொல்லப்பட, பழியோ, ஏற்ற சந்தர்ப்பத்தில், ஏற்ற காரணத்தோடு வெகு லாவகமாகக் கிறிஸ்தவர்கள் மேல் போடப்பட, அதைத் தொடர்ந்தது..
நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட, பெண்களும்

கன்னியாஸ்திரீகளும் கற்பழிக்கப்பட்ட, அநேக ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து அகதிகளான அந்தக் கந்தமால் கலவரம்!

கரிக்கட்டையாய்ப்போன ஜனங்கள்!
எரிந்து சாம்பலான தேவாலய சபைகள்! வீடுகள்! நிறுவனங்கள்!

வதந்தீ ! வதந்தீ ! வதந்தீ !
கோத்ரா ரயில் பெட்டி எரிப்புச் சம்பவமும் இங்கே நினைவு கூரப்படட்டும். கரசேவகர்களை எரித்தது யாரோ? பழியோ சிறுபான்மையினரின் மேல் திரும்ப, வெடித்தது 2002 குஜராத் கலவரம்!

இதோ! தலைப்புச் செய்தியாகப்போகும் ஒரு மிகப்பெரிய வதந்தியோ, சம்பவமோ, அது பரப்பப்படவோ நிகழவோ, அதைத் தொடர்ந்து வெடித்துச் சிதறும் வன்முறை வரலாறு ஒன்றுக்காக ஏதோ ஒன்று தன் வாயை விரிவாய்த் திறந்து காத்துக் கொண்டிருக்கிறது!

இதோ! குருதிப் பெருமழைக்கான இரைச்சலொன்று தேசத்திலே கேட்கப்படுகிறது! அதின் கையளவு மேகம் தேசத்தின் மாநிலமெங்கும் ஆங்காங்கே காணப்படுகிறது!

இதுவே இன்றைய சபையை தேவன் சிட்சித்துத் தம்மிடம் திருப்புவதற்கென்று, தமது கையிலெடுக்கும் தண்டனையின் பிரம்பாகவும், வரப்போகும் வரலாறு காணா எழுப்புதல் ஒன்றுக்கு இந்திய சபையின் மீதியானவர்களின் விலைக்கிரயமாகவும் இருக்குமோ ?

"இந்தியா இயேசுவுக்கே ! இந்திய எழுப்புதல் இதோ எங்கள் ஊரிலிருந்தே !" என்று ஆளாளுக்குக் கொட்டடித்துக்கொண்டு திரியும் நம்மவர்களுக்கு ஒரு நற்செய்தி !

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை!
இரத்தம் சிந்துதல் இல்லாமல் இரட்சிப்பு இல்லை !
இரத்தம் சிந்துதல் என்ற விலைக்கிரயம் ஒன்று இல்லாமல் எழுப்புதல் என்ற ஒன்று இந்தியாவில் இல்லை..இல்லை.. இல்லவே இல்லை !

“ நான்... சொன்ன யாவையும்,
அந்நாளிலே வரப்பண்ணுவேன்;
அதைத் தொடங்கவும் அதை
முடிக்கவும் போகிறேன்.. ”

(1 சாமுவேல் 3:12)

குருதிப் பிரளயம்

CHAPTER - 2

ஜலப்பிரளயமல்ல...
குருதிப்பிரளயம்

பட்டயத்தால் வெட்டப்பட்ட
யோவானின் சகோதரன்
யாக்கோபு

CHAPTER-2

ஜலப்பிரளயமல்ல... குருதிப்பிரளயம்

கர்த்தருக்கும் இன்றைய ஆவிக்குரிய நோவாக்களான மீதியான சிறிய கூட்டத்துக்கும் இடையேயான ஒரு உரையாடல் :
(ஆதி 6, 7ம் அதி)

[ஆதி 6:1-13 வேத பகுதியில் "பூமி" என்ற வார்த்தை வரும் இடங்களில் "சபை" என்ற வார்த்தையை உபயோகித்து வாசிக்கவும்]

கர்த்தர் :

"நோவா என்னும் என் மீதியான ஜனமே, இதோ என்னுடைய கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது. (ஆதி 6:8, 9/ 7:1).

இந்த சந்ததியிலே உன்னை எனக்கு முன்பாக நீதியுள்ள கூட்டமாய்க் கண்டேன். உன் காலத்திலே உன் தலைமுறையினருக்குள்ளே உன்னை உத்தமமும் நீதியுமுள்ள சந்ததியாய்க் காண்கிறேன். என்னோடு நித்தமும் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் உனக்கு என் இருதயத்தை, உள்ளத்தின் பாரத்தை, நான் செய்யப்போகிறதை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

- **(சபையானது)** எனக்கு முன்பாக சீர்கெட்டதாயிருக்கிறது. **"சபை"** கொடுமையினால் நிறைந்திருக்கிறது. (ஆதி 6:11)

- "நான் **(சபையைப்)** பார்க்கிறேன். இதோ அது சீர்கெட்டதாயிருக்கிறது. விசுவாசிகளும் ஊழியரும் **(சபையின்)** மேல் தங்கள் வழிகளைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (ஆதி 6:12)

- இவர்கள் யாவரையும் சிட்சிக்கும் முடிவு எனக்கு முன்பாக வந்தது. அவர்களை அவர்கள் கிரியைகளோடே கூட (சிட்சித்துப்) போடுவேன். (ஆதி 6:13)

- என் ஆவி, தங்களை ஊழியர்களென்றும் விசுவாசிகளென்றும் சொல்லிக்கொள்ளும் இவர்களோடு என்றைக்கும் போராடுவதில்லை. இவர்கள் மாம்சத்தில் கிரியை செய்கிறவர்கள் தானே! (ஆதி 6:3)

- இவர்களுடைய அக்கிரமம் **(சபையிலே)** பெருகினதென்றும், இவர்களது இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் நான் கண்டு, நான் இவர்களைத் தெரிந்துகொண்டதற்காக மனஸ்தாபப்படுகிறேன். அது என் இருதயத்துக்கு விசனமாயிருக்கிறது. (ஆதி 6:5,6)

- ஆகையால் நான் இவர்களை என் தண்டனையின் பிரம்பினால் சிட்சிப்பேன். நான் அவர்களை அழைத்ததும், தெரிந்துகொண்டதும் வேறுபிரித்ததும், அபிஷேகித்ததும், ஆசீர்வதித்ததும் எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. (ஆதி 6:7)

- ஆகையால் இந்திய தேச சபைகளின்மேல் வடக்கு முதல் தெற்கு வரை ஜலப்பிரளயமல்ல, குருதிப்பிரளயம் ஒன்றை வரப்பண்ணுவேன். அது தேசத்தின் **(சபைகளைக்)** கீழது மேலது ஆக்கும். அந்தப் பிரளயம் வந்து அவர்களை வாரிக்கொண்டு போகுமட்டும் அவர்கள் உணராதிருப்பார்கள். (ஆதி 6: 17/ மத் 24:39)

ஆனாலும் மீதியான சிறு கூட்டமான ஜனமாகிய நீ என் வசனத்தைக் காத்துக்கொண்டபடியால், சபையிலிருக்கிறவர்களை சோதிக்கும்படியாக இந்திய சபைகள் மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்துக்குத் தப்பும்படி, அன்று நோவாவையும் அவன் குடும்பத்தையும் காத்துக் கொண்டது போல, மீதியான ஜனமாகிய நீ, வரப்போகும் எழுப்பு தலைக் காணத்தக்கதாக உன்னைக் காத்து வைப்பேன். ஆயினும் அன்றைய நோவா, தன் கால எழுப்புதலைக் காண தன் ஜனத்தினால் தனக்கு வந்த அவமானம், நிந்தை, கேலி பரியாசங்களை சகித்து விலைக்கிரயம் ஒன்றை செலுத்தியது போல நீயும் ஒரு விலைக்கிரயம் செலுத்த வேண்டியிருக்கும்.

ஆகவே, நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ நீங்களும் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களிலும் சிலரைக் காவலில் போடுவான். சில காலம்

உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். (வெளி 2:10). ஆயினும் பூர்வகாலத்து நோவா தன் ஜனங்களின் கண்களுக்கு முன்பாக, வரப்போகும் ஜலப்பிரளயத்தை எச்சரித்துக் கூறி பேழையைக் கட்டினது போல, நீ இவர்கள் கண்களுக்கு முன்பாக இந்த எச்சரிப்பை உன் வாயினால் எக்காளம் ஊதி எச்சரி! ஆயத்தப்படுகிறவன் ஆயத்தப்படட்டும். ஆயத்தப்படுத்தட்டும்!

பழைய ஏற்பாட்டு நோவா - புதிய ஏற்பாட்டு நோவா (நோவாவும் - இன்றைய மீதியான ஜனமும் - ஓர் ஒப்புமை)

கர்த்தருக்குப் பயந்து, அவருக்குக் காத்திருந்து அவரோடு சஞ்சரிக்கும் ஒரு சிறு கூட்ட ஜனத்தையே புதிய ஏற்பாட்டு நோவா என்று அழைக்கிறோம்.

- நோவா இன்றைய தலைமுறையின் மீதியான கூட்டத்துக்கு(micro minority) ஒரு அடையாளம்.

- அவன் தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானாயிருந்தது போல, இச்சிறு கூட்டமும் நீதியும் பரிசுத்தமாய் வாழும் ஒரு கூட்டம்.

- அவன் உத்தமனாயிருந்தது போல, இது தேவனை உத்தமமாய்ப் பின்பற்றும் ஒரு கூட்டம்.

- நோவா தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தது போல, இந்த மீதியான கூட்ட சொற்ப ஜனமும் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கும்.

- ஜலப்பிரளயம் வரப்போகிறதென்று எச்சரிப்புப் பெற்று விசுவாசித்த நோவா போலவே, தேசத்தில் இன்னொரு பிரளயமொன்று வரப்போகிறது என்று கர்த்தராலே எச்சரிப்புப் பெற்று, விசுவாசித்து, மற்றவர்களையும் எச்சரிக்கும் அற்ப சொற்ப உண்மைத் தீர்க்கதரிசிகளின் கூட்டமிது!
- பழைய ஏற்பாட்டு நோவா போலவே, தேவ கட்டளைக்கு "அப்படியே" கீழ்ப்படியும் கூட்டம் இது !

- நோவாவும் குடும்பமும் காக்கப்பட்டது போல, வரப்போகும் எழுப்புதலைக் காண தேவனாலே பாதுகாக்கப்படும் கூட்டம் இது !

- பழைய ஏற்பாட்டு நோவா மூலமே ஸ்திரீயின் வித்தாகிய பரிசுத்த வித்து காக்கப்பட்டு ஏற்ற காலத்திலே வெளிப்பட்டது போல, கடைசிக்கால எழுப்புதலில் யௌவன ஜனமொன்று அவருக்குப் பிறப்பதோடு, வானங்களிலே அவரை எதிர்கொள்ள பரிசுத்த ஜாதியொன்று உருவெடுக்கும்.

தேவன், தான் சிருஷ்டித்த ஒரு மனிதனையோ, தாம் தெரிந்து கொண்ட ஒரு சபையையோ குறித்து மனஸ்தாபப்படும்போது நடப்பது என்ன ?

(சவுலும் - இன்றைய சபையும் - ஒரு ஒப்புமை)

"சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. அவன் என் கட்டளையை நிறைவேற்றாமற்போனான்." (1 சாமு 15:11)

நோவா காலத்து ஜனத்தை சிருஷ்டித்ததற்காக தேவன் மனஸ்தாபப்பட்டதைப் போலவே, சவுலை இராஜாவாக்கினதற்காகவும் அவர் மனஸ்தாபப்பட்டார்.

கர்த்தர் சொல்லுகிறார்..

- நான் சவுலைத் தெரிந்து கொண்டது போலவே சபையையும் தெரிந்து கொண்டேன்.

- அவனை அபிஷேகித்து பெலப்படுத்தினது போலவே சபையையும் அபிஷேகித்து பெலப்படுத்தினேன்.

- நான் சவுலுக்கு ஜெயத்தின் மேல் ஜெயங்கொடுத்தது போலவே, சபையையும் அதின் சத்துருவின் மேல் ஜெயங்கொள்ளக்கூடியதாய் வைத்திருக்கிறேன்.
- அவனால் தனியே செய்ய இயலாதவைகளை செயல்படுத்த அவனுக்குப் படை பலம் கொடுத்தது போலவே, சபைக்கும் ஆவியின் பெலனையும் ஆள்பலத்தையும் கொடுத்தேன்.
- அவனுக்குள்ளிருந்த அசுத்த ஆவிகளை விரட்டி, அவனுக்கு

விடுதலை தந்தது போலவே, சபையின் விசுவாசிகளுக்கும் விடுதலை தந்தேன்.

- சவுலுக்கு ராஜாங்கத்தைக் கொடுத்ததைப்போலவே, சபைக்கும் என் ஆளுகையையும் அதிகாரத்தையும் கொடுத்தேன்.

- அவனை வழிநடத்த ஒரு சாமுவேல் தீர்க்கதரிசியைத் தந்தது போலவே, இன்றைய சபையை வழிநடத்த மேய்ப்பர்களையும், போதகர்களையும், தீர்க்கதரிசிகளையும் தந்தேன்.

- அவனுக்குப் படை பலத்தைக் கொடுத்தது போலவே, இன்றைய சபைக்கும் பரலோக சேனையின் பலத்தைக் கொடுத்தேன்.

- அமலேக்கியரை முறியடிக்கும் உத்தரவாதத்தை நான் சவுலுக்குக் கொடுத்து, அவனுக்கு என் மனபாரத்தையும், வேதனையையும் வெளிப்படுத்தியது போலவே, இன்றைய சபைக்கும் என் மனதின் பாரங்களை வெளிப்படுத்தினேன்.

- சவுல் திரும்பத் திரும்ப தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டே போனபோது, அவனுக்கு மனந்திரும்ப சந்தர்ப்பங்கள் எத்தனையோ கொடுத்தது போல, இன்றைய சபைக்கும் மனந்திரும்ப சந்தர்ப்பம் கொடுத்துக்கொண்டே இருக்கிறேன்.

- சவுல் எனக்குக் கீழ்ப்படியாமல் போனதுபோலவே, சபையும் எனக்குக் கீழ்ப்படியாமல் போனது.

- நோவா காலத்து மனிதரை சிருஷ்டித்ததற்காக நான் மனஸ்தாபப்பட்டது போலவும், சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டது போலவும், சபைக்கு இத்தனை செய்தும், என் ஜீவனை முதலாய்க் கொடுத்தும் கூட, அது தன் வழிகளைக் கெடுத்துக் கொண்டிருப்பதற்காக நான் மனஸ்தாபப் படுகிறேன்.

ஆகவே...

இதோ நான் (சபையின் மேல்) ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும்..

நான் இன்றைய (சபைக்கு) விரோதமாய் சொன்ன யாவையும் அதின் மேல் சீக்கிரத்திலே வரப்பண்ணுவேன். அதைத் தொடங்கவும் முடிக்கவும் போகிறேன்..

இதுவரை, ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய என் ஜனத்துக்குச் செய்யப்பட்டு வந்த சகல நன்மைக்கும் மாறாக என் வாசஸ்தலத்திலே சபையானது உபத்திரவத்தைக் காணும்..

(1 சாமு 3:12, 13/ 2:32)

சவுலின் மேல் நான் கொண்ட மனஸ்தாபத்தினிமித்தம் அவன் மேல் நான் வரவிட்ட பெலிஸ்தியப் படையைப் போல, ஒரு நவீன பெலிஸ்தியக் கூட்டம் ஒன்று இந்திய சபைகளின் மேல் படையெடுத்து வரும்.

- அது எண்ணிமுடியாத ஒரு பலத்த ஜாதி. அதின் பற்கள் சிங்கத்தின் பற்கள். துஷ்ட சிங்கத்தின் கடைவாய்ப்பற்கள் அதற்கு உண்டு.

- விடியற்கால வெளுப்பு பர்வதங்களின் மேல் பரவுகிறது போல ஏராளமான அந்த பலத்த ஜாதி தீவிரமாக வந்து சபையின் மேல் பரவும். அப்படிப்பட்டது இந்த இந்திய தேசத்திலே முன் ஒருக்காலும் உண்டானதில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டாவதுமில்லை.

- திரிசூலும் வாளும் ஏந்தி வரப்போகும் அந்தக் கூட்டத்துக்கு முன்பாக அக்கினி பட்சிக்கும். அவைகளுக்குப் பின்னாக ஜூவாலை எரிக்கும். அவைகளுக்கு முன்னாக (சபை) ஏதேன் தோட்டம் போலவும், அவைகளுக்குப் பின்னாக வனாந்தரத்தைப் போலவும் இருக்கும். அவைகளுக்கு ஒன்றும் தப்பிப்போவதில்லை.

- அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சல் போலவும், செத்தைகளை எரிக்கிற அக்கினி ஜூவாலைகளின் இரைச்சல் போலவும், யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட பலத்த ஜனத்தின் இரைச்சல் போலவும் குதிக்கும்.

- அவைகளுக்கு முன்பாக ஜனங்கள் நடுங்குவார்கள். எல்லா முகங்களும் கருகிப்போகும்.

- அவைகள் பட்டணம் எங்குமுள்ள சபைகளுக்குள்ளே செல்லும்; மதிலின் மேல் ஓடும், வீடுகளின் மேல் ஏறும்; பலகணி வழியாய்த் திருடனைப் போல சபைக்குள்ளே நுழையும்.

- அது என் திராட்சச் செடியாகிய சபையை அழித்து, என் அத்திமரமாகிய ஜனத்தை உரித்து, அதின் சாரத்தை உரித்துத் தின்று போடும்.

- கர்த்தருடைய பந்தியாகிய போஜனபலியும் பானபலியும் கர்த்தருடைய ஆலயத்தைவிட்டு அற்றுப்போகும். கர்த்தரின் ஊழியக்காரராகிய போதகர்களும் மேய்ப்பர்களும் சுவிசேஷகர்களும் துக்கிப்பார்கள்.

- வயல்வெளியாகிய ஊழியத் தளங்கள் பாழாய்ப்போகும். (சபை) துக்கங்கொண்டாடும். ஆத்துமாக்களாகிய சபையின் விளைச்சல் அழிக்கப்பட்டுப்போகும். புது திராட்சரசமும் எண்ணெயுமாகிய அபிஷேகம் வற்றி மாண்டுபோகும்.

- வசனமாகிய கோதுமையும் வாற்கோதுமையும் இல்லாமற்போகும். ஊழியராகிய திராட்சத்தோட்டக்காரரே, அலறுங்கள். வயல்வெளியாகிய உங்கள் பகுதிகளில் ஆத்தும ஆதாய அறுப்பு அழிந்து போகும்.

- சந்தோஷம் சபையை விட்டு ஒழிந்துபோகும்.

- அந்த நாளினிமித்தம் ஐயோ! கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. அது சங்காரம் போலச் சர்வ வல்லவரிடமிருந்து வருகிறது.

- விசுவாசிகளின் கண்களை விட்டு ஆகாரமாகிய வேதவசனமும், தேவனின் ஆலயத்தை விட்டு சந்தோஷமும் மகிழ்ச்சியும் நீக்கப்பட்டுப் போகும்.
- சபையாகிய பண்டசாலைகள் பாழாகிக் கர்த்தருடைய களஞ்சியங்கள் இடிக்கப்பட்டுப் போகும்.

- ஆட்டுமந்தைகளாகிய விசுவாசிகள் கூட்டம் சேதமாகிப்போகும்.

- அந்த நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச்

சகிக்கிறவன் யார்?

[யோவேல் 2: 2 - 11/ 1: 6-12, 15 - 20]

நோவா காலத்து ஜனத்தின் மேல் நான் மனஸ்தாபப்பட்டதினிமித்தம் வந்தது ஜலப்பிரளயம். இன்றைய சபையின் மேல் நான் மனஸ்தாபப்படுகிறதினிமித்தம் இதின் மேல் வரப்போவதோ ஒரு குருதிப் பிரளயம் !

இது சபையின் மேல் வரப்போகும் சிட்சையும், வரப்போகும் எழுப்புதலுக்காக செலுத்தப்படப்போகும் விலைக்கிரயமுமாகவே இருக்கும் !

“ அவர்கள் என்னைத்
துன்பப்படுத்தினதுண்டானால்,
உங்களையும்,
துன்பப்படுத்துவார்கள்... ”
(யோவான் 15:20)

குருதிப் பிரளயம்



உயிரோடு தோலுரிக்கப்பட்ட பர்த்தலோமேயு

CHAPTER-3

இரத்த ஞானஸ்நானம்
Baptism of Blood

பூமியின்மேல் அக்கினியைப்போட வந்தேன்;

அது இப்பொழுதே பற்றியெரிய வேண்டுமென்று விரும்புகிறேன்...

ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு. அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.. (லூக் 12: 49)

- பூமியின் மேல் அக்கினியைப் போட வந்தேன் - இது இயேசு வந்த நோக்கம்! (Purpose)

அது இப்பொழுதே பற்றியெரிய விரும்புகிறேன் - இது அவரது உள்ளத்தின் அணையாத தாகம்! (Passion)

ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு - இது அவர் தாமே செலுத்த வேண்டியிருந்த ஒரு விலைக்கிரயம் ! (Price)

இயேசு இவ்வுலகிற்கு வந்ததற்குக் காரணங்கள் பல இருந்தாலும், அவைகளில் ஒன்று பூமியில் எழுப்புதல் அக்கினியைப் போடுவதே! அது அப்பொழுதே பற்றியெரியாதோ என்பதே அவரது உள்ளத்தில் நெருப்பாய் எரிந்து கொண்டிருந்த தாகம். ஆனாலும், தானே, அதற்கான ஒரு விலையைச் செலுத்தியாக வேண்டுமென்றும், அதையே, தான் முழுகி எழ வேண்டிய ஒரு ஸ்நானம் என்றும் சொல்லுகிறார் அவர்.

அது ஒரு ஞானஸ்நானம்.

ஏற்கனவே யோர்தானிலே ஜலத்தினால் அவர் ஞானஸ்நானம் பெற்றுவிட்டபோதிலும், தான் முழுகி எழுந்திருக்க வேண்டிய இன்னொரு ஸ்நானம், அதாவது கெத்சமெனேயின் கண்ணீர் ஸ்நானம், வியர்வையின் ஸ்நானம் மற்றும் கல்வாரியின் இரத்த ஸ்நானமொன்று இன்னும் பாக்கியிருக்கிறது என்றே சொல்கிறார் அவர்.

கெத்சமெனேயிலும், கல்வாரியிலும் இந்தக் கண்ணீரின் ஸ்நானத்திலும், வியர்வையின் ஸ்நானத்திலும், குருதியின் ஸ்நானத்திலுமே முழுகி எழுந்தார் அவர்.

அதன் பின்னர் வெடித்தது மேலறை எழுப்புதல்!

- பவுலைப் போலத் தங்கள் கைக்குட்டைகளும், பெல்ட்டுகளும் வியாதியஸ்தர்கள் மேல் போடப்பட, உடனே அவர்கள் சுகமாகி எழ வேண்டுமென்று ஆசிக்கிறவர்கள் ஏராளம்! ஏராளம் !

- மூன்றாம் மாடியிலிருந்து கீழே விழுந்த ஐத்திகுக்களை மார்போடு அணைத்து, "இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது, கலங்காதிருங்கள்" என்று சொல்லி, செத்தவர்களை உயிரோடு எழுப்ப யாருக்குத்தான் ஆசையில்லை?

- தங்கள் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும் கூட்டத்தில் உட்கார்ந்து கவனமாய் வசனத்தைக் கேட்பவர்களில், கை கால் வழங்காமல் இருப்பவர்களைக் கைகொடுத்துத் தூக்கிவிட்டு, முடவர்களும் சப்பாணிகளும் குதித்து நடப்பதைக் கண்டு, தாங்களும் துள்ளிக்குதிக்க மனதார வாஞ்சிக்காதோர் யார்?

- தாங்கள் சுவிசேஷம் அறிவிக்கப் போகிற இடமெல்லாம் சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டுவிட வேண்டுமென்று விரும்பாதோர் தான் யார்?

- "இதோ உலகத்தைக் கலக்குகிறவர்கள் இவர்களல்லவா ?" என்று தாங்களும் மற்றவர்களால் அழைக்கப்பட வேண்டுமென்று உள் மனதின் ஆழமொன்றில் ஆசைகொண்டு திரியாதோர் தான் யார்?

ஆனால் இவற்றில் ஒன்றையாகிலும் பற்றி யோசிக்கவோ, கவலைப்படவோ செய்யாத பவுல், இவையெல்லாவற்றிற்காகவும் செலுத்திய விலைக்கிரயம் பற்றி யோசித்துப் பார்ப்பவர்களும், வாய் திறப்பவர்களும் இங்கே உண்டோ?

"என் மேலிருக்கும் அபிஷேக சால்வையை வேண்டுவோர் அநேகர்...ஆனால் நான் உடுத்தியிருக்கும் இரட்டுடையையோ, தலையில் அள்ளிப் பூசியிருக்கும் சாம்பலையோ யாரும் விரும்புவதேயில்லை.." (தனது அங்கலாய்ப்பு, கண்ணீர், ஜெபம், பாரம் என்ற இரட்டுடை) என்றார் லியோனார்ட் ரேவன்ஹில்.

இந்தப் பவுலுக்குத்தான் எத்தனை உபத்திரவங்கள்! எத்தனை நெருக்கங்கள்! எத்தனை இடுக்கண்கள்! எத்தனை பாடுகள்! எத்தனை கசையடிகள்! காவல்கள்! கட்டுகள்! கலகங்கள்! கண் விழிப்புகள்!

- மிலாறுகளால் கிழிந்து தொங்கிய சதையோடு கூடிய சரீரம்!

- கல்லெறியப்பட்டு, செத்துப்போனான் என்று சொல்லத்தக்கதாய் ஊருக்கு வெளியே இழுத்து வீசப்பட்ட ஒரு மனிதன்!

- மூன்று கப்பற்சேதம் கண்டவன்!

- மத்திய தரைக்கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் ஊறுகாயாய் ஊறிக்கிடந்த அவனது உடல் !

- கள்ளராலும், கள்ளச் சகோதரராலும்,சுய ஜனத்தாலும், அந்நியராலும் பட்டணங்களிலும், வனாந்தரங்களிலும், சமுத்திரங்களிலும் அவன் சந்தித்த நாசமோசங்கள் எத்தனை எத்தனை !

- எத்தனை பிரயாசம்! எத்தனை வருத்தம்! எத்தனை பசிதாகம்! எத்தனை உபவாசம்! எத்தனை குளிரும் வெயிலும் நிர்வாணமும் நாசமோசமும்!

இயேசுவின் நாமத்திற்காகத், தான் கட்டப்பட மாத்திரமல்ல, கடைசியாக, மரிப்பதற்கும் ஆயத்தமாகித் தன் கழுத்தையும் வெட்டப்பட மகிழ்ச்சியாய் நீட்டிக் கொடுத்தானே!

- பேதுருவைப் போல, தங்களது ஒரே ஒரு பிரசங்கத்தினாலே ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுப்பதாகவும், தங்கள் ஊழியங்களில் தங்கள் நிழல்பட்டு, நோயாளிகள் சுகமாவதாகவும், பிறவிச் சப்பாணிகள் குதித்தெழுந்து நடப்பதாகவும், மரித்த தபீத்தாக்கள் உயிரோடு எழுந்து உட்காருவதாகவும், திமிர்வாதமாய்க் கட்டில் கிடையான ஐனேயாக்கள் எழுந்து தங்கள் படுக்கையைத் தாங்களே

போட்டுக்கொள்வதாகவும், அனனியா சப்பிராக்கள் தங்கள் ஒரு வார்த்தையிலே விழுந்து மடிவதாகவும் கனவில் மிதவாதோர் யார் இங்கே?

ஆனால் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக இழுக்கப்பட்டு, அடியும் அவமானமும் அடையவும், அடுத்த நாள் காலையிலே தனது தலை வெட்டப்படப்போகிறதென்று அறிந்த போதிலும், கவலை ஏதுமின்றி தன்னைத் தன் ஆண்டவருக்கு ஒப்புவித்துவிட்டு, அமைதியாய்ப் படுத்துறங்கவும், நாளொன்று வரும்போது, வயோதிபத்தால் தளர்ந்த தன் கைகளைத் தானே நீட்டிக்கொடுக்க, தனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டுத் தலைகீழாய் சிலுவையிலே மரிக்கவும் தங்களை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருப்போரும் இங்கே உண்டோ?

- யோவானைப் போலக் கொதி எண்ணெயில் போடப்படவும், நாடு கடத்தப்படவும், தனிமைச் சிறையில் வாடி மடியவும் தங்களை ஒப்புக்கொடுத்தோர் யார்?

- ஏரோதின் பட்டயத்தினால் கொல்லப்பட, தான் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லப்படும் வழியிலேயே தன் கொலையாளியைக் கிறிஸ்துவுக்குள் நடத்திவிட்டுத் தன் தலையைத் தானமாய்த் தந்த யோவானின் சகோதரன் யாக்கோபுக்கள் இங்கே உண்டோ?

- எருசலேம் தேவாலயத்தின் உச்சியிலிருந்து தள்ளிவிடப்பட்டு, இன்னும் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்த, யாக்கோடு நிருபம் எழுதிய சின்ன யாக்கோபு, பிரதான ஆசாரியனாகிய அன்னாவின் கண்ணசைப்பினாலே கட்டையாலே அடித்துச் சாகடிக்கப்படத் தன்னை அர்ப்பணித்த அந்த அர்ப்பணம் கொண்ட வாலிபர்கள் எங்கே?

- நாம் இங்கே நமது பிள்ளைகளைக் கண்டிக்க, "தோலை உரித்துவிடுவேன்" என்று சர்வ சாதாரணமாய்ச் சொல்லுகிறோம். ஆனால் உண்மையாகவே, தான் உயிரோடு தோலுரிக்கப்படத் தன் சரீரத்தை சந்தோஷமாய்க் கொடுத்தான் பற்தொலோமேயு !

- ராபர்ட் மஃபட்டுக்கும், டேவிட் லிவிங்ஸ்டனுக்கும், C.T.

ஸ்டட்டுக்கும் முன்னோடியாய் முதல் நூற்றாண்டிலேயே ஆப்பிரிக்க மண்ணில் மிஷினரியாய்க் கால்பதித்த செலோத்தே எனப்பட்ட சீமோன், அந்த நரமாம்சப் பட்சிணிகளின் மத்தியிலே மரம் அறுக்கும் வாளால் அறுத்துக் கொல்லப்பட்டதாலேயே, எபிரேய நிருப ஆக்கியோன், "சிலர் வாளால் அறுப்புண்டார்கள்" என்று எழுதிவைத்தான். இன்றைய ரெயினார்ட் போங்க்கேயின் ஆப்பிரிக்க எழுப்புதலுக்கு வித்திட்டது செலோத்தே என்ற சீமோனின் இரத்தமல்லவோ?

- அப்போஸ்தலர் எட்டிலே சமாரியாவில் எழுப்புதல் அலையை எழுப்பிவிட்ட பிலிப்பு, அதே வேலையை ஹீரோப்போலிஸ் நகரத்திலும் நிகழ்த்த, இம்முறை அதின் தாக்கம் வேறுவிதமாகி, பிலிப்பு தலைகீழாய்ச் சிலுவையில் அறையப்பட, அந்த நிலையிலும் பிரசங்கம் பண்ணிக் கொண்டே ஜீவனைவிட்டான் என்கிறது வரலாறு !

- எத்தியோப்பியாவிலே கோயில் கோபுரம் ஒன்றிலிருந்து தள்ளிவிடப்பட்டு, தலைவெட்டப்பட்டு மரித்த மத்தேயு !

- மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, 'T' வடிவ சிலுவையின் மரணமே அகோரமென்றால், அந்திரேயாவை அடித்துக் கட்டியது 'X' வடிவ சிலுவையில். அந்தச் சிலுவையின் வடிவத்துக்கு ஏற்றபடி, கால்கள் வலுக்கட்டாயமாய்க் கட்டையாய் விரிக்கப்பட்டு, முதுகெலும்பு முறிந்து, கைகள் இரண்டும் தோள்பட்டையிலிருந்து கழன்று, ஆணியடித்தால் உடனடி மரணமென்பதால், சிலுவையில் கட்டப்பட்ட நிலையிலேயே கதறக்கதற மிக நீண்ட நேர வேதனையடைய விடப்பட்டு, அகோர மரணமடைந்த அந்திரேயா!

- சென்னையின் பரங்கிமலையிலே ஈட்டியால் குத்தப்பட்டு, பிறகு எரியும் சூளையிலே தூக்கியெறியப்பட்டு இரத்தசாட்சியான தோமா !

- ட்ராஜன் என்னும் ரோம ராயனின் நாட்களில் ரோம் நகரக் காவல் கிடங்கு ஒன்றில் இரண்டு தொடை எலும்புகளும், கால்களும் அடித்து முறிக்கப்பட்டு, கல்லால் நெஞ்சு நசுக்கப்பட்டு உயிர் துறந்த ஒநேசிமு !

- தனது 84 வயதில் அகாயாவில் ஒரு ஒலிவ மரத்தில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்ட பிரியமான வைத்தியனாகிய லூக்கா!

- சாலமியில் கல்லெறியப்பட்டு ஆறுதலின்றி மரித்த ஆறுதலின் மகனாகிய பர்னபா !

- கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட அர்க்கிப்பு !

- நீரோவின் நாட்களில் ரோம் நகரில் சுவிசேஷத்துக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்த ஆக்கில்லா - பிரிஸ்கில்லா!

- குதிரையின் வாலோடு இறுகக் கட்டப்பட்டு, அலெக்ஸாண்ட்ரியாவின் தெருக்களிலே உடல் கந்தல் கந்தலாகிப் போகுமட்டும் இழுத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்ட மாற்கு!

- நீரோ காலத்தில் நீசமாய்க் கொல்லப்பட்ட எப்பாப்பிரா!

- மனித கற்பனைக்கு அப்பாற்பட்ட முறையில் வதைத்து சாகடிக்கப்பட்ட அன்றோனிக்கு மற்றும் யூனியா !

- கசையால் அடிபட்டே உயிர்விட்ட சில்வானு என்ற சீலா !

- கால்கள் தொழுவத்தில் மாட்டப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட யூதா என்ற பர்சபா !

- அடங்காப் புரவிகளின் வால்களோடு கட்டப்பட்டு உடல் நார்நாராய்க் கிழிந்து உயிர்விட்ட ஒநேசிப்போரு!

- எபேசுவிலே தியானாளின் திருவிழா ஒன்றிஞ்ட்டையால் அடித்துக் கொல்லப்பட்டு இரத்தசாட்சியான தீமோத்தேயு !

சபை சரித்திரத்தின் எழுப்புதல் பக்கங்கள் தேவ மனிதர்களின் இரத்தத்தால் தோய்ந்து காய்ந்து காணப்படவில்லையோ?

- Florence நகரின் நடுமையத்தில் பல அடி உயரத்தில் தூக்கப்பட்டு அங்கிருந்து தலைகீழாய் வீசியெறியப்பட்டு, உயிர் போகாதிருந்த நிலையில் எரித்துக் கொல்லப்பட்ட, மார்ட்டின் லூத்தருக்கு முன்னோடியான இத்தாலியின் சவனரோலா!

- வனவிலங்குகளுக்கு இரையாக்கப்பட்ட இளம் தாயான பெர்ப்பெச்சுவா !

- அலெக்ஸாண்ட்ரியாவில் தனது விசுவாசத்தினிமித்தம் விபச்சார விடுதியில் தள்ளப்பட்டு, அங்கிருந்து முதல் நாள் இரவே ஆண்டவரால் அற்புதமாய்த் தப்புவிக்கப்பட்டு, அதன்பின் தலை வெட்டப்பட்டு மரித்த தியோடரா!

- மௌரிஷியானாவில் கண்கள் இரண்டும் பழுக்கக் காய்ச்சப்பட்ட கம்பிகளால் குத்தப்பட்டு, தன் இளம் மனைவி மௌராவுடன் ஒரே சிலுவையில் முன்னும் பின்னுமாக அறையப்பட்டுக் கொல்லப்பட்ட திமோத்தி !

- துருக்கியின் சின்ன அர்மீனியாவிலே ஒரே இரவில் கடும்பனியில் உடலில் ஒரு துண்டு ஆடையின்றி நிறுத்திவைக்கப்பட்டுத் தங்கள் விசுவாசத்துக்காகக் கொல்லப்பட்ட ரோம இராணுவ வீரர்கள் 40 பேர் !

- கொல்லும் கொடிய வழிகள் பத்தில், சிலுவையில் தொங்கவிடப்படுதலும், உயிரோடு தோலுரிக்கப்படுதலும், எலும்புடைக்கும் சக்கரத்தில் கட்டப்பட்டு உடலின் எலும்புகள் ஒவ்வொன்றாக உயிரோடு நொறுக்கப்படுதலும், உடலுறுப்புகள் நறுக்கப்படுதலும், ஆசன வழியே கூரான கழுமரம் ஏற்றப்படுதலும், யானையின் கால்களால் பந்தாடப்பட்டுக் கொல்லப்படுதலும், உயிரோடு தீவைத்துக் கொளுத்தப்படுதலும், மரம் அறுக்கும் வாளால் நீளவாக்கில்

அங்குலம் அங்குலமாய் அறுக்கப்படுதலும், குதிரை வாலில் கட்டி இழுக்கப்படுதலும், "ஸ்லோ ஸ்லைசிங்" (Slow Slicing) எனப்படும் நீண்ட நேர இடைவெளிகள் விட்டுவிட்டு உடலுறுப்புகள் ஒவ்வொன்றாய் வெட்டப்படுதலுமாகிய இவை யாவும் பண்டைய நாட்களில் சர்வசாதாராணமானவை!

- இவைகள் தவிர சமீப காலங்களின் தென் கொரிய எழுப்புதலுக்கு வித்திட்ட கொரிய விசுவாசிகளின் பேசும் இரத்தம்!

- கம்யூனிச தேச எழுப்புதல்களுக்கு உரமாய் கம்யூனிச் சிறைகளிலே வார்த்தைகளால் விவரிக்க இயலா சித்ரவதைகளுக்கு உள்ளான அருமையான பல்கேரிய, ருமேனிய, ரஷ்ய விசுவாசிகள்!

அப்போஸ்தலர் காலம் முதல் அண்மைக்காலம் வரை இப்படிப்பட்ட பாடுகளுக்குத் தங்களை மனமகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுத்த இவர்கள் யாவருமே இரத்த ஞானஸ்நானத்தில் முழுகி எழுந்தவர்களே!

ஒன்று..
எழுப்புதலுக்கு முன்னாக எழும்பும் உபத்திரவம்!

அல்லது..
எழுப்புதலோடு கைகோர்த்து நடந்துவரும் உபத்திரவம் !

அல்லது..
எழுப்புதலுக்குப் பின் வெடிக்கும் ஒரு உபத்திரவம்!

வரிசை எப்படியோ.. ஆனால் எழுப்புதலுக்கென்று சபை முழுகி எழ வேண்டிய கண்ணீரும் வியர்வையும் மட்டுல்ல.. இரத்தத்தின் ஸ்நானம் ஒன்றும் நிச்சயம் உண்டு! நிச்சயமாகவே உண்டு!

இந்தியாவும் அதற்கு விதிவிலக்கல்ல. எழுப்புதலுக்காய் போராடும் இந்திய சபைகளும் ஊழியர்களும் இங்கே எதிர்பார்க்க வேண்டியது, எழுப்புதலுக்கு முன்னான ஒரு இரத்தக்களரி ! மிகச் சீக்கிரமே !

அக்கினியைக் காணவும், போடவும் நமக்கு விருப்பமோ? அது இப்பொழுதே தேசத்தில் பற்றியெரிய வேண்டுமென்ற தாகமோ? அப்படியானால், நாம் முழுகி எழ வேண்டிய இரத்த ஞானஸ்நானம் ஒன்று உண்டு! நிச்சயம் உண்டு!

பின்பற்றும்படி நமக்கு அடிச்சுவடுகளை விட்டுச்சென்ற நமது நேச இரட்சகரும், மேகம் போன்ற திரளான எழுப்புதலின் சாட்சிகளுமான நமக்கு முன் சென்றவர்களும் இந்த உதிர ஊற்றில் மூழ்கி எழுந்தே சென்றிருந்தார்களானால், நாம் மட்டும் அதிலிருந்து விதிவிலக்கோ?

குருதிப் பிரளயம்

ISAIAH 53

இன்றைய கண்ணோட்டத்தில்...

CHAPTER - 4

ஏசாயா 53

இன்றைய கண்ணோட்டத்தில்..


எருசலேம் ஆலய உப்பரிகையிலிருந்து
தள்ளிவிடப்பட்டு கட்டையாலும் கல்லாலும்
அடித்துக் கொல்லப்பட்ட யாக்கோபு நிருபம்
எழுதிய இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு

CHAPTER-4

ஏசாயா 53
இன்றைய
கண்ணோட்டத்தில்..

வேதத்தின் தனிச்சிறப்பே, பற்பல காலங்களில் அந்தந்த காலங்களுக்கும் சமய சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப, அது தன்னை அந்தந்தக் கோணங்களில் தீர்க்கதரிசனமாய் வெளிப்படுத்தி நிற்பதே!

அந்த வகையில் ஏசாயா 53, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடு மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனமேயானாலும், இந்தியாவின் இன்றைய, மற்றும் வரப்போகும் காலக்கட்டத்துக்கு ஏற்ப, அது மூன்று கோணங்களில் தன்னை வெளிப்படுத்துகிறது.

அந்த மூன்று கோணங்களையும் மனதில் வைத்தே இச்செய்திக்கு ஏற்ப இப்போது இது வாசிக்கப்பட வேண்டியது...

1. "குருதிப் பிரளயம்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை, இன்றைய பெருவாரியான கிறிஸ்தவ சமுதாயத்தால் அசட்டை செய்யப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுப்போகும் என்கிற முதல் கோணத்தில்...

2. இந்திய சபை, தன் அக்கிரமங்களினிமித்தம் வரும் நாட்களில் கடந்து செல்ல வேண்டிய பாதை ஒன்று உண்டு என்கிற இரண்டாவது கோணத்தில்...

3. சபை சந்திக்கப்போகும் பாடு, உபத்திரவத்தையே தேவன் மிகப்பெரிய எழுப்புதல் விளைச்சல் ஒன்றுக்கு நீராகவும் உரமாகவும் பயன்படுத்தப் போகிறார் என்கிற மூன்றாவது கோணத்தில்...

ஏசாயா 53
ஓர் இன்றைய கண்ணோட்டம்

53:1

எங்கள் மூலமாய் சொல்லப்படுவதையும், இந்த எழுத்துக்களின் மூலமாய்ப் பதிவிடப்படுவதையும், கேள்விப்படுவதையும் விசுவாசிப்பவன் யார்? கர்த்தருடைய மனபாரம் நிறைந்த இவ்வார்த்தைகள் யாருக்கு வெளிப்பட்டது?

53:2

இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகள், இன்றைய ஆவிக்குரிய வறண்ட கிறிஸ்தவ சமுதாயமாகிய இந்த நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போல இதோ எழும்புகிறது !

இந்த வார்த்தைகளிலே பூசிமெழுகுதல் இல்லை.. இதிலே அழகுமில்லை..அலங்காரமுமில்லை..வரப்போகும் இச்சம்பவங்களைக் குறித்த இந்தச் செய்திகளைப் பார்க்கும்போது நாம் விரும்பத்தக்க (ரூபம்) செய்தி எதுவும் அதிலே இல்லாதிருக்கிறது.

53:3

இவ்வார்த்தைகளும் எச்சரிப்புகளும் அசட்டை பண்ணப்பட்டதும், இன்றைய கிறிஸ்தவ உலகால், சபையால், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டதும், துக்கம் நிறைந்ததும், பாடும் பாரமுமுள்ளதாயிருக்கிறது. இவ்வார்த்தைகளையும் செய்திகளையும் விட்டு நம்முடைய கண்களை விலக்கி முகங்களை மறைத்து, அவைகளை டெலிட் செய்துவிடுகிறோம். இது அசட்டை பண்ணப்பட்டிருக்கிறது. இதை எண்ணாமற்போனோம்..

53:4

மெய்யாகவே இக்கட்டுரைகளும் சம்பவங்களும், இதில் வந்து போகும் நபர்களும் செய்திகளும் பாடு நிறைந்தவர்களும், துக்கம் சுமந்தவைகளுமாகவே இருக்கிறது. இவைகள் அடிபட்டு, பலரால் விமர்சிக்கப்பட்டு சிறுமைப்பட்டுப் போயிற்று..

53:5

தன்னுடைய மீறுதலினிமித்தம் சபையானது காயப்பட்டு, தனது அக்கிரமங்களினிமித்தம் அது நொறுக்கப்படப்போகிறது. எழுப்புதலாம் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அதின் மேல் வருகிறது. அது

படப்போடும் காயத்தின் தழும்புகளால் அநேக இருதயங்கள் குணப்படும்.

53:6

இன்றைய சபையானது ஆடுகளைப் போல வழிதப்பித் திரிகிறது. சபையிலே அவனவன் தன் தன் வழியிலே போகிறான். கர்த்தரோ, சபையின் அக்கிரமத்தை அதின் மேல் விழப்பண்ணினார்..

53:7

வரும் நாட்களில் அது நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருக்கும். ஆனாலும் அது வாய்திறவாதிருக்க வேண்டும். அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அது தன்னுடைய வாயைத் திறவாதிருக்கவே வேண்டும்..

53:8

இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலும் நீதி நியாயத்திலுமிருந்தும் அது எடுபட்டுப்போகும். அந்த உபத்திரவக் காலத்துக்குப்பின் எழும்பப்போகும் ஒரு புதிய ஆவிக்குரிய வம்சத்தை யாரால் சொல்லிமுடியும்? ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து பலர் அறுப்புண்டு போவார்கள். சபை தன் ஜனங்களின் மீறுதலினிமித்தம் வாதிக்கப்படும்.

53:9

துன்மார்க்கரோடே அநேக இரத்தசாட்சிகளுக்குக் குழிகளை நியமிப்பார்கள். ஆனாலும் மரிக்கப்போகும் உண்மைக் கிறிஸ்தவர்கள் பலர், ஆவிக்குரிய ஐசுவரியவான்களோடே இருப்பார்கள். அந்த மீதியானவர்கள் கொடுமை செய்வதுமில்லை; அவர்கள் வாயில் வஞ்சனை இருப்பதுமில்லை..

53:10

கர்த்தரோ சபையை நொறுக்கச் சித்தமாகி அதைப் பாடுகளுக்குட்படுத்துவார். சபையின் ஜனங்கள் தங்கள் சரீரங்களை பாணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, எழுப்புதலுக்குப் பின்வரும் ஒரு யௌவன சந்ததியைக் கண்டு நீடித்த நாளாய் அவர்கள் தேவனோடு நிலைத்திருப்பார்கள். கர்த்தருக்குச் சித்தமானது அவர்கள் கையினாலே வாய்க்கும்.

53:11
அவர்கள் தங்கள் ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்கள். அவர்களது மரணத்தினால் அநேகர் இரட்சிப்படைவார்கள். அநேகரது மீட்புக்காக இந்த இரத்த சாட்சிகள் தங்கள் ஜீவனைக் கொடுப்பார்கள்.

53:12
இவர்கள் தங்கள் ஆத்துமாக்களை மரணத்திலூற்றி மற்றவர்களால் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகரது பாரத்தைத் தாங்களே சுமந்து, அந்த இரட்சிப்படையாத அக்கிரமக்காரருக்காகவும் தேவனற்றவர்களுக்காகவும் இவர்கள் வேண்டிக்கொள்ளப்போகிறதினிமித்தம் வரப்போகும் எழுப்புதலிலே அநேகரை தேவன் அவர்களுக்குப் பங்காகக் கொடுப்பார். ஆவிக்குரிய பலவான்கள் அநேகரை ஆத்துமாக்களான கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்கள்.

வரப்போகும் நாட்களுக்கான இவ்வார்த்தைகள், இந்த நியாயங்கள் பின்விட்டு அகன்றது. நீதியான இவ்வார்த்தைகள் தூரமாய் நின்றது. இச்சத்தியங்கள் சோஷியல் மீடியாவின் வீதிகளிலே இடறி, இந்த யதார்த்தங்கள் (மனித மனங்கள் மட்டும்) வந்து சேராமல் போகிறது.

இந்தச் சத்தியங்கள் தள்ளுபடியாயிற்று.. (ஏசா 59:14, 15)

ஏசாயா 53 ன் புதிய ஏற்பாட்டுப் பிரதிபலிப்பான ரோமர் 10:11 - 21

ரோமர் - 10:11
இவைகளை விசுவாசிக்கிறவன் ஏற்ற காலத்தில் வெட்கப்படுவதில்லை..

ரோ 10:12
கர்த்தருக்குள் சிறியவனோ பெரியவனோ வித்தியாசமே இல்லை; எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளும் யாவருக்கும் இதை விளங்கப் பண்ணுவார்..

ரோ 10:13
இவற்றை ஏற்றுக்கொள்ளுகிற எவனும் எச்சரிப்படைகிறான்..

ரோ 10:14

இவ்வார்த்தைகளை விசுவாசியாதவர்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? இதைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? இவற்றைக் கூறி எச்சரிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

ரோ 10:15

இவ்வார்த்தைகள் எழுதப்பட்டு சோஷியல் மீடியாவிலும், ப்ரிண்ட் மீடியாவிலும் சொல்லப்படாவிட்டால், போஸ்ட் பண்ணப்படாவிட்டால் இவற்றைக் கேட்டு விசுவாசிப்பவர்கள் மற்றவர்களுக்கு எப்படிச் சொல்லி எச்சரிப்பார்கள்? இந்த எச்சரிப்பைக் கூறி அறிவிப்பவர்களும், எழுதுபவர்களும் கர்த்தருடைய பார்வையில் அழகாயிருக்கிறார்களோ?

ரோ 10:16

ஆனாலும் இந்த வார்த்தைகளுக்கு எல்லாரும் கீழ்ப்படியப் போவதில்லை. அதைக் குறித்து ஏசாயா: "கர்த்தாவே எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?" என்கிறான்.

ரோ 10:17

இந்த வார்த்தைகளின் மேல் வைக்கப்படும் விசுவாசம், கேள்விப்படுகிறதினால் வரும். கேள்வி தேவனுடைய தீர்க்கதரிசன வசனங்களால் வரும்.

ரோ 10:18

இப்படியிருக்க, இன்றைய சபையும், தேவ ஜனமும், கிறிஸ்தவ சமுதாயமும் இந்த எச்சரிப்பின் சத்தத்தைக் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன். ஒவ்வொரு நாளும் கேள்விப்படுகிறார்கள். இந்த வார்த்தைகளின் சத்தம் வாட்ஸப் மூலமும், சோஷியல் மீடியாவின் ஒவ்வொரு அங்கத்தின் மூலமும் பூமியெங்கும், இந்த எச்சரிப்பின் வசனங்களும் சாட்சிகளும் பூச்சக்கரத்துக் கடைசி வரை செல்லுகிறதே!

ரோ 10:19

இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய விசுவாசிகளும் இவைகளை அறியவில்லையா என்று கேட்கிறேன்.

அறிகிறார்கள். மோசே சொன்னது போல இவைகள் அநேகருக்கு எரிச்சலாகவும் கோபமூட்டுவதாகவுமே இருக்கிறதே!

ரோ 10:20

அல்லாமலும் ஏசாயா சொன்னது போல, மிகச் சிலராலேயே இவைகள் கண்டறியப்படும், மீதியான கூட்டம் ஒன்றுக்கு மட்டுமே இவைகள் வெளியரங்கமாகும் என்று தைரியமாய்ச் சொல்ல முடியும்.

ரோ 10:21

சபையின் பெரும்பான்மையானவர்களைக் குறித்தோ : கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்து பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்ளை நோக்கி நாள்தோறும், நாள் முழுவதும் கையில் இந்த எழுதுகோல் நீட்டப்பட்டதாகவே இருக்கிறது.

ரோமர் 11

11:1

இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளி விடவில்லை.

11:2

தேவன் தாம் முன்னறிந்து கொண்ட ஜனங்களைத் தள்ளிவிடவில்லை.

11:3

மறைந்திருக்கும் சொற்பமான உண்மைத் தீர்க்கதரிசிகள், வார்த்தைகளால் கொலை செய்யப்பட்டு, கர்த்தருடைய பலிபீடங்கள் இன்று இடித்துப் போடப்பட்டு, ஒரு சில எலியா போன்றவர்களே மீந்திருக்கிறார்கள் என்றே நினைக்கப்பட்ட போதிலும்,

11: 4

உலகமும் பாவமும் இச்சையும் பணமும் பெயரும் புகழுமான பாகால்களுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு முடங்காத முழங்கால்களுடைய ஒரு சிறு கூட்டத்தைத் தனக்காக அவர் மீதியாக வைத்திருக்கவே வைத்திருக்கிறார்.

11:5

இந்த இக்கட்டான காலத்திலும் கிருபையினால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாக இருக்கவே செய்கிறது.

11:6

அது அவர்களது கிரியைகளினாலே அல்ல, தேவ கிருபையினாலே மீதியாக வைக்கப்பட்டிருக்கிறது.

11:7

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இச்செய்தியைக் கண்டடைந்திருக்கிறார்கள். மற்றவர்களோ இன்றைத் தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்.

11:8

அவர்களது இருதயக் கடினத்தினிமித்தம் கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்தாரோ?

11:9

அவிசுவாசிகளோடும் விசுவாசியாத கூட்டத்தோடும் கூடிய அவர்களுடைய பேச்சுவார்த்தைகளின் பந்தியே அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியும் இடறுதற்கான கல்லுமாயிற்றோ?

11:10

காணாதபடி அவர்கள் கண்கள் அந்தகாரப்பட்டுப் போயிற்றோ?

11:11

தேவன் அவர்களுக்குள்ளே ஒரு வைராக்கியத்தை எழுப்ப மாட்டாரோ?

"அசட்டைக்காரரே, பாருங்கள்,
பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில்
ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை
உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள்
விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி
உங்களுக்கு நேரிடாதபடிக்கு
எச்சரிக்கையாயிருங்கள்..

(அப் 13:41)

குருதிப் பிரளயம்



CHAPTER - 5

வருகைக்கு முன்னான வசந்தம்...
வசந்தத்துக்கு முன்னான வன்முறை

தலைகீழாய் சிலுவையில் அறையப்பட்ட பிலிப்பு

CHAPTER-5

வருகைக்கு முன்னான வசந்தம்... வசந்தத்துக்கு முன்னான வன்முறை

"அத்திமரம் துளிர்விடக் காணும்போது வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறியுங்கள்.." என்று வருகையின் அடையாளங்களில் மிகக் கடைசி அடையாளமாய் தெள்ளத்தெளிவாய்ச் சொன்னார் நம் ஆண்டவர் இயேசு ! (மாற்கு 13:28)

யுத்தங்களும் பஞ்சங்களும் பூமியதிர்ச்சிகளும் கொள்ளை நோய்களும் வருகையின் அடையாளங்களாய் நிறைவேறித் தீர்ந்து, அந்த அடையாளங்களின் மீதியாய் ஒன்றே ஒன்று மிஞ்சி நிற்குமானால் அது இந்த **"வசந்தகாலம்"** ஒன்றே !

"இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது.." என்ற வார்த்தைக்கு முந்தின வார்த்தையாய்..முத்தாய் நிற்பது இந்த ஒரு வசந்தகாலமே !

"கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்.."(அப் 3:19) என்றார் பேதுரு !

முன்னே குறிக்கப்பட்ட இயேசுவின் வருகைக்கு முன், அவரது சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலம் அல்லது வசந்தகாலமாகிய ஒரு எழுப்புதலின் காலம் உண்டு என்றும் அதுவே "இந்தக் காலம்" என்று அப்போஸ்தல நடபடிகளின் ஆரம்ப எழுப்புதலில், அப்போது தான் இயேசு பரமேறியிருக்கும் அந்த ஒரு சில நாட்களிலேயே பேதுரு குறிப்பிட்டு இப்போது 2000 ஆண்டுகள் முடிந்து..

வருகையின் அடையாளங்களும் நிறைவேறி நிற்கும் நிலையில், முன்மாரியாகிய அதையே அவர் இளைப்பாறுதலின் காலம் என்றும் கிறிஸ்துவின் வருகை என்றும் குறிப்பிட்டிருப்பாரானால்..

இந்த இறுதி எழுப்புதலாகிய பின்மாரியை **"வருகைக்கு முன்னான வசந்தம்"** என்று அழைப்பதும் நம்புவதும் தீர்க்கதரிசனங்களின் பூரணமும் நிறைவேறுதலும் என்று சொல்லலாம் அல்லவோ ?

ஆனால் இந்த வசந்த காலத்தைக் குறிப்பிடுமுன், வருகையின் அடையாளங்களின் பட்டியலில் இயேசு பல காரியங்களைச் சொல்லியிருந்தாலும், அந்த மிக நீண்ட பட்டியலில் அதிகபட்சமான வசனங்களில் அவர் குறிப்பிட்டது, ஒரு உபத்திரவக்காலம்.

ஆகவே வருகைக்கு முன்னான ஒரு வசந்தம்..அந்த வசந்தத்துக்கு முன்னான ஒரு வன்முறை..

லூக் 21:12
இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம் அவர்கள் உங்களைப்பிடித்து, ஜெப ஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள்.

லூக் 21:13
ஆனாலும் அது உங்களுக்கு சாட்சியாவதற்கு ஏதுவாகும்.

21:14
ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள்.

21:15
உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்.

21:16, 17
பெற்றோராலும், சகோதரராலும், பந்து ஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள். உங்களில் சிலரைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.

21:22

(சபைக்கு) நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே.

21:23

(சபையின் மேல்) மிகுந்த இடுக்கணும், ஜனத்தின் மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

21:24

பட்டயக்கருக்கினாலே விழுவார்கள். புறஜாதிகளுக்குள்ளே சிறைப்பட்டுப் போவார்கள். புறஜாதியாரின் கை ஓங்கியிருக்கும் காலம் நிறைவேறும் வரைக்கும் (சபையானது) புறஜாதியாரால் மிதிக்கப்படும்.

21:32

இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்து போகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

21:35

தேசமெங்கும் குடியிருக்கிற (கிறிஸ்தவர்கள்) அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும்.

மாற்கு 13:11

அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும் போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள், ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர்.

மாற்கு 13:12

சகோதரன் சகோதரனையும், தகப்பன் பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றோருக்கு விரோதமாய்ப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலை செய்வார்கள்.

13:17

அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ!

13:19
தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தது முதல் இதுவரைக்கும் (இந்தியாவில்) சம்பவித்திராததும், இனிமேல் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும்.

13:20
கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்.

13:23
நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள். இதோ எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

மத் 24:37-39
நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே (இப்போதும்) நடக்கும்.

எப்படியெனில் ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்தில் நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் கொடுத்தும் இருந்தது போல, இந்தக் (குருதிப் பிரளயம்) வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருப்பார்கள்.

யோவான் 16:1
நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

யோவான் 16:2
அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் (தன்) தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்.

16:3
அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.

16:4
அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

16:6
ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.

லூக் 21:36
ஆகையால் இனிச்சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.

இந்நாட்களைக் குறித்து பவுலும் பழைய ஏற்பாடும்...

அப் 13:41/ஆபகூக் 1:5

அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன்,, ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்லியிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்..

ஆபகூக் 1:6
இதோ நான்...கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள்.

1 : 7

அவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள்; அவர்களுடைய நியாயமும் அவர்களுடைய மேன்மையும் அவர்களாலே உண்டாகும்.

1 : 8
அவர்களுடைய குதிரைகள் (வாகனங்கள்) சிவிங்கிகளில் வேகமும், சாயங்காலத்தில் திரிகிற ஓநாய்களிலும் தீவிரமாயிருக்கும்; அவர்களுடைய குதிரை வீரர் தூரத்திலிருந்து வருவார்கள். இரைக்குத் தீவிரிக்கிற கழுகுகளைப் போல பறந்து வருவார்கள்.

1 : 9
அவர்களெல்லாரும் கொடுமை செய்ய வருவார்கள். அவர்களுடைய முகங்கள் சுவறச் செய்யும் கீழ்க்காற்றைப் போலிருக்கும்; அவர்கள் மணலத்தனை ஜனங்களைச் சிறைப்பிடித்துச் சேர்ப்பார்கள்.

1 : 10
அவர்கள் (ஆவிக்குரிய) ராஜாக்களை ஆகடியம் பண்ணுவார்கள். (ஆவிக்குரிய) அதிபதிகள் அவர்களுக்குப் பரியாசமாயிருப்பார்கள். அவர்கள் அரண்களையெல்லாம் பார்த்து நகைத்து மண்மேடுகளைக் குவித்து அவைகளைப் பிடிப்பார்கள்.

ஆமோஸ் 9:5
சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் (சபையைத்) தொட அது உருகிப்போம்; அப்பொழுது அதின் (விசுவாசிகள்) புலம்புவார்கள். எங்கும் (இரத்தமும் கண்ணீரும்) நதியாய்ப் புரண்டோடி...ஆற்று வெள்ளத்தைப் போல வெள்ளமாகும்.

எரேமியா 5:30
திகைக்துத் திடுக்கிடத்தக்க காரியங்கள் தேசத்தில் நடந்து வருகிறது.

எரேமியா 4:6
நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும் மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.

எரே 4 : 7, 8
தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளை சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். இதினிமித்தம் இரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள்.

எரே 4 : 9

அந்நாளிலே.. ஆசாரியர்கள் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள்.

எரே 4 : 10

பட்டயம் பிராணன் மட்டும் எட்டும்.

4 : 11

வனாந்தரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து ஒரு தீக்காற்று என் ஜனமாகிய குமாரத்திக்கு நேராக அடிக்கும்.

4 : 13

இதோ மேகங்களைப் போல எழும்பி வருகிறான்; அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலிருக்கிறது. அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்.. நமக்கு ஐயோ!

4 : 15, 16

ஒரு சத்தம் வந்து செய்தியை அறிவிக்கிறது.. தீங்கைப் பிரசித்தம் பண்ணுகிறது.. ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம் பண்ணுங்கள்.

4 : 19

என் குடல்கள், என் குடல்களே நோகிறது; என் உள்ளம் வேதனைப்படுகிறது. என் இருதயம் என்னில் கதறுகிறது.. நான் பேசாமல் அமர்ந்திருக்கக் கூடாது. என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும் யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே!

4 : 20

நாசத்துக்கு மேல் நாசம் வருகிறது... தேசமெல்லாம் பாழாகிறது..

4 : 21

நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்?

4 : 22

என் ஜனங்களோ மதியற்றவர்கள்; என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்.. அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள்...அவர்களுக்கு உணர்வே இல்லை.. பொல்லாப்புச் செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்...

4 : 23
(சபையைப்) பார்த்தேன். அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. (சபையின் நிலையைப்) பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது..

4 : 27
(சபை) பாழாய்ப் போயிற்று..

4 : 28
இதினிமித்தம் (சபை) புலம்பும்.

4 : 29
குதிரை வீரரும் வில் வீரரும் இடும் சத்தத்தினாலே (கூட்டங்கூட்டமாய் வருவார்கள்) சகல (சபையாரும்) ஓடி, அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் ஏறுவார்கள். ஒரு மனுஷனும் குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்.

4 : 30
நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ என்ன தான் உன்னை அழகுபடுத்தி அவர்களை வசியப்படுத்த என்ன செய்தாலும் அவர்கள் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.

எரேமியா 8 : 31
கர்ப்ப வேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல் விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், சீயோன் குமாரத்தியின் சத்தம் கேட்கப்படும்...அவள் பெருமூச்சு விட்டு, தன் கைகளை விரித்து, "ஐயோ! கொலைபாதகர்களாலே என் ஆத்துமா சோர்ந்துபோகிறதே என்பாள்.

எரேமியா 8 : 28
கர்த்தராகிய நான் அதைச் சொன்னேன்... அதை நிர்ணயம் பண்ணினேன், நான் மனஸ்தாபப்படுவதுமில்லை..நான் அதை விட்டுத் திரும்புவதுமில்லை.

குருதிப் பிரளயம்

CHAPTER - 6

கையளவு கார்மேகங்கள்

"X" வடிவ சிலுவையில் அறையப்பட்ட அந்திரேயா



CHAPTER-6

கையளவு கார்மேகங்கள்

அன்று..
எலியாவின் நாட்களிலே எழுப்புதல் பெருமழையின் இரைச்சலொன்று கேட்கப்பட்டது...
கையளவு மேகம் எழும்பிவரக் காணப்பட்டது..

இதோ இன்று..
குருதிப் பெருமழையின் பேரிரைச்சலொன்று இங்கே கேட்கப்படுகிறது..
அதின் கையளவு மேகங்கள் தேசமெங்கும் ஆங்காங்கே காணப்படுகிறது...

- இந்தியத் திருச்சபையின் நெற்றியிலே இடப்பட்டது ஒரு சிலுவை அடையாளம்..
இரத்தத்தினாலே....
ஜனவரி 21, 1999..
ஒடிசாவின் மயூர்பஞ்ச்சிலே..
கிரஹாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது பாலகர் இருவர் உயிரோடு கொளுத்தப்பட்ட அந்த இரவிலே !

- இதற்கு முன்னோட்டமாகக் குஜராத்தின் Dang மாவட்டத்தில் கிறிஸ்மஸ் அன்று தொடங்கி தொடர்ந்து பத்து நாட்கள் 25 கிராமங்கள் அடித்து நொறுக்கப்பட்டன..

- ஒடிசாவின் கஜபதி மாவட்டத்தின் ரணலாய் கிராமம்..
மார்ச் 15, 1999..

யானை புகுந்த கரும்புத் தோட்டமாய் 2000 பேர் கொண்ட சங்கிக் கும்பல்கள் கிராமத்தின் 157 வீடுகளைக் கொளுத்தி, சூறையாடிப் பேயாட்டம் போட்டது.

- 2008 கந்தமால் கலவரத்துக்கு முன்னேயே 2007 ல் வெடித்தது

கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்தினம்.. நூற்றுக்கு மேலான சபைகள் இடித்துத் தள்ளப்பட்டு, கொல்லப்பட்டவர்கள் 50 பேர் வரை..

- **2008 கந்தமால் கந்தல்கள்..**

இடிக்கப்பட்ட ஆலயங்கள் - 395

கொள்ளையடிக்கப்பட்ட வீடுகள் - 5600 முதல் 6500

துடைத்துப் போடப்பட்ட கிராமங்கள் - 600

நிர்க்கதியான அகதிகள் - 60,000 முதல் 70,000 வரை..

கொல்லப்பட்டவர்கள் - 39 என்பது அரசாங்கக் கணக்கு..

- அதே 2008, செப்டம்பர் 14 அன்று தெற்கு கர்நாடகாவில் கிறிஸ்தவர்களுக்கு எதிராய் எழும்பிய வன்முறையில் நொறுக்கப்பட்ட ஆலயங்கள் 20..

- பதிவு செய்யப்பட்ட கேஸ்கள்..

2014 ல் - 127
2015 - 142
2016 - 226
2017 - 248
2018 - 292
2019 - 328
2020 - 293

- லாக்டவுன் அமலில் இருந்தபோதும் 2020ன் முதல் 6 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட கேஸ்கள் மட்டுமே 293. இதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 6..

- வருடாவருடம் இந்தப் புள்ளிவிபரம் கூடிக்கொண்டே போக, 2021ல் மட்டும் பதிவு செய்யப்பட்டவை 505 கேஸ்கள்..

- அக்டோபர் 29, சத்தீஷ்கர் கபீர்தாஸில் 25 வயது போதகர் ஒருவர் வீடு புகுந்து கண்மூடித்தனமாய்த் தாக்கப்படுகிறார்..

- அக்டோபர் 3 அன்று உத்தராக்கண்டின் ரூர்க்கியில் ஞாயிறு ஆராதனையின்போது ஆலயம் ஒன்றில் உட்புகுந்து துவம்சம் செய்தது ஒரு கூட்டம்..

- ஜார்க்கண்டில் அக்டோபர் 2020 ல் கைது செய்யப்பட்டு மஹாராஷ்ட்ராவுக்கு விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்டு, 2021, ஜூலை 5 அன்று விசாரணைக் கைதியாகவே உயிர் விடுகிறார் வயதான கத்தோலிக்க குருவானவர் Father Stan Swamy..

- 2022 ன் முதல் 15 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட்ட கேஸ்கள் மட்டுமே 53..

ஆனால் இவை அனைத்துமே கடலுக்குள் தங்களை முழுவதும் மறைத்துக்கொண்டு, தண்ணீருக்கு மேலே தங்கள் தலைகளின் கூர்முனைகளை மட்டுமே காட்டிக்கொள்ளும் கரிய பெரிய பனிக்கட்டி மலைகளே என்கின்றனர் புள்ளியியலாளர்கள். நிறைய கேஸ்கள் பதிவு பண்ணப்படாமலே போகின்றன என்பதே நிதர்சன உண்மை!

மீடியா வெளிக்கொணராத சம்பவங்கள் தான் எத்தனை எத்தனை !

10 நாட்களுக்கு முன்பு கூட பஞ்சாபில் பாஸ்டர்கள் இருவர் எரித்துக் கொல்லப்பட்டு, அது மீடியாவால் அமுக்கப்பட்டது என்கிறது நம்பகமான ஒரு செய்தி!

- சமீபத்தில், தன் பிள்ளையைத் தானே பலி கொடுக்க, வாலிபன் ஒருவனைக் கொதிக்கும் வெந்நீரில் அழுத்திக் கொன்று, அவிந்த சதைப் பிண்டங்களைப் பிய்த்துப் பிய்த்துத் தன் தெய்வங்களுக்குப் படைத்தானாம் தகப்பன் ஒருவன்! தன் சொந்தப் பிள்ளைக்கே இப்படிச் செய்வார்களென்றால் ???

கடந்த சில வருடங்களாகவே வட இந்தியாவில் மட்டுமல்ல, தென்னிந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் திரும்பத் திரும்பப் பார்த்து, படித்து, கேள்விப்பட்டுக் கொண்டேயிருக்கும் இச்செய்திகள் எல்லாமே, வரப்போகும் குருதிப்பெருமழைக்கு முன்னான கையளவு மேகங்களே!

இதோ பெருமழையின் பேரிரைச்சல் ஒன்று தேசத்திலே கேட்கப்படுகிறது !

அதின் கையளவு கார்மேகங்கள் நாட்டிலே காணப்படத் தொடங்கி விட்டது !!

"இன்று காலாட்களோடு ஓட்டப்படும்போதே சபையானது இப்படி இளைத்துக் களைத்துப் போகுமானால்..கூட்டங்கூட்டமான குதிரைகள் எதிர்வரும்போது எப்படி ஓடும் ? ஓரளவு சமாதானம் போலக் காணப்படும் இந்த நாட்களிலேயே அது தனக்கு அடைக்கலம் தேடிக் கொண்டிருக்குமானால், யோர்தானைப் போலப் பெருவெள்ளம் வரும்போது என்ன செய்யும் ????

“ இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது;
நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்...
இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற
கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது;
நீர் சொன்னபடி சம்பவிக்கிறது..
இதோ, நீர் அதைப் பார்க்கிறீர்.. ”
(எரேமியா 32:24)

குருதிப்
பிரளயம்
CHAPTER - 7
எதார்த்தம் எப்படியிருக்கும்?

தடியால் அடிக்கப்பட்டு
கோடரியால்
வெட்டிக்கொல்லப்பட்ட ததேயு

CHAPTER-7

எதார்த்தம் எப்படியிருக்கும் ?

ஒரு ஃப்ளாஷ்பேக் (Flashback)...

1. கண்ணாடிச் சிதறல்களின் இரவு
(The Night Of Broken Glass)

நவம்பர் 7...1938...

France ன் பாரிஸ் நகர்..

அங்குள்ள ஜெர்மன் தூதரகத்துக்குள் புயலாய் நுழைகிறான் ஹெர்ஷல் க்ரின்ஸ்பன் என்ற 17 வயது வாலிபன்..

என்ன வேண்டும் என்று கேட்டுக்கொண்டே அவனை நோக்கி வருகிறார் எர்ன்ஸ்ட் வோம் ரேத் என்ற ஜெர்மன் டிப்ளோமட்..

வந்தவன் அவரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கியால் சுடுகிறான்..அப்போதைக்கு உயிர் தப்பினாலும் இரண்டு நாட்கள் சென்று நவம்பர் 9 அன்று பரிதாபமாக இறந்து போகிறார் அந்தத் தூதரக அதிகாரி..

செய்தி காட்டுத் தீயாக ஜெர்மனி முழுவதும் பரவுகிறது..

யார் அந்த வாலிபன் ?

1933.. அடால்ஃப் ஹிட்லர், ஜெர்மனியின் ஆட்சியைக் கைப்பற்றிய கையோடு "அகண்ட ஜெர்மனி" என்ற தனது கனவை நனவாக்க அண்டை நாடுகளான ஆஸ்ட்ரியா, போலந்து போன்ற நாடுகளில் தன் கைவரிசையைக் காட்டி அவற்றை விழுங்கி ஏப்பமிட்ட போது, அங்கிருந்த யூதர்களைக் கையோடு வெளியேற்றி அவர்களை ஜெர்மனி-போலந்து நாடுகளுக்கிடையே மனிதன் வசிக்க முடியாத ஏதோ ஒரு இடத்தில் குப்பையை அள்ளித் தட்டுவது போல வீசி எறிந்தான்..

அந்த யூதர்களில் ஒருவர் தான், மேலே சொன்ன ஹெர்ஷல் என்ற யூத வாலிபனின் பெற்றோர்.

அவர்கள் பட்ட சொல்ல முடியாத வேதனையைக் கண்டு, தன் கோபத்தைத் தீர்த்துக்கொள்ளத்தான் பழி வாங்கினான் ஹெர்ஷல்..

அதைத் தொடர்ந்தது "The Night Of Broken Glass" என்ற -நொறுங்கிய கண்ணாடிச் சிதறல்களின் இரவு- இல்லை இல்லை.. "கண்ணாடியாய்ச் சிதறிய இரவு" என்ற வெறியாட்டம்..

ஜெர்மன் தூதரக அதிகாரி ஒருவர் யூதன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்ததும், ஏற்கனவே யூதர்களை அடியோடு துடைத்துப்போடத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த ஹிட்லரும் அவனது வலது கரமாயிருந்த கொள்கைப் பரப்பு அமைச்சர் ஜோசப் கோயபெல்ஸூம் மற்ற சகாக்களும் இந்த சந்தர்ப்பத்தை மிக அழகாகப் பயன்படுத்திக் கொண்டனர்..

ஹிட்லரின் கண்ணசைப்பில் அவனது SA Storm Troopers ரெய்ச் நகர் மற்றும் ஜெர்மனி முழுவதும் யூதர்களுக்கு விரோதமாகக் களமிறங்கினர்..

ஒரே ஒரு இராத்திரி தான்..

- 7000 யூத வர்த்தக மையங்களும் பெரிய பெரிய நிறுவனங்களும் டிப்பார்ட்மெண்ட் ஸ்டோர்களும் அடித்து நொறுக்கப்பட்டன..
- 250 யூத ஜெப ஆலயங்கள் தீ வைக்கப்பட்டு முக்கியமாக தோரா என்ற வேத வார்த்தைகள் அடங்கிய தோல் சுருள்கள் யாவும் கொளுத்தப்பட்டன..
- 30,000 யூதர்கள் ஒரே இரவில் கைது செய்யப்பட்டு, ஜெர்மனியின் யூதக் குடியிருப்புகளில் "எமர்ஜன்ஸி" அமலுக்கு வந்தது..
- வீடுகளும் குடும்பங்களும் சூறையாடப்பட்டன. கொல்லப்பட்ட யூதர்களுக்கு சரியான கணக்கில்லை.
- யூத மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், வீடுகள், கல்லறைகள் என்று ஒன்று விடாமல் குறிவைத்துத் தாக்கியது நாஜிப்படை..

அடுத்த நாள் காலை 25,000 யூதர்கள் ஆடு மாடுகள் அடைப்பது போல கூண்டு வண்டியில் அடைக்கப்பட்டு போலந்து எல்லைக்கு நாடு கடத்தப்பட்டனர். அவர்களில் அநேகர் ஒரு போதும் திரும்பி வராத "கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்" என்ற அகதிக் கிடங்குகளில் தள்ளப்பட்டனர்.

நவம்பர் 9 முழுவதும் நடந்த வெறியாட்டம் அடுத்த நாளும் தொடர்ந்தது..

ஊரெல்லாம் உடைந்து நொறுங்கிய கண்ணாடித் துண்டுகள்..கண்ணாடி ஜன்னல்களும் கதவுகளும் ஷோ ரூம்களும் நொறுக்கப்பட்டு தரையே தெரியாதபடி கண்ணுக்கெட்டிய தூரம் வரை கண்ணாடிச் சிதறல்கள்..

அந்த வெறியாட்டம் முடிந்து யூதர்களை வைத்தே அந்தக் கண்ணாடிக் குவியல்களை வண்டி வண்டியாய் அள்ள வைத்தார்கள் நாஜிக்கள்..

[ஹிட்லரைத் தங்கள் மானசீக, ஆத்மார்த்த, ஆதர்ஷ புருஷனாய்க் கண்ட, கொண்ட இந்தியக் காவிக்கூட்டத்தின் வெறியாட்டமும் எதார்த்தத்தில் ஒருநாள் இப்படித்தான் இருக்கும்..!

"நீங்கள் அவரவர் உங்கள் கடைகளின் கண்ணாடிகளைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள், அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.." என்று, இதைப் போலவே, இஸ்லாமியர்களைப் பார்த்து, சமீபத்தில் வடநாட்டில் வழிமொழிந்தார் சங்கிப் பிரச்சாரகர் ஒருவர்..]

2. உதிரத்தால் ஒரு கோடு

அமிர்தசரஸ் இரயில் நிலையம்..

ஆகஸ்ட் 15, 1947 ..

சிவப்புக் கொடியையும் பச்சைக் கொடியையும் எடுத்துக்கொண்டு தன் அறையிலிருந்து வெளியில் வந்தார் ஸ்டேஷன் மாஸ்டர் சானி சிங். இன்றைய தினமாவது ஒழுங்காக இருக்குமா? தலையைக் குனிந்தபடி அந்த இரயில் நிலையத்தின் ப்ளாட்ஃபார்மில் நடக்க ஆரம்பித்தார்..

அதோ வருகிறது இரயில்..
நேற்றைய இந்தியா - இன்றைய
பாகிஸ்தானிலிருந்து..

ரயில் வண்டி வந்து நிற்கின்றது. மக்கள் கூட்டத்தை விலக்கி விட்டு சானி சிங் முன்னேறினார். வழக்கத்தைவிடத் தள்ளுமுள்ளு அதிகமாகவே இருந்தது. நேற்று நள்ளிரவு சுதந்தரம் கிடைத்திருக்கும். இவர்களுக்கு அது தெரிந்திருக்குமா? சுதந்தரம் அடைந்துவிட்டோம் என்று அவர்களிடம் சென்று சொன்னால் என்ன பதில் சொல்வார்கள்?

அப்போதுதான் கவனித்தார். மூன்றாம் வகுப்புப் பெட்டியின் கதவு திறக்கப்படாமலே இருந்தது. விரைந்து சென்றார் சானி சிங். ஒரு வேளை கதவைத் திறக்கமுடியவில்லையா? அட, பக்கத்துப் பெட்டியின் கதவும் கூட மூடியே இருக்கிறதே! ஒவ்வொரு பெட்டியாகப் பார்த்துக்கொண்டே வேகவேகமாக நடந்தார். ஒரு பயணியும் வண்டியிலிருந்து இறங்கவில்லை. பெரும்பாலான கதவுகள் மூடியே இருந்தன.

திறந்திருந்த ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தார். இருட்டு. ஆனால், மனித உருவம் எதுவுமே அகப்படவில்லை.. என்ன விந்தை இது ? ஒருவருமே இறங்காமல் ஒரு வண்டி வந்து நிற்கிறதா? சுற்றிலும் பார்த்தார். அனைவருமே புரியாமல் நின்றுகொண்டிருந்தனர்..

ஓட்டமும் நடையுமாக முதல் பெட்டியில் ஏறினார் சானி சிங். அழுத்தம் கொடுத்துக் கதவைத் திறந்து உள்ளே காலடி எடுத்து வைத்தார். தடுக்கியது. கீழே என்ன இது ? ஏறுகிற, இறங்குகிற வழியில் இப்படியா பொருள்களைப் பரப்பி வைப்பார்கள்? அடச்சே! குனிந்தார்.

அதிர்ந்து பின்வாங்கினார்...

இன்னது என்று இனம் கண்டுகொள்ள முடியாத சதைப்பிண்டம் அது. ரத்தச் சகதியில் ஊறிக் கிடந்தது. துணிந்து இன்னொரு அடி எடுத்து வைத்தார். இந்த முறை அவரது பூட்ஸ் கால்களுக்குக் கீழே அகப்பட்டது ஒரு குழந்தையின் மார்பு.

சத்தம் போட்டு அலறினார் சானி சிங்.

யாரோ ஓடிவந்தார்கள். எங்கோ தொலைவில் சைரன் ஒலி. தடதடக்கும் பூட்ஸ் கால்கள். கூச்சல். கூக்குரல். அழுகை. மரண ஓலம். அப்படியே நின்றுகொண்டிருந்தார் சானி சிங். இது பிணக்காடு.

இருக்கைகளில் உட்கார்ந்தவாக்கில் சிலர் இறந்து போயிருந்தனர். கீழே, உதிரிகளாக, கைகளும் கால்களும். கழிப்பறைக்குப் போகும் பாதையில் தலை ஒன்று தனியாகக் கிடந்தது. ஆடைகளற்ற பெண்கள் சிதறிக்கிடந்தார்கள்.. சிதைந்தும், முழுக்கத் திறந்த கண்களுடனும் ஒரு குழந்தை சுருண்டு படுத்திருந்ததைக் கண்ட மறு நொடி கதவுக்குப் பாய்ந்தார் சானி சிங்.

அடுத்த பெட்டிக்குள் ஏறினார். அங்கும் உடல்கள். அதற்கடுத்த பெட்டிக்குள் ஏறினார். அடுத்தடுத்து அனைத்துப் பெட்டிகளிலும் ஏறி இறங்கினார். உடல்கள்.. உடல்கள்.. உடல்கள்..

வெளியே வந்து விழுந்தார் சானி சிங்.

அதே சமயம் ஏதோ சத்தம் கேட்டது. உள்ளிருந்து...
பாய்ந்து ஏறினார்.. யாராவது உயிருடன் இருக்கிறீர்களா?

சத்தம் போட்டுக் கத்தியபடி மீண்டும் ஒவ்வொரு பெட்டியாக ஏற ஆரம்பித்தார்.

யாராவது உயிருடன் இருக்கிறீர்களா? இது அமிர்தசரஸ்...எந்தப் பயமும் இல்லாமல் வாருங்கள். இங்கே காவலர்கள் இருக்கிறார்கள். வாருங்கள்.

ஒரே ஒரு பெட்டியில் ஒரு மூலையில் சிறு அசைவு கேட்டது. அந்தக் காட்சியை சானி சிங் தன் வாழ்நாளில் மறக்கவே இல்லை. பிணக்குவியல்களுக்கு மத்தியிலிருந்து ஒரு கை நீண்டது. ரத்தக்கறை படிந்த கை. மனித பாகங்களை உதறித்தள்ளியபடி ஓர் உருவம் எழுந்து நின்றது. ஒரு பெண். உடல் முழுவதும் இரத்தக்கறை.. நிலைகுத்தி நிற்கும் கண்களுடன் எழுந்து வெளியில் வந்தாள்.

" என் கணவரைக் காப்பாற்றுங்கள்.."

"எங்கே அவர் ?"
ஒரு முண்டத்தை சானி சிங்கின் முன்னால் நீட்டினார் அந்தப் பெண்.

"இதோ..!"

ஒட்டுமொத்த தேசத்துக்கும் சேர்ந்து ஒரே சமயத்தில் பைத்தியம் பிடிக்குமா? மனநோய் பீடிக்குமா? ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர்,

1947... இந்த மூன்று மாதங்களில் நடைபெற்ற வன்முறைகளைக் கூட்டிப்பார்த்தால் அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

மரணம் மட்டுமே நிச்சயம். ஒரு ஹிந்துவாக இருந்தால் ஒரு முஸ்லிம் மூலமாக.. ஒரு முஸ்லிமாக இருந்தால் ஒரு ஹிந்துவால் அல்லது சீக்கியரால்...

நல்லவர்கள், கெட்டவர்கள் என்று யாரும் இல்லை. மொத்தம் இரண்டே ஜாதி. உயிர் வாழ விரும்புபவர்கள். உயிரை அழிக்க விரும்புபவர்கள். ஒருவரது பெயர் என்ன என்பது கூட தெரியாமல் அவர் மீது பாய்ந்து அவர் கழுத்தைத் தனியாக அறுத்தெடுக்க முடியும். முடிந்திருக்கிறது...

நேற்று வரை நண்பராக மட்டுமே அறியப்பட்டவர் திடீரென்று ஹிந்துவாகவும் முஸ்லிமாகவும், சீக்கியராகவும் மாற வேண்டிய கட்டாயம். என் எதிரி என்னை நெருங்குவதற்கு முன்னால் நான் அவனைக் கொன்றாக வேண்டும்.

நீ ஹிந்து, நான் முஸ்லிம். நீ என் எதிரி.

நீ முஸ்லிம். நான் சீக்கியன். நீ என் எதிரி.

நீ இந்தியா, நான் பாகிஸ்தான். உன் தேசத்தை நான் வெறுக்கிறேன். உங்களை முழுவதுமாக அழித்தொழிப்பேன்..

எதற்கும் கணக்குத் தெரியப்போவதில்லை. இறந்தவர்கள், தொலைந்தவர்கள், தம் குழந்தைகளைத் தொலைத்த தாய்கள், சகோதரர்களைத் தொலைத்த சகோதரிகள், பிரிந்த நண்பர்கள்...

உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியாமலேயே இந்த நிமிடம் வரை சங்கடப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்.. துயர் தாங்காமல் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டவர்கள்.. மனச்சிதைவுக்கு ஆளாகி சாலையில் இறந்து போனவர்கள்..

துயரத்தின் வடுவை ஏந்திப்பிறந்த குழந்தைகள்..கண்களை இமைப்பதற்கு முன்னரே இறந்து போன குழந்தைகள்..கர்ப்பிணிகளின் வயிற்றைக் கீறி வெளியில் இழுத்துக் கொளுத்தப்பட்ட சிசுக்கள்..

அதிகம் பலியானவர்கள் பெண்களும் குழந்தைகளும். பெண்களைத் தேடித்தேடிப்பிடித்து, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிக் கொன்றொழித்தார்கள். எப்படியும் சாகப்போகும் பெண். அதற்கு முன் ஒரு தடவை.. என்ன கெட்டுப் போய்விடப்போகிறது? இதில் மத வேறுபாடே இருந்ததில்லை. ஒவ்வொருவருக்கும் ஒரு நியாயம் இருந்தது. பெண் என்பவள் கலாச்சாரத்தின் அடையாளம். மதத்தின் அடையாளம்.

ஒரு மதத்தை இழிவுபடுத்த வேண்டுமென்றால் அந்த மதத்தைச் சார்ந்த பெண்களை இழிவுபடுத்தினால் போதும். பர்தா அணிந்த பெண்ணைப் பிடித்து இழுத்து வந்து அவள் அடிவயிற்றில் சூலத்தைப் பொறித்தால், இஸ்லாத்தை அவமதித்ததற்குச் சமம். ஓர் ஹிந்துப் பெண்ணின் மார்பில் பிறை நட்சத்திரத்தைப் பொறிப்பதன் மூலம், ஹிந்து மதத்தை இழிவு செய்யலாம். ஒரு சீக்கியப் பெண்ணைச் சித்ரவதை செய்வதன் மூலம் அவள் மதம் சாகும். இது அவர்களாகவே கற்பிதம் செய்து வைத்திருந்த ஒரு தத்துவம்..

இந்தத் தத்துவத்தைத்தான் அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள். பிடிக்காத மதத்தை அழிக்க, பெண்களை வேண்டியமட்டும் களங்கப்படுத்தினார்கள். என் மதத்தின் வாரிசு உனக்குள் முளைக்கட்டும் என்று சத்தம் போட்டுக் கத்தியபடி பலாத்காரத்துக்கு உட்படுத்தினார்கள்.

கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைப் பிளந்து கொன்றார்கள். கொல்லும்போது பெருமிதத்துடன் கத்தினார்கள், "என் எதிர்கால எதிரியைக் கொன்றொழித்து விட்டேன்.." என்று.

பெண்கள் கடத்தப்பட்டனர். ஆடைகளைக் களைந்து தெருக்களில் ஓடவிட்டார்கள். கட்டாயத் திருமணம் செய்து கொண்டார்கள். அவர்கள் மதம் மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்..

சுதந்தரத்தை மட்டுல்ல, ஆறாத ரணங்களையும் தீராத துயரங்களையும் சேர்த்தே கொண்டு வந்தது 1947.. இந்தியாவின் ஆன்மாவின் மீது போடப்பட்ட அந்த இரத்தக்கோடு இன்று வரை உலரவில்லை.

உலரவிடவும் மாட்டார்கள்...
எதார்த்தமும் இப்படித்தான் இருக்கும்!

காரணம்..

நடந்து முடிந்த வரலாற்றை சரித்திரப் பக்கங்களிலிருந்து அழிக்க முடியாதது போலவே, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையையும் தீர்க்கதரிசனத்தையும் மாற்றி எழுத முடியுமோ?

"தேவனுடைய மனுஷன் தன் முகத்தைத் திருப்பாமல் அவன் சலித்துப்போகுமட்டும் அவனை நோக்கிக்கொண்டே அழுதான்."

"அப்பொழுது ஆசகேல் : என் ஆண்டவன் அழுகிறது என்ன என்று கேட்டான். அதற்கு அவன் : நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் செய்யும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியினால் அழுகிறேன்;

நீ அவர்கள் கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, அவர்கள் வாலிபரைப் பட்டயத்தால் கொன்று, அவர்கள் குழந்தைகளைத் தரையோடே மோதி, அவர்கள் கர்ப்பவதிகளைக் கீறிப்போடுவாய் என்றான்... (2 இரா 8:11, 12)

"முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது..இனி நடக்கப் போகிறதும் முன்னமே நடந்தது..

" முன் நடந்ததே இனிமேலும் இருக்கும்..முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்..

சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை..

[பிர 3:15 / 1: 9,10]

History repeats itself..

தேசத்தின் தற்கால நிகழ்வுகளை உற்று நோக்கும் போது, முற்கால நிகழ்வுகளையும் சற்று நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது..

இது ஒரு அரசியல் கட்டுரை அல்ல !

இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் அதிக புத்திமான்களாய் இருக்கிறார்கள் என்றார் நம் ஆண்டவர் இயேசு.

சபை சரித்திரம் மட்டுமல்ல..தேச வரலாறும், நாட்டு நடப்பும், அன்றாட சம்பவங்களும் தெரியாத நமது சபைகளின் ஒளியின் பிள்ளைகளின்

தெரிந்து கொள்ளுதலுக்காகவும், வன்மமாய், வஞ்சனையாய், வக்கிரமாய்த் திரும்பும் வரலாறை இந்த விசுவாசத் தலைமுறை தெரிந்து கொண்டே ஆகவேண்டும் என்பதற்காகவும்..

முன் நாட்களைக் காட்டிலும் இப்போது ஜெபிக்கும் மக்கள் அதிகரித்துள்ள இந்நாட்களில், வரப்போகும் பயங்கரத்தை முன்னறிந்து ஜெபிக்கத் தூண்டும் நோக்கத்துடனே எழுதப்படும் செய்தி இது !

3. *மீண்டும் ஒரு மிஸா ?*

1975...

திருமதி இந்திராகாந்தி அவர்களின் ஆட்சி !

இந்திரா தான் இந்தியா -இந்தியா தான் இந்திரா... என்று அம்மையார் கோலோச்சிக் கொண்டிருந்த நாட்கள்..!

நாட்டில் வரலாறு காணா பொருளாதார சீர்குலைவு ! பணவீக்கம் ! உணவுத் தட்டுப்பாடு ! மிகப்பெரிய பஞ்சம் ஒன்று வெடிக்கக் காத்துக் கொண்டிருக்கிறது !

ஒரு பக்கம் குஜராத்திலிருந்து "நவ்நிர்மாண்" போராட்டம் வெடிக்கிறது ! பீஹாரிலிருந்து ஜெயப்பிரகாஷ் நாராயண் மிகப்பெரிய இயக்கம் ஒன்றைத் துவக்கி, அது வட இந்தியா முழுவதும் அமேஸான் காட்டுத் தீயாய்ப் பரவுகிறது !

இன்னொரு பக்கம் பல லட்ச ரயில்வே ஊழியர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் ! ஒரு வித பயங்கரக் கொந்தளிப்பு வடக்கிலிருந்து மையம் கொண்டு தேசமெங்கும் சூறாவளியாய் சுருட்டி எடுக்க சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது !

அப்போது தான், சவப்பெட்டியில் அடிக்கப்பட்ட கடைசி ஆணியாய் இந்திராவுக்கு எதிராக இறங்குகிறது அலகாபாத் ஹைகோர்ட்டின் தீர்ப்பு ஒன்று !

1975 ஜூன் 12...

அதின் சாராம்சம் இது தான்...

"நடந்து முடிந்த1971 தேர்தலில் உ.பி.யின் ரேபரேலி தொகுதியில் நின்று ஜெயித்த இந்திராவின் வெற்றி செல்லாது..."

"தேர்தலில் தில்லுமுல்லுகள் ! அதிகார துஷ்பிரயோகங்கள் ! அரசு அதிகாரிகளைத் தனக்கு ஆதரவாகத் தேர்தல் வேலைகளில் களமிறக்கியது போன்ற அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் - ஒவ்வொன்றையும் ஊர்ஜிதமாக்கி, தனது 258 பக்கங்களில் புட்டுப்புட்டு வைத்துத் தீர்ப்பளித்தது அலகாபாத் ஹைகோர்ட் !"

ரேபரேலியில் இந்திராவுக்கு எதிராக நின்று தோற்ற ராஜ்நாராயணின் மனுவுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தவர் நீதிபதி ஜக்மோகன் !

அன்றைய அசைக்க முடியாத காங்கிரஸ் கோட்டையில் அனுகுண்டு விழ, இந்த வழக்கில் ஒரு இந்தியப் பிரதமரே கோர்ட் படியேறி, கூண்டில் நின்று குறுக்குக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய வெட்கத்துக்கும், ஒரு வகையில் அசிங்கத்துக்கும் ஆளாகிப் போனார், அன்றைய இரும்பு மனுஷி இந்திரா காந்தி !

உச்சநீதிமன்றத்தில் முறையிடக் கிடைத்த 20 நாள் அவகாசத்தில் உச்சநீதிமன்றம் அலகாபாத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆதரித்து ஆமோதித்தாலும், திருமதி காந்தி பாராளுமன்றத்துக்கு வந்துபோக மட்டும் அது அனுமதி அளித்தது.

உக்கிரத்தின் உச்சிக்கே சென்ற இந்திரா, அதே ஜூன் 25 நள்ளிரவில் தனக்கு உடந்தையான வங்காள முதலமைச்சர் சித்தார்த் சங்கர் ரேயுடன், அன்றைய ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமதை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து, "இனி இந்த நாட்டில் பிரதமர், ஜனாதிபதி, உதவி ஜனாதிபதி மற்றும் தலைமைச் செயலர் பதவியை ரத்து செய்ய எந்த நீதிமன்றத்துக்கும் அதிகாரம் இல்லை..அதை நிர்ணயிக்கும் அதிகாரம், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்றத்துக்கே உண்டு.." என்ற அதிரடியான, அதே நேரம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்ட பாராளுமன்ற உத்தரவைக் கொடுக்க, ஜனாதிதி அதில் கையெழுத்திட...

அன்று இரவே "எமர்ஜென்ஸி" என்ற அவசரச் சட்டம் அமலுக்கு வருகிறது..." மிஸா " என்ற பெயர் கொண்ட மிரட்டலுடன் !

-சொல்லப்பட்ட காரணம்- "இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு மிகப்பெரிய ஆபத்து ! நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அமலாக்கப்படும் இச்சட்டம் இன்றியமையாதது.."

அதே இரவில், இரவோடு இரவாக ஜெயப்பிரகாஷ் நாராயண் உட்பட அநேக எதிர்கட்சித் தலைவர்களும் போராட்ட வீரர்களும் கைது செய்யப்படுகின்றனர்.. காங்கிரஸிலும் கூட இந்திராவுக்கு ஆதரவாக இல்லாத அநேகர் அவரவர் வீடுகளிலிருந்து குண்டுக்கட்டாகத் தூக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர் - மறுகேள்விக்கே இடமின்றி !

பொழுது புலர்ந்தது..

"...புள்ளினம் ஆர்த்தன..முரசம் முழங்கியது..எங்கும் சுதந்திர நாதம்..வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய் !" என்ற காலை நேர சுதந்தரநாதமெல்லாம் காணாமல் போய், ரேடியோ அலற ஆரம்பித்தது..

டெல்லியில் வழக்கமாக வரும் காலைப் பத்திரிக்கைகள் எதுவும் வரவில்லை..காரணம், இந்திரா காந்தியின் அர்த்த ராத்திரி நடவடிக்கைகள் எதுவும் பத்திரிகைகளில் வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காக, டெல்லியில் பத்திரிகை அலுவலகங்கள் இருக்கும் பகுதியான பகதூர்ஷா ஜாஃபர் marg பகுதி முழுவதும் திட்டமிட்டு மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

பத்திரிகைகளுக்கு சென்ஸார் பூட்டு போடப்பட்டது. ஆள் தூக்கிச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டன. அவசரநிலையைப் பிரகடனப்படுத்தி, ஜனாதிபதிக்குப் பதிலாக ரேடியோவில் இந்திரா காந்தியே பேசினார்..

புது டெல்லியில் எங்கும் மயான அமைதி. இனி என்னவெல்லாம் நடக்குமோ என்கிற அச்சம். நாட்டில் இருள் கப்பியது. மக்களிடம் பயம் சூழ்ந்தது..

அடுத்து வந்த 21 மாதங்கள் இந்தியாவின் இருண்ட மாதங்கள் !

- பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரம் பறிக்கப்பட்டது..
- பத்திரிகைகள் கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன..
- வடக்கு முதல் தெற்கு வரை தேசமே நடுங்க ஆரம்பித்தது..
- தெருவில் நாலு பேர் நின்று பேசிக் கொண்டிருந்தால் கூட அலாக்காகத் தூக்கிக்கொண்டு போகப்பட்டனர்..
- கண்ணில் பட்டவர்களுக்கெல்லாம் கருத்தடை..
- சஞ்சய் காந்தியின் உத்தரவின் பேரில் அவனை

குஷிப்படுத்துவதற்காகவே, போட்டி போட்டுக் கொண்டு வட இந்திய கிராமங்களில் ஆண்களைக் கொத்துக் கொத்தாக அள்ளிக் கொண்டு போய் சிறியவருக்கும் பெரியவருக்கும் வலுக்கட்டாயமாய் செய்யப்பட்டது நசபந்தி எனப்பட்ட குடும்பக்கட்டுப்பாட்டுக் கருவருப்பு!

அந்த 21 மாதங்களில் அரங்கேறிய சில அகோரங்கள் இதோ !

ஹரியானா :

- அப்போதைய பாதுகாப்பு மந்திரி பன்சிலாலின் சிரேஷ்ட புத்திரன் சுரேந்தர் சிங்கின் நேரடிப் பார்வையில் ஒரு ராஜபுத்திரப் பெண்ணும் அவள் சகோதரனும் ஒன்றாய் நிர்வாணமாய்க் கட்டிவைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டனர்..

அதே சுரீந்தர் சிங்குக்கு ஆகாத குடும்பம் ஒன்று கொளுத்தப்படுகிறது. அக்குடும்பத்தின் 80 வயது மூதாட்டியைக் கூட விடாமல் சிறையில் அடித்தே சாகடித்தனர்..

புது டெல்லி :

- எமர்ஜென்ஸியை எதிர்த்து நடந்த சத்யாக்கிரஹத்தில் கலந்து கொண்ட ஒரே காரணத்துக்காக ஓம்பிரகாஷ் என்ற மாணவனை திமார்ப்பூர் சிறையில் தலைகீழாய்க் கட்டித் தொங்கவிட்டு, நாசித்துவாரங்களில் மிளகாய்ப் பொடியைக் கரைத்து ஊற்றி உருக்குலைத்தனர்..

ஏரோப்ளேன் சித்ரவதை:

- சத்யபிரகாஷ் என்ற மாணவனை இரும்புக் கட்டிலில் படுக்க வைத்து கால்களில் கம்பியால் குத்தி மூட்டையாய்க் கட்டி, டெல்லி ஹவுஸ்காஸ் போலீஸ் ஸ்டேஷனில் கனமான மின்விசிறியில் கட்டித் தொங்கவிட்டு சுற்ற விட்டனர். இதற்கு ஏரோப்ளேன் டார்ச்சர் என்று பெயராம்..

- டெல்லி பல்கலைக்கழக மாணவர் மஹாவீர் சிங் — மிசா கைதியான அவர் பட்ட வேதனையால் மூன்று மாதம் சட்டை கூட போட முடியாத அளவு ரணமாகியிருந்தது அவரது உடல்..

ரோடுரோலர் :

- இது சித்ரவதைகளில் ஒரு வகை. கைது செய்யப்பட்டவரை உட்கார வைத்து நீண்ட தடியை கால் எலும்பின் கீழ் வைத்து, இருவர் அந்தத் தடியின் மீது உட்கார்ந்து கொண்டு முட்டியிலிருந்து கால் வரை உருட்டிச் செல்வது. இதற்குப் பெயர் ரோடு ரோலராம்..

- உடலிலுள்ள ஒன்பது துவாரங்களிலும் ஈவிரக்கமின்றி மின்சாரக் கம்பிகளைச் செலுத்தித் துடிதுடிக்க வைப்பது..

- நிர்வாணமாக ஐஸ் கட்டிகள் மேல் படுக்க வைத்து ஒரேயடியாக சாகடித்து விடாமல், நரக வேதனைக்கு ஆளாக்குவது கம்யூனிச நாடுகளில் மட்டுமே நடந்த கொடுமைகள்..

- டெல்லி துர்க்மன் கேட் பகுதியில் டெல்லி மேம்பாட்டு வாரியத்தின் உதவியுடன் சஞ்சய் காந்தி ஆடிய ஆட்டம் கொஞ்சநஞ்சமல்ல...அங்கு புல்டோசர் கொண்டு பல நாட்கள் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன - டெல்லியை அழகுபடுத்துகிறோம் பேர்வழி என்ற பெயரில்...

ஹைதராபாத் கோலி :

- இது ஒருவகைப்பட்ட மிக பயங்கரமான சித்ரவதை..ஸ்ரீ ராமன் லக்ஷ்மண் பகதூர் என்ற 21 வயது வாலிபர்.. நிர்வாணமாகக் கைகள் கட்டப்பட்டு, முழுவதும் முதுகு வளைக்கப்பட்டு, தரையைப் பார்க்கும்படி குனிந்து நிற்க வைக்கப்பட்டு, ஆசனவாயிலில் மிளகாய்ப்பொடி தோய்க்கப்பட்ட இரும்புக்கம்பியை நுழைத்து சித்ரவதை செய்யப்பட்டு பல மணிநேரம் சுயநினைவு இழந்து கிடந்தார்..

கர்நாடகா :

- கர்நாடகா சிறையில் காயத்ரி தேவி என்ற மிஸா கைதி 45 பேர் கொண்ட கொட்டடியில்..

சிறையில் பிரசவ வேதனை..தாயின் ஓலமும் பிறந்த பிள்ளையின் அலறலும் கேட்டும் உதவிக்கு வராத, மற்றவர்களையும் உதவி செய்ய விடாத போலீஸ்.. பிரசவத்தில் வெளியாகும் உதிரம் துடைக்கக்கூட துணியோ தண்ணீரோ தராத அவலம் !

கேரளா :

- 1976 மார்ச் முதல் தேதி..

விடியற்காலை இஞ்சினியரிங் கல்லூரி ஹாஸ்டலில் தன் அறையிலிருந்த ராஜனையும் இன்னொரு மாணவன் ஜோசப் சார்லியையும் காரணம் சொல்லாமல் அழைத்துச் சென்றது போலீஸ்..

அந்த மார்ச் 1ம் தேதி காலையில் ராஜனைப் பார்த்ததோடு சரி.. அதன்பின் மிசாவில் காணாமலே போனான் ராஜன் - சொல்லப்பட்ட குற்றம் - அவன் ஒரு நக்ஸல்பாரி என்று..

- கோழிக்கோட்டில்

" இந்திரா ஒழிக !" என்று கோஷமிட்டுச் சென்ற 12 சிறுவர் சிறுமிகள் கைது செய்யப்பட்டு 2 வருடம் சிறுவர் காவலில் அடைக்கப்பட்டிருந்தனர்..

தவத்திரு தமிழ்நாட்டில் :

- 1976 ஜனவரி 31..

தமிழ்நாட்டில் திமுக அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அதின் கழக நிர்வாகிகள், முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில்..

அங்கு நிகழ்ந்த அக்கிரமங்களைக் கையால் எழுத முடியாது. தொழுநோயாளிகள் அடைக்கப்படும் அறையில் மிசா கைதிகள்..

அடி தாள முடியாமல் திமுக எம்.பி சிட்டிபாபு இறந்தே போனார்..

- ஜோலார் பேட்டைக்கு அருகிலுள்ள பொன்னேரி

கிராமத்திலுள்ள 19 வயது சீராளன்..

தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் தீவிர அரசியலிலும் ஈடுபட்டவர்.. கடைசியாக பிடிபட்டு 1977 ஜனவரி 1ம் தேதி அத்தியூர் வேலு -ஜெயா தம்பதியின் தோட்டத்தில் வைத்து அடித்தே கொல்லப்பட்டார்.. அதற்கு சாட்சியான இத்தம்பதியர் பட்ட சித்ரவதை சொல்லி மாளாது !

இவைகள் யாவும் நாடு முழுவதும் நடந்த அராஜகங்களின் எரிமலையின் சிறுமுகடு தான் !

இந்திராவை இந்தியாவின் ஹிட்லர் என்றும் "இம்சை அரக்கி" என்றும் வர்ணித்த நாட்கள் !

" மிஸா " என்ற "
M aintenance of
I nternal
S ecurity
A ct " ஐ கையில் எடுத்து எமர்ஜென்ஸி என்று எழுதப்பட்ட சுதந்திர இந்தியாவின் இருண்ட பக்கங்களில் ஒன்றிரண்டுகளே இவை !

நீங்களும் நானும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மிகப்பெரிய கொடுமையின் சுனாமி ஒன்றை எதிர்கொண்டே ஆக வேண்டிய நிர்ப்பாக்கிய நிலை ஒன்று வருகிறது !

மேலே சொல்லப்பட்ட சம்பவங்கள் இதே நாட்டில் ஒரு சமயத்தில் நடந்திருக்குமானால், இப்போது உள்ள நெருக்கடியான காலகட்டத்தில், அதே சம்பவங்கள் திரும்பவும் இங்கே நடக்காது என்பதற்கு அத்தாட்சியும் தேடுவோமோ ?

"மிஸா என்ன மிஸா ? அதெல்லாம் எங்களுக்கு பிஸ்கட் சாப்பிடுற மாதிரி..." என்றார் இன்று பதவியில் இருக்கும் ஒருவர். இன்னொரு எமனான எமர்ஜென்ஸிக்கு நாடு தீவிரமாய்த் தயாராகி வருகிறதை அறிவீர்களோ ?

1975 - 77 எமர்ஜென்ஸியில் கூட நடக்காத அநேக அகோர, அதிபயங்கர, அக்கிரமங்கள் இங்கே அரங்கேறக் காத்துக் கொண்டிருக்கின்றன !
IT'S JUST BOILING AND WAITING TO ERUPT... !

இது சபைகளையும் விசுவாசிகளையும் பயமுறுத்த அல்ல..
அந்த மிஸாவையே மிரளவைக்கும் மீண்டும் ஒரு மிருகத்தனமான மிஸா பிரகடனப்படுத்தப்படுமுன்....இன்னொரு எமர்ஜென்ஸி எழுதப்படுமுன்...

சபை, தனக்குத் தானே ஒரு எமர்ஜென்ஸியைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, தனது வழக்கமான சகலத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக விழுந்து கிடக்கவும்,

தேசத்தில் அப்படிப்பட்ட நாட்கள் வருமுன்னே...அந்த நாட்களுக்கு சபை தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், அந்த நாட்களில் சபை தன் செயல் முறைகளை எப்படி மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், இப்போதே தன் விசுவாசிகளை எப்படி அந்தக் காலத்துக்கென்று பயிற்றுவிக்க வேண்டும் என்பதே இந்தச் செய்தியின் நோக்கம் !

மட்டுமல்ல..சபை தன்னை, வரப் போகும் புதிய காலகட்டத்துக்கும் சூழ்நிலைக்கும் எப்படி எப்படி பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், அப்படிப்பட்ட எதிர்மறையான சூழல்களை எப்படி adopt பண்ணிக் கொள்ள வேண்டும் என்றும், தன்னை அது எப்படி அவசர அவசரமாய் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் எழுதித் துரிதப்படுத்துவதே இப்புத்தகத்தின் நோக்கம் !

இந்தச் செய்தியின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்டுள்ள 1975-77 மிஸாவின் இம்சைகளும் சித்ரவதைகளும் வரப்போகும் காலத்துக்கு முன்னோட்டமான ட்ரெயிலரே ! இனி சம்பவிக்கப் போகிறவைகளே முழு நீளப் படமாயிருக்கும் !

முந்தின மிஸாவையும் எமர்ஜென்ஸி நாட்களையும் அறியாத நமது சபைகளின் இந்தத் தலைமுறைக்கு அதைத் தெரியப்படுத்தவும், அதைவிட அதிபயங்கரமான ஒன்று வரக் காத்து நிற்கிறது என்னும் எச்சரிக்கை எழுத்துக்களைத் தாங்கிய எழுது பலகையாகவே நிற்கிறது இந்தச் செய்தி !

4. இரத்தத்துக்கு இரத்தம் ! நெருப்புக்கு நெருப்பு !

நவம்பர் 1, 1984..

காலை 11 மணி..

டெல்லியின் சுல்தான்புரி..

இரண்டு நாட்களாக கதவை இறுக்கமாக மூடியபடி வீட்டுக்குள் முடங்கியிருந்தது அந்த சர்தார்ஜி குடும்பம். ஷீத்தல் சிங், Gole மார்கெட்டில் சொந்தமாகக் கடை வைத்திருந்தார். அவரது ஒரே செல்ல மகளுக்கு மறுவாரம் டெல்லியில் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஊரிலிருந்து உறவினர்களெல்லாம் வந்திருந்தார்கள்.

மணப்பெண் மீனா கௌர் புத்தம் புது உடையில் கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தாள். இளஞ்சிவப்பு நிற எம்பிராய்டரி பார்டரில் பஞ்சாபி ஸ்டைல் லெஹெங்கா புடவை அவளது நிறத்துக்கு படு பொருத்தமாக இருந்தது. அவளது கைகளில் இடப்பட்டிருந்த மெஹந்தி இன்னும் காய்ந்திருக்கவில்லை. முகத்தில்தான் ஏகப்பட்ட மிரட்சி! வேறொரு சந்தர்ப்பமாக இருந்திருந்தால் வீடே களை கட்டியிருக்கும். பாங்கடா, கித்தா ஆட்டபாட்டங்களோடும் சந்தோஷக் கூச்சல்களோடும் கொண்டாட்டங்களுக்குக் குறைவிருந்திருக்காது. பஞ்சாபிகளின் கல்யாண வீட்டில் கொண்டாட்டங்களைப் பற்றி சொல்லவா வேண்டும்?

ஆனால், அன்று கவலை தோய்ந்த முகத்தோடு உறவினர்கள் வீட்டின் நடுஹாலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் கருப்பு வெள்ளை டிவியில் நேரலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். தூர்தர்ஷன் தொலைக்காட்சி, தீன் மூர்த்தி இல்லத்தில் நடந்துகொண்டிருந்த அஞ்சலி நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

அங்கே மீளாத் தூக்கத்தில் இருந்தார் மறைந்த பாரதப்பிரதமர் இந்திரா காந்தி...

வெளிநாட்டு அதிபர்கள், கட்சிப் பிரமுகர்கள், திரையுலகினர், கிரிக்கெட் பிரபலங்கள் என விஐபிக்களின் கூட்டம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. நடுநடுவே காமிரா, சற்றே திரும்பி தீன் மூர்த்தி மாளிகை வாசலில் நின்று கொண்டு கோஷமிட்ட கூட்டத்தையும் காட்டியது.

அழுக்கேறிய வெள்ளை நிற பைஜாமா அணிந்த காங்கிரஸ் கட்சித்தொண்டர்கள் கோபத்தால் சிவந்த முகங்களோடு கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள். 'கூன் கா பதலா கூன்' பழிக்குப் பழி, ரத்தத்திற்கு ரத்தம்!

ஷீத்தல் சிங் குடும்பத்தினர் உறைந்து போய் உட்கார்ந்திருந்தார்கள். பஞ்சாபில் கொண்டு வரப்பட்ட புளூ ஸ்டார் நடவடிக்கைக்குப் பின்னர், நான்கு மாதங்களாகவே சீக்கியர்கள் சற்று இறுக்கமாகவே உணர்ந்தார்கள். குருத்வாராக்களில் கூடும்போதும் மெல்லிய பதட்டமிருந்தது. சிக்கிய குடியிருப்புகள் நிறைந்த சுல்தான்புரியைத் தாண்டி வெளியே செல்லும்போது காவல்துறையினர் மட்டுமல்ல, பொதுமக்களும் சந்தேகக் கண்களோடு பார்ப்பதும், தலைப்பாகையும், உடைவாளும் இருந்தால் சற்று தள்ளி நிற்பதும் பெரும் சங்கடத்தைத் தந்தன..

அமிர்தசரஸ் பொற்கோயிலில் நடந்ததைப் போலவே நாடெங்கிலும் உள்ள குருத்வாராக்களில் ராணுவ நடவடிக்கை வரப்போவதாகக் கசிந்த செய்திகளால் ஷீத்தல் சிங் போன்ற சீக்கியர்கள் கவலை அடைந்திருந்தார்கள். இந்நிலையில்தான் எதிர்பாராத அதிர்ச்சியாக வந்து சேர்ந்தது.. இந்திராவின் படுகொலை.

மதியம் 12 மணி. டிவியில் காங்கிரஸ் பிரமுகரான வசந்த் சாத்தே பேசிக்கொண்டிருந்தார். இந்தியத் திருநாட்டிற்கு எதிர்பாராத இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தியா, தனது மகளை இழந்து தவிக்கிறது. இந்த சோகமான நேரத்தில் அனைவரும் அமைதி காக்கவேண்டும். கட்சித் தொண்டர்கள் எல்லை மீறி, வன்முறையில் இறங்கிவிடாமல் அமைதி காக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அதை டிவியில் பார்த்துக்கொண்டிருந்த ஷீத்தல்சிங்கின் உறவினர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

முந்தின நாள் மாலைதான் சுல்தான்புரி குருத்வாராவுக்குள் ஒரு ரவுடி கும்பலுடன் வந்து, உள்ளே சீக்கிய தீவிரவாதிகள் யாராவது இருக்கிறார்களா என்றெல்லாம் கேட்டு மிரட்டியிருந்தார்கள். சீக்கியர்கள் வசிக்கும் பகுதியில் அத்துமீறி உள்ளே நுழைந்து, கொலை - கொள்ளையில் ஈடுபட்ட அதே காங்கிரஸ் தலைவர்கள் டிவியில் தோன்றி, வன்முறையைக் கைவிடுவோம், அமைதியை நிலைநாட்டுவோம் என்றெல்லாம் பேசினார்கள்.

அதை விட அதிர்ச்சியான விஷயம், தீன் மூர்த்தி பவனில் அவ்வப்போது விண்ணை எட்டும்படி ஒலித்த சீக்கியர்களுக்கு எதிரான கோஷம். அதையும் தூர்தர்ஷன் டிவியில் நேரலையாக காட்டிக் கொண்டிருந்தார்கள். ‘கூன் கா பத்லா கூன் சே லாயேங்கே’ (இரத்தத்துக்குப் பதிலடி இரத்தத்தாலேயே தருவோம்..) என்று கூட்டத்தினர் முன் நின்றபடி சினிமா டயலாக் போல் இருமுறை சொல்லிக் கொண்டிருந்தார் புதிய பிரதமரின் நண்பரும், இந்திய சூப்பர் ஸ்டாருமான அமிதாப்பச்சன்!

அந்த நேரத்தில்தான் ஷீத்தல் சிங் வீட்டு கதவு தட்டப்பட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது, ஐந்து பேர் கொண்ட ரவுடி கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் நின்று கொண்டிருந்தது. வெளியில் நடமாடினால் காங்கிரஸ் தொண்டர்களின் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதால் வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்தார்கள். இப்போது வீட்டுக் கதவை தட்டி, உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்துமளவுக்கு நிலைமை மோசமாயிருந்தது.

ஒவ்வொருவரின் கையிலும் விதவிதமான ஆயுதங்கள். கழி, கத்தி, கம்பு, அரிவாள், கெரசின் டின், ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது! என்ன நடந்தாலும் சரி, கதவைத் திறக்கவே கூடாது என்பதில் ஷீத்தல் சிங் உறுதியாக இருந்தார். இரண்டு நாட்களாகவே சுல்தான்புரியில் கூச்சல்களும், பதட்டமான நிலையும் இருந்தது. சர்தார்ஜிகள் யாரும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று காவல்துறை ஒலிபெருக்கியில் எச்சரித்தபடியே இருந்தது.

பத்திரமாக வீட்டுக்குள் பதுங்கி இருக்கும்படி குருத்வாராவிலிருந்தும் செய்தி வந்திருந்தது. சீக்கிய ஆண்களை வெளியே நடமாட வேண்டாம், வீட்டுக்குள்ளேயே இருங்கள் என்று பெண்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்நியர்கள் அத்துமீறி உள்ளே வந்தால், கூச்சலிட்டு, உதவிக்கு கூப்பிட முடியாத நிலைமை. காவல்துறையினரைக் காணோம். உதவிக்கு வர சுல்தான்புரியில் அப்போது யாருமே இல்லை என்பதுதான் நிஜம்.

கெரசின் டின், இரும்பு செயின், சோடாபாட்டில் ஏந்தி வந்தவர்களை எளிதாக அடையாளம் காண முடிந்தது. வந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் சுல்தான்புரியில் நன்கு அறிமுகமானவர்கள். காங்கிரஸ் கட்சியின் பொறுப்புகளில் இருந்தவர்கள். பலமுறை வாக்கு கேட்டு அதே வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். ஒரு சிலரிடம் ஷீத்தல் சிங்குக்குத் தனிப்பட்ட அளவில் பழக்கமும் உண்டு. அடிக்கடி பார்த்துப் பழகிய முகங்கள்தான். சர்வ நிச்சயமாக வெளியாட்கள் அல்ல.

ஷீத்தல்சிங் குடும்பத்தினர் வசித்து வந்த அதே பகுதியில் இருந்த ஒரு பிரபலமான ஹோட்டலில் பணியாற்றியவர்களில் இருவரும் கூட்டத்தில் இருந்தார்கள். ஷீத்தல் சிங் வீட்டிற்கு தினமும் பால் கொண்டு வரும் பால்காரரும் அவரது தம்பியும்கூட இருந்தார்கள். இருவரது கையிலும் கெரசின் டின் இருந்தது. வீட்டிற்குள் புகுந்து, கொள்ளையடிப்பது என்னும் திட்டத்தோடு வந்திருந்தார்கள். கதவு உடைந்து விழுமளவுக்கு தட்டினர்கள். என்னதான் தட்டினாலும் சரி, கதவே உடைந்தாலும் சரி. திறக்கக்கூடாது என்பதில் ஷீத்தல்சிங் உறுதியாக இருந்தார். வெளியே நின்றிருந்த கும்பலோ ஒரு கட்டத்தில் பொறுமை இழந்து, கூச்சலிட ஆரம்பித்தது.

‘கதவை திறங்கடா, கொண்டை நாய்களா... உள்ளே வந்தா ஒரு பயலையும் உயிரோடு விட்டுட மாட்டோம்!’ வெற்றுக் கூச்சல் அல்ல அது. வெறியின் உச்சம். ஷீத்தல்சிங் குடும்பம் மிரண்டு போய் செய்வதறியாமல் நின்றது. அக்கம்பக்கத்தில் உதவிக்கு ஆட்கள் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை காவல்துறையும் இல்லை. கதவை திறக்காவிட்டால் வெறும் கூச்சலோடு ஒய்ந்து போய், அங்கிருந்து கிளம்பி விடுவார்கள் என்று தவறாக நினைத்துவிட்டார் ஷீத்தல் சிங். அவர்களோ ஒரு முடிவோடுதான் வந்திருந்தார்கள்.

கங்காராம், வாட்டசாட்டமான ஆள். சுல்தான்புரியில் டிவி ரிப்பேர் கடை வைத்திருந்தான். தன்னிடம் சிக்கும் பெண்களைக் கடத்திச்சென்று, கண்காணாத இடத்திற்குக் கொண்டு போய் விற்று, காசு சம்பாதிப்பது அவனது முக்கியமான தொழில். ஒட்டுமொத்த கும்பலுக்கும் அவனே தலைமைதாங்கி வந்திருந்தான். தன்னுடைய கையிலிருந்த இரும்புத் தடியால் கதவின் உள் தாழ்ப்பாள் இடத்தருகே பலமாகத் தட்டியதும் கதவு பிளந்துகொண்டது. வெறித்தனமான கூச்சலோடு உள்ளே நுழைந்தவர்களின் கையில் முதலில் சிக்கியது ஷீத்தல்சிங். பட்ட்ட்ட்! அந்த கனமான இரும்பு ஆயுதம் தோளில் இறங்கியதும் நிலை குலைந்து கீழே சரிந்தார் ஷீட்டல்சிங். விழுந்தவரால் எழுந்துகொள்ளவே முடியவில்லை. உதவிக்கு ஓடி வந்த அவரது மூத்த மகன் அசோக் சிங்கிற்கும் அடி, உதை விழுந்தது. உடனிருந்த சகோதரர்களான இந்தர் சிங், திலிப் சிங் ஆகியோரும் தாக்குதலுக்கு ஆளானார்கள். பெண்களையும் தாக்கினார்கள்.

'அடுத்த வாரம் மகளுக்குத் திருமணம் நடக்கப்போகிறது. அவளையாவது விட்டுவிடுங்கள் என்று கதறி, கையெடுத்து கும்பிட்டார் ஷீத்தல்சிங். அதையெல்லாம் கேட்கும் மனநிலையில் கூட்டத்தினர் இல்லை. மீனா கௌர் மீது கும்பலின் குரூர பார்வை விழுந்தது. அவளைச் சுற்றிவளைத்தவர்கள், அணிந்திருந்த புத்தாடையை வெறிகொண்டு கத்தியால் கிழிக்க ஆரம்பித்தார்கள். அவளது தாய் பத்மி கௌர் பதறி, கூட்டத்தினரைத் தடுத்தார். அவரைத் தள்ளிவிட்டு, மீனா கௌர் மீது பாய்ந்தார்கள். இருவரையும் காப்பாற்ற, எழுந்து ஓடிவந்த அசோக் சிங்கிற்கு சராமரியாக அடி விழுந்தது. அடிபட்டு ஈனஸ்வரத்தில் முனகியபடி எழுந்து நின்ற ஷீத்தல்சிங்கிற்கு மறுபடியும் அடி விழுந்தது. அவர் மீது கெரசினை கவிழ்த்து, பாஸ்பரஸ் பவுடரை வீடெங்கும் விசினார்கள். குப்பென்று எழுந்த நெருப்பு, ஷீத்தல்சிங்கை கவ்விக்கொண்டது. கொழுந்துவிட்டு எரிந்த தீயில் ஷீத்தல்சிங் உள்ளிட்ட 9 ஆண்களும் அங்கேயே கரிக்கட்டையானார்கள். வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்த கும்பல், எல்லோரும் எரிந்து, கரிக்கட்டை ஆகும் வரை காத்திருந்து பின்னரே கிளம்பிப்போனது.

அங்கிருந்து கிளம்பும்போது, ஆடைகள் கிழிக்கப்பட்டு அவமானத்தோடு நின்று கொண்டிருந்த மீனா கௌரின் கைகளைக் கட்டி இழுத்துச் சென்றார்கள். வர மறுத்து முரண்டு பிடித்ததில் அவளது கை உடைந்தது. கண்ணெதிரே கணவர், மகன் உள்ளிட்ட குடும்பத்தினர்களை எரித்துக் கொன்றதுடன், மகளையும் கடத்திச் சென்ற கும்பலை எதிர்த்து எதுவும் செய்ய முடியாமல் உறைந்து போய் நின்றிருந்தார் பத்மி கௌர்.

மூன்றுநாட்கள் கழித்து மீனா கௌர் மீட்கப்பட்டாள். சுல்தான் புரியின் ஏ4 பிளாக் வாசல் வரை வந்த காவல்துறையின் வாகனம் அவளைப் பத்திரமாக இறக்கி, வீட்டிற்கு அனுப்பி வைத்தது. மைனா கௌர் உயிருடன் திரும்பி வந்தாள், ஆனால் மனநிலை சரியில்லாதவளாய்...

1984, அக்டோபர் 31 தொடங்கி நவம்பர் 2 வரையிலான அந்த மூன்று நாட்கள், டெல்லிவாசிகளால் மறக்கவே முடியாதவை. டெல்லியின் மொத்த மக்கள் தொகையில் 7 சதவீதம் பேர் சீக்கியர்கள். அவர்களில் 3000 பேர் கொல்லப்பட்டார்கள். 10,000 பேர் வீடுகளை இழந்து, குடும்பத்தினரை இழந்து டெல்லி மாநகரத்தின் தெருக்களில் முற்றிலும் கைவிடப்பட்ட அநாதைகளாக நின்றார்கள். எத்தனை பேர் காணாமல் போனார்கள் என்பது இன்றுவரை புரியாத புதிராக இருக்கிறது. இப்படியொரு மாபெரும் சம்பவம், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், அதன் தலைநகரமான டெல்லியிலேயே அரங்கேறியது..

5. குஜராத் மஹாமயம்

எதார்த்தம் எப்படியிருக்கும் என்பதற்கு மிகச்சில எடுத்துக்காட்டுக்களே இதுவரை பதிவிடப்பட்டவை.

வார்த்தைகளால் வரைய முடியாதவைகளை வரைய அரும்பாடுபட்டு, அவைகளைப் படிக்கவே உடல் நடுங்குகிறதென்றால், சம்பவ காலங்கள், சம்பவத்தில் சிக்கியவர்கள், கண்ணால் கண்டவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள், குடும்பங்களின் நிலை, வாசிப்பவர்களின் யூகத்துக்கே விட்டுவிடப்படுகிறது..

எதார்த்தம் எப்படியிருக்கும் என்று எழுதுவதன் நோக்கம், மையம் கொண்டிருக்கும் குருதிப்புயல் ஒன்றின் தீவிரத்தை இன்றைய சபை அறிந்தே ஆக வேண்டும் என்பதே!
கையளவு மேகங்களான இந்த சம்பவங்களில் ஒன்றே ஒன்று மட்டும் விடுபட்டுப் போகுமானால் காலமும் கட்டுரையும் முழுமையடையாது என்பதாலும், சம்பவங்களின் பின்னணியில் இருப்பவர்களின் மன ஓட்டத்தை அறிந்து கொள்வதோடு, வரப்போவதும் இவைகளில் ஒன்றைப் போலவோ இதை விட வக்கிரமாகவோ தான் இருக்கும் என்று எச்சரிப்பதற்காகவுமே 2002 குஜராத் இரத்த மஹாமயத்தை இந்த அத்தியாயத்தில் சேர்க்க வேண்டியது கட்டாயமாகிறது.

குஜராத் மஹாமயம்

பிப்ரவரி 27, 2002..

அயோத்தியிலிருந்து கரசேவகர்களை ஏற்றிக்கொண்டு வந்த சபர்மதி எக்ஸ்பிரஸின் S-6 கோச் தீப்பிடித்து எரிய, அதிலிருந்த 59 இந்து கரசேவகர்கள் சம்பவ இடத்திலேயே சாம்பலாயினர்..

எரிந்து கரிக்கட்டையான அவர்கள் உடல்கள், குடும்பத்தினரிடம் சேர்க்கப்படாமல், அகமதாபாத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதுவே கோத்ரா கலவரத்தின் முதல் புள்ளி.

அன்று தொடங்கிய அந்த இரத்த மஹாமயம், அடுத்த மூன்று மாதங்களுக்கு குஜராத்தின் நகரங்கள் யாவற்றையும் புரட்டி எடுத்ததுடன், அடுத்து வந்த ஒரு வருடம், குஜராத்தின் கிராமங்களும் தங்கள் நிம்மதியைத் தொலைத்தன.
எதைச் சொல்வது? எதை விடுவது? கைகள் நடுங்குகிறது!

"2002 குஜராத் கலவரம் " என்ற புத்தகத்தின் ஆசிரியர் சரவண கார்த்திகேயன், சம்பவத்தின் அடித்தளம் முதல் உச்சிமுனை வரை நுணுக்கமாய்ப் பதிவிடுகிறார்..

"இரத்தத்துக்கு இரத்தம் ! பழக்குப்பழி ! நெருப்புக்கு நெருப்பு !

• அகமதாபாத்திலுள்ள சமன்புராவின் குல்பர்க் சொஸைட்டி..
பிப்ரவரி 28, மதியம் 2 மணி..
1500 பேர் கொண்ட கும்பல் ஒன்று வக்கிரமாய் நுழைகிறது..

முன்னாள் காங்கிரஸ் எம்.பியும் மூத்த தலைவருமான இஷான் ஜாஃப்ரியின் வீடு குறிவைக்கப்படுகிறது. வீட்டுப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு, 73 வயது இஷான் ஜாஃப்ரி நிர்வாணப்படுத்தப்பட்டு தெருக்களில் இழுத்துச் செல்லப்படுகிறார். "ஜெய் ஸ்ரீ ராம்" சொல்லும்படியாக அவர் நிர்ப்பந்திக்கப்பட்டு, அவர் அதற்கு மறுத்து விடவே, அவரது தலை துண்டிக்கப்பட்டு, நெருப்பில் வீசப்படுகிறார் ஜாஃப்ரி. அந்நேரம் வீட்டில் இல்லாத அவரது மனைவி தவிர, குடும்பம் முழுவதும் உயிரோடு கொளுத்தப்படுகிறது.

• தீக்கிரையாக்கப்பட்ட சிறுபான்மையினரின் வீடுகளில் எழுதப்பட்டது..."இந்தியாவை விட்டு வெளியேறுங்கள். இல்லையென்றால் உங்கள் தாய்மார்களை வன்புணர்வோம்.."

• 2002 கலவரங்களில் மிகப் பிரதானமான விஷயம், குழந்தைகள் மற்றும் பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடூரமான வன்முறைகள். கலவரத்தில் வயது வித்தியாசமின்றி சுமார் 250 பெண்கள் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு எரிக்கப்பட, குழந்தைகள் மீது பெட்ரோல் ஊற்றப்பட்டு உயிருடன் கொளுத்தப்பட்டு, கசாப்புக்கடையில் வெட்டுவது போல அடையாளமே தெரியாமல் சிதைக்கப்பட்டுக்கொல்லப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்களின் வயிறு கிழிக்கப்பட்டு, அந்த சிசு வெளியே உருவப்பட்டு, தாய்க்குக் காட்டப்பட்டு, குத்தீட்டியால் குத்தப்பட்டுத் தீக்குள் எறியப்பட்டு வெந்து சாம்பலாக்கப்பட்டது.

மானபங்கம் சர்வ சாதாரணமாய்...

- குழந்தைகள் தாய்களின் கண்களுக்கு முன்பாக..

- தாய்மார் பிள்ளைகளின் கண்களுக்கு முன்பாக..

- உச்சக்கட்டமாய் மூன்று வயது பெண் குழந்தை ஒன்றை ...

- நிவாரண முகாம்களுக்கு வந்து சேர்ந்த பெண்கள் பலர் உடலில் ஆடையே இன்றி வந்து சேர்ந்தனர் என்கிறது பதிவுகள்..

- சபர்கந்தா மாவட்டத்திலுள்ள கிடியாட் கிராமத்தில் 70 பேர் கொல்லப்பட, உயிர் பிழைக்க இரண்டு வேன்களில் தப்பித்த 118 பேர் வழியிலேயே மறிக்கப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர்.

கலவரங்களில் கை வைத்தால் இந்தியப் பிரிவினையில் தொடங்கி, மிஸா காலத்தைக் கடந்து, சீக்கியக் கலவரத்தைச் சந்தித்து, குஜராத்தையும் கந்தமாலையும் தாண்டும்போது, மண்டைக்காட்டை மட்டும் மறக்க முடியுமோ? 82 ல் கன்னியாகுமரியின் மண்டைக்காட்டில் உடைந்த மண்டைகளும், உருண்ட தலைகளும்தான் எத்தனை எத்தனை !

இந்த வரிசை, நேற்று இடையின் குடியின் கொடையின் போது சர்ச் வளாகத்துக்குள் பட்டாசு எரியப்பட்ட கலவரக் கதையாய் இன்று வரை தொடர்கிறது... இன்னும் தொடரும் !

தலைவர்களின் ஸ்டேட்மெண்ட்

இத்தனை பெரிய ஒரு மஹாமயம் நடந்து முடிந்த மூன்றே நாளில் சிறுபான்மையினரில் 2000 பேருக்கு மேலானவர்கள் கொல்லப்பட, அதைக் குறித்த நம் தலைகளின் ஸ்டேட்மெண்ட்டைக் கொஞ்சம் கேட்டுப்பாருங்கள்!

2014 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் இன்றைய பிரதமரிடம் 2002 குஜராத் கலவரம் பற்றி நேர்காணல் ஒன்றில் கேள்வி எழுப்பப்படுகிறது.. அவர் சொல்கிறார்..

"காருக்குக் கீழே தவறுதலாக நாய்க்குட்டி வந்து அடிபடுகிறது. சற்று சங்கடமாயிருந்தாலும் எடுத்துப்போட்டுவிட்டுப் போக வேண்டியதுதான்..என்ன செய்வது ?"

அங்கே கலவரம் நடந்து கொண்டிருக்கும்போதே ஒரு TV நேர்காணலில் அவர் சொல்கிறார்..

"நடந்து கொண்டிருக்கும் கலவரங்கள் ஏற்கனவே செய்த வினைகளுக்கான எதிர்வினைகளே!"

VHP தலைவர் அஷோக் சிங்கால் சொன்னார்..
"குஜராத்தில் நடந்த கலவரங்கள் ஒரு வெற்றிகரமான பரிசோதனை..எதிர்காலத்தில் நாடு முழுவதும் இதே போல் கலவரங்கள் நடத்தப்படும்.."

"முஸ்லிம்கள் இந்த தேசத்துக்குப் புற்றுநோய் போன்றவர்கள். ஒரே வழி அறுவை சிகிச்சைதான். இந்துக்கள் கையில் ஆயுதம் எடுத்து இந்தப் புற்றுநோயை வேரோடு அழிக்க வேண்டும்" என்றார் சிவசேனா தலைவர் பால் தாக்கரே !

இத்தனைக்கும் மத்தியில், துப்பாக்கிச் சத்தத்திலும் வெடிகுண்டு சத்தத்திலும் ஜெய் ஸ்ரீ ராம் கோஷத்திலும் தான் இன்றைய சபை விழிக்குமோ ?

“ இதோ, நாட்கள் வருமென்று
கர்த்தர் சொல்லுகிறார்...

(எரேமியா 31:27) ”

குருதிப் பிரளயம்

CHAPTER - 8

ஹிட் லைக் ஹிட்லர்

தலை வெட்டப்பட்ட
மத்தேயு

CHAPTER-8

ஹிட் லைக் ஹிட்லர்

ஹிட்லரைப் பற்றியும் அவன் ஆடிய ஆட்டங்கள் பற்றியும் எழுதாத வரலாற்று ஆசிரியர்கள் இல்லை..வெளியிடப்படாத புத்தகங்களும் இல்லை..வெளியிடாத பதிப்பகங்களும் இல்லை..படிக்காத ஆட்களும் இல்லை..

அவன், தானே எழுதிய "Mein Kampf " (எனது போராட்டங்கள்) என்ற அவனது சுயசரிதை புத்தகம் மட்டுமே இந்தியாவில் வருடத்துக்கு ஒரு இலட்சம் பிரதிகள் விற்றுத் தீருகின்றன..

படிப்பவர்கள் பெரும்பாலும் மேல்தட்டு வாலிபர்கள் !

நமது தொடரின் நோக்கம் இன்னொரு முறை ஹிட்லரின் கதை சொல்வது அல்ல..

நாம் வந்து நிற்கும் நாட்கள், இன்றைய இந்திய சபையின் காலகட்டம், நாட்டின் நிலவரங்கள் - எச்சரிக்கை மணியடித்து, அபாய சங்கு ஊதி, "சபையே விழித்தெழு" என்று ஓங்கி ஒலித்து எழுப்புகிறது..

தேவ சித்தமானால், இந்த அத்தியாயத்தில் வரப்போகும் ஒவ்வொரு பகுதியும், அன்றைய காலத்தோடு இன்றைய நாட்களை ஒப்பிட்டுப் பார்க்கவும், தட்டி எழுப்பவும் நம்மை ஓலமிட்டு அழைக்கப் போகிறது..

இதிலே ஞானம் விளங்கும்..
புத்தியுடையவன்
(ஒப்பிட்டுப்) பார்க்கக்கடவன்.
(வெளி 13:18)

இராக்காலம் வருகிறது..கேட்க மனதானால் கேளுங்கள்..
(ஏசா 21:2)

1. நிமோல்லர் அறைகூவல்

ஹிட்லரின் சர்வாதிகார ஆட்சியில் சபைகள் நசுக்கப்படுமுன்பு, முழு ஜெர்மனியின் புரோட்டஸ்டான்ட் மற்றும் கத்தோலிக்க சபைகளும் தெரிந்தோ தெரியாமலோ, ஏமாற்றப்பட்டோ,

அவனது நாஜி கட்சிக்குத் தலைவணங்கி அவனோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு, அவனை அரியணையில் ஏற்ற போட்டி போட்டுக் கொண்டு, தங்கள் சபைகளின் முழு ஆதரவையும் கண்மூடித்தனமாக வழங்கி வணங்கி நின்ற போது..

சாத்ராக், மேஷாக் போன்று அவனுக்குத் தலைவணங்காத இரண்டே இரண்டு போதகர்கள்...

ஒருவர்..
மார்ட்டின் நிமோல்லர்..
(Martin Neimoller)

அடுத்தவர்..
டியட்ரிச் போன்ஃபர்..
(Dietrich Bonhoeffer)

ஹிட்லர் ஆட்சியைப் பிடித்தது 1933ல்..
ஆனால் சான்ஸல்லர் பதவியைப் பிடித்து சர்வாதிகாரியானது 1934ல்..

அந்த 1934..ஏப்ரல் 4வது ஞாயிறு.. ஈஸ்டர் தினத்துக்கு முந்தின ஞாயிறு.. ரெவரெண்ட் மார்ட்டின் நிமோல்லர் தமது சபையின் வாலிபர்களுக்குக் கொடுத்த அறைகூவல் செய்தி இது !

நிமோல்லர் செய்தி

"இன்றைய நமது நிலை இது தான்...!"

"...இன்று ஜெர்மனியின் முழு சபையும் கிறிஸ்தவ சமுதாயமும் களகினால் புடைத்தெடுக்கும் சாத்தான் என்ற சோதனைக்காரனின் களகுக்குள் வீசி எறியப்பட்டிருக்கிறோம்.."

அவன் மிக ஆக்ரோஷமாகப் புடைக்க ஆரம்பித்து விட்டான்..காற்று வேகமாக அடிக்கிறது.நாம் கோதுமையா அல்லது பதரா என்பது வெளிப்படப் போகிறது...

உண்மையாகவே, புடைக்கப்படப் போகும் நேரம் நம் மேல் வந்து விட்டது. வழக்கமான ஆராதனைகளும், அமைதியும் அமரிக்கையும் சமாதானமுமான நமது கிறிஸ்தவ நாட்களுக்கும் முடிவு வந்து விட்டது என்பதை நம் நடுவிலுள்ள சாந்தமானவர்களும், சமாதானத் தூதுவர்களும், எந்த வம்புதும்புக்கும் போகாத அப்பிராணிகளும் கூட அறிந்து கொண்டே ஆகவேண்டும்.."

ஒரு வேளை சமரசம் செய்து கொண்ட சபைகளுக்கு இந்தக் காலமான கொஞ்சக் காலம் வசந்த காலமாகத் தோன்றலாம்..

ஆனால் இதோ நாட்கள் வருகிறது! ஏன் வந்தே விட்டது !உண்மையான சபைக்கு இது சோதனைக்காலம் !

நாம் உண்மையிலே எப்படிப்பட்டவர்கள் என்று சோதித்து அறியவும், பொன்னோ தகரமோ, கோதுமையோ பதரோ அல்லது அசலோ நகலோ என்று பிரித்தெடுக்க,

தேவன் சாத்தானுக்கு முழு சுதந்திரம் கொடுத்து, நம்மைப் புடைத்தெடுக்கவும் வறுத்தெடுககவும் பிழிந்தெடுக்கவும் உத்தரவு கொடுத்துவிட்டார்..

சாத்தான் தன் சுளகை மிக வேகமாக வீச வீச, கிறிஸ்தவம் இன்று மேலேயும் கீழேயும் வீசி எறியப்பட்டு நையப் புடைபடப்போகிறது...

"ஏதாகிலும் கிடைக்கும்" என்று கிறிஸ்தவனாய் மாறியவனும், ஆசீர்வாதத்தின் மேலேயே கண்ணாய் இருப்பவனும், பின்வாசல் வழியாய் தொழுவத்துக்குள் புகுந்தவனும், ஓநாய் வருகிறதைக் கண்டு ஓடிப்போகும் கூலிக்கு மேய்ப்பவனும்,பெண்ணுக்காக ஆடு மேய்ப்பவனும்,

கிறிஸ்துவுக்காகப் பாடு அனுபவிக்க விருப்பமும் ஆயத்தமும் இல்லாதவனும் இப்போது அடிக்கிற உபத்திரவம் என்னும் சூறாவளியிலே பதராய்ப் பறந்து விரைந்து மறைந்து போவான் !"

[இதுவே Rev. Neimoller ன் அன்றைய செய்தியின் சாராம்சம்]

2. "ஹிட்லர் வாழ்க !"

[குருதிப்பிரளயம் என்ற இக்கட்டுரையின் "எதார்த்தம் எப்படியிருக்கும் ?" என்ற ஏழாம் அத்தியாயத்தின் முதல் பகுதியில் காணப்படும் "கண்ணாடிச் சிதறல்களின் இரவு" என்ற பகுதியை இங்கே சற்று ஞாபகப்படுத்திக்கொண்டு மேலே படிக்கவும்..]

ஊரெல்லாம் உடைந்து நொறுங்கிய கண்ணாடித் துண்டுகள்..கண்ணாடி ஜன்னல்களும் கதவுகளும் ஷோ ரூம்களும் நொறுக்கப்பட்டு தரையே தெரியாதபடி கண்ணுக்கெட்டிய தூரம் வரை கண்ணாடிச் சிதறல்கள்..

நவம்பர் 8ம் தேதி நடந்த உச்சக்கட்ட பேயாட்டத்துக்குப்பின் கூடுகிறது ஹிட்லரின் மந்திரிசபை...

நவம்பர் 12..

நாஜிக்களின் பெருந்தலைகளான ஹெர்மன் கோரிங், ஜோசப் கோயபெல்ஸ், மற்றும் ரெய்னார்ட் ஹேய்ட்ரிச், Furher ஹிட்லர் தலைமையில் யூதருக்கு விரோதமான அடுத்தகட்ட நடவடிக்கைக்கான ஆலோசனைக்காகக் கூடினர்..

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் இது தான்..

- இனி யூதர்களுக்கு பள்ளிகளிலோ மருத்துவமனைகளிலோ இடமில்லை..

- மாநகர பஸ், மற்றும் இரயிலில் பயணம் செய்ய அவர்களுக்கு அனுமதியில்லை..

- கடை திறக்கவோ எந்த வியாபாரம் தொழில் செய்யவோ அவர்களுக்கு இனி ஜெர்மனியில் இடமில்லை..

- கொளுத்தப்பட்ட அவர்களது ஜெப ஆலயங்கள் அவர்களது கையாலேயே சுத்தம் செய்ய வைக்கப்பட்டு அவைகள் வாகனங்கள் நிறுத்தும் பார்க்கிங் லாட்டாக மாற்றப்படும்..

- யூதர்களின் வீடுகளும் தொழில் மையங்களும் உடைமைகளும்

கட்டிடங்களும் இன்று முதல் "சுத்த ஆரியர்களான" ஜெர்மானியர்களையே சேரும்..

- இரவில் சூறையாடப்பட்ட உடைமைகளின் (யூதர்களின் உடைமையே ஆனாலும்) எல்லா நஷ்ட ஈட்டுத் தொகையும் யூதர்களின் இன்சூரன்ஸிலிருந்தே அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்..

- நடந்த வன்முறையின் தண்டனையாக ஒவ்வொரு யூதனின் தலையிலும் பெரிய அபராதத் தொகை ஒன்று சுமத்தப்படும்.(மொத்தமாக 1 பில்லியன் மார்க்)

- கடைசியாக, ஊரெல்லாம் நிறைந்து சிதறிக் கிடக்கும் கண்ணாடித் துண்டுகளைக் கூட்டிப் பெருக்கி அள்ளி நகரை சுத்தம் செய்யும் வேலையையும் கடைசி யூதனைக் கொண்டே செய்து முடிக்க வேண்டும்..

"இத்தோடு இந்த யூதப் பன்றிகள் இன்னொரு முறை எந்த ஜெர்மானியனுக்கும் விரோதமாக மூச்சு கூட விடக்கூடாது.." என்று சூளுரைத்து கூட்டத்தை முடித்தான் ஹெர்மன் கோரிங்...

[சிறுபான்மையினருக்கு எதிராய் இங்கே இப்படிப்பட்ட சட்டங்கள் இயற்றப்படப்போகும் நாட்கள் தொலைவில் இல்லை...]

ஹிட்லர் வாழ்க !

Hail Hitler !
ஹிட்லர் வாழ்க !

இப்படி கரகோஷமிட்டு சல்யூட் அடித்தது வேறு யாருமல்ல.. ஜெர்மனியிலுள்ள நம்ம கிறிஸ்தவர்களும், பிஷப்புகளும் தான்..

1933 ல் ஹிட்லர் பதவிக்கு வருமுன்பாகவே தன்னைக் கிறிஸ்தவர்களின் பாதுகாவலனாகவே காட்டிக் கொண்டான்.

தொடரின் அடுத்த அத்தியாயங்களின் பக்கங்களுக்குப் போகுமுன் ஜெர்மனியின் அன்றைய கிறிஸ்தவ சபைகளின் நிலையைப் பார்த்து விடுவது நல்லது..

1933 ல் ஜெர்மனியின் ஜனத்தொகை 60 மில்லியன்..ஏறக்குறைய எல்லா ஜெர்மானியர்களுமே அன்று கிறிஸ்தவர்கள் தான்.

20 மில்லியன் ரோமன் கத்தோலிக்கர்கள், 40 மில்லியன் ப்ரொட்டஸ்டாண்ட்டுகள்..
ஜெர்மனியில் யூதர்களின் எண்ணிக்கை அப்போது மொத்த ஜனத்தொகையில் 1 சதவீதத்துக்கும் குறைவாகவே தான் இருந்தது.

நாஜி அரசாங்கத்துக்கும் அதின் சட்டதிட்டங்களுக்கும், முக்கியமாக யூத கலாபனைக்கும் ஜெர்மானிய கிறிஸ்தவர்கள் மற்றும் அவர்களது சபையின் நடுநிலை என்ன ?

ஏற்கனவே யூதர்களைக் குறித்து ஐரோப்பா முழுவதுமே பரவியிருந்த இனவாதம், கிறிஸ்தவ சபைகளிலும் வேரூன்றியிருந்தது.
அந்தத் தவறான கண்ணோட்டத்துக்கு அவர்கள் சொன்ன நியாயம், எங்கள் இயேசுவைக் கொன்றது இந்த யூதர்கள் அல்லவா என்ற வாதமே!

நாஜிப்படையின் ஆரம்ப காலத்தில், சபையின் போக்கு ஹிட்லருக்கு ஆதரவாக இருந்ததற்கு மேல் சொன்ன காரணங்கள் தவிர இன்னும் சில காரணங்களும் இருக்கத் தான் செய்தன.

அவைகளில் சில...

- 1920 களில் முதல் உலகப் போரில் எழுந்திருக்கவே முடியாமல் அடி வாங்கியிருந்த ஜெர்மனிக்கு, அவர்களது அன்றைய ஆட்சியாளர்களின் கையிலிருந்தும் பொருளாதார, சமூக அளவிலும் ஒரு பெரிய மாற்றம் தேவையாய் இருந்தது.

தேசத்தை அழிவிலிருந்து மீட்டெடுத்து இழந்த மகிமையைத் திரும்ப நிலைநிறுத்த அவர்களுககு ஒரு இரட்சகன் தேவைப்பட்டான்..

- இது போக, ரஷ்யாவில் கம்யூனிசம் வேரூன்றத் தொடங்கியிருந்த காலம் அது..கம்யூனிசம், மதங்களை, குறிப்பாகக் கிறிஸ்தவத்தை அடியோடு அழித்து ஒழித்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து தங்களையும் தங்கள் பாரம்பரிய மதத்தையும் காத்துக் கொள்ள ஒரு பாதுகாவலன் ஜெர்மானியர்களுக்குத் தேவைப்பட்டான்..

- மட்டுமல்லாது, உள்ளாக உடைந்து நொறுங்கிப் போய், தங்களுக்குள்ளாகவே தங்கள் தேசத்தின் மேல் வெறுப்படைந்து போயிருந்த தங்கள் ஜனத்துக்குள் தேச பக்தியின் எழுச்சியை ஊட்டி எழுப்ப, தேச பக்தி நிறைந்த ஒரு தலைவன் தேவைப்பட்டான்..

- கடைசியாக, முதல் உலகப் போரின் அழிவுக்கு ஜெர்மனியே காரணம் என்று உலக அளவில் அழிக்க முடியாத அளவு பெற்றுவிட்ட அவப்பெயரைத் துடைக்கவும் அந்த அவமானத்தை நீக்கவும் அவர்களுக்குத் தேவைப்பட்டது ஒரு தன்மானத் தலைவன்..

இவைகளே அன்றைய 1933 ல் ஏறக்குறைய முழு ஜெர்மானிய கிறிஸ்தவ சமுதாயமும் ஹிட்லரையும் அவனது நாஜிக் கொள்கைகளையும் ஆதரிக்க வைத்த காரணங்கள்..

இவைகள் தவிர, 1920 ல் நாஜி கொள்கைகளின் பட்டியலில் Article 24 ல் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட 'பாஸிட்டிவ் கிறிஸ்ட்டியானிட்டி' என்ற கிறிஸ்தவ ஆதரவு கொள்கை அவர்களுக்கு நாஜிகளை ஆதரிக்கத் தைரியமாய்க் கை கொடுத்தது.

அதின் சாராம்சம் இது தான்..

ஹிட்லர் அறிவித்தார்..
"நாட்டின் நலனோடோ, ஜெர்மனியின் உயர்குல ஆரிய இனத்தோடோ, காலாகாலமான நமது பாரம்பரித்தோடோ இசைந்து போகும் வரை, எந்த மதமும் எங்களுக்கு சம்மதம் தான்..

அவரவர் மதத்தைப் பின்பற்ற அவரவருக்கு முழு மதச்சுதந்திரம் உண்டு. அந்தக் கோணத்தில், எதையும் உள்வாங்கி, எல்லாரோடும் ஒத்துப்போகும் "சமரச கிறிஸ்துவத்துக்கு" எங்கள் கட்சி முழு ஆதரவு அளிக்கும்..

அந்த பட்சத்தில் தங்களை மட்டுமே மகா மேன்மையாகப்பாவித்து, அனைவருக்கும் அச்சுறுத்தலாயிருக்கும் யூதர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடுமையாக எதிர்ப்போம் என்றும்..

சுயநலனை விட பொது நலனே முக்கியம் என்று அதையே முன்னிறுத்துகிறது இந்த ஆட்சி.." என்று நீள்கிறது அந்த ஆர்ட்டிக்கிள் 24..

இது ஒரு பகிரங்கமான யூத எதிர்ப்பு அறிக்கை என்றாலும், மத சுதந்திரம் தான் இருக்கிறதே, அது போதும் என்று முழு ஜெர்மன் கிறிஸ்தவ சமுதாயமும் கண்ணை மூடிக்கொண்டு அவனை வணங்கி வாழ்த்தியது..

" ஹெய்ல் ஹிட்லர்! ஹிட்லர் வாழ்க ! என்று ஸ்பெஷல் நாஜி சல்யூட்டோடு !

3. நாஜி ஜெர்மனியில் ப்ரோட்டஸ்டான்ட் சபைகள்

1930 களில் ஜெர்மனியின் மிகப்பெரிய ப்ரொட்டஸ்டன்ட் சபையாக இருந்தது, 28 பிராந்திய சபைகளைக் கொண்ட ஜெர்மன் இவாஞ்சலிக்கல் சர்ச்.

இந்த சபையின் பூர்வீகம், மார்ட்டின் லூத்தர் காலத்தில் தோன்றிய reformed சபையிலிருந்து பிரிந்த 3 பெரிய பிரிவுகளான லூத்தரன், reformed, மற்றும் யுனைட்டெட் என்ற மிகப்பெரிய கிளைகளாகும்.

ஜெர்மனியின் 40 மில்லியன் ப்ரொட்டஸ்டான்ட்டுகளும் இந்த ஜெர்மன் இவாஞ்சலிக்கல் சபையில் சங்கமம் ஆனவர்களே.

இது தவிர, Free protestants என்று சொல்லப்பட்ட மெத்தடிஸ்ட், பாப்டிஸ்ட், போன்ற சிறு சிறு independent சபைகளும் ஆங்காங்கே இயங்கி வந்தன.

ஜெர்மன் கலாச்சாரத்தோடு தேசபக்தி நிறைந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க, நாட்டின் தூணாகவே தன்னைக் கருதி வந்தது இந்த ஜெர்மன் இவாஞ்சலிக்கல் சர்ச்.

நாஜி தத்துவங்களையும் இனவாதத்தையும், தேசியவாதத்தையும் உள்வாங்கித் தழுவிக்கொண்ட "ஜெர்மன் க்றிஸ்டியன்ஸ்" என்ற இயக்கம் 1920 களில் ஜெர்மன் இவாஞ்சலிக்கல் சர்ச்சுக்குள்ளே உருவானது.

நாஜிக்கள் அதிகாரத்துக்கு வந்ததும், இந்தக் குழுவினர், பாசிசம் சார்ந்த ஒரு தேசிய கிறிஸ்தவ சபையை உருவாக்க வேண்டும் என்று முயற்சித்தனர்.

இந்த "ஜெர்மன் க்றிஸ்டியன்ஸ்" இயக்கத்துக்கு எதிரான "confessing church" என்ற விசுவாச இயக்கம் ஒன்று மெயின் இவாஞ்சலிக்கல் சர்ச்சுக்குள்ளேயே எழும்பி, அந்த சபை இரு பிரிவாகப் பிரிந்து நின்றது.

"விசுவாச இயக்கத்தின்" விசுவாச அறிக்கை, நாம் கர்த்தருக்கும் கர்த்தருடைய வார்த்தைக்கும் மட்டுமே கட்டுப்பட்டு, கர்த்தருடைய பட்சத்தில் மட்டுமே நிற்கவேண்டுமே தவிர, ஒரு உலகத் தலைவனுக்கு அல்ல என்பதில் உறுதியாய் இருந்தது.

இப்படி ஒரே சபைக்குள் பிரிந்து நின்ற இவர்களது வாக்குவாதம் மற்றும் சபைக்குள்ளிருந்த உட்பூசல்களுக்குள், நாஜிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஒரு கூட்டமும் அப்படி செய்யவே கூடாது என்று இன்னொரு கூட்டமும் இழுபறி சழுபறி நடத்திக் கொண்டிருந்தபோது, "நாஜிக்களையும் பகைத்துக் கொள்ள வேண்டாம், நமக்குள்ளும் அடிதடி வேண்டாம்" என்ற நியூட்ரல் எண்ணம் கொண்ட ஒரு சிறு கூட்டமும் மூலையில் இருந்தது.

Confessing church என்ற விசுவாசக் கூட்டத்தில் இருந்தவர்களில் முக்கியமானவர்கள், Dietrich Bonhoeffer மற்றும் பாஸ்டர் மார்ட்டின் நிமோல்லர். இதில் போனஃப்பர், நாஜிக்களின் ஆட்சியின் கடைசி நாட்களில் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்.

நிமோல்லர் 7 வருடங்கள் கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்பில் அடைக்கப்பட்டிருந்தார்.

தஙகளுக்குள் அடித்துக் கொண்டிருந்த இந்தப் பிரிவுகள், நாஜிக்களை எதிர்த்தோ, ஹிட்லரை எதிர்த்தோ குரல் கொடுக்கவுமில்லை...உருப்படியாக எதுவும் செய்யவுமில்லை.

"விசுவாச இயக்கம்," நாஜிக்கள் சபைக்குள் ஊடுருவி தங்கள் தத்துவங்களைப் புகுத்திவிடக்கூடாது என்று தங்களைக் காத்துக் கொள்வதிலேயே தீவிரமாய் இருந்தனர்.

ஆனால் அவர்களிலும் சில ஊழியர்களும் விசுவாசிகளும் ஆட்சி எதிர்ப்பாளர்களாகவும், யூதர்களை ஒளித்து வைத்து அவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் இருக்கத்தான் செய்தனர்.

(மேல் காண்பவற்றோடு , இன்றைய இந்தியாவின் காலக்கட்டத்தில் நம் நாட்டு CSI, CNI, Methodist, ரோமன் கத்தோலிக்க மற்றும் Pentecostal Synodகளின் நிலைப்பாடு என்னவென்பதையும்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் குறிப்பிட்ட கட்சிகளோடு அவர்களது ஆதரவு மற்றும் இந்தச் சபைகளின் இன்றைய சார்புநிலை யாவற்றையும் தீர்க்கதரிசன நோக்குடையவர்கள் நிதானிப்பதும், ஒப்பிட்டுப் பார்ப்பதும், சீர்தூக்கிப்பார்ப்பதும், தாங்கள் எச்சரிப்படைவதுடன், வரும் நாட்களுக்கு சபைகளை ஆயத்தப்படுத்துவதற்கும் இந்த விபரங்கள் தீவிர பங்களிக்கும் என்பதில் சந்தேகமில்லை)

கிறிஸ்தவர்களுக்கு எதிரான நாஜி கோட்பாடு

1933..ஜனவரி 30 இரவு...

ஹிட்லரின் SA என்ற புயல்படையும் SS என்ற கருங்காவிப் படையும் அணி அணியாய், எரியும் தீப்பந்தங்களுடன் பெர்லினின் Unter Den Linden என்ற சதுக்கம் நோக்கி வெற்றி நடை போடுகின்றனர்..

இருபுறமும் ஆரவாரிக்கும் பெருங்கூட்டம்..அன்று தான் ஹிட்லரின் முதல் கட்ட வெற்றி..ஹிட்லர்
ஜெர்மன் சான்ஸலராக நியமிக்கப்பட்ட தினம்..

ஹிட்லர் அன்று வெளிநாட்டு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில்.."இது எங்கள் வெற்றியின் ஒரு சிறு பகுதி தான்..பத்து வருடங்களாக வெளியிலுள்ளவர்களுடன் போராடி இப்போது தான் அரசாங்கத்துக்குள் நுழைகிறேன்..இனி நடக்கப்போவது தான் உண்மையான போராட்டம்.." என்றான்.

இதன் பிறகு தான் அவனது "ஆரியர்களின் ஆயிர வருட அரசாட்சி" என்ற தனது கனவை நனவாக்கும் போராட்டம் ஆரம்பித்தது.

அவனது எண்ணப்படி தூய்மையான இரத்தமுள்ள ஆரிய சமுதாயமான ஜெர்மானியர்களைத் தீட்டுப்படுத்தியவர்களாக, அவனது பார்வையில்

எதிரிகளாக அன்று நின்றவர்கள், யூதர்கள், கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் கிறிஸ்தவர்கள்..

இவர்களில், யூதர்களையும் கம்யூனிஸ்ட்டுகளையும் பிறகு பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு, உடனடியாக அவனது பார்வை திரும்பியது அன்று மெஜாரிட்டியாக இருந்த கிறிஸ்தவர்களை நோக்கி ! முக்கியமாக - ரோமன் கத்தோலிக்கர்கள் !

அவர்களை அடியோடு அழிக்க அவன் உதவி நாடியது அப்போது அவனது கரங்களாக செயல்பட்ட "ஆல்ஃப்ரட் ரோஸன்பெர்க்" மற்றும் "ஹென்ரிக் ஹிம்லர்.."

இவர்களில் ரோஸன்பர்க், நாஜி அரசின் தத்துவ ஞானியாகக் கருதப்பட்டவன். "The Myth of the 20th Century" என்ற சர்ச்சைக்குரிய புத்தகத்தை எழுதியவன்.

ஐரோப்பாவின் புராணக் கதைகளிலிருந்து அவனுடைய தத்துவம் ஆரம்பிக்கிறது..

அதன்படி, வடஅட்லாண்ட்டிக் கடலில் உள்ள அட்லாண்ட்டிஸ் தீவில் ஆரியர்கள் வாழ்ந்து வந்தனர்.
இவர்கள் வேறு ஏதோ ஓரிடத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களல்ல..இவர்கள் வானத்திலிருந்து நேரிடையாக பூமிக்குக் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள்..

காலப்போக்கில் சுகபோகத்தில் திளைத்து வந்த இவர்கள் வழி தவறிப் போனதால் தெய்வ கோபம் இவர்கள் மேல் வந்து, ஏற்பட்ட பெருவெள்ளத்தில் பெரும்பாலானவர்கள் மாண்டு, அவர்களில் மிஞ்சிய புரோகிதர்களும், பண்டிதர்களும், ஐயர்களும் மட்டுமே தப்பிப்போய்ச் சேர்ந்தது "இந்தியாவின் மேலுள்ள மலை உச்சி நாடான திபெத்துக்கு" என்று போகிறது கதை..

இப்படி தப்பித்துச் சென்ற புரோகிதர்களும் பண்டிதர்களும் தான் இந்திய - ஐரோப்பியர்களுக்கான மூதாதையர்கள்..இவர்களே பின்னர் நாடோடிகளாக ஐரோப்பாவுக்கு வந்தார்கள்..இத்தகைய அப்பழுக்கு இல்லாத தூய ரத்த வம்சத்து மக்களே "ஆரியர்கள்" என்றது அவர்களது கருத்து.

இப்படி சூப்பர் சக்தியாக வலம் வந்த இவர்கள் மற்ற கீழ் ஜாதிகளோடு சம்பந்தங்கலந்து வாழ்ந்ததால் தங்கள் பெருமையையும் வலிமையையும் தற்போது இழந்து நிற்கிறார்கள்..

அப்படிப்பட்ட சுத்த ஆரியர்களான ஜெர்மானியர்களை, தீட்டுப்படுத்தும் தீண்டத்தகாதவர்களான யூதர்கள், கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் கிறிஸ்தவர்களை அழித்து அவர்களிலிருந்து ஆரிய இரத்தத்தைப் பிரித்தெடுத்து தூய்மைப்படுத்துவதில் தான் நாஜிக்களுடைய ஆரம்பக் கோட்பாடு ஆரம்பமாகிறது..

இதை எப்படியாவது நிரூபிக்க தலைகீழாகப் பிரயத்தனம் பண்ணிக்கொண்டிருந்தான் SS (Scutz Staffel) என்ற நாஜி கருங்காவிப்படையின் (நம்ம ஊர் Swayam Sewak கள் மாதிரி வைத்துக் கொள்ளலாம்) தலைவன் ஹென்ரிக் ஹிம்லர்..

ஹிம்லருடைய ஒரே நோக்கம்,ஜெர்மனியை அதினுடைய பழைய புனித ரத்தமுள்ள மூதாதையருடைய யுகத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே..

ஹிம்லர் தனது SS கருங்காவிப் படையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தான். அதில் மிக முக்கியமானது ஹிந்து தத்துவம். அவன் எங்கு சென்றாலும் ஒரு பகவத் கீதை புத்தகப் பிரதியுடனே சென்றிருக்கிறான்.

மகாபாரத யுத்தத்தை நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் நடந்த போராக அவனுடைய படைமுயற்சிப் பாசறைக் கூட்டங்களில் அவன் வர்ணிப்பது வழக்கம்.

ஹிந்து தத்துவத்திலும், ஜாதிப்பிரிவு நம்பிக்கையிலும் அவனுக்கு அதீதமான ஈடுபாடு இருந்தது. நாஜி போர் வீரர்களுக்கான ஆரம்பப்பாடம் ஹிந்து தத்துவம் தான் என்று நம்பி, அதையே அவர்களது நாடி நரம்புகளில் இடைவிடாமல் ஏற்றி வந்தான் ஹிட்லரின் வலதுகையான ஹென்ரிக் ஹிம்லர்..

4. நாஜி கோட்பாடுகளின் *10* அம்சங்கள்

(அன்றைய ஹிட்லரின் பாசிச நாஜிக்களின் கோட்பாடுகளை இன்றைய நமது ஆட்சியாளர்களின் ஆட்சிமுறையோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, அது எவ்வளவு துல்லியமாய்ப் பொருந்திப்போகிறது என்பது நாம் சொல்லாமலே சொல்லும் ஒரு வெட்ட வெளிச்ச உண்மை!)

நாஜி கோட்பாடுகளின் 10 அம்சங்கள்

1. முழு அதிகாரத்துவம்:

ஒரு பலம் பொருந்திய அரசாங்கத்தையும் வானளாவிய அதிகாரத்தையுமே நாஜிக்கள் விரும்பினர். நாஜி அரசாங்கம் தனது கொள்கைகளையும், தான் செயலாக்க நினைத்ததையும் தன் நாட்டின் பிரஜைகளின் மேல் திணிக்க முடியாமல் போனால், அது ஒரு கையாலாகாத செயலற்ற அரசு என்றே அவர்கள் நம்பினர்.

சகல தீர்மானங்களையும் நிர்ணயிப்பவர், அவர்களில் சர்வ அதிகாரமும் கொண்ட அவர்கள் தலைவர் ஒருவரே! எல்லா அரசு அதிகாரமும் ஆளுமையும் அவர் ஒருவரது கையிலேயே இருக்கும். தங்கள் கட்சி ஒன்று தவிர நாட்டில் எந்தவொரு கட்சியோ, இயக்கங்களோ, அமைப்புகளோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ இருக்கவே கூடாது என்கிற முடிவில் குறியாய், தீவிரமாய் இருந்தனர் அவர்கள். அரசியல் சார்போ பலமோ கொண்ட யூனியன்களோ கிறிஸ்துவ சபைகளோ தடை செய்யப்படவேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டுமென்பதே அவர்களது எண்ணம்.

2. ஏகாதிபத்தியம் அல்லது சர்வாதிபத்தியம்:

நாஜிக்களைப் பொறுத்தவரை ஜெர்மானிய அரசியலில் சமூக, கலாச்சார முறைமைகளில் நாஜி கோட்பாடுகளுக்கு இடையூறான சில வரைமுறை எல்லைக்கோடுகள் ஏற்கனவே இருந்தபடியால், தங்கள் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்து, அதை ஒருங்கிணைத்து, மக்களின் வாழ்க்கை முறைகளைத் தங்கள் கொள்கைகளுக்கு ஏற்றாற்போன்று வரைமுறை வைத்து, தேசத்தின் சமூகவியலையே தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்றபடி மாற்றி வரைந்து வளைத்து வனைவதே தேசத்தின் நலனுக்கான தங்கள் அரசாங்கத்தின் தலையாய கடமை என்று நம்பி செயல்பட்டனர் அவர்கள்.

ஊடகங்களையும், யூனியன்களையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், சமுதாய சுதந்தரம், தனிமனித சுதந்தரம் இவைகளை மட்டுப்படுத்திக் கட்டுப்படுத்துவதும், கல்விக் கொள்கைகளைத் தங்கள் கோட்பாடுகளுக்கு ஏற்பத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதும், விதவிதமான பிரச்சார உத்திகளை வகுப்பதும் சர்வ அதிகாரம் கொண்ட தங்கள் அரசின் கையிலேயே இருக்க வேண்டுமென்று தீவிரித்து செயல்பட்டார்கள் நாஜிக்கள். இவர்களுக்குத் தேசத்தின் தனி மனித

உரிமையோ, சுதந்தரமோ, சமூக விடுதலை எழுச்சியோ அறவே ஆகாது. அனைத்தும் அரசாங்கத்தின் விருப்பத்துக்கும் ஆளுமைக்கும் உட்பட்டதாகவே இருக்க வேண்டுமென்று முழுமனதாய் நினைத்தனர் இவர்கள்.

3. தேசியவாதம்:

நாஜி கொள்கையே தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, ஜெர்மனி மற்றும் சுத்த ஆரிய ஜெர்மானியர்களின் நலன் மட்டுமே! ஜெர்மனியின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துதல், சுயசார்பு அமைத்தல், இராணுவ மறுகட்டமைப்பு, அண்டை நாடுகளை ஆக்கிரமித்துத் தன் எல்லையை விரிவாக்கி, அதில் சுத்த ஜெர்மானியர்களைக் குடியேற்றுதல்,

(அண்டை நாட்டுப் பக்கம் திரும்பினால் வாலை ஒட்ட நறுக்கி விடுவானென்று வேறு வழியின்றி, படைபடையாய்த் தென்னிந்தியாவில் வடஇந்தியர்களைக் குடியமர்த்துவதையும், அரசுப் பணிகளில் வடக்கர்கள் பெருமளவில் நியமிக்கப்பட்டுத் தெற்குக்கு அனுப்பப்படுவதையும் இங்கே சற்று கவனத்தில் கொள்க!)

ஜெர்மனின் நலனை முன்னிட்டு மட்டுமே மற்ற தேசங்களோடு உறவு வைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் மிகக் கவனமாயிருந்து அவற்றையே செயல்படுத்திய ஹிட்லரோ அவனது அடிவருடி நாஜிக்களோ, தங்கள் நோக்கங்களுக்கு உபயோகமில்லாத எந்த சர்வதேச ஒப்பந்தங்களையும் மற்ற தேசங்களோடு செய்ததே இல்லை.

4. இராணுவத்துவம்:

தேசத்தின் பாதுகாப்புக்காக, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் இராணுவத்தை, உள்ளாகக் கொஞ்சங்கொஞ்சமாய்க் கலைத்து, அல்லது உருமாற்றி, தங்கள் ஆட்களை இராணுவத்துக்குள் சேர்த்து அல்லது ஊடுருவச்செய்து, இராணுவத் தலைகளை மாற்றி, படைபலத்தை அதிகரித்துக்கொண்டே போவது அவர்கள் கொள்கைகளில் ஒன்று.

ஜெர்மானிய நாட்டின் எல்லைகளை விரிவாக்க மிலிட்டரியின் அசுர பலம் மிக மிக அவசியமென்பதை உணர்ந்து வலியுறுத்தி, அதைச் செயல்படுத்திக்கொண்டே போனான் ஹிட்லர். நாஜி கலாச்சாரமும், கட்டமைப்பும் அடிமட்டத்திலிருந்தே இராணுவ அமைப்பாகவும், மாதிரியாகவும், பாசறைப் படையாகவுமே செயல்பட்டு வந்தது.

ஜெர்மானிய இராணுவத்துக்கு இணையான இன்னொரு இராணுவப்படையொன்று நாஜிக்களின் செயல்பாட்டில் SS என்ற பெயரில் செயல்பட்டு வந்ததே அதற்கு ஆதாரம்.

5. எல்லை விரிவாக்கம் (அகண்ட ஜெர்மனி):

முழு ஐரோப்பாவிலுள்ள ஜெர்மன் மொழி பேசும் ஆரிய இனத்தவர்கள் யாவரையும் ஒரே குடையின் கீழ்க்கொண்டு வந்து, ஒரு அகண்ட ஜெர்மனியை உருவாக்குவதே ஹிட்லர் மற்றும் நாஜிக்களின் கனவு **(நினைவுபடுத்திக் கொள்க - அகண்ட பாரதம் !!!).**

இதைச் செயலாக்கி, ஆங்காங்கே இருக்கும் ஜெர்மானியர்களைக் குடியேற்ற அவர்களுக்கு வசிக்குமிடம் தேவைப்பட்டதால், ஆரியரல்லாத கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செக்கோஸ்லேவேக்கியா, போலந்து மற்றும் ரஷ்யா மீது கைவைக்க விரும்பி, அதின் முதல்கட்டமாக ஆஸ்திரியா மீது படையெடுத்து அதை ஜெர்மனியுடன் இணைத்துக்கொண்டான் ஹிட்லர்.

6. "மூன்றாம் வழி" ஒன்று:

முதல் உலக மகா யுத்தத்தால் துவண்டு போயிருந்த மக்கள், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதும், அன்று பரவலான நாடுகளின் மீதிருந்த முதலாளித்துவத்தின் மீதும் நம்பிக்கை இழக்கவே, சோஷலிஸம் மட்டுமே இவைகளுக்கு மாற்று மருந்து என்று காணப்பட்ட அந்நாட்களில், தங்கள் கொள்கைக்கு ஒவ்வாத சோஷலிஸத்தையும் மூட்டை கட்டிவிட்டு, இவை யாவற்றையும் தவிர்த்த வேறு ஒன்றைத் தந்து நாங்கள் உங்களுக்குக் கை கொடுக்கிறோம் என்று ஆத்மார்த்தமான அனுசரணையோடு வந்தது நாஜிக்களின் பாசிசம்.

(75 வருட சுதந்திர இந்தியாவில், காங்கிரஸ், நாட்டைச் சீரழித்ததைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை என்று சொல்லிச்சொல்லி, தாங்களே இனி இந்நாட்டின் நற்பாதுகாவலர்கள் என்று பிரச்சாரம் செய்து இங்கே இவர்கள் அரசுக்கட்டிலில் அமர்ந்ததை இங்கு நினைவில்கொள்க!).

ஹிட்லருக்கு ஜனநாயகம் என்றாலே அலர்ஜி. ஜனநாயகம் என்பது நாட்டின் நலனுக்காக ஒரு அரசு செய்ய நினைக்கும் எதையுமே செய்யக்கூடாத ஒரு கையாலாகாத கண்டுபிடிப்பு என்பதே அவனது தத்துவமாயிருந்தது. ஆகவே தான், தானே மக்களைக் காக்க வந்த மனகாவலனாய்த் தன்னையே பிரகடனப்பத்திக் கொண்டான் அவன்.

7. பொருளாதார ஆளுமை:

நாட்டின் பொருளாதார ஆளுமை முழுவதும் தங்கள் கைகளிலேயே இருக்க வேண்டுமென்றே நாஜிக்கள் விரும்பி நடைமுறைப்படுத்தினர். **(இரண்டு இட்லிக்கும் ஒரு காபிக்கும் அளக்கும் GST யை மறப்பதெப்படி?)** வேலைவாய்ப்பு, உற்பத்தித்திறன், இராணுவ மறுகட்டமைப்பு போன்ற யாவற்றையும் அவர்கள் தங்கள் கைகளிலேயே வைத்திருந்தனர்.

முழு பொருளாதாரத்தையும் தங்கள் பிடியில் வைத்திருத்தல், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டியவைகளை நிர்ணயித்தல், நாட்டு வளங்களைப் பகிர்ந்தளித்தல், வேலை செய்பவர்களை வேலை கொள்ளுதல், பணப்பரிமாற்றங்கள் எல்லாவற்றையுமே தங்கள் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் அவர்கள். நாட்டின் வணிகங்களை வளமாய் ஒரு சிலரது கைகளில் மட்டுமே வைத்திருக்க அவர்களுக்கு அனுமதியளித்திருந்தாலும், அவர்களும் ஆளுபவர்களின் கைக்குள்ளே இருக்க வேண்டுமென்பது அங்கே எழுதப்படாத ஒரு விதி!

8. பாரம்பரிய மதிப்பீடுகள்:

நாஜிக் கொள்கைகளின் மிக முக்கியமும் பலமுமான ஒரு அஸ்திபாரக் கோட்பாடு, அதின் பழங்காலப் பாரம்பரிய ஐதிகங்கள், நம்பிக்கைகள். நாஜிக்கள் தங்களைப் புதிய கொள்கைகளின் வேற்று முகங்களாய்க் காட்டிக் கொண்டாலும், அவர்கள் பிரச்சாரம் செய்ததோ, பண்டைய பரம்பரைப் பாரம்பரியங்களையே! ஜெர்மனியின் மிக நீண்ட பழங்காலக் கலாச்சாரங்களின் பாதுகாவலனாகவே ஹிட்லர் தன்னை முன்னிறுத்திக் காட்டிக்கொண்டான். சமத்துவக் கொள்கைகளும், ஜனநாயகமும், பெண்கள் உரிமைகளும், தாராளமயமாக்கலும் தங்கள் தேசத்தைத் துண்டாடிப் போட்டதென்று சொல்லிச்சொல்லி, ஒட்டோ வோன் பிஸ்மார்க் காலத்து ஒன்றுபட்ட 19ம் நூற்றாண்டுக் கலாச்சாரத்தையே மக்களுக்கு நினைவூட்டி அவர்களை உணர்ச்சிவசப்படுத்திக் கொண்டிருந்தான் ஹிட்லர்.

(மொகலாயப் படையெடுப்புகள், ஆங்கிலேய ஊடுருவல்கள், மேற்கத்தியக் கலாச்சாரம், ஜனநாயகம் ஆகிய இவைகளால் தேசம் கறைபட்டு இன்று நாசமாகிப்போனதென்றும், தொன்றுதொட்டு வரும் இந்துக் கலாச்சாரம் ஒன்றே கறைபடாத புனிதமானது என்றும் மீண்டும் மீண்டும் இங்கே குரலோங்கி நிற்பது இவ்விடத்தில் கவனிக்கப்படட்டும்!)

9. இனப்பாகுபாடுகள்:

சுண்டிவிட்டால் இரத்தம் வரும் சிவப்புத்தோல் ஒன்றே சுத்த ஆரிய இனமென்றும், அதுவே எல்லாவற்றிலும் உயர்ந்தது என்றும், மற்ற நிறங்களெல்லாம் அவைகளுக்குக் கீழானவைகளே என்றும் நம்பப்பட்டுப் போதிக்கப்பட்டது. அவர்களைப் பொறுத்தமட்டில் யூதர்கள், ஸ்லாவ் மற்றும் ரோமானிய இனங்கள் யாவுமே ஜெர்மானிய ஆரியர்களுக்குக் கீழானவைகளே!

(வர்ணாசிரம மனுதர்மத்தின் அடிப்படைப் போதகம் இங்கே ஆறாங்கிளாஸ் பாடப் புத்தகத்துக்குள்ளேயே நுழைந்து விட்டதை அறிவீர்களோ? அதின்படி, பார்ப்பனிய பிராமணியம் - தலை; ஷத்திரியர் - இவர்களுக்குக் கீழான இராணுவம் மற்றும் போலீஸ்; வைஷ்யர்கள் - வணிகம் செய்யும் தொழிலதிபர்கள், வியாபாரிகள், தொழில் முனைவோர் மற்றும் நிலக்கிழார்கள்; இந்த மூவருக்கும் கீழே சூத்திரர்கள் - கடைநிலை வேலை செய்பவர்கள். இவர்களே தங்களுக்கு மேலுள்ள மூவருக்கும் கைகட்டி சேவகம் செய்பவர்கள்)

10. ஒருங்கிணைந்த பணி:

ஒன்றிணைந்து, ஒரு மனப்பட்டு, ஒரு முகப்பட்டு செயல்படும் மக்களினம் மற்றும் தேசமே குறிக்கோள். மறைமுகமாய்ச் சொல்வதென்றால் வேற்றுமையில் ஒற்றுமை என்பதெல்லாம் காற்றில் பறக்கவிடப்பட்டு, முழு தேசமும் மக்களும் தங்களுக்குக் கட்டுப்பட்டு, இணைந்து தங்கள் கொள்கைக்காகவே பாடுபட வேண்டும் என்பதே அவர்களது மறைமுக அஜெண்டா. இதைக் காட்டமாகவும் கட்டாயமாகவுமே செயலாற்றினர் நாஜிக்கள்.

5. ஹிட்லர் தி ஹிந்து

ஹிட்லரின் ஜெர்மனியை நமது இன்றைய நாட்களோடும் நாட்டின் நிலைமையோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாஜிக்களின் வேர்களுக்கும் இந்து மதத்துக்கும் உள்ள நெருங்கிய தொடர்பையும் உறவையும் தொடாமல் இருப்பதென்பது இயலாத ஒன்று.

இந்தத் தொடருக்காக, பல புத்தகங்களையும் இணையதள செய்திகளையும் துருவி ஆராயும் போது, அவைகளின் வெளிப்படுத்துதல்கள், இன்றைய இந்திய சபை அவசியம் அறிய

வேண்டிய, ஆனால் அறியவே இல்லாத தூரத்துக்கும் ஆழத்துக்கும் நம்மை இட்டுச் செல்கிறது.

சபையைத் தட்டி எழுப்புவதும், ஜெபிக்க உந்தி ஏவுவதும், வரப்போகும் கொடிய நாட்களுக்காக ஆயத்தப்படுத்துவதுமே இந்தத் தொடரின் நோக்கமானால்,

வரலாற்றின் ஒரு சிறு பகுதியான இதை சபை அறிய வேண்டும் என்பதற்காகவே அதை மறைத்து வைக்காமல் அறிவிக்கத் தீர்மானித்து, இவைகள் இங்கே பதிவிடப்படுகின்றன..

ஒரு சோறு பதம்

- DESH RAJ GOYAL Rashtriya Swayamsevak Sangh,
Radhakrishna Prakashan.

(Historian & RSS Veteran)

"இந்துக்கள் இந்தியாவில் தொன்றுதொட்டு வசித்து வந்துள்ளனர்.
இந்துக்களே தேசம்..
ஏனெனில் காலாச்சாரம்,
நாகரீகம், வாழ்க்கை என அனைத்தும் அவர்களது கொடைகளே..

இந்து அல்லாதோர் வெளியிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் அல்லது விருந்தாளிகள். அவர்கள் இந்து மரபுகளையும் கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்டால் அன்றி, அவர்களை இணையானவர்களாகக் கருத முடியாது.

இந்து அல்லாதவர்கள், குறிப்பாக முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஒவ்வோர் இந்து அம்சத்துக்கும் விரோதிகள்..எனவே அச்சுறுத்தல்களாகக் கருதப்பட வேண்டியவர்கள்.

இந்நாட்டின் சுதந்திரம், முன்னேற்றம் ஆகியவை இந்துக்களின் சுதந்திரமும் முன்னேற்றமுமே. இந்திய வரலாறு என்பது இந்துக்களின் மதம், கலாச்சாரம் ஆகியவற்றை இந்த அயல் நாட்டவருடைய தாக்குதல்களிலிருந்து காக்கவும், நிலைநிறுத்தவுமான இந்துக்களின் போராட்டமே.

இந்த நாட்டை இந்து தேசம் என்று நம்பாதவரின் கைகளில் அதிகாரம் இருப்பதால், இந்த அச்சுறுத்தல் இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது.

நாட்டிலுள்ள அனைவருடைய ஒற்றுமையே தேச ஒற்றுமை என்று பேசுபவர்கள், சிறுபான்மையினரின் வாக்குகளை வளைத்துப் பிடிக்கும் சுயநல ஆசையால் உந்தப்பட்டவர்கள். எனவே அவர்கள் தேச துரோகிகள்.

இந்துக்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் இப்போதைய மிக முக்கியமான கட்டாயத் தேவை.

ஏனெனில் இந்துக்களை எல்லாப் பக்கங்களிலும் பகைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். இந்துக்கள் ஒட்டு மொத்த எதிர்ப்புத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். தாக்குதலே மிகச்சிறந்த தற்காப்பு.

இந்துக்களின் எல்லாத் தொல்லைக்கும் காரணம் ஒற்றுமையின்மையே.ஒற்றுமையை உருவாக்கும் இந்தத் தெய்வீகப் பணிக்காகவே சங்க பரிவாரம் உருவாகியுள்ளது.

இதற்கும் மேலாக, ஆர்.எஸ்.எஸ் ஷாக்காக்களில் அதன் கடந்த 74 ஆண்டுகளில், வேறெதுவும் கூறப்படவில்லை என்று சொல்லிவிடலாம்.."

- Original Guest post
By Jai Singh
Loonwatch.com

இந்துத்துவாவின் ஹிட்லர் மோகம்

ஹிட்லரையும் நாஜிக்களையும் அலசும்போது, இந்தியா, இந்து மதம் மற்றும் இந்துத்துவாவின் வேர்கள், ஹிட்லரோடும் நாஜிக்களோடும் மிக ஆழமாக வேரூன்றிச் செல்வதை வரலாறும் பதிவுகளும் அழுத்தமாகவே பதிவு செய்துள்ளன.

நாஜிக்களின் கருத்தியலும் தத்துவமும் பண்டைய இந்தியாவின் வரலாறு, புராணங்கள்,
ஆரிய சரித்திரம், ஸ்வஸ்திக் என்ற செழுமையின் சின்னம் என்பவைகளிலிருந்து வரையறுக்கப்பட்டு வரையப்பட்டதே..

இரண்டாம் உலகப்போரின் போது இந்திய தேசியவாதிகளுக்கு ஜெர்மனி நாஜிக்களிடமிருந்து கிடைத்த ஆதரவும் அரவணைப்பும் கொஞ்சநஞ்சமல்ல.

அதற்குப் பிரதி உபகாரமாக இந்திய வீரர்கள் ஹிட்லரின் ஜெர்மானியப் படையிலும் அவனது தனிப்பட்ட கைதேர்ந்த SS படையிலும் ஊக்கமாகப் பணிபுரிந்தனர்.

அவனது SS படைக்கும் நமது RSSக்கும் அதிக வித்தியாசம் ஒன்றுமில்லை. RSSன் ஆரம்பகால ஸ்தாபகர்களில் ஒருவரான விநாயக தாமோதர சாவர்க்காரரைப் போல ஹிட்லரின் தீவிர அபிமானியும் ஆதரவாளரும் வேறு ஒருவருமில்லை.

இரண்டாம் உலகப்போர் தொடங்கியபின், 1940ல் சாவர்க்கார் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றில் அவர் சொன்னார்..

"ஹிட்லரை மனித மிருகம் என்று வெறுத்து ஒதுக்கவோ, வின்ஸ்டன் சர்ச்சிலை மனிதக்கடவுள் என்று கொண்டாடவோ எந்தக் காரணமும் இல்லை..

ஜெர்மனியின் இன்றைய காலகட்டத்தில் நாஜி ஒன்றே ஜெர்மனியை மீட்க வந்த படை என்பதிலும் ஹிட்லர் ஒருவரே அதின் மீட்புக் காவலர் என்பதும் மறுக்க முடியாத உண்மை..

முதல் உலகப்போரின் அழிவுகளிலிருந்து ஜெர்மனியை மீட்டெடுத்தது ஹிட்லரும் நாஜிக்களுமே..." என்று தொடர்கிறார் சாவர்க்கார்.

1933ல் ஹிட்லர் பதவியேற்ற பிறகு, ஆங்காங்கே ஜெர்மனிக்கு அருகாமையிலுள்ள நாடுகளில் சிதறியிருந்த "ஆரிய ஜெர்மானியர்களை" ஒன்று சேர்த்து அண்டை நாடுகளை ஆக்கிரமித்து "அகண்ட ஜெர்மனியை" உருவாக்கும் தன் கனவை நனவாக்கும் முயற்சியில் 1939ல் ஹிட்லர், செக்கோஸ்லேவேக்கியாவைக் கைப்பற்றிய போது,

அதே கனவைத் தனதாக்கிக் கொண்டு "அகண்ட பாரதம்" என்ற பிரச்சாரத்தில் இறங்கிய வீர் சாவர்க்கார், தனது ஹிந்து மகா சபாவின் கூட்டத்தில் 1939ல் சொன்னார்...

"ஆஸ்திரியா, செக்கோஸ்லேவேக்கியா மற்றும் சிதறுண்ட நாடுகளைத் தன் கொடியின் கீழ் கொண்டுவந்து ஆரியர்களை ஒருங்கிணைத்த ஜெர்மனியைப் பாராட்டி கொண்டாட வேண்டும்..

ஸ்வஸ்திக் என்ற நமது புராதன இந்துமத சின்னத்தை உயர்த்தி, வேதங்களைத் தனதாக்கி, நமது பண்டைய கலாச்சாரங்களைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்ட ஜெர்மனியின் எழுச்சியையும், ஹிட்லரின் அஞ்சா நெஞ்சத்தையும், அவர் பின்னே தங்கள் யாவற்றையும் தத்தம் செய்து தங்கள் கொள்கைக்காக உயிர் கொடுக்க அவர் பட்சம் சார்ந்து நிற்கும் நாஜி வீரர்களின் வீரத்தையும் நான் கண்டு, புளங்காகிதம் அடைந்து, அந்தத் தானைத் தலைவனை மானசீகமாக என் ஆதர்ஷ புருஷராய் ஏற்கிறேன்..

ஜெர்மனியின் ஆரியர்கள் ஒன்றுபட்டது போல, இந்தியாவில் இந்துக்களும் ஒன்றுபட வேண்டும்..ஜெர்மனியில் சிறுபான்மையினரான யூதர்களுக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் செய்யப்பட்டது போலவே, இந்து இரத்தத்தோடும், மதத்தோடும், கலாச்சாரத்தோடும், பழக்கவழக்கங்களோடும் ஒத்துப்போகாத, ஒத்துவராத இந்திய சிறுபான்மையினருக்கும் செய்யப்பட வேண்டும்..

ஒரு தேசத்தின் பெரும்பான்மையினரைக் கொண்டதே அந்த தேசம்..அந்தப் பெரும்பான்மையினரோடு ஒன்றரக் கலவாத சிறுபான்மையினருக்கு அங்கு இடமில்லை..அதில் எந்த சந்தேகமும் இல்லை.."

- இவைகளே அன்று சாவர்க்கார் தூவின விதைகள்..

"ஹிட்லர் களையெடுத்தது ஜெர்மானிய யூதர்கள், கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் கிறிஸ்தவர்களை..
நாம் இன்று களையெடுக்க வேண்டியது, இந்தியாவின் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் கம்யூனிஸ்ட்டுகளை"

- இதுவே இன்றைய இந்துத்துவ வாதிகளின் தாரக மந்திரம்.

- Original Guest post
By Jai Singh
Loonwatch.com

என் இந்திய சபையே.. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்..இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது.

உன்னை சந்திக்கும் காலத்தை நீ அறியாமல் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி,

உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப் போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும்.."

[லூக்கா19: 42-44]

6. சபைகளுக்கு விரோதமான நாஜிக்களின் நடவடிக்கைகள்

சபைகளின் செயல்பாடுகளைத் தடுக்கவும் ஒடுக்கவும் முடக்கவும் முடிக்கவும் நாஜி அரசாங்கம் எடுத்த அடுக்கடுக்கான நடவடிக்கைகள்

- கிறிஸ்தவ ஊழியர்கள் கைது செய்யப்பட்டு கான்ஸன்ட்ரேஷன் கேம்ப் எனப்படும் திரும்பி வராத கொட்டடிக்கு அனுப்பப்பட்டனர்.

- ஆட்சிக்கு விரோதமாய்ப் பேசிய, எழுதிய, எழும்பிய மதத் தலைவர்கள் யாவரும் கொல்லப்பட்டனர்.

- தேவ ஊழியர்கள் நாஜிக்களால் அடித்து நொறுக்கப்பட்டபோது போலீஸ் கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

- கிறிஸ்தவ நிறுவனங்கள் நடத்தி வந்த பள்ளிகள், சமூக சேவை மையங்கள், இளைஞர் இயக்கங்கள், லேபர் யூனியன்கள்,மகளிர் மன்றங்கள், விளையாட்டு மையங்கள், அசோஸியேஷன்கள் யாவும் இழுத்து மூடப்பட்டன.

- கிறிஸ்தவப் பள்ளிகள், அனாதை ஆசிரமங்கள், ஆஸ்பத்திரிகள்,குரு மடங்கள், செமினரிகள், திருச்சபைக் கட்டிடங்கள், கோயில்கள் அனைத்திலிருந்தும் சிலுவைகள், சுரூபங்கள்,படங்கள், வசன போர்டுகள் என்று ஒரு அடையாளத்தையும் விட்டு வைக்காமல் எல்லா அசையாச் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு அவைகள் நாஜி உடைமைகளாயின. பள்ளிகளிலிருந்த ஆசிரியர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.

- அரசாங்க வேலையிலிருந்த அனைத்துக் கத்தோலிக்கர்களும் டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.

- கிறிஸ்தவப் பத்திரிக்கைகள் உளவு பார்க்கப்பட்டு சென்சார் செய்யப்பட்டு எல்லாப் பிரசுரங்களும் நிறுத்தப்பட்டன.

- ஆங்காங்கே நடந்து வந்த சபை ஆராதனைகளும் கூட்டங்களும் Storm Troopers என்ற நாஜி படைகளால் வலுக்கட்டாயமாக மூடப்பட்டன.

- அரசாங்க அனுமதியின்றி பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது.

- கிறிஸ்தவ மதம் சார்ந்த கட்சிகளும் அமைப்புக்களும் கலைக்கப்பட்டன.

- அனைத்து நாஜி ஊடகங்களிலும் கிறிஸ்தவம் பற்றியும் சபை நடவடிக்கைகள் பற்றியும் தவறான செய்திகள் பரப்பப்பட்டு அவைகள் பகிரங்கமாகத் தாக்கப்பட்டன.

குரங்கு கை பூமாலை

நாஜி ஜெர்மனி கையில் சபை பட்ட பாடு சொல்லி மாளாது.

அவர்களது கோட்பாடுகளின்படி சகலத்தையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் குறிப்பாக, ரோமன் கத்தோலிக்க சபையால் நடத்தப்படும் சமூகசேவை மையங்கள், பள்ளிகள், இளைஞர் குழுக்கள், லேபர் யூனியன்கள், கல்ச்சரல் சொஸைட்டிகள் யாவும் நாஜிக்களின் கீழ் கட்டாயமாய்க் கொண்டுவரப்பட்டது.

தங்கள் அரசாங்கத்தின் கீழ் வராமல் சுயாதீனமாய் செயல்படும் எதையும் நாஜிக்களோ அவர்களது கோட்பாடுகளோ ஏற்றுக் கொள்வதில்லை.

ஆகவே சபைகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர நாஜிக்கள் முழுத்தீவிரமாய் செயல்பட்டனர். கிறிஸ்தவத்தின் சுவடே இல்லாத ஜெர்மனியை உருவாக்க அவர்கள் நீண்டகால திட்டம் வகுத்து வைத்திருந்தனர்.

தீவிர கிறிஸ்தவ விரோதப் போக்குடைய கொள்கைப்பரப்பு அமைச்சர் ஜோசப் கோயபெல்ஸும் SS ராணுவத் தலைவன் ஹிம்லரும், ஹிட்லரின் நெருங்கிய ஆலோசகர்களில் ஒருவனாகிய மார்ட்டின் போர்மனும் சபைக்கும் ஊழியர்களுக்கும் விரோதமான போராட்டத்தைத் தங்கள் தலையாய கடமையாக சிரமேற்கொண்டு செயல்படுத்தத் தொடங்கியது மட்டுமல்லாமல்,

கிறிஸ்தவர்களுக்கு எதிரான பகையையும் கசப்பையும் நாட்டின் கடைசி குடிமகனுக்குள்ளும் புகுத்தும்படியான எல்லா முயற்சிகளையும் முழுமூச்சாகச் செய்து தங்கள் முயற்சியில் வெற்றியும் கண்டார்கள்.

ஹிட்லரும் ஏற்கனவே கிறிஸ்தவர்களுக்கு விரோதமான பகையையும் வன்மத்தையும் நெஞ்சு நிறைய வைத்திருந்ததால், தன் சகாக்களின் செயல்களுக்கு அவனது முழு ஆதரவும் இருந்தது.

இதன் விளைவு தான் 1940 ல் "டாச்சாவில்" கிறிஸ்தவ ஊழியர்களுக்கென்றே பிரத்யேகமாக அவன் கட்டிய concentration camp என்ற சாவுப்பட்டறை.

டாச்சாவிலுள்ள இந்தக் கொலைக்களத்தில் அடைக்கப்பட்ட 2720 பேரில் 2579 பேர் கத்தோலிக்கர்கள் என்றும் அதில் 400 பேர் குருவானவர்கள் என்றும் ஒரு புள்ளி விபரம் சொல்கிறது.

1939 ல் எல்லா கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டதோடு 1941 ல் எல்லா கிறிஸ்தவப் பத்திரிகைகளும் நிரந்தரமாக மூடப்பட்டன.

1941ல் ஜெர்மனிக்குக் கிழக்கே உள்ள நாடுகளைப் பிடிக்கும் முயற்சியில் தீவிரமாய் இறங்கியிருந்த ஹிட்லர்,ஜெர்மனிக்குள்ளும் இருந்த மிச்சமீதி கிறிஸ்தவர்களையும் வேட்டையாடுவதில் தீவிரமாய் இறங்கியிருந்தான்.

செமினரிகளும் குருமடங்களும் கான்வென்ட்டுகளும் குறிவைக்கப்பட்டு சபை கட்டிடங்கள், உடைமைகள் யாவையும் ஜப்தி செய்யப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டன.குறிப்பாக கத்தோலிக்க ஜெசுயிட் குருக்கள் தாக்கப்பட்டனர்.

போலந்து, ஹிட்லரின் ஆதிக்கத்தில் வந்ததும், அங்கும் கொடுமையான உபத்திரவம் கட்டவிழ்த்து விடப்பட்டது.படிப்படியாக நாஜிக்களின் திட்டங்கள் அமலாக்கப்பட்டு, கிறிஸ்தவத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, ஆலயங்களும் மடங்களும் மூடப்பட்டு ஊழியர்களும் பாதிரிமார்களும் கொலை செய்யப்பட்டனர்.

போலந்திலுள்ள concentration camp என்ற சாவுக்கிடங்கில் மட்டும் 1811 போலந்து ஊழியர்கள் கொல்லப்பட்டனர்.

அகண்ட ஜெர்மனி கனவில் பைத்தியம் பிடித்து அண்டை நாடுகளையெல்லாம் அடுத்தடுத்து ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஹிட்லர், அந்தந்த நாடுகளிலுள்ள ஆலயங்களையெல்லாம் தீக்கிரையாக்கிக் கொண்டே போனான்.

ஆஸ்திரியாவில் "ஓடிலோ க்ளோபோனிக்" என்ற ஹிட்லரின் அடிவருடி ஒருவன், அங்கிருந்த சபைகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கொளுத்தி அங்கிருந்த குருவானவர்களை எல்லாம் " டாச்சாவு" கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்புக்குக் கடத்தினான்.

அதுவே செக்கோஸ்லேவேக்கியாவிலும் தொடர்ந்தது.

7. "ஜோ" ஒருவேளை ஒதுக்கப் படாதிருந்தால்..

"ஜோ" என்ற ஜோசஃப் கோயபெல்ஸ்

போலியோவால் பாதிக்கப்பட்டுத் தன் கால்களை இழந்த "ஜோ" என்ற ஒரு சிறுவன்..

யாரும் அவனை சட்டை செய்யவோ கண்டு கொள்ளவோ இல்லை. ஒருநாள் யாரோ ஒருவர் அவனை sunday schoolக்கு கொண்டு சென்றார்.

ஆனால் அந்த டீச்சர் அவனை உதாசீனப்படுத்தியதோடு மற்ற பிள்ளைகளும் அவனைக் கேலி செய்தனர். அவன் நடக்க முடியாதவனாய் இருந்ததால், சிலர் அவனைப் பார்ப்பதையே தவிர்த்தனர்.

நாளாக ஆக இதையெல்லாம் பார்த்த ஜோவுக்கு திருச்சபையின் மேல் வெறுப்பும் கசப்பும் ஏற்பட, கடைசியாக இயேசு கிறிஸ்துவையும் கிறிஸ்தவர்களையும் முழுப்பகையாய் பகைக்க ஆரம்பித்தான் அவன்..

ஆனால் தன் வாழ்க்கையில் முன்னேறியே தீருவேன் என்ற வெறியோடு ஸ்கூலுக்குப் போன ஜோ, கொஞ்சம் கொஞ்சமாய் முன்னேறி, ஹெய்டெல்பெர்க் யுனிவர்சிட்டியின் டாக்டரேட் பட்டத்தோடு வெளியே வந்தான்.

ஒரு நாள் சார்லி சாப்ளின் மீசையோடு தோன்றிய மனிதன் ஒருவன் ஜோவின் தோளில் அன்போடு கை போட்டு,"ஜோசஃப், உன்னைப்பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன்..நீயும் நானும் கைகோர்ப்போம் வா..நாம் இருவரும் சேர்ந்து வாழ்க்கையில் நிறைய சாதிக்கலாம் வா.." என்று கூப்பிடவே,

அந்த மனிதன் கொடுத்த ஊக்கத்தில் உற்சாகமடைந்த அந்த "ஜோ" என்ற ஜோசப் கோயபெல்ஸ் தான் அந்த சார்லி சாப்ளின் மீசை வைத்த ஹிட்லர் என்ற ஃப்யூரருடன் (தலைவன்) கைகோர்த்து பின்னாளில் அவனது கொள்கை பரப்பு மந்திரியாகவும் வலது கரமாகவும் மாறினான்.

ஒரு வேளை அந்த சண்டே ஸ்கூல் டீச்சர் அவன் மேல் இரட்சகரின் அன்பை வெளிப்படுத்தி இரட்சிப்புக்குள் வழிநடத்தியிருந்தால் எப்படி இருந்திருக்கும் !

ஒரு வேளை சபை அவனை சரியான தருணத்தில் கர்த்தருக்காக ஆதாயப்படுத்தியிருக்குமேயானால், நாஜிக்களின் மந்திரியாகாமல் நசரேயனுக்கு ஊழியனாகியிருப்பான் ஜோசப் கோயபெல்ஸ்..

நமது அருகாமையிலுள்ள கண்டு கொள்ளப்படாத, அற்பமாய் எண்ணப்பட்டு ஆங்காங்கே அலைந்து திரியும் "ஜோ" க்கள் பற்றிய காரியம் என்ன ?

இனியாவது அவர்களை நேசித்து பராமரித்து இயேசுவுக்காக ஆதாயப்படுத்துவோமா?

8. நியூரெம்பர்க் சட்டமும் இங்கே வரப்போகும் சட்டங்களும்

நியூரெம்பர்க் சட்டம்

- யூதர்களுக்கும் சுத்த ஜெர்மானிய ஆரியர்களுக்கும் இடையேயான திருமண உறவுகள் செல்லாது. ஏற்கனவே அப்படித் திருமணம் செய்த ஜெர்மானியர்களும் யூதர்கள் என்றே கருதப்படுவர். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின் இத்தகைய கலப்புத் திருமணம் செய்பவர்கள் சட்டத்துக்குப் புறம்பானவர்களாகக் கருதப்படுவார்கள்.

- ஜெர்மானியப் பிரஜைகள் யாரும் யூதருடன் உடல் ரீதியான உறவு வைத்துக்கொள்வது தடை செய்யப்படுகிறது. அப்படிச் செய்கிறவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

- யூதர்கள் தங்கள் வீடுகளில் 45 வயதுக்குக் குறைவான ஜெர்மானியப் பெண்களை வீட்டு வேலைகளுக்குப் பணியமர்த்திக்கொள்வது தண்டனைக்குரியது.

- யூதர்கள் ஜெர்மானிய தேசியக்கொடியை ஏற்றுவது தடை செய்யப்படுகிறது.

- மேற்கண்டவற்றை மீறுபவர்களுக்கு ஓராண்டு சிறைத்தண்டனையோ, அபராதமோ, அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

- சுத்த ஜெர்மானியர் எனப்படுபவர் ஏந்த யூதருடனும் இரத்த உறவில் சம்பந்தம் கலவாத சுத்த ஆரியரின் முன்னோர் வழிவந்தவரும், ஜெர்மானிய தேசத்துக்காகவும் மக்களுக்காகவும் பாடுபடுபவருமான அவரே நாட்டின் குடியுரிமை பெற்றவராய்க் கருதப்படுவார்.

- முன்னோர் வழிவந்த உண்மையான சாட்சிப் பத்திரங்கள் சரிபார்க்கப்பட்ட பிறகே குடியுரிமை ஒருவருக்கு வழங்கப்படும்.

- ஜெர்மானியக் குடியுரிமை பெற்ற ஒருவரே நாட்டின் அரசியலில் பங்கெடுக்கத் தகுதியும் உரிமையும் உள்ளவராவார்.

- யூதன் ஒருவன் ஜெர்மானியக் குடிமகன் ஆக முடியாது.

இதுவரையுள்ள அவனது குடியுரிமை இச்சட்டத்துக்குப் பிறகு ரத்து செய்யப்படுகிறது. அவனுக்கு ஓட்டுரிமையோ, அரசியலில் பங்கெடுக்கும் வாய்ப்போ, பொதுத்துறையில் பணிபுரியும் உரிமையோ எதுவும் கிடையாது.

- ஏற்கனவே அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் டிசம்பர் 31, 1935 அன்று கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

- தன் முன்னோர்களில் மூன்று தலைமுறையினரை யூதராகக் கொண்டவர்கள் யூதராகக் கருதப்படுவார்கள்.

- ஜெர்மானியக் கலப்பினம் கொண்ட யூதரும் யூதராகவே கருதப்படுவர்.

குடிமைப் பணியாளர்களுக்கான (Civil Services) திருத்தப்பட்ட சட்டம் :

- நாட்டில் குடிமைப் பணிகளை (civil services) மேம்படுத்தும்படியாக, 1918க்குப் பிறகு (முதல் உலகப் போருக்குப் பின்) பணியில் அமர்ந்தவர்கள், போதுமான கல்வித்தகுதி பெறாதிருந்தால், மூன்று மாத ஊதியம் மட்டுமே தரப்பட்டு அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள்.

- ஆரிய வழி வராதவர்கள் யாராயிருப்பினும் அவர்கள் பதவிநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

- கம்யூனிஸ்ட் கட்சியையோ, யூனியன்களையோ அல்லது வேறு அந்நிய ஸ்தாபனங்களையோ சார்ந்த எல்லா ஊழியர்களும் டிஸ்மிஸ் செய்யப்படுகிறார்கள்.

- ஒருவர் ஆரிய முன்னோர்களின் வழிவந்தவரோ என்று சோதித்து அறியும் முழு உரிமையும் அதிகாரமும் ஜெர்மானிய உள்துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளையே சேரும்.

ஹிட்லர் யூத்துக்கான சட்டங்கள்

- ஜெர்மனியும் ஜெர்மானிய ஆளுகைக்குட்பட்ட எல்லா நாடுகள், மாநிலங்களிலுள்ள அனைத்து வாலிபர்களும் ஹிட்லர் யூத் என்னும் இணை இராணுவத்தில் இணைந்தாக வேண்டும்.

- விட்டிலும் பள்ளியிலும் மட்டுல்ல, ஹிட்லர் யூத் பாசறையிலும், ஜெர்மனியின் ஒவ்வொரு வாலிபர் முகாம்களிலும் வாலிபர்கள், டீன் ஏஜர்ஸ் யாவரும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் தேசபக்தியின் உணர்விலே தேசத்தைக் காக்கவும், தங்கள் சுத்த ஆரிய ஜெர்மானிய இனத்தைக் காக்கவும் கடுமையாகப் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

- அவர்களைப் பயிற்றுவிக்கும் முழுப்பொறுப்பும் தேசத் தலைவரான ஃப்யூரர் ஹிட்லரால் நியமிக்கப்படும் ஜெர்மன் தேச சோஷலிஸத் தொழிலாளர் கட்சியின் யூத் லீடரையே சார்ந்ததாகும். இவர் நாட்டின் தலைவரும் சான்ஸலருமான ஹிட்லரின் நேரடிப் பார்வையின் கீழ் செயல்படுவார்.

- ஜெர்மன் தேச சோஷலிஸத் தொழிலாளர் கட்சி ஒன்றே ஜெர்மனின் அரசுக் கட்சியாக செயல்படும். இதைத்தவிர அரசியல் கட்சி தொடங்கும் யாராயிருந்தாலும் அவர்கள் மூன்றாண்டு கடுங்காவல் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

இச்சட்டங்களைத் தழுவிய இந்தியச் சட்டங்களும் வரப்போகிறவைகளும்..

இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA & NRC - 2019)

- இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டமும், தேசியக் குடியுரிமைப் பதிவேடும், சட்டவிரோதமாய் பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும், ஆப்கானிஸ்தானிலிருமிருந்து இந்தியாவில் குடியேறிய முஸ்லிம்கள் அல்லாத, சிறுபான்மையினருக்குக் குடியுரிமை வழங்குவதாக அறிவித்தாலும், இது குறி வைப்பதோ சிறுபான்மையினரையே !

ஏற்கனவே இந்திய அரசமைப்புச் சட்டமே மாற்றி எழுதப்பட்டு, புதிய அரசியலமைப்பு வடிவின் 36 பக்கங்கள் வெளியிடப்பட்டு, அதிலே இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஓட்டுரிமை மறுக்கப்படும் என்று சமீபத்தில் Dharam Sanstha ஆட்கள் அறிவித்ததை நாடே அறியும்.

- வரும் நாட்களில் மத ரீதியாக மக்கள் வேறுபிரிக்கப்படுவர். இந்து சமுதாயத்திலும் கூட வர்ணாசிரம முறைமைப்படி இந்தப் பிரிவுகள் சட்டரீதியாக மாற்றியமைக்கப்படும்.

- பெரும்பான்மை மதத்தையும் இனத்தையும் சார்ந்தவர்கள் சிறுபான்மையினருடன் எந்த உறவும் வைத்துக்கொள்ளத் தடை செய்யப்படுவார்கள். ஏற்கனவே நாட்டின் பரவலான பல இடங்களில் ஜாதிவாரியான ஏற்றத்தாழ்வுகள் நூற்றாண்டு காலங்களாக இங்கே இருப்பது அறியப்பட்டதே..

- ஓட்டுரிமை சிறுபான்மையினரிடமிருந்து பறிக்கப்படும்.

- அரசியலிலும் அரசுப் பணிகளிலுமிருந்து சிறுபான்மையினர் வெளியேற்றப்படலாம்.

- ஏற்கனவே அரசுப்பணிகளில் இருக்கும் சிறுபான்மையினர் டிஸ்மிஸ் செய்யப்படலாம். கூடவே, அரசுப் பணிகளில் சிறுபான்மையினருக்கு இடமிருக்காது. ஏற்கனவே பட்டியலினத்தவரைப் பட்டியலினத்தில் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டுமா என்ற கேள்விகள் எழும்பிவிட்டது யாவரும் அறிந்ததே!

- ஏற்கனவே இரும்புக்கையுடன் ஆளுகை செய்யும் உள்துறை, சிபிஐ மற்றும் கலால்துறை, இராணுவம் மற்றும் காவல் துறைக்கு கூடுதலான அதிகாரம் கொடுத்து, இவையாவும் நாட்டின் ஒற்றைத் தலைமைக்கு மாத்திரமே கட்டுப்படும் நாட்கள் வரும்.

- கல்விக் கொள்கைகளில் ஏற்கனவே மாற்றம் கொண்டுவந்து விட்டவர்களால் பள்ளிகளிலும் கல்லூரி மற்றும் கல்வி நிலையங்கள் யாவற்றிலும் தங்கள் கொள்கைகள் கட்டாயமாயக் கல்வியாய்த் திணிக்கப்படும்.

- காங்கிரஸ் இல்லா இந்தியாவே எங்கள் குறிக்கோள் என்று வார்த்தைக்கு வார்த்தை இங்கே சொல்லப்படுவதும், எதிர்க்கட்சிகளை முடக்குவதும், ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களை குதிரைப் பேரத்தில் விலைபேசி வாங்கி ஆட்சிக் கவிழ்ப்பு செய்துகொண்டே போவதும், மடங்காத ஆம் ஆத்மி போன்ற கட்சி எம் எல் ஏ எம்பிக்கள் மேல் கலால் துறையையும் சிபிஐயையும் ஏவிவிட்டு, பொய்க்கேஸ் போட்டு சிறையில் தள்ளுவதும், எதிர்த்து நிற்கும் கட்சித் தலைவர்கள் பற்றி அவதூறு பரப்பப்படுவதும், வேறு கட்சிகள் ஆளும் மாநிலங்களில் கலவரம் ஏற்படுத்தி, சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டதென்று சொல்லி ஆட்சிக் கவிழ்ப்பு செய்வதும் சர்வசாதாரணமாய் நடக்கும் இந்நாட்கள், வரப்போகும் பயங்கரமான நாட்களுக்கு முன்னோட்டமே!

- காங்கிரஸின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான நேஷ்னல் ஹெரால்டு பத்திரிகை முடக்கப்பட்டு அதின் அலுவலகம் சீல் வைக்கப்பட்டு, எதிர்க்கட்சித் தலைவர் மீது விசாரணை மேல் விசாரணை நடத்தப்படுவது இங்கே முக்கியமாய்க் கவனிக்கப்படட்டும். இவைகள் யாவும் வேதனைகளுக்கு ஆரம்பம் மட்டுமல்ல, ரெட் அலர்ட் எச்சரிப்புக்கள்!

- ஹிட்லர் யூத்துக்கும், இங்கே ஆர் எஸ் எஸ்ஸில் இயங்கும் இளைஞர் படைக்கும் வித்தியாசம் உண்டோ? "அக்னி பாத்" திட்டம் என்ற பெயரில் 17 வயதிலிருந்தே இளைஞர்கள் இன்று குறுகிய காலத்துக்கென்று இராணுவத்தில் சேர்க்கப்பட்டாலும், 12, 13 வயதிலிருந்தே இனி இவர்கள் கட்டாயமாய் இராணுவப் பயிற்சியில் பணிபுரியக் நிர்ப்பந்திக்கப்படப்போகும் நாட்கள் தொலைவில் இல்லை.

- ஒரே நாடு, ஒரே கார்டு, ஒரே கட்சி, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கல்வி, ஒரே தேர்வு, ஒரே வரி, ஒரே சட்டம், ஒரே தலைவர் என்பவைகள் கட்டாயச் சட்டமாகும்.

- ஏற்கனவே, கிறிஸ்தவ ஆலயங்களில் நடத்தப்படும் திருமணங்கள் செல்லாது என்று மஹாராஷ்ட்ராவில் சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. உ.பி. போன்ற மாநிலங்களில் இது நடைமுறையில் இருக்கிறது. ஆகவே தங்கள் தங்கள் கிறிஸ்தவ சபை மற்றும் ஆலயங்களில் திருமணம் செய்துகொள்ளுபவர்கள், திருமணத்துக்கு முன்பே திருமணப் பதிவுத்துறை அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டியுள்ளது. அங்கே அவர்கள் கிறிஸ்தவத் திருமண முறைப்படி பதிவு செய்யப்பட வேண்டுமென்று சொல்ல வரும்போது, அங்கே அவர்களது மதமாற்றம் பற்றிய கேள்விகள் எழுப்பப்பட்டு, அதற்கான சாட்சி சான்றிதழ்கள், சாட்சிகள் என்று சகலமும் தோண்டப்பட்டு, ஞானஸ்நான சான்றிதழ், ஞானஸ்நானம் கொடுத்த போதகர் அவரது விபரங்கள் சகலமும் வெளிக்கொண்டுவரப்படும் இவைகள் யாவும் இன்றைய சபை கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டியவைகள்.

அந்த வகையில், திருமணம் நடத்தி வைக்கும் போதகர்களின் திருமண உரிமம் (லைசன்ஸ்) ரத்து செய்யப்படும். குறிப்பிட்ட ஒரு நாளுக்குப் பிறகு நடந்த திருமணங்கள், திருமணப் பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யப்படாத திருமணங்கள், அல்லது குறிப்பிட்ட ஒரு தேதிக்குப் பிறகு நடைபெறப்போகும் திருமணங்கள் ஆலயங்களில் நடந்தாலும், அவைகள் பதிவு அலுவலகத்தில் தகுந்த ஆவணங்களுடன் பதிவு செய்யப்படாவிட்டால், அவைகள் அரசாங்கத்தால் சட்டப்படி அங்கீகரிக்கப்படாதவைகளாய்க் கருதப்பட்டு, அதின் தாக்கங்கள் ஆதார் கார்டு போன்ற என்ற எல்லா அரசு ஆவணங்களிலும் எதிரொலிக்கும்.

● ஜெர்மனியிலுள்ள யூதர்கள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் "J" என்ற எழுத்து பொறிக்கப்பட்ட அட்டையைத் தங்கள் சட்டைகளில் குத்திக்கொண்டு, அதைத் தங்கள் அடையாளமாய்ச் சுமந்து சென்றது போலவே, இந்திய சிறுபான்மையினருக்கும் நடக்க எல்லா வாய்ப்பும் இங்கே பிரகாசமாகவே காணப்படுகிறது. யூதர்களின் பாஸ்போர்ட்டில் "J" முத்திரை குத்தப்பட்டது போலவே, இங்குள்ள சிறுபான்மையினரின் எல்லா அரசு ஆவணங்களிலும் தனிப்பட்ட அடையாளமொன்று குத்தப்படும். சிறுபான்மையினரின் குழந்தைகளுக்கும் மாணவர்களுக்கும் கூட அவர்களது பள்ளிகளிலும், கல்லூரிகளும் இப்படியே செய்யப்படும். பெரியவர்களுக்கு அலுவலக அடையாள அட்டைகளில் முத்திரை குத்தப்படும்.

● திடீரென்று ஒரே இரவில் அமலுக்கு வந்த மிஸா எமர்ஜன்ஸி போலவும், GST வரிச்சட்டம் போலவும், பணமதிப்பிழப்பு போலவும் இப்படிப்பட்ட சட்டங்கள் ஒரே நாளில் அமலுக்கு வரப்போவது ஆச்சரியமான ஒன்று அல்ல. இது, சுதந்திரம் அடைந்த ஒரே நாளில் பாகிஸ்தானிலுள்ள இந்துக்கள் தங்கள் வீடுகள், நிலபுலன்கள், வணிக வியாபாரங்கள் யாவற்றையும் விட்டுவிட்டு இந்தியாவுக்குள் வந்து சேர நிர்ப்பந்திக்கப்பட்டது போலவும், இங்கிருந்தவர்கள் அங்கே கொண்டு தள்ளப்பட்டது போலவும், ஒரே இரவில் புழக்கத்திலிருந்த ரூபாய் நோட்டுகள் செல்லாமற்போனது போலவும், ஒரே இரவில் எல்லாப் பொருட்களுக்குமான வரி 28% என்று சொல்லப்பட்டு, ஒவ்வொரு இந்தியன் தலையிலும் சுமத்தப்பட்டது போலவும் திடீரென்று சிறுபான்மையினர் தலையின் மேல் இடியாய் வந்து இறங்கும்.

● ஆனால் இவைகள் எல்லாவற்றுக்கும் மத்தியில் ஒரே ஒரு ஆறுதலான விஷயம் ஒன்று உண்டானால், அது, இந்த ஆட்டம் நிரந்தரமானது அல்லவே அல்ல என்பதுவும், இது ஒரு சில வருடங்கள் மட்டுமே நீடிக்கும் என்பதும் மட்டுமே! ஹிட்லர் ஒரு ஆட்டம் ஆடி ஓய்ந்தது போல இங்கும் ஒரு இரத்தக் காட்டேரியின் காளியாட்டம் காத்திருக்கிறது. அது ஆடி அடங்கும்.

ஹிட்லர் ஆட்டத்தின் வரலாற்றுப் பக்கங்கள் இரத்தக்கறையேறிப் போயிருப்பது போலவே இவர்களது காவிக் காலமும் வரலாற்றில் கருப்புக் காலங்களாய் ஏறி நிற்கும்!

9. ஹிட்லர் யூத்

" சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்..பரலோக இராஜ்யம் அவர்களுடையது.." என்றார் இயேசு.

இதையே தனக்கு சாதக வா`்களாக மாற்றிக்கொண்டான் ஹிட்லர்..

"சிறுபிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்..ஜெர்மனி அவர்களுடையது..அவர்களைக் கொண்டு ஜெர்மனியின் தலைவிதியையே மாற்றிவிடுவேன்.." என்று சவால் விட்டு,

10 வயது முதல் 14 வயது சிறுவர்களைக்கூட விடாமல், பெற்றோர்களை விட்டு அவர்களை நிரந்தரமாய்ப் பிரித்து, அவர்களைக் கொண்டே "சில்ரன் ஆர்மி" மற்றும் "ஹிட்லர் யூத்" என்ற படைகளை ஆரம்பித்து வெற்றிகரமாய் நடத்தி, இரண்டாம் உலகப்போரில் பெர்லினில் அவர்களையே பாதுகாப்பு அரணாக நிறுத்தினான் ஹிட்லர்..

1945..பெர்லின்..ஜெர்மனி..

இரண்டாம் உலகப்போரின் இறுதி நாட்கள்..

ரஷ்யப்படை பெர்லினை சுற்றி வளைத்திருந்தது..எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற சூழ்நிலை..

பெர்லினின் மெட்ரோ ரயில் நிலையம் ஒன்றின் டிக்கட் கவுண்ட்டரில் வேலை செய்யும் "மார்க்ரெட் கோஹன்", தன் கவுண்ட்டரை இருந்தது இருந்தபடியே போட்டுவிட்டு, 10 மைல் தூரத்திலிருந்த தனது லியூபர் என்ற கிராமத்துக்கு கால் நடையாக உயிர்தப்ப ஓடுகிறாள்..

வழியெங்கும் தீப்பிடித்து எரியும் மிலிட்டரி வாகன்கள், ட்ரக்குகள், தடைச்சுவர்கள்..

அவைகளுக்கு நடுவே ஹிட்லரின் SS படையினால் சுடப்பட்டு இறந்து கிடக்கும் ஒரு பையன்.. ரொம்பப் போனால் 14 வயதிருக்கும்..தான் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிலிட்டரி போஸ்ட்டை விட்டு விலகிப்போக முயற்சித்ததற்காக அவனுக்குத் தன் தலைவன் ஹிட்லரின் படையாலேயே கிடைத்த பரிசு அது !

கோஹன் பார்த்த அந்த சிறுவன், "ஹிட்லர் யூத் " என்ற டீன் ஏஜர்ஸ் படையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சிறுவர்களில் ஒருவன்.

1933 மே மாதம் ஆட்சிக்கு வந்ததும் பெர்லினில் யூத் Rally ஒன்றில் ஹிட்லர் பேசிய பேச்சின் தீப்பொறிகளில் சில..

"எதைக் கண்டும் கலங்காமல், சகலத்தையும் தன் காலுக்குக் கீழே நசுக்கிப் பொசுக்கும், நஞ்சும் கொடுமையும் கலந்த, சூடேற்றப்பட்ட இள இரத்தத்தால் நிறைந்த வாலிபப்படை ஒன்று எனக்குத் தேவை!

அது எதையும் தாங்க வேண்டும் ! எதையும் செய்ய வேண்டும் !

நோவு நொடி, ஈவு இரக்கம் என்ற சொல்லுக்கே இடமில்லாத, கண்களில் வெறி தெறிக்கும் காட்டுத்தனமான படை அது !

இளைஞர்களைப் பயிற்றுவிக்கப்போகும் எனது பயிற்சி முறை வார்த்தையால் விவரிக்க முடியாது..சோர்வு, சோம்பல் என்ற வார்த்தையே அங்கு கேட்கப்படக்கூடாது!

என்னுடைய பயிற்சிப்பாசறையில் பயிற்றுவிக்கப்படும் வாலிபர்களையும் சிறுவர்களையும் கண்டு உலகமே நடுங்க வேண்டும்!

அதின் மூலம் நான் உருவாக்கப்போவது சுத்த இரத்தம் பாய்ந்த ஒரு புதிய தலைமுறை.. ஒரு புதிய உலகம் !

பொறுத்திருந்து பார் !!!

ஹிட்லர் ஜுரம் பிடித்த, அவனுக்காக எதையும் செய்யத் துணிந்து, அவன் சொல்லைத் தட்டாத இந்த சிறுவர்கள்,நாஜிக்கள் ஆட்சியைப் பிடிப்பதற்கு சில ஆண்டுகள் முன்பாகப் பிறந்தவர்கள்..

பிறந்ததுமே, தாய்ப்பாலோடு ஹிட்லரிஸமும் கலந்து புகட்டப்பட்டு வளர்ந்த இவர்கள், இரண்டாம் உலகப்போரின் இறுதி நாட்களில் தங்கள் இறுதிப்போர் புரிந்தவர்கள்..

ஏன் இந்தப் பையன்களும் டீன் ஏஜர்களும் இந்த சின்ன வயதில் துப்பாக்கி ஏந்த வேண்டும் ?

"ஹிட்லர் யூத்" சிறுவர் படையில் சேர்ந்து தங்களையே இந்த அளவுக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன மெஸ்மரிஸம் இதில் இருக்கிறது ? என்ற கேள்விக்கு "அல்ஃபோன்ஸ் ஹெக்" என்ற 16 வயது பையன் பதில் சொல்கிறான்..

"எங்களுக்கு அளிக்கப்பட்ட போதனையும் பயிற்சியும், எங்கள் நாடி நரம்புகளில் விஷமாய் ஏற்றப்பட்ட உபதேசமும் அப்படி !

எங்கள் தலைமுறையில் 1920, 30களில் பிறந்த எங்களுக்கு, நாங்கள் பிறந்ததே மிலிட்டரி சேவை செய்யவே என்பது தான் திரும்பத் திரும்ப சொல்லித்தரப்பட்டது.

பெரியவர்களின் கடமையைப் போலவே நாங்களும் தேசத்துக்கு கடமையாற்ற முழுமூச்சோடு இருந்தோம்.

எங்கள் தேசப்பற்றை, தேசத்துக்காக இரத்தம் சிந்தி உயிர் கொடுத்து நிரூபிப்பதிலேயே முனைந்து நின்றோம்.."

இங்கே கேட்கப்படும் இதன் எதிரொலி..

ஹிட்லர் காலத்துக்கும் நமது நாட்டின் தற்காலத்துக்கும், அவனது கொள்கைகள், கோட்பாடுகள், தத்துவங்கள், தொலைநோக்குத் திட்டங்கள், செயல்முறைகள், படைமுயற்சிகள் யாவற்றுக்கும், இந்தியாவில் இன்று இருந்து வரும் சூழலுக்கும் நிறையவே ஒற்றுமைகளும் ஒப்புமைகளும் இருப்பதே இந்தத் தொடரின் முக்கியத்துவம்..பதிவின் நோக்கம்.

எதிரணிப் பாசறையின் ஒவ்வொரு இராணுவ ரகசியத்தையும் தீர்க்கமாய் தரிசனமாய் அறிவித்து, இஸ்ரவேல் ராஜாவை எச்சரித்துத் தப்புவித்துக் கொண்டிருந்தான் எலிசா!

"அவனுடைய தந்திரங்கள் நாம் அறியாதவைகள் அல்லவே.." என்று பவுல் சொன்னதின் காரணம், பவுல் சத்துருவையும் அவனது நுணுக்கங்கள் யாவையும் நன்றாக அறிந்து வைத்திருந்ததே!

வேதம் சொல்கிறது..

" சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்து கொள்.." (எரே 6:18) என்று..

இன்று சபைக்கு விரோதமான இயக்கங்களின் திரைமறைவு காரியங்களை சபை அறிந்தே ஆக வேண்டும் என்பதால் RSS ன் பின்னணி, பலம்,
செயல்பாடுகள், பயிற்சிகள்,கிறிஸ்தவர்களுக்கு விரோதமான செயல் திட்டங்கள் ஒவ்வொன்றையும் கொஞ்சமாவது அலசி, ஆராய்ந்து, அறிவித்து சபையைத் தட்டி எழுப்புவதே நம் ஆதங்கம்!

சங் பரிவார்

வெகு நிச்சயமாகவே அது ஒரு மறுபிறப்பு. மகாத்மா காந்தியின் கொலைச் சம்பவத்தை அடுத்து ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டபோது, இதோடு இந்த இயக்கம் முடிந்தது என்று பேசியவர்கள் அதிகம்.

தடை நீக்கப்பட்ட பிறகும் கூட RSS மீதான சந்தேகப் பார்வை பெரும்பாலும் விலகாமலே இருந்தது. ஓர் அற்புதம் நிகழ்ந்தாலொழிய மறுபடியும் பழைய துடிப்புடன் செயல்படுவது சிரமம் என்று பேசப்பட்டது.

அப்படிப்பட்ட அற்புதம் எதுவும் நிகழவில்லை.
ஆனால் ஆர்.எஸ்.எஸ் திரும்பவும் வளரத் தொடங்கியது.

செயல்,செயல், செயல் என்று தேசம் முழுவதும் அவர்கள் களப்பணியில் முழுமூச்சுடன் அசுரவீச்சில் இறங்கினார்கள். திரும்பவும் ஷாக்காக்கள் இயங்கத் தொடங்கின. புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டார்கள்.

கொள்கைகள், கோஷங்கள் எதிலும் மாற்றமில்லை. செயல்பாட்டில் எந்த மாறுதலும் இல்லை. அணுகுமுறையில், வெளிப்பாடுகளில் வித்தியாசமில்லை..

அதே ஆர்.எஸ்.எஸ்..
அதே ஹிந்து தேசிய இலக்கு..அதே களப்பணி..

ஆர் எஸ் எஸ்ஸின் ஆரம்ப கால ஸ்தாபகர்களில் ஒருவரும் அதின் இரண்டாவது தலைவருமான கோல்வாக்கர் ஒரு முறை, "சங்கம் பரவும்,பெரிய அளவில் பரவும்.. என்றாவது ஒரு நாள் இந்தியாவிலுள்ள இந்துக்களின் எண்ணிக்கைக்கும் ஆர் எஸ் எஸ்ஸின் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கும் வித்தியாசம் இல்லாது போகும் என்பது என் நம்பிக்கை" என்று சொன்னார்.

அதற்கான முயற்சிகளின் தொடக்கமும் கூடவே தொடங்கப்பட்டது.

ஆர் எஸ் எஸ்ஸின் தோற்றம் முதலே பத்து பன்னிரண்டு வயது சிறுவர்களை இயக்கத்தில் சேர்ப்பதே அவர்களது நோக்கம். அதின் ஸ்தாபகரும் தலைவருமான டாக்டர் ஹெட்கேவார் இதில் அதிக ஆர்வம் செலுத்தி வந்தார்.

ஹிந்து தேசிய உணர்வை விதைப்பதற்கு அதைக் காட்டிலும் சரியான பருவம் வேறில்லை என்பது அவர் கருத்து. ஆர் எஸ் எஸ்ஸின் அடையாளங்களான உடற்பயிற்சியுடன் கூடிய சித்தாந்த வகுப்புகள், தேசபக்திப் பாடல்கள் போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டன.

அவர்களது இயக்கத்தின் மறுஎழுச்சிக்குப் பின்,
புதிய பள்ளிக்கூடங்களைத் திறப்பது அவர்களது அடுத்த திட்டமாயிருந்தது.

அப்போது தான் சரஸ்வதி சிசு மந்திர் பிறந்தது.
உ.பி.யில் தொடங்கப்பட்ட இந்தக் கல்வி இயக்கம் வெகு விரைவில் தேச முழுவதற்கும் பரவியது.

ஆர் எஸ் எஸ்ஸின் பிரச்சாரக்குகள் மூலம், சாத்தியமுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் இதனை விரிவாக்கினர்கள்.

ஒன்றாம் வகுப்பு,
முடிந்தால் அதற்கு முந்தைய முன் பள்ளிப் பயிற்சிகளில் தொடங்கி, அடிப்படைக்கல்வி, ஆரம்பக்கல்வி அளிப்பதில் இது மிகத்தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தது.

சந்தடியே இல்லாமல் இப்படி பல நூற்றுக்கணக்கான சிசு மந்திர்கள் உருவாகத் தொடங்கின.

பெரும்பாலும் பின் தங்கிய, கிராமப்புறப் பகுதிகளில் இதனைத் தொடங்குவதிலேயே பிரச்சாரக்குகள் ஆர்வம் செலுத்தினார்கள்.

இன்று, தேசமெங்கும் சுமார் இருபதாயிரம் பள்ளிகள்,ஒரு இலட்சம் ஆசிரியர்கள், இருபத்தி ஐந்து இலட்சம் மாணவர்கள்..

மதம் கலந்த தேசிய உணர்வு, இந்தப் பள்ளிகளில் சிறுவர்களுக்கு ஊட்டப்படுகிறது. பிரர்த்தனைகள், சமஸ்கிருத ஸ்லோகங்கள் அவசியம் உண்டு.

பண்டிகைகள், திருவிழாக்கள் அவற்றின் முழு முக்கியத்துவத்துடன் கொண்டாட வலியுறுத்தப்படுகிறது. பாரம்பரிய விளையாட்டுகள் இந்தியக் கலைகளுடனான எளிய அறிமுகம் அவசியம் தரப்படும்.

சிறுவர் சிறுமிகள் வளர வளர, கூடவே அந்நிய தேச அச்சுறுத்தல்களாகப் பார்க்கப்படும் கிறிஸ்தவ மிஷினரி முயற்சிகள் மதமாற்றங்களாகவும், தேசத்துக்கும் தங்கள் மதத்துக்கும் கலாச்சாரத்துக்கும் விரோதமான சக்திகளாகவும் முழுத்தீவிரத்துடன் பகைக்கப்பட்டு எதிர்க்கப்பட வேண்டிய சக்திகளாகவும் கருதப்பட வேண்டியவர்கள் என்ற விஷ விதையும் பிஞ்சு உள்ளங்களில் ஆழமாகவே ஊன்றப்படுகிறது இந்த சிசு மந்திர்களிலும் சிறுவர் ஷாக்காக்களிலும்..

10. RSS என்னும் எறும்பினிடத்தில் போய்க் கற்றுக்கொள் !

"என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள்." என்றார் இயேசு.

"என்னிடத்தில் கண்டும் கேட்டும் அடைந்தும் கற்றும் கொண்டு என்னைப் போலாகுங்கள்.." என்றார் பவுல்.

"இவர்களிடத்திலிருந்தும் வேதத்திலிருந்தும் கற்றுக் கொள்ளாத பட்சத்தில், சுறுசுறுப்பை பிசாசிடத்தில் போய்க் கற்றுக் கொள்ளுங்கள்.." என்று தம் மாணவர்களுக்குச் சொல்லுவார் வில்லியம் பூத்.

நாம் சொல்லுகிறோம்..
"சோம்பேறி (சபையே), (RSS என்ற) எறும்பினிடத்தில்
போய்,அதின் வழிகளைப் பார்த்து..கற்றுக் கொள்." (நீதி 6:6-11)

சர்வ வல்ல தேவனுக்கும், அவருக்குள் சகல அதிகாரமும் பெற்ற சபைக்கும் முன்பாக ஆர் எஸ் எஸ் ஒரு எறும்பு தான். அவர்கள் சாரை சாரையாய் புற்றீசல் போல எண்ணிக்கையில் பெருகிக்கொண்டே போனாலும், சகலவித பெலத்தினால் நிறைந்திருந்தாலும் தேவனுக்கும் சபைக்கும் முன்பாக அவர்கள் வெறும் எறும்பு தானே ஒழிய வேறல்ல.

ஆனால் வெட்கம்! இந்த எறும்பினிடத்தில் போய் கற்றுக் கொள்ளவேண்டிய நிச்சயமான அநேக பாடங்கள் இன்று சபைக்கு உண்டு.

இயேசுவிடத்திலிருந்தும் அவரது ஊழியர்களிடத்திலிருந்தும் கற்றுக்கொள்ளாத இன்றைய சபை, எறும்பு போன்ற இந்த சிலுவைப் பகைஞரிடமிருந்தாவது கற்றுக் கொள்ளட்டும்!

இதோ நீளும் பட்டியல் !

1.கொள்கையும் கோட்பாடும்

அவர்களுக்கென்று ஒரு கொள்கையும் சித்தாந்தமும், வாழ்க்கையில் ஒரு நோக்கமும் உண்டு.

"நான் ஏன் இரட்சிக்கப்பட்டேன்? இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறேன்? எதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்டேன்? எங்கே நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன்? நான் அடைய வேண்டிய உண்மையான இலக்கு என்ன ? தேவனுக்குள் நான் யார் ? நித்தியத்துக்காக இங்கு என்ன செய்கிறேன்? சபையின் சராசரி விசுவாசியிடம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் உண்டா ?

ஆர் எஸ் எஸ் என்ற இந்த எறும்பினிடத்தில் போய் விசுவாசிகள் கற்றுக் கொள்ளட்டும்!

2.தேசப்பற்று :

அவர்களது இயக்கமும் அதில் உறுப்பினரான ஒவ்வொரு தனிமனிதனும் இயங்கும் ஒரே ஒரு அச்சு உண்டானால், அது அவர்களது தேசப்பற்று, மதப்பற்று, கலாச்சாரம், பாரம்பரியம் என்ற ஒன்றே ஒன்று தான்! சுருக்கமாகச் சொன்னால் பாரத மாதா!

வெறும் பூமி, மண், எல்கை, நூற்றுக்கணக்கான வருடங்களின் பாரம்பரியக் கலாச்சாரம். இவைகளுக்காகவும், இவைகளைக் காப்பதற்காகவும், ஒவ்வொரு தலைமுறைக்கும் அதைக் கடத்தி, முன் கொண்டு செல்வதற்காகவுமே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கும் ஸ்வயம் சேவக்குகள். (அதாவது dedicated volunteers).

அவர்கள் மண்ணாகப் பார்க்கும் இந்தத் தேசத்தை, ஆத்துமாக்கள் நிறைந்த பூமியாகக் கண்டு, இந்த தேசத்துக்காகப் பாரப்படுவோர் எத்தனை பேர் ?

கிறிஸ்தவம் என்ற மதப்பற்று அல்ல..சர்வ வல்ல தேவனை ஆசை ஆசையாய் வாஞ்சையும் நேசமுமாய் நேசிப்போர் யார் யார் ?

தேசத்தின் கலாச்சாரம் அல்ல..கர்த்தருக்காகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கென்று நியமமும் செயல்பாடுகளும் உண்டு. பெந்தேகோஸ்தே அல்லது ஏதோ ஒரு பாரம்பரியக் கிறிஸ்தவக் கலாச்சாரம் அல்ல..வேறு பிரிக்கப்பட்டவர்களின் வழியில், இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நசரேய விரதத்தோடு நிமிர்ந்து நிற்போர் எத்தனை பேர் ?

3. செயல்பாடுகள் :

அதிகாலை ஷாக்காக்கள்

வெயிலோ மழையோ குளிரோ, எந்தத் தடையுமின்றி ஒழுங்காக ஒழுக்கத்தோடு ஒவ்வொரு நாளும் கூடுகிறது இவர்களது அதிகாலை "ஷாக்காக்கள்" என்று சொல்லப்படும் கணக்கிலடங்காக் கிளைகள்..

இங்கே ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கூடும் சபைகள் எத்தனை? அன்றாடம் அதிகாலையில் எழும்பி விசுவாசிகள் கூடி ஜெபிப்பதை இந்த எறும்பினிடத்தில் நாம் கற்றுக் கொள்ள மாட்டோமோ ?

4. கொடி வணக்கம்/ உறுதிமொழி :

ஒவ்வொரு நாளும் காவிக்கொடியை நாட்டி அதற்கு முன் உறுதிமொழி எடுப்பவர்கள் இவர்கள்..

நமக்கு ஒரு சிலுவைக் கொடி உண்டே? ஒவ்வொரு நாளும் சிலுவையின் முன் சிரம் தாழ்த்தி மண்டியிட்டு நமக்காக இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்த இரட்சகருக்கு முன்பாக, கல்வாரி பலிபீடத்தில் நம்மை அர்ப்பணித்து, பரிசுத்த வாழ்க்கைக்கான உறுதி மொழி எடுப்பது நமது அன்றாடப் பழக்கமாகாதோ ?

5. பஜனை, பாடல்கள் :

யார் தங்களைக் கவனிக்கிறார்கள், யார் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற கூச்சமோ வெட்க உணர்வோ கவலையோ சற்றுமின்றி, எந்தத் திறந்த வெளியிலும் பேருந்து, ரயில்களிலும் ஜால்ரா அடித்துப்பாடி பஜனை செய்பவர்கள் இவர்கள்!

நமது ஆராதனைகள் ஆவியிலும் உண்மையிலும் நிறைந்து தேவனை மாத்திரம் மகிமைப்படுத்தி, அவரண்டை நம்மை அன்றாடம் கிட்டி சேர்க்கிறதா அல்லது நமது குஷிக்காகவும், குதூகலத்துக்காகவும், தாலந்துகளை வெளிப்படுத்துவதற்காகவுமே ஆராதனை நடத்துகிறோமா?

சினிமா பாடல்களை ரசித்துக் கேட்டுப் பாடி 'கொல வெறி' மெட்டுப்போட்டு கர்த்தருக்காகப் பாடுகிறேன் என்கிற கூட்டங்கள், ஆத்மார்த்தமாக பஜனை செய்யும் இந்த எறும்பினிடத்தில் போய் கற்றுக் கொள்ளட்டும்!

6. அன்றாட உடற்பயிற்சி :

கட்டுக்கோப்பான அனுதின உடற்பயிற்சியும் சிலம்புப் பயிற்சிகளும் அங்கு உண்டு.

சரீரம் தேவனுடைய ஆலயம். அதைப் பேணிக்காப்பது நமது கடமை. "அதெல்லாம் கர்த்தர் பார்த்துக் கொள்வார்.." என்று அளவுக்கு மிஞ்சி சாப்பிட்டு, அளவுக்கு மிஞ்சித் தூங்கி, சரீரத்தை சரிவர பராமரிக்காமல், "ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியைக் கொடுக்கிறார்" (1 கொரி 5:38) என்று விதண்டாவாதம் பேசி தங்கள் தொந்தி வளர்க்கும் மிஞ்சின நீதிமான்கள் இந்த எறும்புகளிடத்தில் போய் கற்றுக் கொள்ளட்டும்!

7. யோகா மற்றும் மெடிட்டேஷன் என்ற தியானம் :

யோகா சரியா தவறா என்பது ஒரு புறமிருக்கட்டும்.

அது வேதத்துக்குப் புறம்பானது என்று வாதிடும் நம்மிடம், வேத தியானம் என்ற தினசரி தியானப் பயிற்சி உண்டா அல்லது நாம் வெறும் காலண்டர் மற்றும் வாட்ஸ்அப் வசனக் கிறிஸ்தவர்களா ?

8. Disciplined DressCode / நடை உடை

அவர்களுக்கென்று ஒரு சீருடையும், உடை உடுத்துவதில் "இப்படித்தான் உடுத்த வேண்டும்" என்ற ஒழுங்கும் நியதியும் உண்டு.

பெப்ரவரி 14 அன்று உலகெங்கும் கொண்டாடப்படும் Valentine day, நமது கலாச்சாரத்துக்கும் ஒழுக்கத்துக்கும் விரோதமானது என்றும், ஓரினச்சேர்க்கைக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கக் கூடாது என்றும் குரல் கொடுப்பவர்கள் அவர்கள்.

மேற்கத்திய ஆடை கலாச்சாரத்துக்கு மாறி ஊறிப்போன வெட்கம் கெட்ட இன்றைய கிறிஸ்தவம், RSS என்ற எறும்பினிடத்தில் போய் உடை உடுத்திக் கொள்ளக் கற்றுக் கொள்ளட்டும்.

ஓரினச்சேர்க்கைக்கு அங்கீகாரம் என்ன, அதற்கு மறைமுக ஆதரவு தரும் சபைகள், ஒழுக்கத்தையும் ஒழுங்கையும் தேவனுடைய வசனத்திலும் நீதி மொழிகளிலுமிருந்தும் கற்றுக்கொள்ளாத பட்சத்தில் அவிசுவாசிகள் என்று சாதாரணமாக அழைக்கப்படும் இந்த உயர்ந்த சன்மார்க்க நெறியாளர்களிடம் போய் கற்றுக் கொள்ளட்டும் !

09. சிறுவர் படை :

'Catch them young' என்பதே அவர்களது சித்தாந்தம். 10 வயதிலிருந்தே தங்கள் கொள்கை நெறிகளையும் பக்தியையும் பாலாய் பாடமாய் ஊட்டி வளர்த்து எண்ணிக்கையிலடங்காத மிகப்பெரிய சிறுவர் படையே வைத்திருப்பவர்கள் இவர்கள்.

சபையானது 'ஜோசஃப் கோயபெல்ஸ்' போன்ற அங்கஹீனமான சிறுவர்களை உதாசீனப்படுத்தி நிராகரித்ததாலேயே, பின்னாட்களில் ஹிட்லரின் வலதுகரமாகி கிறிஸ்தவர்களை அழிக்கும் மூல கருவியானான் கோயபெல்ஸ்.

சிறுவர் ஊழியங்களும் VBS களும் சபைகளில் நடந்தாலும், follow up என்பது வருடம் முழுவதும் நடக்க வேண்டியதல்லவா ?

அவர்களிடம் இருப்பது போன்ற மாபெரும் சிறுவர் படையான 'மகனாயீம் ' நம்மிடம் உண்டோ ?

10. வாலிபர்களின் பாசறை :

தலைமைக்குத் தலை வணங்கி எதையும் செய்யத் துணிந்து நிற்கும் நாடு தழுவிய வாலிபப் பெரும்படையே அவர்களது மகா சக்தி.

சபையின் வாலிபர்களின் இன்றைய நிலை என்ன? அவர்களிடம் தரிசனம் உண்டா? தாங்கள் போகும் பாதையை அவர்கள் அறிவார்களா?

அவர்களது potential எங்கே செலவாகிறது ? அவர்களது நேரமும் தாலந்தும் அறிவும் பெலனும் பணமும் சக்தியும் எங்கே விரயமாகிறது?

காலத்தின் தீவிரத்தை அறியுமோ இன்றைய கிறிஸ்தவ வாலிப சமுதாயம்?

11. யுத்த ஆயுதங்கள் :

கம்பு, கத்தி, திரிசூலம், வேல், வாள் முதல் துப்பாக்கி, வெடிகுண்டு வரை மாம்சத்தின் போராயுதங்கள் யாவும் ஒன்றுவிடாமல் இவர்களிடம் உண்டு.

நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகள் அல்லவோ?

நமது யுத்த ஆயுதங்களாகிய ஜெபமும் வசனமும் அபிஷேகமும் வல்லமையும் மழுங்கலாய்ப் போனதோ? நமது இருப்பு ஆயுதங்கள் மழுங்கலாயிருக்க, நாம் அவைகளைத் தீட்டாமல் , வேறு எந்தெந்த மாம்சீக முயற்சிகளிலோ அதிக பெலத்தைப் பிரயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோமோ? (பிரசங்கி 10:10)

நமது வாலவயதின் குமாரர் பெலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாக இல்லையோ? நமது கூர்மையான பட்டயங்களும், துலக்கப்பட்ட அம்புகளும், புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்திரங்களுமான ஜெயவீரர்கள், ஜெப வீரர்கள் எங்கே?

ஒலிமுகவாசலில் சத்துருக்களோடு நேருக்கு நேர் எதிர்கொண்டு மோதும் 'ஆவிக்குரிய யுத்தம்' என்னும் மர்மக்கலையை சபை இன்று மறந்து போனதோ ?

சபையே உன் யுத்த வீரர்களை எழுப்ப மாட்டாயோ ? யுத்த ஆயுதங்களை சபைக்கு உண்டுபண்ணித் தரும் ஆவிக்குரிய கொல்லர்கள் இங்கே இல்லையோ ? உன் ஆயுதங்களைத் தீட்டிக் கூர்மையாக்க சபையே, நீ இந்தப் பெலிஸ்தரிடம் தான் போக வேண்டுமோ? (1 சாமு 13:19-22) (நீ பாடம் படிக்க இந்த எறும்பினிடத்தில் தான் போக வேண்டிய நிர்ப்பந்தமோ ?)

12. ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங் :

தேசத்துக்காகத் தன்னைத் தானே அர்ப்பணித்து, தன்னையே ஆர்வத்தோடு தந்து, சுயமாக முன்வந்து சேவை செய்பவர்களின் சங்கம் என்பதே இந்தப் பெயரின் அர்த்தம்.

பெயரின்படியே அங்கு எல்லாமே voluntary தான். யாரும் யாரையும் 'இதைச் செய்' என்று கட்டாயப்படுத்துவதில்லை. நிர்ப்பந்தம் எதுவுமில்லை.

என் தாய் நாட்டுக்காக நான் செய்யாவிட்டால் வேறு யார் செய்வது என்ற voluntary commitment ஒன்று தான் இந்த இயக்கம் முழுவதையும் கடந்த 90 வருடங்களாக இயக்கிவரும் மாபெரும் உந்துசக்தி.

எல்லாமே தானாக முன்வந்து செய்யப்படுவது!

தாய் மண்ணுக்காகவும், இயக்கத்துக்காகவும் கொள்கைக்காகவும் தானாகவே முன்வந்து தன்னையே அர்ப்பணித்து, எந்த எல்லைக்கும் செல்ல அந்த voluntary spirit ஒருவனை உந்தித் தள்ளுமானால், நமக்காக, நமது நித்திய மீட்புக்காக, பிசாசின் கைகளிலிருந்தும் நரக வாசலிலிருந்தும் தப்புவிக்க, தன்னையே விலைக்கிரயமாய் ஊற்றிக் கொடுத்த கிறிஸ்துவின் அன்பு, அந்தக் கிறிஸ்துவுக்காக எதையும் செய்ய, எதையும் இழக்க நம்மை நெருக்கி ஏவாதோ?

சபைக்கு இதைவிட வேறென்ன உந்துசக்தி வேண்டும்? ஆனால், "யார் நமது காரியமாய்ப் போவான்?" என்ற ஆண்டவரின் அழுகுரல் இன்னும் சபையின் வளாகங்களில் ஒலித்துக் கொண்டே தானே இருக்கிறது..?

13. உழைப்பு, உழைப்பு, ஓயா உழைப்பு :

கடின உழைப்பு ஒன்று தான் அவர்களது தாரக மந்திரம்.

வட இந்தியாவின் குக்கிராமங்களில் ஆர் எஸ் எஸின் "சரஸ்வதி வித்யா மந்திர்" என்று சொல்லப்படும் ஆரம்பப் பள்ளிகள் இல்லாத இடமே இல்லை என்று சொல்லலாம். போக்குவரத்துக்கே வழியில்லாத மலைக் கிராமங்களில் கூட இந்தப் பள்ளிகள் உண்டு.

மிஷனரிகளிடம் கற்றுக் கொண்டு மிஷனரிகளுக்கே சவால் விடும் "வன்வாசி கல்யாண் ஆஷ்ரம்" என்ற ஆதிவாசிகள் மத்தியில் அவர்களது சேவை !

நகரங்களின் குடிசைப்பகுதிகளில் "சேவா பாரதி" என்ற சமூக சேவை மையங்கள்..

வெள்ளமா ? பூகம்பமா ? இயற்கை பேரிடர்களா? முதலில் களமிறங்கி நிற்கும் RSS..களப்பணி என்ற field work ல் நமது மிஷனரிகளையும் மிஞ்சும் அசராத்தன்மை!

களப்பணியில் கிறிஸ்தவ NGOக்களைத் தவிர, மிஷனரி ஸ்தாபனங்களைத் தவிர ஆவிக்குரிய சபை என்று தங்களை மார்தட்டிக் கொள்பவர்களின் பங்களிப்பு என்ன ?

இன்று சபைகள் AC மயமாகிக் கொண்டு வருகின்றன! வெயிலிலும் குளிரிலும் மழையிலும் மலையிலும் களப்பணியில் களமிறங்கும் கிறிஸ்தவர்கள் எங்கே?

தென்னிந்தியாவிலிருந்து மிஷினரிகளை அனுப்பிய காலம் மலையேறிப் போனதினாலோ என்னவோ, வட இந்திய மக்களையே கூட்டம் கூட்டமாய்த் தெற்கு நோக்கி அனுப்பும் நிர்ப்பந்தம் இந்நாட்களில் தேவனுக்கு ஏற்பட்டுள்ளதோ ?

தேவன் என்ற தலைவனும், இரட்சகர் இயேசு என்ற பிரபுவும், ஆவியானவர் என்ற அதிகாரியும் இல்லாதிருந்தும், தனக்குக் காலம் இருக்கும்போதே, சுறுசுறுப்பாய், ஆட்கள் என்ற பலத்தைச் சம்பாதித்து, எக்கச்சக்கமான தானியம் என்னும் தேச வளங்களைத் தனக்கு சேர்த்து வைத்திருக்கும் இந்த எறும்பினிடத்தில் போய் சுறுசுறுப்பையும் கடின உழைப்பையும், தூங்கி வழியும் சோம்பேறி சபை கற்றுக்கொள்ளாதோ?

14. தலைமைக்குக் கட்டுப்படுதல் :

ஹெட்கேவார் முதல் மோகன் பாகவத் வரை - ஒரே தலைமை! ஒரே ஒழுங்கு! ஒரே கட்டுப்பாடு! தலைமையின் பேச்சுக்கு மறுபேச்சோ மறுப்புப் பேச்சோ அங்கு கிடையாது..

ஷாக்காவின் சாதாரண பக்தன் முதல் மூத்த தலைகள் வரை அவரவர் பொறுப்பு அவரவருக்கு என்று மிகத் தெளிவாக அவர்களுக்கு சொல்லித்தரப்பட்டு விடுகிறது. பதவி, அதிகாரங்கள் பற்றிய கவலையோ வருத்தமோ, விமரிசனங்களோ பொதுவாக யாருக்கும் இருப்பதில்லை. யாரும் அதைப்பற்றி அங்கே கவலைப்படுவதுமில்லை. பணி..பொறுப்பு..கடமை - அவ்வளவு தான்! தலைமை சொன்னால் சொன்னது தான்!

ஆனால் சபைகளில் ?

"கர்த்தர் அவரைக் கொண்டு மட்டும் தான் பேசினாரோ எங்களைக் கொண்டும் பேசவில்லையோ..?" (எண் 12:2) என்ற அன்றைக்கிருந்த அதே ஆவி தானே இன்றைக்கும்..

இந்த ஆத்மீகக் குஷ்டரோகிகள் உட்காரும், நிற்கும், படுக்கும், நடக்கும் இடமெல்லாம் பரவிப்படருகிறது இந்தப் படரும் தொடரும் குஷ்டம்! (லேவி : 13, 14, 15 அதிகாரங்கள்)

"சித்தமுண்டு..சுத்தமாகு! " என்று சொல்லி ஆண்டவரே எங்களை சுகமாக்க மாட்டீரோ ?

15. திட்டம் /Strategy :

1925 ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம், இன்று வரை வளர்ந்து நிமிர்ந்து நிற்பது நுணுக்கமான திட்டமிடலில் தான்..

இவர்களது முந்தைய தேர்தல் வெற்றிகள் மிகத் தெளிவாக அறிவிப்பது - அவர்களது ஆழமான, நுணுக்கமான தொலைதூரத் திட்டங்கள், செயல் முறைகள்..
அமலாக்கங்கள்!

"எப்படி பிரதர் இருக்குது ஊழியம்?"
"அப்படியே போகுது பிரதர்.."

பாத்து! நீங்களும் அப்படியே போயிடுவீங்க பிரதர்..

கர்த்தர் நடத்துகிறார் என்பது உண்மை. ஆனால் வேதம் முழுவதும் தேவனுடைய திட்டங்களை, போர்முறைகளைக் காண்கிறோம். திட்டங்கள், சத்துருவுக்கு எதிரான யுத்த நுண்ணறிவு, வரைமுறைகள், தொலை நோக்குத் திட்டங்கள்,விடா முயற்சிகள் - மிக மிக அவசியம்.

"நாங்க எதையும் யோசிக்கிறதே இல்ல பிரதர்..அன்னன்னிக்கு ஆண்டவர் நடத்துறார்..அது போதும்.."

இந்த லட்சணத்துல இருந்தா சபை எங்க போகும் ?

RSS என்ற எறும்பினிடத்திலாவது போய் சபை இவைகளைக் கற்றுக் கொள்ளட்டும்.

16. ஒருங்கிணைப்பு / ஒற்றுமை :

அயோத்தி பாபர் மசூதி இடிப்புக்கு முன்..
தலைமையின் ஒரே ஒரு கண்ணசைப்பு -அவ்வளவுதான்..

அயோத்தியை வந்து வெட்டுக்கிளிகளாய் மூடிக்கொண்டனர் கரசேவகர்கள்! அதன்பின் நடந்தது வரலாறு!

இன்று ஒரு ஆஸ்பத்திரி ஊழியத்துக்கோ, அவுட்ரீச் மினிஸ்ட்ரிக்கோ மக்களைக் கூட்டிச் சேர்க்க என்ன பாடாய்ப்படுகிறார் பாஸ்டர் !

அவனவன் எஸ்கேப் ஆவதில் தான் தீவிரமாய் இருக்கிறான். ஒற்றுமை, ஒருமனம், ஒருங்கிணைப்பு.. போய் கற்றுக் கொள்ளுங்கள் இந்த எறும்பிடம்!

17. சந்தடி சத்தமே இல்லாமல் வருகிறது ஒரு புரட்சி!

கிட்டத்தட்ட 90 வருடங்களாக ஒருவித மயான அமைதியோடு இயங்கி வரும் ஒரு இயக்கம் இது!

எந்த விளம்பரமோ, போர்டோ, சத்தமோ கூச்சலோ ஒன்றும் கிடையாது. கேட்டால், தன் தாய்க்கு செய்யும் சேவையை தண்டோரா போட்டுக் கொண்டா செய்ய முடியும் என்று நியாயமாகவே சொல்லுகிறார்கள்..

நம்மிடையே என்ன அட்வர்ட்டைஸ்மென்ட்! என்ன ஒரு மினுக்கு! மிடுக்கு! ஆடம்பரம்! அலம்பல்!

ஐயோ ! Simplicity ஐயும் Silence ஐயும் சபை இந்த எறும்பினிடத்தில் கற்றுக் கொள்ளாதோ?

இது ஒரு நீண்ட பட்டியல்..

இந்த எழுத்துக்களைப் பற்றி யார் என்ன நினைக்கிறார்கள் என்பதோ என்ன விமரிசிக்கப்படுகிறது என்பதோ நமது கவலை அல்ல..

" உனக்குக் கொடுக்கப்பட்ட இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் உனக்கு நலமாயிருக்கும்." (லூக் 19:42) என்ற நேசரின் கண்ணீர் ஒன்றே நமது பாரம்!

"சோம்பேறி (சபையே), நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்போது உன் (நீண்ட) தூக்கத்தை விட்டு எழுந்திருப்பாய் ?

இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ ?

இதே RSS என்ற இந்த எறும்பு, சீக்கிரமே, வழிதப்பிப் போன மதம் பிடித்த பிகெமோத்தைப் போலவும், இதே இயக்கம், ஆயுதமணிந்த லிவியாதானைப் போலவும் சபையே, உனக்கு விரோதமாய் வரும்!

நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும்- நீ காது கொடுத்தாலும் கொடாவிட்டாலும் -

அப்பொழுது அதின் மேல் உன் கையைப் போடு..யுத்தத்தை நினைத்துக்கொள்! இனி அப்படிச் செய்யத் துணியமாட்டாய்! (யோபு 40:15-24 / 41: 1-10)

தேவன் நமக்கு இரங்குவாராக!

“ சிங்கம் கெர்ச்சிக்கிறது,
யார் பயப்படாதிருப்பான்?
கர்த்தராகிய ஆண்டவர் பேசுகிறார்,
யார் தீர்க்கதரிசனம்
சொல்லாதிருப்பான் ? ”
(ஆமோஸ் 3:8)

குருதிப் பிரளயம்

CHAPTER - 9

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யாரும் இங்கே இல்லையோ?

மரம் அறுக்கும் வாளால் நீளவாக்கில் அறுக்கப்பட்ட செலோத்தே எனப்பட்ட சீமோன்

CHAPTER-9

★ கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யாரும் இங்கே இல்லையோ ? ★

... இவர்களையல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் வேறே யாரும் இங்கே இல்லையா ?   [1 இராஜா 22:6,7]

ஆசீர்வாதத்தையும், செழுமையையும், கொழுமையையும் உலக நன்மைகளையுமே, தங்கள் சொந்தத்தி லிருந்து எடுத்து ஏக வாக்காய், கேட்கிறவர்களின் காதுகளுக்கு இதமாய் மிதமாய் தீர்க்கதரிசனம் என்ற பெயரில், தங்களைத் தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக் கொண்டு பொய்யின் ஆவியோடு திரியும் கூட்டத்தின் நடுவிலே..

தேசத்தின் காரியங்களையும், இனிமேல் சம்பவிக்கப் போகிறவைகளையும்,சபையின் நிலையையும், தேவன் செய்யப்போகும் காரியங்களையும் அவரிடத்தில் கேட்டு அறிந்து சபைக்கு அறிவிக்க, இவர்களையல்லாமல் கர்த்தருடைய உண்மையான தீக்கதரிசிகள் வேறு யாரும் இங்கே இல்லையோ ?

எலிசாக்கள் இங்கே இல்லையோ ?

எதிரியின் பாளயத்திலும் பாசறையிலும் தீட்டப்படும் திட்டங்களை மட்டுமல்ல, அவர்களது படுக்கை அறையிலும் (பள்ளி அறை) பேசிக்கொள்ளும் இரகசியங்களையும் தேவ ஜனத்துக்கு அறிவித்து எச்சரிக்க எலிசாக்கள் இங்கே இல்லையோ ?
(2 இரா 6:8-12)

தண்ணீரில் விழுந்த கோடரியை மிதக்கச் செய்ய மட்டுமல்ல, பானையின் விஷத்தை அமிர்தமாய் மாற்ற மட்டுமல்ல, கலச எண்ணையை எண்ணெய்க் கிணறாக்கி கடனை அடைக்கும் தீர்க்கதரிசியின் அற்புதங்கள் ஒருபுறமிருக்க,

இன்று, எதிரியின் பாளயத்தில் தேவ ஜனத்துக்கு விரோதமாகத் திட்டப்படும் திட்டங்கள், இன்ன இன்ன இடத்தில் களமிறங்கித் தாக்குவோம்" என்ற அவனது யுக்திகள், செயல் திட்டங்கள், நுணுக்கமான சதி ஆலோசனைகள்..

"தொடர்வேன்,பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும், என் பட்டயத்தை உருவுவேன்..என் கை அவர்களை சங்கரிக்கும்..(யாத் 15:9) என்ற அவனது கொக்கரிப்புகள், மறைவான கண்ணிகள்..

அவனது படுக்கை அறையின் திரைமறைவு இரகசிய வேலைகள், ஏற்கனவே தொடங்கிவிட்ட அவனது முழு ஆயத்தங்கள், தீட்டி தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் அவனது ஆயுதங்கள் - இவை யாவற்றையும் அறிந்து சபைக்கு அறிவித்து எச்சரிக்கும் "எலிசாக்கள்" இங்கே இல்லையோ ?

[ஒரு பெரிய டிஜிட்டல் படையே இரவு பகல் பாராமல் எதிரி முகாமில் வேலை செய்து கொண்டிருக்கிறது என்றும், சபைக்கே தெரியாத சபையின் எல்லா விபரங்களும் அவர்களது விரல் நுனியில் உண்டு என்பதையும் சபை அறிந்து, அன்று இஸ்ரவேலின் ராஜா எச்சரிக்கை அடைந்து அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டது போல எச்சரிக்கை அடையாதோ ?]

தேவ மனிதராகிய தீர்க்கதரிசிகள் இங்கே இல்லையோ ?

எதிரி செய்யப்போகும் கொடிய தீங்கைத் தீர்க்கதரிசனமாய்க் கண்டு "அதைக் கர்த்தர் எனக்குத் தெரிவித்தார்" என்று அழுது புலம்பி அறிவிக்கும் தேவ மனிதராகிய தீர்க்கதரிசிகள் இங்கே இல்லையோ ? (2 இரா 8: 11,12)

"நீ என் ஜனத்துக்கு செய்யப்போகும் தீங்கை நான் அறிந்திருக்கிறபடியால் அழுகிறேன்" என்று சபை மேல் வரப்போகும் கொடிய தீங்கைத் தீர்க்கதரிசனமாய்க் கண்டு,

"நீ அவர்களது ஆவிக்குரிய கோட்டைகளை அக்கினிக்கு இரையாக்கி, ஆவியில் பெலமுள்ள அக்கினியான வாலிபரை பட்டயத்தால் கொன்று, வயதில் மட்டுமல்ல, ஆவிக்குரிய வாழ்விலும் குழந்தையாயிருக்கும் குழந்தைகளைத் தரையோடே மோதியடித்து,

சரீரத்தில் மாத்திரமல்ல, "ஆவியில் கர்ப்ப வேதனைப்படும்" ஆவிக்குரிய கர்ப்பவதிகளையும் கீறிப்போடுவாய்" என்று தன் முகத்தைத் திருப்பாமல், இன்றைய சபை சலித்துப் போகுமட்டும் அழுது புலம்பி அறிவிக்கும் தேவ மனிதராகிய தீர்க்கதரிசிகள் இங்கே இல்லையோ ?

[ஒரு வேளை இது ஒரு மிகைப்படுத்தப்பட்டதாகவோ extreme ஆகவோ இன்று தெரியலாம்.
கூடுமானால், 3 மாதம் தொடர்ந்து நடந்த 2002 குஜராத் கலவரத்தை சபை ஞாபகப்படுத்திக் கொள்ளட்டும். தெரியாவிட்டால் தேடிப்பார்த்து தெரிந்து கொள்ளட்டும்..]

"மிகாயாக்கள்" இங்கே இல்லையோ ? (1 இரா 22: 6-25)

ராஜாவே ஆனாலும் அவனது முகத்துக்கும் கலங்காமல், "கர்த்தர் என்னிடத்தில் சொல்லுவதையே சொல்லுவேன்.." என்றும், "தேவன் காண்பிப்பதையே உரைப்பேன்" என்றும்,

கள்ளத்தீர்க்கதரிசிகளை முகமுகமாய் எதிர்த்து,"பொய்யின் ஆவியை கர்த்தர் உங்களுக்குள் அனுப்பியிருக்கிறார்.. நாள் வரும்..நீ உள் அறையிலே பயந்து நடுங்கி ஒளித்துக் கொள்ளும் போது உனக்குத் தெரியும் உண்மைத் தீர்க்கதரிசி யாரென்று.." என்று கைதானாலும் பயமில்லை என்று தேவ ஆவியின் பெலத்தோடு முகத்தைக் கற்பாறையாக்கிக் கொண்டு முழங்கும் "கர்த்தருடைய மிகாயாக்கள் " இங்கே இல்லையோ ?

சாமுவேல்கள் இங்கே இல்லையோ ?

"இதோ நான் இஸ்ரவேலிலே (சபையிலே) ஒரு காரியத்தைச் செய்வேன்..அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய காதுகளிலும் அது ஒலித்துக் கொண்டிருக்கும்..

நான் (சபைக்கு) விரோதமாய் சொன்ன யாவையும் அந்நாளிலே வரப்பண்ணுவேன். அதைத் தொடங்கவும் முடிக்கவும் போகிறேன்.." (1 சாமு 3:11-14) என்று கர்த்தர் சொல்கிறார் என்றும்,

"இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தேவன் இதை சீக்கிரத்தில்" செய்வார் என்றும் தைரியமாய் சபைக்கு கூவி அறிவிக்கும் கர்த்தருடைய "சாமுவேல்கள்" இங்கே இல்லையோ ?

ஆமோஸ்கள் இங்கே இல்லையோ ?

விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையோ ? (ஏசா 59:16)

உபத்திரவத்தின் அக்கினியினாலே சபையை நியாயம் விசாரிக்கப் போகும் ஆண்டவரைப் பார்த்து..
"ஆண்டவரே நிறுத்துமே, யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான், அவன் சிறுத்துப் போனானே.." என்று அழுது புலம்பி விண்ணப்பம் பண்ணி,

"அப்படி ஆவதில்லை" என்று ஆண்டவரையே மனஸ்தாபப்பட வைக்கும் கர்த்தருடைய "ஆமோஸ்கள்" இங்கே இல்லையோ ? (ஆமோஸ் 7:1-6)

"ஆசாப்"கள் இங்கே இல்லையோ?

"இது எது வரைக்கும் என்று அறிவிக்கிற தீர்க்கதரிசி எங்களிடத்தில் இல்லையோ ? (சங்.74:3-9)

பரிசுத்த ஸ்தலத்திலே சத்துரு அனைத்தையும் கெடுத்துப் போடுவானோ?

அவர்கள் தங்கள் அடையாளங்களைக் கொடிகளாக நாட்டுவார்களோ?

எங்கள் விருட்சக் கன்றுகளாகிய குமாரரையும் சித்திரந்தீர்ந்த அரண்மனை மூலைக்கற்களாகிய எங்கள் குமாரத்திகளையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுவார்களோ?

உமது பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கு இரையாக்கி, உமது நாமத்தின் வாசஸ்தலத்தை தரைமட்டும் இடித்து அசுத்தப்படுத்திப் போடுவார்களோ?

எங்களை நிர்த்தூளியாக்குவோம் என்று சொல்லி, தேசத்திலுள்ள ஆலயங்களையெல்லாம் சுட்டெரித்துப் போடுவார்களோ?

தேவனே எதுவரைக்கும் சத்துரு நிந்திப்பான் ? (சங் 74:3-9) பகைவன் எமது நாமத்தை எப்போதும் தூஷிப்பானோ?

"எங்களுக்குத் தீர்க்கதரிசியும் இல்லை.. இது எது வரைக்கும் என்று அறிவிக்கிறவனும் இல்லையே ?" என்று புலம்பும் கர்த்தருடைய "ஆசாப்"கள் எங்களிடத்தில் இல்லையோ ?

ஏசாயாக்களும் எரேமியாக்களும் இங்கே இல்லையோ ?

"துணை செய்வாரும் தாங்குவாரும் ஒருவரும் இல்லையோ ? (ஏசா 63:5)

இது வரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.. அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை..

தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்பட்டிருக்கிறது.." (மத் 24:21,22) என்ற நம்மிடையே தோன்றிய மகா தீர்க்கதரிசியானவரின் பாரத்தைக் கூவிக் கதறி சபைக்கு அறிவித்து ஜெபித்து எச்சரித்து சபையை ஜெபத்தால் தாங்கி துணை செய்வாரும்,

"கர்த்தருடைய பாரம்" "கர்த்தருடைய பாரம்" என்று சொல்லி அந்த பாரத்தைத் தனது பாரமாகத் தாங்கி, தரிசித்து அந்த பாரத்தை ஊழியர்களுக்குள்ளும் விசுவாசிகளுக்குள்ளும் இறக்கி பகிர்ந்து கொள்ளும்" கர்த்தருடைய ஏசாயாக்களும் எரேமியாக்களும்" இங்கே இல்லையோ ?

“ உன்னில் செய்யப்பட்ட
பலத்த செய்கைகள் சோதோமிலே
செய்யப்பட்டிருந்ததானால்,
அது இந்நாள் வரைக்கும்
நிலைத்திருக்கும்.. ”

(மத்தேயு 11:23)

குருதிப் பிரளயம்



CHAPTER - 10

இதோ வருகிறது தண்டனையின் பிரம்பு !

குதிரையினால் இழுத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்ட மாற்கு

CHAPTER-10

இதோ வருகிறது தண்டனையின் பிரம்பு !

கர்த்தர் பேசுகிறார்...

1. ஞாயிற்றுக்கிழமைகளில் வெறும் 2 மணி நேரம் சபையில் உட்கார்ந்து விட்டு, மீதி நாள் முழுவதும் மால்களிலும், நண்பர்களுடனும், beach லும், பார்க்கிலும், ரெஸ்ட்டாரன்ட்டுகளிலும், இன்ட்டர்நெட்டிலும், உலகத்தாரோடு சேட்டிங்கிலும் டேட்டிங்கிலும் பொழுதுபோக்கும், விசுவாசி என்று உங்களை நீங்களே அழைத்துக்கொள்ளும் உங்களை விட்டு விலகாமலும் உங்களைக் கைவிடாமலுமிருந்து உங்களைப் பாதுகாத்துப் பராமரிக்க, பரிசுத்த தேவனாகிய நான், உங்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன எனக்கு ?

2. உங்கள் சிஸ்டம் முழுவதிலும், லேப்டாப்பிலும் செல் போனிலும் கண்ட கண்ட இமேஜ்களையும் ஸ்டேட்டஸ்களையும் போட்டு, அவைகளை அரை நிர்வாண, முழு நிர்வாணப் படங்களால் நிறைத்து வைத்துக் கொண்டு, யூ-ட்யூபிலும் ட்விட்டரிலும் facebook லும் வாட்ஸப்பிலுமே வாழ்ந்து கொண்டு,"எங்கள் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நாங்கள் தடைசெய்யவில்லை" என்று உங்களை நீங்களே Gen -next பிலீவர்ஸ் என்று அழைத்துக் கொள்ளும் இன்றைய இளைய தலைமுறையாகிய நீங்கள் கேட்பதை எல்லாம் அள்ளிக் கொடுத்துக் கொடுத்து உங்களுக்காக யாவையும் செய்து முடிக்க, வைராக்கியமுள்ள மகா பரிசுத்த தேவனாகிய நான், உங்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன எனக்கு ?

3. ஆராதனை என்ற பெயரில் நீங்கள் போடும் ஆட்டபாட்ட குத்தாட்டக் குதியாட்டக் கும்மாளங்களைக் கண்டும் காணாதவர் போலுமிருந்து, தீர்க்கதரிசனம் என்ற பெயரில் என் ஜனத்தை வஞ்சித்து, உங்கள் வயிறு வளர்த்து, சபையாகிய ஆசரிப்புக்கூடார வாசலிலேயே சகல அக்கிரமங்களையும் சகஜமாய் நடப்பிக்கும் உங்கள் ஆசாரிய போதகர்களின் மக்களாகிய நவீன ஓப்னி பினெகாஸ்களை, இன்னும் உங்களது ஊழியங்களிலே உயர்த்தி உயர்த்தி ஆசீர்வதித்துப் பெருக்கிக் கொண்டே போக, எனது விலையேறப்பெற்ற இரத்தத்தால் சபையை சம்பாதித்த இரட்சகராகிய நான், இப்படிப்பட்ட உங்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன எனக்கு ?

4. ஆசிர்வாதம், அரவணைப்பு, பாதுகாப்பு, பரிபூரணம், செழிப்பு கொழிப்பு, வாக்குத்தத்தம் வல்லமை, எழுப்புதல் எழுப்புதல் என்று ஆனந்த மழையிலும் அபிஷேக அருவியிலுமே மக்களைக் குளிப்பாட்டி திக்குமுக்காடச் செய்து, தேவனாகிய கர்த்தரின் சித்தத்தை அறிவதிலும், நித்தியத்தின் கண்ணோட்டத்திலும் வாழ்ந்து, பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டு வாழும் வாழ்விலிருந்து என் ஜனத்தை வழி தப்பப்பண்ணி, அவர்களை ஆவிக்குரிய இருளிலும், குருட்டாட்டத்திலுமே வைத்திருக்கும் நூதன அப்போஸ்தலராகிய உங்கள் கூட்டத்தோடு, கூட இருந்து கிரியை நடப்பித்து, எழுப்புதலை அனுப்பி, என்னுடைய வல்லமையுள்ள வசனத்தை உறுதிப்படுத்த ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தராகிய நான் உங்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன எனக்கு ?

5. எளிய பாமர மக்கள் கொடுக்கும் காணிக்கைகளையும், அனாதைகளையும் விதவைகளையும் பராமரிக்க வெளிநாடுகளில் உள்ளவர்கள் தாங்கள் உபவாசம் செய்து மிச்சம் பண்ணி சேர்த்து வைத்து அனுப்பும் டாலர்களையும், பைபிள் காலேஜ் நடத்தவும் ஆலயங்கள் கட்டவும் கொடுக்கப்படும் நன்கொடைகளையும் வைத்து உங்களுக்கு நிலபுலன்களை வாங்கி, வீடுவாசல்களைக் கட்டிக்கொண்டு, வசதியும் சுகபோகமுமாய் வாழ்ந்து, உங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளில் படிக்கவைத்து, கோடிக்கணக்கான செலவில் அவர்களுக்குத் திருமண வைபவங்கள் நடத்தி அழகு பார்க்கும் இன்றைய சுவிசேஷகர்களும் பாஸ்டர்களுமாகிய உங்களுடன் இருந்து, நீங்கள் வாஞ்சித்த காரியங்களையெல்லாம் தப்பாமல் வாய்க்கப்பண்ண, ஐசுவரிய சம்பன்னராயிருந்தும், என்னையே தரித்திரராக்கிக் கொண்ட தயாபர தேவனாகிய நான், உங்களுக்குக் கடமைப்பட்டுக் கட்டுப்பட வேண்டிய கட்டாயம் என்ன எனக்கு ?

"சோதோமிலே வேதம் இருந்ததில்லை" என்ற தமது புத்தகத்தில்
ரெவரண்ட். லியோனார்ட்
ரேவன்ஹில் சொல்லுகிறார்..

என்னுடைய கணிப்பின்படி, ஒரு தேசமோ, தேசங்களோ, சபையோ, கர்த்தரை விட்டு சோரம் போய், தூரம் போய் நிற்கும் தூரத்தைக் காணும் போது, ஒன்றே ஒன்றுக்கு தான் நாம் முற்றிலும் தகுதியாய் இருக்கிறோம் - அது அவரது தண்டனையின் பிரம்பு !

ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்தஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையை ருசிபார்த்தும், அவரை மறந்து, மறுத்து மறுதலித்துப் போன நாம், தேவனுடைய குமாரனை நாமே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினாலும், நாம் ஒரு காலத்தில் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசங்களை மறவாதவர் மட்டுமல்ல..

தாம் நேசிக்கிற எவனையும் சிட்சிக்கிற அந்த நல்ல தேவன், நம்மை இன்னும் நேசிக்கிறதினாலே, ஒரு மகா பெரிய அழிவுக்கு முன்னாக, சீக்கிரமே தமது சிட்சையின் பிரம்பைக் கையாடி - தமது பக்கமாய் நம்மைத் திருப்பிக் கொள்வாராக !

கொஞ்சம்கூட வெட்கமோ, பயமோ நடுக்கமோ இன்றி, நமக்கு அவர் தமது சொந்தக் கைகளாலே எழுதிக் கொடுத்த பத்து கற்பனையின் கற்பலகைகளை உடைத்தெறிந்து, ஒழுக்கக் கேடுகளின் விளிம்புக்கே வந்து நிற்கிறோம் - எப்போது முகங்குப்புற விழுந்து சாவோம் என்ற நிலையில் !

தங்கள் தலைமேலும் தங்கள் குடும்பத்தின் மேலுமே பணத்தைத் தண்ணீராய் வார்த்து செலவழித்துக் கொள்ளும் ஒரு கூட்டம் - எப்போது பாப்பராய்ப் போய்த் தீருவோம் என்று வாரி வாரி இறைக்கிறது !

பெருமையோடு பாவத்தைப் பச்சைத் தண்ணீராய்க் குடிக்கும் இந்த செல்வச் சீமான்களையும், செருக்குச் செல்விகளையும், அவரது அணுகுண்டு மழையிலிருந்து எந்தப் பாதாளப் பதுங்கு குழிகளும் பாதுகாப்பு பங்களாக்களும் தப்புவிக்க போதுமானதாய் இருக்கப் போவதில்லை !

நாம் இன்னும் நாறி நாசமாய்ப் போவதிலிருந்து இந்தக் கடைசி நொடியில் நம்மைத் தப்புவிக்க ஒன்றே ஒன்று - ஒன்றே ஒன்று உண்டானால், அது **சபை** - அதுவும், அவரது இரத்தத்தால் கழுவி சம்பாதித்து அவருக்கென்று மீதியாய் வைக்கப்பட்ட உண்மையான சபை ஒன்றே !

சோதோமுக்காக தேவன் முன் மன்றாடி நின்ற ஆபிரகாம் கண்ணீரோடு நகர்ந்த பின்னோ, அல்லது அவனோடு பேசி முடித்த தேவன் போன பின்போ தான் சோதோம் வெந்து அழிந்தது !

ஆபிரகாம் **"இன்னும் தேவனுக்கு முன் நின்று கொண்டிருந்த போது.."** சோதோமின் ஜனத்துக்காக தேவனுக்கு முன் நிற்கும் ஒரு பிரதிநிதி இருக்கத்தான் செய்தான் !

பின்வாங்கிப் போனவனானாலும், லோத்து சோதோமிலே இருந்தவரை, தமக்கு முன் ஏதோ ஒரு பிரதிநிதியை அந்த ஜனத்துக்காக, அவனில் காணவே செய்தார் தேவன் !

அவர்கள் அவருக்கு முன்பாகத் தாங்கள் நின்ற வரையில் தேவன் சோதோமின் மேல் கை வைக்கவுமில்லை.. கொமோராவை அவர் தொடவுமில்லை !

பத்து நீதிமான்களுக்காகக் கடைசி வரை கெஞ்சி, அந்தப் பத்து கூட இல்லாத பரிதாப நிலையில், ஆபிரகாமை விட்டு - தேவன் போய் விட்ட பின்பே - அக்கினி மழை, மாரியாய்ப் பொழிந்தது !

லோத்து சோதோமை விட்டு வெளியேறிய பின்பே - தேவனின் அக்கினி கந்தகமாய்க் கொட்டித் தீர்த்தது !

கர்த்தருக்காக மீதியான ஒரு சிறு கூட்டம் சோதோமிலே இல்லாததினாலேயே அது முழுவதும் வெந்து அழிந்தது.

ஆனால் அகில உலகிலும் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, பேராசை என்னும் பாகால்களுக்கு முடங்காத முழங்கால்களையும் அவனை முத்தமிடாத வாயையுமுடைய ஒரு சிறு கூட்டத்தை தேவன் தமக்கென்று இன்னும் மீதியாக வைத்தே வைத்திருக்கத்தான் செய்கிறார்!

சகோதரரே, ஜெபியுங்கள் ! சங்கீதக்காரனைப் போல, "யோசேப்பை ஆட்டுமந்தையைப் போல நடத்துகிறவரே, செவிகொடும்..எங்களைத் திருப்பிக் கொண்டுவாரும்.. உமது முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும்...அப்பொழுது இரட்சிக்கப்படுவோம்.." என்று ஜெபியுங்கள் (சங் 80:1,3).

துக்கத்தோடு சொல்வேன்.."இந்தத் தலைமுறையினராகிய நமது பாவத்தின் ஏந்திரக்கல்லை நமது கழுத்திலேயே கட்டி, நம்மை நரக

பாதாளங்களின் அடியில்லா ஆழங்களில் தேவன் அமிழ்த்திப் போடுவாரானால், அதைவிட ஆக்கினை என்ன உண்டு ?

பாவத்தில் ஊறினவன் இந்த உண்மையை அறிவதுமில்லை..
இந்த பயங்கரத்தின் நிலையை உணர்வதுமில்லை..
சொன்னால் நம்புவதுமில்லை.. ஏற்றுக்கொள்வதுமில்லை !

இந்தக் கடைசி நாட்களின் கடைசி நாழிகையிலே முழு உலகையும் காக்கும் ஒன்றே ஒன்று உண்டானால், அது உலகத்துக்கு உப்பாகிய அவரது சபை ஒன்றே !

விசுவாசியே ! ஊழியனே ! இது உன் நாள் ! உன் நாழிகை !

தேவ ஜனமே ! விழித்திருக்க விழித்தெழும்புவாயோ ?

திறப்பிலே நிற்க திரும்பி வருவாயோ ?

இராக்காலம் வருமுன் கிரியை செய்ய முன் வருவாயோ ?

யுத்தத்தில் நிற்க சேனையாய் எழும்புவாயோ ?

சோதோமிலே வேத புத்தகம் இருந்ததில்லை !

சோதோமிலே வேத கலாசாலை இருந்ததில்லை !

சோதோமிலே வேத பிரசங்கி இருந்ததில்லை !

சோதோமிலே வேதக் கோயில் இருந்ததில்லை !

சோதோமிலே வேதத்தின் தேவனும் இருந்ததில்லை !

ஆனால் இங்கே நமக்கு என்ன இல்லை ?

ஆகவே போக்குச் சொல்ல நமக்கு இடமும் இல்லை !
தப்பிச்செல்ல வேறு வழியும் இல்லை !

Sodom Had No Bible..
So have we No Excuse !

“ நானும் என் தகப்பன்
வீட்டாரும் பாவஞ்செய்தோம்..
நாங்கள் உமக்கு முன்பாக மிகவும்
கெட்டவர்களாய் நடந்தோம்..
நீர் கற்பித்த கற்பனைகளையும்,
கட்டளைகளையும், நியாயங்களையும்
கைக்கொள்ளாதேபோனோம்.. ”

(நெகேமியா 1:6, 7)

குருதிப் பிரளயம்

CHAPTER - 11

எங்களிலே நீர் வைத்த உமது நம்பிக்கையை
நாங்கள் பொய்த்துப் போகப்பண்ணி,
உமது எதிர்பார்ப்புக்களையெல்லாம்
சுக்கு நூறாக்கிவிட்டோம் ஆண்டவரே !

ஈட்டியால் குத்திக்கொல்லப்பட்ட தோமா



CHAPTER-11

எங்களிலே நீர் வைத்த உமது நம்பிக்கையை நாங்கள் பொய்த்துப் போகப்பண்ணி, உமது எதிர்பார்ப்புக்களையெல்லாம் சுக்கு நூறாக்கிவிட்டோம் ஆண்டவரே !

We failed you, miserably Lord !

எங்களிலே நீர் வைத்த உமது நம்பிக்கையை நாங்கள் பொய்த்துப் போகப் பண்ணிவிட்டோம் ஆண்டவரே!

1. ஆண்டவரே, பூமியிலே உமது சபையையே நீர் உமது நம்பிக்கையாகவும் எதிர்பார்ப்பாகவும் வைத்திருக்கிறீர்.

ஆனால் உமது எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாயிருந்த சபையோ இன்று உம்மை ஏமாறச் செய்துவிட்டதே! ஆண்டவரே நாங்கள் உம்மை ஏமாற்றமடையச் செய்துவிட்டோமே ! நீர் எங்களில் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்துவிட்டீரே ! உமது எதிர்பார்ப்பையெல்லாம் பொய்த்துப்போகப் பண்ணிவிட்டோமே ஆண்டவரே!

We failed you miserably, Lord !

2. ஆண்டவரே, உலகத்துக்கு வெளிச்சமென்று சொல்லி, சபையையே நீர் உலகத்துக்கு வெளிச்சமாய் வைத்தீர்.

ஆனால் அந்த வெளிச்சமே இருளாகி அது உம்மை ஏமாற்றம் அடையச் செய்துவிட்டதே ! "ஜாதிகள் உன் வெளிச்சத்தில் நடப்பார்கள்" என்ற உமது நம்பிக்கையை நாங்கள் பொய்த்துப் போகப்பண்ணி, எங்களிலே உம்மை ஏமாற்றம் அடையப் பண்ணிவிட்டோமே ஆண்டவரே !

We failed you miserably, Lord !

3. ஆண்டவரே, "நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்" என்று சபையையே நீர் பூமிக்கு உப்பாய் வைத்தீர்.

ஆனால் நாங்களோ, சாரமற்றுப்போய், வெளியே கொட்டப்படவும், மனுஷரால் மிதிக்கப்படவுமே ஏதுவாகிப் போனோமே ! உப்பில்லாப்

பண்டமாய்க் குப்பையிலே போன நாங்கள் உமது நம்பிக்கையிலே மண் அள்ளிப்போட்டோமே ஐயா ! நாங்கள் உம்மை எவ்வளவாய் வஞ்சித்துப் போட்டோம் ஆண்டவரே !

We failed you miserably, Lord.

4. ஆண்டவரே, சபையைத்தான் நீர் கறை திரையற்ற கற்புள்ள கன்னிகை என்று சொல்லி, உம்மையே அதற்காகக் கொடுத்து, அதை உம்மோடு சேர்த்துக்கொள்ள வருவேன் என்றீர்.

ஆனால் பரிசுத்த மணவாட்டியாய், களங்கமற்று, மணவாளனுக்காகக் காத்திருக்க வேண்டிய நாங்களோ உலகத்தோடு வேசித்தனம்பண்ணி, பரிசுத்தக் குலைச்சலாகிப்போன பரஸ்திரீயைப் போல நிற்கிறோமே!

ஆண்டவரே, நீர் எதை அணைத்துச் சேர்த்துக்கொள்ள வரப்போகிறீர்? பிறன் முகம் பார்த்து நாங்கள் உமக்குத் துரோகம் பண்ணி உம்மை வஞ்சித்துவிட்டோமே!

We failed you miserably, Lord !

5. ஆண்டவரே, சபையைத்தானே உமது "திராட்சச்செடி" என்றீர்?

எங்களை நீர் மகா செழிப்பான மேட்டிலே நாட்டி, எங்களை வேலியடைத்து, எங்களிலிருந்த கற்களையெல்லாம் பொறுமையாகப் பொறுக்கிப்போட்டு, எங்களை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச்செடியாய் நட்டு வைத்து, எங்களைச் சுற்றிலும் கொத்தி எருப்போட்டு, காப்பாற்றி, அடிக்கடி நீர்ப்பாய்ச்சி, ஒருவரும் எங்களை சேதப்படுத்தாதபடி இரவும் பகலும் நீர் எங்களைப் பாதுகாக்கவில்லையோ?

ஆனால் நாங்களோ காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போய், உமக்குக் கசப்பான பழங்களைத் தந்ததென்ன?
ஆண்டவரே, சபையாகிய எங்கள் திராட்சத் தோட்டத்துக்கு நீர் இன்னும் செய்யாத என்ன வேலை மீதி உண்டு ஐயா ?
ஆனால் நாங்களோ, உம்மைத் திரும்பத்திரும்ப எங்களிலே ஏமாற்றமே அடையச் செய்தோமே !

We failed you miserably, Lord !

6. ஆண்டவரே, சபையே உம்முடைய சத்துவமும் பெலனும் மேன்மையில் பிரதானமும், வல்லமையில் விசேஷமுமாய் இருந்ததே!

அப்படிப்பட்ட நாங்கள் உமது கைகளில் துலக்கமான அம்பாகி, உமது அம்பறாத்தூணியை நிரப்பி, சத்துருக்களோடே நாணமடையாமல் பேச வைக்கவேண்டிய உம்மை, சத்துருவுக்கு முன்பாக வெட்கித் தலைகுனியப் பண்ணிவிட்டோமே!

உம்மை நிந்திக்கும் பகைவனுக்கு நீர் உத்தரவு கொடுக்கத்தக்கதாக, ஞானவான்களாகி உமது இருதயத்தை சந்தோஷப்படுத்த வேண்டிய நாங்களே, சத்துரு உம்மை நித்தம் நித்தம் நிந்திக்கக் காரணமாகி விட்டோமே!

எங்களிலே நீர் என்ன சந்தோஷத்தைக் கண்டீர் ஐயா ? உமது நம்பிக்கையையெல்லாம் நொறுங்கி சுக்குநூறாகப் போகச்செய்து விட்டோமே !

We failed you miserably, Lord !

7. ஆண்டவரே, சபையே உமது சந்தோஷமும் கிரீடமுமாய் இருக்கிறது என்றீரே !

நாங்கள் உமக்கு துக்கத்தையும் வேதனையையும் கண்ணீரையுமே அல்லாமல் வேறே என்னத்தைக் கொடுத்தோம்? நாங்கள் உமக்கு பொற்கிரீடமாய் அல்ல, முட்கிரீமாய் மாறிப்போனோமே ஐயா !

எங்கள் மீதிருந்த உமது ஆசை அபிலாஷைகளும் வாஞ்சை விருப்பங்களும் முற்றிலுமாய் அற்றுப் போயிற்றே !

நாங்கள் உம்மை வெகுவாய் ஏமாறச் செய்துவிட்டோமே! உமது நம்பிக்கையையெல்லாம் பொய்த்துப் போகப்பண்ணி விட்டோமே ஆண்டவரே !

We failed you miserably, Lord !

8. ஆண்டவரே, உமது இரட்சிப்பின் நற்செய்தியை, மீட்பின் சுவிசேஷத்தை, அழியும் உலகத்துக்கு நீர் தரும் கடைசி நம்பிக்கையின் செய்தியை, தேவதூதர்களின் கரங்களில் அல்ல, சபையாகிய எங்களை மட்டுமே, உண்மையுள்ளவர்கள் என்று நம்பிக் கொடுத்தீரே ! ஆனால் நாங்களோ உம்முடைய நம்பிக்கையையெல்லாம் பாழாக்கி, உமது பிதாவின் வீடாகிய ஆலயத்தை இன்று கூத்தாடிகளின் மேடையாக்கி, கள்ளர்களின் குகையாக்கிப் போட்டோமே!

ஆண்டவரே நாங்கள் உம்மை எவ்வளவாய் வஞ்சித்துப்போட்டோம் ஐயா !

We failed you, miseraby Lord !

9. ஆண்டவரே, புறஜாதிகள் நடுவே சபையாகிய எங்களை நீர் சாட்சியாக வைத்தீரே !

ஆனால் நாங்களோ ஜாதிகளுக்குப் பழமொழியாகவும், பழிச்சொல்லாகவும், வசைச் சொல்லாகவும், வழக்கச் சொல்லாகவும் மாறிப்போய், உமது நாமத்துக்கு நித்திய கீர்த்தியை அல்ல, அபகீர்த்தியையும் நித்திய நிந்தையையுமே உண்டாக்கி விட்டோமே! உலகமானது எங்களில் உம்மைக் காணவில்லையே! உமது இருதயத்தை நாங்கள் குளிரப்பண்ணுவதற்குப் பதிலாக நொறுங்கிப் போகப் பண்ணிவிட்டோமே!

எங்கள் மேல் நீர் வைத்த உமது நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையெல்லாம் நொறுங்கிப்போகச் செய்துவிட்டோமே ஆண்டவரே !

We failed you, miseraby Lord!

10. ஆண்டவரே, சபையானது உமது கைகளிலே பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானாகிய உமக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாய் விளங்குமென்று சொன்னீரே!
ஆனால் நாங்களோ விலைபோகாததும், வெறுமையானதும், கெட்டுப்போனதுமான பாத்திரமாய், உடைந்து, எதற்கும் உபயோகமற்றுப் போனோமே!

We failed you, miseraby Lord !

11. ஆண்டவரே, சபையாகிய எங்களை நீர் ஆசீர்வதிப்பது மட்டுமன்றி, பூமியின் வம்சங்களுக்கெல்லாம் உங்களை ஆசீர்வாதமாய் வைப்பேன் என்றும் சொன்னீரே!

ஆனால் நாங்களோ, ஆசீர்வாதத்தின் ஜீவ ஊற்றாகிய உம்மையே விட்டுவிட்டு, வெடிப்புள்ள தொட்டிகளை எங்களுக்கு வெட்டிக்கொண்டு, ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் இழந்து போனோமே ! நீர் தரும் உலக நன்மைகளையே நாங்கள் ஆசீர்வாதமென்று எண்ணி, அதையே நாடித்தேடி ஓடி, அதுவே எங்கள் குறியும் குறிக்கோளுமாய் மாறிப்போனதே!

நாங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் அல்ல, இடறுதலாகவே அல்லவோ மாறிப்போனோம் ஐயா ! ஆண்டவரே, நாங்கள் உம்மை எவ்வளவாய் ஏமாந்து போகப்பண்ணிவிட்டோம் !

We failed you, miseraby Lord !

12. ஆண்டவரே, சபையை உம்மோடு சேர்த்துக்கொள்ள வருவேன் என்றீரே!

ஆனால் சபையாகிய நாங்கள் ஆயத்தமாயுமில்லை,
ஆயத்தமாகவுமில்லை! பிறரை ஆயத்தப்படுத்தவுமில்லையே !

நீர் வரும்போது எங்களில் விசுவாசத்தைக் காண்பீரோ?
நீர் வரும்போது நீர் இருக்கிறவண்ணமாய் எங்களைக் காண்பீரோ?
நீர் வரும்போது எங்களை ஆயத்தமாயிருக்கக் காண்பீரோ?

ஐயோ! நாங்கள் உம்மை ஏமாறச் செய்துவிட்டோமே!
நாங்கள் உம்மை வஞ்சித்துவிட்டோமே! உமது எதிர்பார்ப்பையெல்லாம் பொய்த்துப் போகப்பண்ணி, சத்துருவுக்கு முன்னால் உம்மைத் தலைகுனியச் செய்துவிட்டோமே ஆண்டவரே !

We failed you, Lord!
We failed you, so miseraby !

“நீ காலாட்களோடே
ஓடும்போதே உன்னை
இளைக்கப்பண்ணினார்களானால்,
குதிரைகளோடே எப்படிச்
சேர்ந்து ஓடுவாய் ?
சமாதானமுள்ள தேசத்திலேயே
நீ அடைக்கலம் தேடினால்,
யோர்தான் பிரவாகித்து வரும்போது
நீ என்னசெய்வாய் ?”

(எரேமியா 12:5)

குருதிப் பிரளயம்
CHAPTER - 12
சமயம் வாய்க்காத சமயத்திலும்...

தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்ட லூக்கா



CHAPTER-12

சமயம் வாய்க்காத சமயத்திலும்...

தேசத்தில் மிகவேகமாய் சுவிசேஷத்துக்கு வாசல்கள் அடைபட்டுக்கொண்டிருக்கும் காலமிது.

ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்கால இருளின் ஆதிக்கம் வந்து மூடும் நாட்கள் இவை..

எல்லாக் காரியங்களுக்கும், எல்லா சமயத்துக்கும், எப்படிப்பட்ட சூழ்நிலைக்கும் ஏற்புடைய மேகம் போன்ற திரளான சாட்சிகள் வேதத்திலும் சபை சரித்திரத்திலும் நமக்கு நிறையவே உண்டு.

தங்களுக்கு சமயம் வாய்த்த தங்கள் முன்னான காலங்களைப் போலவே, சமயம் வாய்க்காத தங்கள் அடைபட்ட காலங்களிலும், தங்களது சொல்ல முடியாத உபத்திரவங்களின் மத்தியிலும் நமக்கு முன் சென்ற பல அருமையான தேவ மனிதர்கள் காண்பித்த அபார தைரியமும் வைராக்கியமும் இதோ நம்மைப் பற்றிப்பிடிப்பதாக!

சமயம் வாய்க்காத காலங்களில், வாய்க்காத சமயத்தையும் தேவனுக்காக வாய்க்கப்பண்ண முடியும் என்பதும், எப்படிப்பட்ட தனிமைப்படுத்தப்படலும், கதவடைப்பும், இரும்புத்திரையும், மூங்கில் திரையும் தேவனைவிட்டோ, தேவனுக்காகக் கிரியை செய்வதை விட்டோ நம்மைப் பிரிப்பதென்பது இயலாத ஒன்று என்பதே வேதமும் இந்த சாட்சிகளும் ஆணித்தரமாய் நமக்கு அடித்துச் சொல்வது..

தேவையெல்லாம் தேவனுக்காக ஏதாவது ஒன்றைச் செய்துவிட வேண்டுமென்ற அணையாத ஆத்தும தாகமும் நெருக்கி ஏவும் கிறிஸ்துவின் அன்பும் மாத்திரமே !

அடைக்கப்பட்ட காலத்திலும்.. அவசர காலத்திலும்... சமயம் வாய்க்காத சமயத்திலும்...

---

1. ரிச்சர்ட் உம்பிராண்ட் தமது புத்தகமாகிய "The overcomers" என்ற புத்தகத்தில் எழுதுகிறார்..

"ஏய் ! எனக்கு ஞானஸ்நானம் கொடு..இல்லன்னா உன்ன சுட்ருவேன்..!"

Ann Mary..

ஒரு வாலிப ஸ்லோவேக்கிய கிறிஸ்தவ மகள் ..

கம்யூனிசச் சிறையில் வதையாய் சித்ரவதைப்படும் போது அவளது ஏக்க நோக்கமெல்லாம் தன்னைக் கொடுமையாய் இரணமாக்கிக் கொண்டிருந்த அந்த வதைப்பவன் மட்டும் நரகத்துக்குப் போய் விடக்கூடாது என்பதே !

எனவே அவனுக்குத் திரும்பத் திரும்ப கிறிஸ்துவின் அன்பையும் அழகையும், பரலோக ராஜ்யத்தின் மேன்மையையும் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

அதற்குப் பதிலாக அவன் அவளுக்குத் தந்ததெல்லாம் அவள் முகத்தில் தன் முஷ்டி முறுக்கிய குத்துக்களும் அதிகப்படியான சவுக்கடிகளுமே! ஆனால் அவற்றுக்கெல்லாம் அவளது பதிலோ, அவனை எப்படியாவது தேவனுக்கு ஆதாயமாக்கி விடுவதில் காட்டிய முனைப்பே !

கடைசியாக, அவளது முயற்சி பலன் தரத்தொடங்கியது.. தேவனது பரிசுத்த வார்த்தை அந்தக் கிரிமினலுக்குள் கிரியை செய்ய.. ஒரு முறை தனக்கு முன் கொண்டு வரப்பட்ட அவளைப் பார்த்துக் கேட்டான்.." உன் கடவுளைப் பற்றி இன்னும் சொல்லு.."

பொதுவாக சித்ரவதை செய்பவர்கள் கைதிகளை அடித்து அடித்தே களைத்துப் போய், இடையிடையே டீ குடிக்க உட்கார்ந்து விடுவது வழக்கம். அப்படிப்பட்ட இடைவேளைகளில் அவர்கள் சிகரெட் ஊதிக் கொண்டே தங்கள் கைதிகளைப் பேச விட்டு கேலி செய்வது அவர்களது பொழுதுபோக்கு. அப்படி ஒரு இடைவெளியில் அவனது உத்தரவின்படியே Annie பேச ஆரம்பித்தாள்...

" நீ வீணாகப் போட்டு என்ன அடிக்கிற.. நீ என்னை அடிக்கிறதுனால என் ஆண்டவர் மேல எனக்கிருக்கிற அன்பையோ, என்னை வதையாய் வதைக்கிற உன்னை நான் உளமாற நேசிக்கிற என் நேசத்தையோ உன்னால எடுத்துப் போடவே முடியாது.."

"ஏய் ஏய் ! பொதுவா பசங்க தங்கள் காதலை முதல்ல சொல்லட்டும்னு தான் பொண்ணுங்க காத்திருப்பாங்க.. நீ என்ன ? தேவையில்லாம அன்பு, நேசம், காதல்னு என்னென்னமோ உளர்ற..நாங்க ஒண்ணும் இங்க காதல் கத்தரிக்கா வியாபாரத்துல இல்ல..ஞாபகம் வச்சிக்க..

மரியாதையா இரகசிய சபைகளைப் பத்தின இரகசியங்களைச் சொல்லிரு..இல்லன்னா நான் அடிக்கிற அடியில உன் கடவுள் மேலயும், என் மேலயும், மத்தவங்க மேலயும் நீ வச்சிருக்கிற இந்த அன்பு, காதல்-லாம் காஞ்சு காணாமப் போயிரும்..!

அவள் பேச ஆரம்பித்தாள்..

"நீ என்னை அடிக்கும் போது உன் கையைப் பார்க்கிறேன்..எவ்வளவு அழகான கரங்கள்! இந்தக் கைகளால் உன் மனைவியை நீ அன்போடு வருடிக் கொடுக்கும் போது அவளுக்கு ஏற்படும் சந்தோஷத்தை நினைக்கிறேன்.. ஆனால் அதே இந்தக் கைகளால் என்னைப் போன்றவர்களை நீ அடிப்பதால் என்ன நன்மை உண்டு ?"

"இந்தக் கைகளால் அடிவாங்கும் எங்களுக்கு மட்டுமல்ல..எங்கள் அலறுதலை அன்றாடம் கேட்டுக்கேட்டு உன் காதுகள் செவிடாகிப் போகவில்லையோ ? அடிக்கிற இந்த உன் கைகள் அன்பை வெளிப்படுத்தும் கரங்களாய் ஏன் மாறக்கூடாது ?"

"இன்னும் ஒரு காரியம் சொல்வேன் கேள் ! இது எந்த ஒரு வாலிபப் பெண்ணும் ஒரு இளைஞனிடம் சொல்ல மிகவும் யோசிக்கும் ஒன்று..அதுவும் நாங்கள் இங்கே கட்டப்பட்டிருக்கும் மிக மோசமான சூழ்நிலையில்..ஆனாலும் சொல்கிறேன்..

"உனக்குத் தெரியுமா உன் உதடுகள் எவ்வளவு வசீகரமானவை என்று ? உன் மனைவியை நீ முத்தமிடும்போது உண்மையிலே அவள் உன் அன்பில் மயங்கித்தான் போவாள் !"

"நான் ஒன்று கேட்கட்டுமா ? இவ்வளவு அழகான இந்த உதடுகளை, நீ கூச்சலிடுவதற்கும் அசுத்த வார்த்தைகளை அள்ளி வீசுவதற்கும்

பயன்படுத்த வேண்டுமோ ? அன்பையும் நேசத்தையும் வெளிப்படுத்துவதற்கு அல்லவோ கடவுள் இந்த அழகிய உதடுகளை நமக்குத் தந்திருக்கிறார் !"

அவள் பேசப்பேச, அவளை ஒரு ஜந்துவைப் போல பார்த்துக் கொண்டிருந்த அவன்.." ஏய் எங்கடி இந்த மாதிரி முட்டாள்தனமா பேசக் கத்துக்கிட்ட..?"

அவள் சொன்னாள்..
"எனக்கும் ஒரு Boy Friend உண்டு..அவ்ளோ அழகு..அவன் என்னை நேசிக்கிறதுனால இல்ல..நேசமே அவன் தான்..எங்கிட்ட எதுவுமே எதிர்பார்க்காத அன்பு அது..என் Boy Friend கிடச்ச நாள்லருந்து என்னால அன்பு ஒண்ணு தான் செய்ய முடியுது.."

"யாரும் என்னை நேசிக்கிறாங்களோ வெறுக்கிறாங்களோ, அவன் எனக்கு கிடைச்சதிலருந்து, அன்புன்னா என்னன்னு நான் அவன் கிட்ட பாத்து கத்துகிட்ட நாள்ல இருந்து என்னால அன்பு மட்டும் தான் செய்ய முடியுது.."

"நீ நேசிக்கிறதெல்லாம் வெறுப்பு ஒண்ணைத் தான்..ஆனா அன்பை நேசித்துப் பாரேன் ! நீயே அன்பா மாறிடுவ !"

அவள் பேசி முடித்ததும் அவள் முகத்திலே அவனது அடி இடியாய் இறங்க, அந்த காங்க்ரீட் தரையில் நெற்றிப் பொட்டு அடித்து மயங்கி விழுந்தாள்..

அவள் தன் சுய நினைவுக்கு வந்த போது, அவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். ஏதோ ஆழமான ஒன்று அவனுக்குள் நிகழ்ந்திருந்தது...

பேச ஆரம்பித்தான்..

" இவ்வளவு நேரம் உன்
Boy Friend ஐ பற்றி தான் யோசித்துக் கொண்டிருந்தேன்.. அவன் சொல்றதுல ஏதோ அர்த்தம் இருக்குது.. அடிக்கிறதை விட அன்போடு வருடிக் கொடுப்பதும், கெட்ட வார்த்தையால திட்டுவதை விட, அன்பாய் முத்தமிடுவதும் உண்மையிலே நல்லதுதான் இல்லையா? இந்த ஒரு சின்ன உண்மை கூட தெரியாம இருந்திருக்கேன்.. சரி.. உன் boy friend யாருன்னு சொல்லுவியா?"

எல்லா நாமத்துக்கும் மேலான அந்த நாமத்தைக் குறித்து அவனுக்கு Annie Mary சொல்லச் சொல்ல..

"நானும் அவரை என் நண்பனாக்கிக் கொள்ள விரும்புகிறேன்.. என்ன செய்யணும் சொல்லேன்..."

அவள் சொன்னாள்..

"நீ மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுக்கணும்.."

"அப்படின்னா இப்பவே எனக்கு ஞானஸ்நானம் கொடு..."

"ஐயோ என்னால கொடுக்க முடியாது.."

அவன் தன் ரிவால்வரை அவளுக்கு நேராக நீட்டி.."ஏய் இப்பவே எனக்கு நீ ஞானஸ்நானம் கொடு.. இல்லன்னா உன்னை சுட்ருவேன்.. " என்று கத்தினான்.

நமக்கு வேண்டுமானால் இது விநோதமாகத் தெரியலாம். ஆனால் "பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது ... பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.. (மத் 11.12) என்ற வார்த்தை இந்த சந்தர்ப்பத்திலும் நிச்சயமாகவே பொருந்தும்..

அவளை இழுத்துக் கொண்டு சென்ற அவன், சிறை வளாகத்திலிருந்த ஒரு குளத்தில் அவளைத் தள்ளிவிட்டான். அங்கே Anne Mary அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தாள்.

சில நாட்கள் சென்று, மனம் திரும்பிய அந்த சித்ரவதைக்காரன், தான் விடுதலையாகும் நாளன்று இறந்து போன வேறொரு பெண் கைதியின் பெயரில், தன் உயிரைப் பணையம் வைத்து, பேப்பரில் அவளது பெயரை மாற்றி Anne Maryக்கு விடுதலை ஆவணங்களைக் கொடுத்து இரகசியமாய் வெளியேற வைத்தான்!

- ***சீன சபைத் தலைவராகிய வாட்ச்மன் நீயிடம் இருந்ததோ ஆறே ஆறு மணி நேரம் தான். தனது சிறை அறையின் கதவுகளுக்கு வெளியே நின்று கொண்டிருந்த அந்தக் கம்யூனிஸ்ட் Guard க்கு சுவிசேஷம் சொல்லி அவனைக் கிறிஸ்துவுக்குள் நடத்தினாலொழிய அங்கே சிறைக்கு***

வெளியே இருக்கும் கிறிஸ்தவர்களைத் திடப்படுத்தி பெலப்படுத்தும்படி, தான் எழுதி வைத்திருக்கும் கடிதத்தை அவன் மூலமாகவே அவர்களுக்குக் கொண்டு சேர்ப்பது கூடாத காரியம். வாட்ச்மன் நீ, அதை அவன் மூலமாகவே செய்ய வேண்டியிருந்தது ..

அங்கே தனக்குக் காவலுக்கு நின்று கொண்டிருந்த போலீஸுக்கு பிதாவின் அன்பைச் சொல்லி, அவன் தன் மாம்சப் பிரகாரமான காரியங்களை விட்டுவிட்டால் நித்திய நித்தியமாய்ப் பரலோகத்தில் வாழலாம் என்று சுவிசேஷத்தைச் சொல்லிவிட்டு, "கம்யூனிஸம் உன்னைப் பரலோகம் கொண்டு போய் சேர்க்கப்போவதில்லை.. இயேசு கிறிஸ்துவின் ஆத்தும் மாத்திரமே அதைச் செய்ய வல்லது"என்று முடிக்கிறார், வாட்ச்மன் நீ..

ஐந்து மணி நேரம், நீ யின் சுவிசேஷத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த செக்யூரிட்டி, கண்ணீரோடு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிறான். இப்போது இன்னும் ஒரு ஆத்துமா ராஜ்யத்துக்கென்று ஆதாயம் செய்யப்பட்டு, வாட்ச்மன் நீயின் இன்னுமொரு அழகான கடிதமொன்று கடத்தப்பட்டுக் கைமாறிப் பத்திரமாய் இரகசிய சபை விசுவாசிகள் கைகளில் சென்று சேர்கிறது.

- சிறையில் போதகர் ரிச்சர்டு உம்பிராண்ட் இருந்த நாட்கள் அவை.. அங்கே அவரோடு ஜெயிலில் இரண்டு சீன விசுவாசிகள் குளிரில் நடுங்கிக் கொண்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.. இருவர் மேலும் குளிர் தாங்க முடியாத மெல்லிய கம்பளி..

"எனக்கு முன் நடுங்கிக் கொண்டிருக்கும் இவரே ஒருவேளை இயேசு கிறிஸ்துவாய் இருப்பாரானால் நான் என் கம்பளியை அவருக்குக் கொடுக்க மாட்டேனோ?" என்று எண்ணிய அவர்களில் ஒருவர், தனது கம்பளியை நடுங்கிக்கொண்டிருந்த மற்றவர் மேல் போர்த்துகிறார்..

- கம்யூனிசச் செம்படையின் இரும்புக்கரக் காலங்கள்.. ருமேனியாவின் இரும்புத்திரைச் சுவர்களுக்குப் பின்னே.. வெளி உலகால் மறக்கப்பட்ட மனிதர்கள்..ஊழியர்கள்..கிறிஸ்தவர்கள்..

அங்கே..

➢ இரண்டு மூன்று கைதிகள் எங்கள் முதுகில் ஏறி சவாரி செய்ய, அந்த நிலையில் நாங்கள் சிறையின் தரையைக் கழுவுவோம். புறங்கைகள் விலங்கிடப்பட்டிருக்க, முழங்காலில் குனிந்த நிலையில், தரையில்

விசியெறியப்பட்டிருக்கும் ரொட்டிகளைப் பன்றிகளைப் போலத் தின்று, சுடச்சுட சூடான சூப்பை அதே நிலையில் குடிக்க நிரப்பந்திக்கப்பட்டு, கடைசித் துண்டு ரொட்டியைக்கூட நாவால் நக்கி நக்கி எடுத்து, தங்கள் பாத்திரங்களையும் தங்கள் வாயாலேயே சுத்தம் செய்ய வேண்டிய அந்த நிர்ப்பாக்கிய நிலையையும் தாண்டி தங்களை வதைத்தவர்களையும் கர்த்தருக்காக ஆதாயப்படுத்தி முளைத்து நின்ற ஒரு ஜனம் !

➢ 16 கைதிகள் (ஊழியர்களும் விசுவாசிகளும்) ஒருவர் மேல் ஒருவர் படுக்க வைக்கப்பட்டு, சரீர அழுத்தம் தாங்காமல், எல்லாருக்கும் கீழே கிடத்தப்பட்டவரின் அடிவயிறு அழுத்தப்பட்டு, கழிவறையிலே நடக்க வேண்டியது சிறையறையிலேயே நடந்துவிட, அதையும், தன் உள்ளாடையையும் தன் வாயாலேயே சுத்தம் செய்ய பலவந்தப்படுத்தப்பட்டு, அந்த மனிதன் அதை மறுக்க, அவனது கை விரல்கள் கட்டைகளுக்கு இடையே செலுத்தப்பட்டு, நொறுக்கப்படுகின்றன..

அந்நிலையிலும் தன்னை வதைக்கிறவனுக்காக ஜெபித்து, அவனையும் கிறிஸ்துவுக்காக ஜெயித்து ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

➢ சிறை வளாகத்தில் ஒரு பெரிய கழிவறை டாங்க்.. மலமும் சிறு நீரும் கலந்து நிறைந்து மிதக்க, கழுத்து வரை அதிலே நிற்கும் அளவுக்கு மணிக்கணக்காக அதற்குள்ளேயே நிற்க வைக்கப்படும் ஒரு விசுவாசி..

தன்னிலை மறந்து, தன்னிலே அன்புகூறுகிற அவராலே அனைத்தையும் ஜெயம் கொண்டு, தன்னை சித்திரவதை செய்தவனையும் அன்பினாலே தேவனுக்காக ஆதாயப்படுத்திக் கொண்ட நின்ற ஒரு கூட்டம் !

➢ சிறையில் அடைக்கப்பட்ட கத்தோலிக்கக் கன்னியாஸ்திரீகள் மூலம் கூட அநேகக் கம்யூனிஸ்ட்டுகளின் குடும்பங்களில் தேவன் அற்புதங்களைச் செய்தது ஒரு பக்கமிருக்க, அதே கன்னியாஸ்திரீகள் கம்யூனிச பாசிசத்துக்குத் தலைவணங்க மறுத்து நின்ற போது, கொல்லும் சைபீரியக் குளிரின் கான்ஸன்ட்ரேஷன் கேம்ப்புகளில் அவர்களது மதிப்பிற்குரிய உடைகள் உரியப்பட்டு, நிற்க வைக்கப்பட்ட கொடூரத்திலும் தங்கள் நேசருக்காய் வைராக்கியமாய் நின்று சாதித்து, தங்களைக் கொடூரப்படுத்தியவர்களையும் தங்கள் சாட்சியினால் கிறிஸ்துவுக்காக ஜெயித்து ஜெயம் கொண்டு நின்ற ஒரு ஜனம் !

இப்பேர்ப்பட்ட கொடூர சூழலிலும்..

- தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள் இவர்களே !

- தங்கள் நற்சாட்சியின் மூலம் தங்களை வதையாய் வதைத்தவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினவர்கள் இவர்களே !

---

2. ருமேனியாவிலே அரங்கேற்றப்பட்ட வார்த்தைகளால் விவரிக்க இயலாத சித்ரவதைகளை Dr.Bacu தன் டைரியில் எழுதுகிறார்..

- நாள் முழுவதும் கால் நீட்டிய நிலையில், கைகள் முழங்காலைத் தொட, தலை மேல் நோக்கி, இங்குமங்கும் அசைய உத்தரவின்றி, இப்படியே தொடர்ந்து 16 மணி நேர வதைக்குப் பின் தூங்க அனுமதிக்கப்பட்டாலும், தலை மேல் நோக்கி, கால் நீட்டி, கைகள் முழங்காலைத் தொடும்படி நீட்டப்பட்ட நிலையிலேயே இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டு, சில முடியாத வேளைகளில் உட்கார்ந்திருக்கும் பொஸிஷனை சற்று மாற்றினால், அங்கே எங்களையே கண்கொத்திப் பாம்பாய்ப் பார்த்துக் கொண்டிருக்கும் ஜெயிலரால் பலமாய்த் தாக்கப்பட்டோம்.

- நெற்றிப் பொட்டிலோ, நெஞ்சுப் பகுதியிலோ, கழுத்திலோ கைதிகளை அடிக்கக்கூடாது என்பது உத்தரவு. சித்ரவதையினால் உண்டாகும் சரீர மரணத்தை கம்யூனிஸ்ட்டுகள் விரும்புவதில்லை.

ஆகவே பேய்த்தனமான ஒரு பரிசோதனையை அவர்கள் கிறிஸ்தவர்கள் மேல் பரீட்சித்துப் பார்த்தனர் - அது சரீர மரணத்தை அல்ல - ஆவிக்குரிய மரணத்தை உண்டாக்குவது. அவ்வப்போது அவர்கள் கிறிஸ்தவர்கள் மீது நிகழ்த்திய மிக விபரீதமான ஆய்வு அது..

சகோதரரில் சிலர் ஓரினச் சேர்க்கையாளர்களுடன் ஒரே செல்லில் அடைக்கப்பட்டு, அவர்கள் அப்படிப்பட்ட பாவத்துக்கு உள்ளாகும்படி கட்டாயப்படுத்தப்பட்டு அதை அவர்களுக்குத் தெரியாமலேயே வீடியோ எடுத்து அதை வைத்தே அவர்களை மிரட்டித் தங்கள் இஷ்டத்துக்கு அவர்கள் பணிய வைக்கப்பட்டனர்.

- ஒரு ஈஸ்டர் நாளன்று, ஒரு பைபிள் காலேஜ் மாணவனை துணிகளால் சுற்றி இயேசு கிறிஸ்துவைப் போல நடிக்க வைத்தனர். கிறிஸ்து சிலுவை சுமந்து கொல்கொதாவுக்கு நடந்து செல்வது போலவே சிறை அறையிலே நடக்க வைக்கப்பட்ட அவனது கழுத்திலே சோப்பினால் (soap) செய்யப்பட்ட ஒரு ஆணுறுப்பு தொங்க விடப்பட்டிருந்தது.

மற்ற கிறிஸ்தவ கைதிகள் அந்த மாணவனுக்கு முன் வணங்கி அந்த உறுப்பை முத்தம் செய்து, "எங்கள் சர்வ வல்லவரே, உமக்கு முன் நாங்கள் தெண்டனிட்டு வணங்கிப் பணிகிறோம்.." என்று கட்டாயப்படுத்தி செய்ய வைக்கப்பட்டனர்.

அவர்களது கேலி நையாண்டிக்கும் நிந்தை அவமானத்துக்கும் தலைவணங்கிக் குனியாத ஒரே ஒருவர் இருந்தார். அவர் அதன் பிறகு மணிக்கணக்காய்ப் பட்ட சித்ரவதை சொல்லிமுடியாது.

- இப்படி ஒரு சித்ரவதை ! "வாயைத் திற..!" துப்பாக்கியை வாய்க்குள் செலுத்தி.." இன்று இது தான் உனக்கு இராப்போஜனம்.." என்று கூட, குண்டு வாய் வழியே பின்பக்கமாய்ப் பாய்கிறது..

செத்து விழுந்தாலும், துணிந்து நின்று இப்படிப்பட்டவைகள் மேலும் ஜெயம் கொண்ட ஒரு ஜனம் !

- ஆண்களின் ஆணுறுப்பைக் கம்பால் அடிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்த ஒரு பெண் ஜெயிலர்.. வார்த்தைகளால் வர்ணிக்க இயலா வேதனையிலும், அப்படிப்பட்டவர்களின் மனதையும் கிறிஸ்துவுக்கென்று கொள்ளை கொண்டு வென்று நின்ற ஒரு ஜனம் !

கிறிஸ்துவுக்காக தேவ ஜனங்கள் அனுபவித்துக் கடந்து போன இவைகளெல்லாம் நமது இன்றைய இந்தியக் கிறிஸ்தவம் அறியாதவை ! அறிய விரும்பாதவை ! அறிந்தாலும் ஜீரணிக்க இயலாதவை ! ஆனால் அறிந்தே ஆக வேண்டியவை !!

இவைகள்..

முகம் சுளிக்க வைப்பவை..!
எலும்புகளை சில்லிடச் செய்பவை..!

"எங்களுக்கு வேண்டாம்.."என்று வெறுக்க வைப்பவை..!

கண்களை மட்டுமல்ல, புத்தகத்தையும் மூடி, தூக்கியெறியச் செய்பவை..!

ஆனால் இப்பேர்ப்பட்ட கொடூர சூழலிலும்..

- தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள் இவர்களே !
- தங்கள் நற்சாட்சியின் மூலம் தங்களை வதையாய் வதைத்தவர்களையும் கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்தினவர்கள் இவர்களே !

• மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் சத்துருவை ஜெயித்து நின்றவர்கள் இவர்களே !

• மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்களே !

• தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்து வெண்ணங்கி தரித்தவர்களாய், தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்துக்கு முன்பாக நின்று அவரை சேவிப்பவர்கள் இவர்களே !

ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ..

ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ..

ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ..

...என்று தமது ஏழு சபைகளின் தூதர்களுக்கும் இப்படிப்பட்டவர்களைப் பற்றியல்லவோ ஒவ்வொன்றிலும் தெள்ளத் தெளிவாய் எழுதச் சொன்னார் !!

கிறிஸ்துவுக்காக 13 வருடங்கள் ருமேனிய சிறைச்சாலையின் சித்ரவதை நரகத்துக்குள் சென்று, பாதாளத்தை வென்றவரோடு சேர்ந்து தானும் ஜெயித்து வெளிவந்த ரிச்சர்ட் உம்பிராண்ட் அவர்கள் 1993ல் எழுதிய கடைசி புத்தகம் "ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ.."

ரிச்சர்ட் உம்பிராண்டின் படுவேதனையில் பரமவெற்றி ஒன்று மட்டுமே தமிழ் கிறிஸ்தவ உலகம் அறிந்தது. ஆனால் அவர் எழுதியுள்ள ஆங்கிலப் புத்தகங்கள் அநேகம் !

கண்ணீரிலும் இரத்தத்திலும் தோய்த்தெடுக்கப்பட்ட அவைகளின் பக்கங்கள் ஒவ்வொன்றும் பக்கம் பக்கமாய்க் கதை சொல்லும் !

"ஏதோ ஒரு தேசத்திலே எங்கேயோ, எப்போதோ, யாருக்கோ நடந்திருக்கும் போலிருக்கிறது, ஐயோ பாவம்" என்று 'உச்சு' கொட்டிவிட்டு போவதற்காகப் பதிவிடப்படுபவை அல்ல இவைகள்..

இந்த வரலாறுகள் இங்கே இதோ, இந்த நாட்டிலேயே திரும்பப்போகும் இந்நாட்களிலே இன்றைய இந்தியத் திருச்சபை அறிந்தே ஆக வேண்டிய இன்றியமையாத செய்திகள் இவைகள் !

"The Conquerers" என்ற ஆங்கிலப்பதிப்பிலிருந்து மொழிபெயர்த்து வெளியிடப்படும் சில பகுதிகள் இவை..

"ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ.."

3. "சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்வதற்கு எங்களுக்கென்று ஒன்று இல்லை...அதை இழப்பதற்கு.."

பல்கேரியாவின் பெலின் சிறைச்சாலையிலே, பட்டினி போடப்பட்ட நாய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஒரு பெரிய குழி உண்டு. சிறை விதிகளை மீறும் கைதிகள் ஆடைகள் உரியப்பட்டு அதிலே தள்ளி விடப்படுவார்கள். அங்கேயும் சில சமயங்களில் தேவன் அற்புதங்களைச் செய்ததுண்டு.

ட்ரோஃபிம் டிமிட்ரோவ் என்ற கிறிஸ்தவ சகோதரர் ஒருவர் வெறி நாய்கள் அடைக்கப்பட்ட குழியில் வீசியெறியப்பட்டார். குழிக்கு நடத்திக் கொண்டு போகப்படும்போது, தன்னை வதைப்பவர்களுக்காக ஜெபித்துக் கொண்டே சென்றார் அந்த சகோதரர்..

அவர் குழிக்குள் தள்ளி விடப்பட்டது தான் தாமதம்..
குழிக்குள்ளிருந்து நாய்கள் பயங்கரமாக அலறும் சத்தம் கேட்டது.. சிறை அதிகாரிகள் குழிக்குள் எட்டிப்பார்த்தபோது, சகோதரர் டிமிட்ரோவ் குழிக்குள் முழங்காலில் நின்று ஜெபிப்பதையும், நாய்கள் அவரிடமிருந்து வெளிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தியைக் கண்டு, பயந்து அலறிக் குலைத்துக் கொண்டு குழியின் சுவர் ஏறி தலைதெறித்து ஓட முயல்வதையும் கண் டனர்.

தேவன் சிலருக்கு இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்வதும், சிலரை கடைசி வரை தங்களுக்குத் தரப்பட்ட கசப்பான பான பாத்திரத்திலேயே பருகும்படி செய்ய அனுமதித்து விடுவதும் நாம் புரிந்துகொள்ள முடியாத தேவ இரகசியமாகவே இருக்கிறது.

- க்யூபாவிலே தங்கள் விசுவாசத்துக்காக சிறைப்பட்டிருந்தவர்களோடு

அரசியல் கைதிகளுமாகச் சேர்த்து கிட்டத்தட்ட 30,000 பேர் இருந்தனர்.

க்யூப சிறைச்சாலைகளிலிருந்து இரகசியமாய்க் கடத்தப்பட்ட ஒரு ஆவணத்தின்படி, மற்றவர்களோடு இருந்த நமது விசுவாச சகோதரர்கள், அடுத்தடுத்து ஐஸ் தண்ணீரிலும் உடனேயே கொதிக்கும் சுடு தண்ணீரிலும் குளிக்க வைக்கப்பட்டு குளித்து வெளிவந்தவுடனே, அவர்கள் உடலின் மேல் கந்தகம் வீசப்பட்டு, அவர்கள் சரீரத்தின் தோல் நெருப்பாய் எரிய வைக்கப்பட்டன.

அநேகர் புல்டோசர் ஏற்றி நசுக்கிக் கொல்லப்பட்டனர்..

● ஹங்கேரியில் என்னோடு சிறை அறையிலிருந்த "ரோமன் பிரகா" என்ற மடாதிபதி ஒருவர் தன்னோடு இருந்த ஒரு கிறிஸ்தவருக்கு நேர்ந்ததைச் சொன்னார்..

கையில் துப்பாக்கியுடன் நின்ற கம்யூனிஸ்ட்டுகள், அந்தக் கிறிஸ்தவருக்கு முன்னால் இரண்டு காரியங்களை வைத்தனர்..."உன் சொந்த மகளை நீயே கற்பழிக்க வேண்டும்...அல்லது சுட்டுக்கொல்லப்படுவாய்.."- அவர் பிந்தியதைத் தெரிந்து கொண்டார்.

கம்யூனிசச் சிறை நரகத்தில் நடக்கும் கொடுமைகளை மிகவும் மிகைப்படுத்தி ரூபாகரமாய் பயங்கரமாக்கிக் காட்டுவதாக என் மேல் (ரிச்சர்டு உம்பிராண்ட்) குற்றஞ்சாட்டுபவர்கள் உண்டு. ஆனால் ஏற்கனவே பயங்கரமாய் அரங்கேறிக் கொண்டிருக்கும் ஒன்றை இன்னும் பயங்கரமாய் ரூபாகரப்படுத்திக் காட்ட இந்த உலகில் யாரால் முடியும் ?

"கிறிஸ்தவர்களே கிறிஸ்தவர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.." என்று பொய்யான வதந்தியை சோவியத் தினசரிகள் அடிக்கடி வெளியிடுவதுண்டு.

கிறிஸ்தவர்கள் தங்களுடையவர்களையும் தங்களுக்கு அடுத்தவர்களையும் நேசிக்கவும் அவர்களது ஜீவனை இரட்சிக்கவுமே வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்ததை உலகமே அறியும்.

ஆனால் கம்யூனிசக் கூடங்களில் மட்டும் "கிறிஸ்தவர்கள் தங்கள் ஜெபக் கூடுகைகளில் ஒருவரை ஒருவர் சாகடிக்கிறார்கள்" என்று திட்டமிட்டு பொய் பரப்பப்பட்டது.

கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் தங்கள் மருத்துவமனைகளில் ஈவுஇரக்கமின்றி குழந்தைகளைக் கொல்லுகிறார்கள் என்ற செய்தியும் தீயாய்ப் பரவியிருந்தது.

மொத்தத்தில் சோவியத் கிறிஸ்தவர்களுக்கு சொந்த வாழ்க்கை என்று சொல்லிக் கொள்ள ஒன்று இருந்ததில்லை..அதை இழப்பதற்கு..

இந்தப் புத்தகம் (The Overcomers) எழுதப்பட்டதின் நோக்கமே, தங்கள் வாழ்க்கையில் சித்ரவதையின் சிறைக்கூடங்களில் நடந்தவர்கள் கிறிஸ்துவுக்காக சகித்த சொல்லமுடியாத இரணங்களின் மத்தியிலும், "தான் அடிக்கப்பட்டபோது சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போல வாய் திறவாதிருந்த ஆண்டவரைப் போல வாய்திறவாதிருந்த அவர்களின் மாதிரியை மற்றவர்களுக்குக் காண்பிக்கவே !" என்கிறார் உம்பிராண்ட்.

அப்படிப்பட்ட ஒரு வாய்திறவா தேவ அமைதியும் மௌனமும் அந்தந்த நேரத்தில் அருளப்படும் ஒரு கிருபை வரமேயன்றி வேறல்ல..

ஆனால் அது பயிற்சியும் முயற்சியுமின்றி தானாகவே வருவதுமல்ல..

4." மரியாளுக்கு தூதன் நற்செய்தி சொன்ன நாள் போன்ற ஓர் நன்னாள்.."

நான் சிறையில் இருந்த நாட்களில் என்னோடு இருந்த ஜோன் லுகாஜனு என்ற வாலிபன் ஒருவன் ஒரு நாள் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டான்..

அவன் திரும்பி வந்த போது அவனது முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. "என்ன நடந்தது ?" என்று மற்ற கைதிகள் கேட்டனர்.

அவன் சொன்னான்.."ஓ ! காபிரியல் தூதன் மரியாளுக்கு இயேசுவின் பிறப்பை நற்செய்தியாய்ச் சொன்ன நாள் போலிருந்தது இன்று எனக்கு ! என்ன ஒரு அழகான நாள் இது !!" என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு பேச ஆரம்பித்தான்..
ஒரு களங்கமற்ற கன்னிப்பெண் தேவனுக்கு முன் ஜெப தியானத்தில் அமர்ந்திருக்கிறாள்..அங்கே திடீரென்று வெட்டிப் பிரகாசிக்கும் ஒளியில் தேவதூதன் அவள் முன் வந்து நிற்கிறான்..

"சிருஷ்டியாகிய நீ உனது சிருஷ்டிகரையே குழந்தையாக உன் கரங்களில் ஏந்தியிருப்பாய்..ஒரு நாளில் உலகத்தின் பாவங்களைக் கழுவி சுத்திகரிக்கிற அவரை உன் கரங்கள் கழுவி எடுக்கும்..
சிருஷ்டியாகிய நீ உனது சிருஷ்டிகரையே நடை பயிலச் செய்வாய்..

தேவனுடைய வார்த்தையாகிய அவருக்கே நீ பேசக் கற்றுக் கொடுப்பாய்.."

"அவரே உன் வீட்டின் சூரியனும் மகிழ்ச்சியுமானவர்..ஆனால் சில கடின நாட்களும் உனக்கு உண்டு...அநேகருடைய மீட்புக்காக உனது மகனும் தேவ குமாரனுமான அவர் சிலுவையில் தொங்கும் நாளில் நீ அங்கே சிலுவை அடியில் அழுது கொண்டு நிற்பாய்..
ஆனாலும் உன் துக்கம் சந்தோஷமாய் மாறும்."

"அவர் உயிரோடு எழுந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்...அவரது தாயாகிய உன்னையும் தன்னோடு இருக்கும்படியாக பரலோகத்தில் அழைத்து சேர்த்துக் கொள்வார்...அங்கே எல்லையில்லா மகிழ்ச்சியும் சந்தோஷமும் எப்போதும் எப்போதுமே !!"

ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்து விட்டிருந்த ஜோனுக்கு நன்றி சொல்லிவிட்டு, "சரி ஜோன்..இன்னைக்கு
கோர்ட்ல என்ன நடந்தது ? அதையும் சொல்லு.." என்றனர் உடன் கைதிகள்..

அவன் சொன்னான்..
"அதான் நான் சொன்னேனே..
இன்னைக்கு நாள் எனக்கு மரியாளுக்கு தேவதூதன் நற்செய்தி சொன்ன நாள் போல இருந்தது என்று.."

"எனக்கு மரண தண்டனை என்று இன்று கோர்ட்டில் அறிவிக்கப்பட்டது..இது எவ்வளவு பெரிய நற்செய்தி இல்லையா ? இன்றைய நாள் எவ்வளவு அழகான நாள்.. !

"பன்னிரண்டு முத்துக்களாலான பரலோக வாசல்கள் ! பொற்தள வீதிகள் ! வீணைகள் மீட்டும் தூதர்கள் ! பரிசுத்தவான்களின் இனிமையான ஐக்கியம் ! கிறிஸ்துவுக்காக பாடுபட்டவர்களின் சாட்சிகள்! எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவின் மார்பில் சாய்ந்து இளைப்பாறுதல்.. !"

"இப்போ சொல்லுங்க..
இன்றைக்கு நாள் எனக்கு, தூதன் மரியாளுக்கு நற்செய்தி சொன்ன நாள் போன்றதா இல்லையா ?"

கம்யூனிச நாடுகளில் கிறிஸ்தவர்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் மரணத்தையும் ஆவலாய் அள்ளி அணைத்துக் கொண்டது இப்படித் தான் !

நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவைகள் தான் எத்தனை எத்தனை !!

5."பாப்திஸ்து விசுவாச வீரர்கள் "

சோவியத் யூனியனின் கிறிஸ்தவக் கைதிகளின் உறவினர்கள் ஐக்கியத்தின் பத்திரிக்கை ஒன்று நீதிமன்ற விசாரணை வாதபிரதிவாதச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

புதிய ஏற்பாடுகளையும், ஆவிக்குரிய கைப்பிரதிகளையும், பரிசுத்த வேதாகமங்களையும் விநியோகித்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டு நிக்கோலேவ் நீதிமன்றத்தில் சகோ. ஜார்ஜ் ஜெல்ட்டனோஷ்கோவும் சகோதரி. நடேஜா ட்ரோஷென்கோவும் ஆஜர்படுத்தப்பட்டனர்..

ஜெல்ட்டனோஷ்கோ தைரியமாய்ச் சொன்னார்.."எனக்காக வழக்காட ஒரு வக்கீல் வேண்டியதில்லை..நான் செய்ததில் எந்தத் தவறும் இல்லை..நான் செய்தது சரி என்றே நான் திட்டமாய்ச் சொல்வேன்..தன்னைத் தானே காத்துக்கொள்வதற்கு நீதிக்கு எந்த அவசியமுமில்லை.."

"நீ செய்தது குற்றம் என்று நீ ஒத்துக் கொள்கிறாயா ?" - கம்யூனிஸ்ட் நீதிபதி

"இல்லை..கிறிஸ்தவ பிரசுரங்களை விநியோகிப்பது ஒரு கிறிஸ்தவனின் கடமை.." - ஜெல்ட்டனோஷ்கோ

" கம்யூனிச சட்டதிட்டங்களை மதித்து கிறிஸ்தவ மதம் பரப்பும் வேலைகளைச் செய்யாத ஸ்தாபன சபைகளைப் (உளவு சொல்லிக் காட்டிக் கொடுக்கும் சபைகள்) பார் ! - ஜட்ஜ்

"உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளையே நான் பின்பற்றுவேன்..வேறு யாரையும் அல்ல.." என்று ஜெல்ட்டனோஷ்கோ திட்டமாய் பதில் சொன்னார்.

அந்த கம்யூனிஸ்ட் நீதிபதி தொடர்ந்தார்.."ஸ்தாபன சபைகளைப் பார்..அவர்கள் கம்யூனிசத்தோடு ஒத்துப்போகவில்லையா ? உங்களைப் போன்ற இரகசிய சபைகளும் அவர்களோடு சேர்ந்து விடலாம் அல்லவா? அவர்களும் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் தானே !"

ஜெல்ட்டனோஷ்கோ சொன்னார்.."தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்து பிசாசுகளும் நடுங்குகிறதில்லையோ ?"

"சரி..நீங்கள் ஆராதிக்க எங்கே கூடுகிறீர்கள் ?"

" உண்மையாய் ஆராதிப்பவர்கள் எங்கேயும் ஆராதிப்பார்கள்.."

இருவரின் பேச்சுவார்த்தையில் சகோதரி. ஸினைடா என்பரின் பெயரும் அடிபட்டது. அவரது குற்றம் செம்படையினர் நடுவில் "பரலோக பாஸ்போர்ட்.." என்ற கைப்பிரதி விநியோகித்தார் என்பதே..

அந்தக் கைப்பிரதியில் காணப்பட்டது இது தான் !

பரலோக பாஸ்போர்ட்

பெயர் : கிறிஸ்தவன்.

தகப்பனார் பெயர் : சர்வ வல்ல தேவன்.

கடைசி பெயர் : ஆசீர்வதிக்கப்பட்டவன்.

பிறந்த தேதி : இப்பொழுதே அனுக்கிரக காலம்.. இன்றே இரட்சண்ய நாள்.

பூர்வ தேசம் : பரிசுத்த பூமி.

நகரம் : எருசலேம்.

சொந்த நாடு : புது சிருஷ்டி.

தொழில் : தேவனின் உடன் ஊழியர்.

இராணுவ சேவை : கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகன்.

பாஸ்போர்ட் வழங்கியவர் : விசுவாசம்.

பாஸ்போர்ட் வழங்கப்பட அடிப்படை ஆதாரம் : அன்பு சகலத்தையும் நம்பும்.

சமுதாயத்தில் உங்கள் வர்க்கம் - (பணக்காரரர் / ஏழை / நடுத்தரவர்க்கம்) - கிறிஸ்துவுக்குள் சகலத்திலும் மனரம்மியமானவர்கள்.

சொத்து : இம்மையிலும் மறுமையிலும் சகலத்துக்கும் சொந்தக்காரர்.

குடும்பம் : எண்ணிமுடியா மிகப்பெரிய குடும்பம்.

படிப்பு : சகலத்தையும் அறிந்தவர் (1 யோ 2:20).

வேலை : ஜெபமும் தேவ வசன ஊழியமும்.

இப்படி தேவ வசனத்தை உண்மையாய்ப் போதித்ததின் விலைக்கிரயம் என்ன ?
ஜெல்ட்டனோஷ்கோ மூன்று வருட சிறைத்தண்டனைக்கும் ட்ரோஷென்கோ ஆறு மாத தண்டனைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

எவ்வளவு நீண்டகால சிறைவாசம் என்பதல்ல..ஆனால் இரும்புத்திரைக்குப் பின் அவர்கள் மேலிருந்த இரும்புக்கரம் எவ்வளவு பாரமும் பலமுமாய் இருந்தது என்பதே !

கம்யூனிசச் சிறைகளில் ஒருவரும் மற்றவரோடு தங்கள் விசுவாசத்தையோ நற்செய்தியையோ பகிர முடியாது. அப்படிச் செய்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த தண்டனையின் பயங்கரம் எப்படி இருந்ததென்றால், ஒரு டிட்டென்ஷன் கேம்ப்பில் அந்தத் தண்டனையை எதிர்த்து 15 விசுவாசக்

கைதிகள் தங்கள் உதடுகள் இரண்டையும் சேர்த்துத் தைத்துக் கொண்டார்களாம் !!

- Richard Wurmbrand -

[இவைகள் பதிவிடப்படுவதின் நோக்கம், நமக்கு முன் சென்ற மேகம் போன்ற இந்த சாட்சிகளைப்பற்றி, இன்றைய இந்தியத் திருச்சபை அறிந்தாக வேண்டும் என்பது மட்டுமல்ல, தேசத்தில் வரப்போகும் இப்படிப்பட்ட நாட்களுக்குத் தங்களைக் குறைந்தபட்சம், மனதளவிலாவது ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதே !]

“ அவர்..கண்ணீர்விட்டழுது,
"உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்
உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை
நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்,
இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு
மறைவாயிருக்கிறது...” என்றார்.
(லூக்கா 19:41, 42)

குருதிப் பிரளயம்



CHAPTER - 13

என் ஆண்டவர் அழுகிறது என்ன?



தலைகீழாய் சிலுவையில்
அறையப்பட்ட பேதுரு

CHAPTER-13

என் ஆண்டவர் அழுகிறது என்ன?

இந்த அத்தியாயத்தை வாசிப்பவர்கள், கூடவே, வேதத்திலுள்ள புலம்பல் முதல் அதிகாரத்தை திறந்து வைத்துக் கொள்ளும்படியாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்..

என் ஆண்டவ(ன்)ர் அழுகிறது என்ன?

(2 இராஜா 8:12)

புலம்பலின் புத்தகம் – இன்றைய கண்ணோட்டத்தில்..

கிமு 585...

இஸ்ரவேலரின் 70 வருட பாபிலோனிய சிறையிருப்பின் நாட்கள்...

"என் தலை தண்ணீரும் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்" என்று தன் ஜனத்தின் நிலை கண்டு புலம்பலாய்ப் புலம்பி புலம்பலின் புத்தகம் எழுதினான் புலம்பல் தீர்க்கதரிசி எரேமியா !

கிபி 70...

ரோமர் கையில் சிக்கி யூத ஜனம் சின்னாபின்னமாகிய தீத்து ராயனின் நாட்கள் ...

"உன்னை சந்திக்கும் காலத்தை நீ அறியாமல் போனபடியால்.." என்று அதற்கு முன்பே தன் ஜனத்துக்கு வரப்போகும் நிலை கண்டு எருசலேமைப் பார்த்துப் புலம்பி அழுதார் நம் ஆண்டவர் இயேசு..

இதோ ! வரலாறு திரும்புகிறது!

கிபி 2022...

இந்திய சபைகளைத் திரும்பத் திரும்ப எச்சரித்தும் பலனின்றிப் போனபடியினாலே..

"இதோ, தேசத்தை சுற்றி மட்டுமல்ல, நமது ஜனங்களையும் சபைகளையும் ஊழியர்களையும் சுற்றி கொத்தளங்கள் போடப்பட்டாயிற்று.. நகரத்தையும் சபைகளையும் ஊழியர்களையும் கிறிஸ்தவர்களையும் ஏகமாய்ப் வளைக்க வருகிறார்கள்.."

".....அதற்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிற இன்றைய கல்தேயராம் காவிப்படையின் கையிலே சபை கொடுக்கப்படுகிறது.."

"நீர் சொன்னபடி சம்பவிக்கிறது.. இதோ! நீர் அதைப்பார்க்கிறீர்.." (எரே 32:24)

அன்று எருசலேமைப் பார்த்து, கண்ணீர் விட்ட அதே ஆண்டவர், இன்று நமது தேசத்தையும் நமது சபைகளையும், நமது குடும்பங்களையும் பார்த்து, தேசத்தின் சபைகள் மேல் மிகச் சீக்கிரம் வந்து சம்பவிக்கப் போகும் காரியங்களை முன் கண்டு, ஏற்கனவே அதை எச்சரித்து வந்தும், அவைகளையெல்லாம் புறந்தள்ளி, நிர்விசாரமாய் நித்திரை செய்து கொண்டிருந்த சபையின் மேல், தாம் ஏற்கனவே சொல்லியிருந்த காரியங்கள் வந்து சம்பவித்த பின்பு, தமது ஜனம் அலறுகிற அலறலைக் கண்டு, ஒரு நவீன சிறையிருப்பு அதின்மேல் கடந்து போகும் காலத்தில் அதின் ஒடுங்குதலையும் நொறுங்குதலையும் கண்டு, அதின் கூக்குரலையும் ஓலங்களையும் கேட்டு, கர்த்தர் தாமே அங்கலாய்க்கும் அங்கலாய்ப்பாய்,பெருமூச்சும் ஏங்கலுமாய், புலம்பலின் புத்தகத்தைக் காணும் ஒரு புதிய கண்ணோட்டம்..

அன்று தன் ஜனத்தின் குலை நடுங்கும் நிலை கண்டு புலம்பிய எரேமியாவின் அதே புலம்பலின் வரிகள்...

இன்று இந்திய சபை கடந்து போகப்போகும் நாட்களில் தமது ஜனமாகிய நம்மைக் கண்டு இயேசுவின் அங்கலாய்ப்பின் தொனியாக...

புலம்பலின் புத்தகம்..இன்றைய கண்ணோட்டத்தில்...

புலம்பல் முதல் அதிகாரம்

1:1 - ஐயோ ! ஜனம் பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே!

- ஐயோ! கிறிஸ்தவ ஜனம் பெருத்த என் நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! கணவனும் பிள்ளைகளும் குடும்ப சகிதமாய் ஆனந்தமாய்க் களித்தவள், இதோ ! இன்று சகலத்தையும் பறிகொடுத்தவளாய், கைவிடப்பட்ட விதவைக்கு ஒப்பாகிப் போனாளே!

1:1- ஜாதிகளில் பெரியவளும் சீமைகளில் நாயகியுமாய் இருந்தவள் கப்பங்கட்டுகிறவளானாளே!

- கிறிஸ்தவ ஜனங்களில் பெரியவளும், சபைகளில் பெரியவளும், தன் ஜனங்களுக்குள் பெரியவள் என்று பேர் பெற்றவளும், இரத்தாம்பரமும் பட்டாடைகளும் உடுத்தி, சீமைகளில் (வெளிநாடுகளில்) நாயகியுமாய் இருந்தவளும், பெரிய பெரிய சபைகளையும், வானளாவிய கோபுரங்களையும், தோட்டங்களையும் கட்டி வாழ்ந்தவனும், வாழ்ந்தவளும் சீமானாய், சீமாட்டியாய் சீமைக்குப் பறந்து பறந்து ஊழியம் செய்து கொண்டிருந்தவனும், செய்து கொண்டிருந்தவளும் இன்று புறஜாதிக்குக் கப்பங்கட்டுவனும் கப்பங்கட்டுகிறவளும் ஆகி, அந்நிய ஜாதிக்கு அடிமையாகிப் போனார்களே !

1:2 - இராக்காலத்திலே அழுது கொண்டிருக்கிறாள்.. அவளுடைய கண்ணீர் அவள் கன்னங்களில் வடிகிறது. அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும் அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை.. அவளுடைய சிநேகிதர் எல்லாரும் அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள்...

- ஐயோ! என் சபையாகிய குமாரத்தி இராக்காலத்தில் அழுது கொண்டிருக்கிறாளே! தன் தேசத்துக்காகவும் சபைக்காகவும் அழ வேண்டிய இராக்காலங்களில் அவள் அழுதிருந்தால், ஓ! ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இந்த இராக்காலத்தில் இப்படி இவள் அழ வேண்டிய நிர்பாக்கிய நிலை இருந்திராதே!

- "சீயோன் குமாரத்தியின் மதிலே ! இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு..ஓய்ந்திராதே ! எழுந்திரு! இராத்திரியிலே முதற் சாமத்திலே கூப்பிடு..ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப் போல ஊற்றிவிடு.. எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை

அவரிடத்திற்கு ஏறெடு!" என்று என் சபையே ! உன்னைப் பார்த்துக் காலமெல்லாம் கை விரித்து நின்றேனே! ஓ! என் குமாரத்தியே ! அந்த உன் இரவுகளில் நீ நதியவ்வளவு கண்ணீர் விட்டிருந்தாயானால் இன்று உனக்கு இந்நிலை இல்லையே!

- ஐயோ! இதோ உன்னுடைய கன்னங்களில் கண்ணீர் வடிகிறது.. உன்னுடைய நேசர் எல்லாருக்குள்ளும் உன்னைத் தேற்றுவார் ஒருவருமில்லையே! இதோ! என் சபையே ! நீ யார் யாரையெல்லாம் சிநேகிதர் என்று நினைத்திருந்தாயோ, அவர்களே உன்னைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளும் சத்துருக்களுமானார்களே!

1:3 - யூதா ஜனங்கள் உபத்திரவப்படவும், கொடுமையான அடிமை வேலை செய்யவும் சிறைப்பட்டுப்போனார்கள். அவள் புறஜாதிகளுக்குள்ளே தங்குகிறாள். இளைப்பாறுதல் அடையாள்.. அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடங்களிலே தொடர்ந்து பிடித்தார்கள்..

- ஐயோ! என் ஜனமாகிய விசுவாச ஜனம் சத்துருக்களின் கையிலே கொடுமையாய் உபத்திரவப்படவும் இதோ! அவர்களுக்காகவே கட்டப்பட்ட concentration Camp, detention camp களில் அடிமை வேலை செய்யவும் சிறைப்பட்டுப் போகிறதே!

- இதோ! அவள் தன் புறஜாதிகளுக்குள் தங்குகிறாள்! அவளுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இல்லையே! அவளது சரீரம் கொடுமையாய் வேலை வாங்கப்படுகிறதே! அவளைத் துன்பப்படுத்துகிற யாவரும் அவளை இடுக்கமான இடத்திலே தொடர்ந்து பிடித்தார்களே! அவள் தப்பிப் போகவும் இடமில்லாமல் போனதே !

- ஐயோ! என் சபையே உன்னை நான் எதற்கு ஒப்பாக்குவேன் ? ஓ ! உனக்காக நான் பரிதபிக்கிறேன் !

1:4 - பண்டிகைக்கு வருவார் இல்லாததினால், சீயோனுக்குப் போகிற வழிகள் புலம்புகிறது.. அவள் வாசல்கள் எல்லாம் பாழாய்க் கிடக்கிறது.. அவள் ஆசாரியர்கள் தவிக்கிறார்கள்.. அவள் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்கள்.. அவளுக்குக் கசப்பே உண்டாயிருக்கிறது...

- இதோ! நாட்கள் வருகிறது..உன் பண்டிகைகளின் கொண்டாட்டங்கள் நின்று போனதே! ஐயோ! என் ஜனமே! உன் பண்டிகைகளின் கொண்டாட்டங்கள் நின்று போனதினால், பண்டிகைக்கு வருவார்

இல்லாமல், உன் ஆலயங்களுக்குப் போகிற வழிகள் புலம்புகிறதே! உன் ஆலய வாசல்கள் எல்லாம் பாழாய்க் கிடக்கிறதே !

- ஓ ! உன் ஆசாரியர்களாகிய ஊழியர்களும் போதகர்களும் தவிக்கிறார்களே! உன் கன்னிகைகள் சஞ்சலப்படுகிறார்களே! என் சபையாகிய ஜனத்துக்கு கசப்பின் மேல் கசப்பே உண்டாயிருக்கிறதே!

1:5 - அவள் சத்துருக்கள் தலைமையானார்கள்.. அவள் பகைஞர் சுகித்திருக்கிறார்கள்.. அவளுடைய திரளான பாதகங்களினிமித்தம் கர்த்தர் அவளை சஞ்சலப்படுத்தினார்.. அவள் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப்போனார்கள்..

- ஓ ! என் ஜனமே ! உன் சத்துருக்கள் உனக்குத் தலைமையானார்களே! உன் பகைஞர் சுகித்திருக்கவில்லையோ? என் ஜனமாகிய சபையே ! உன் பாதகங்களினிமித்தமே நான் உன்னை சஞ்சலப்படுத்தினேன் அல்லவோ?

- உன் பிள்ளைகள் சத்துருவுக்கு முன்பாக சிறைப்பட்டுப் போனார்களே! ஐயோ என் ஜனமே ! நான் உனக்கு எதினால் ஒப்புமை செய்வேன்?

1:6 - சீயோன் குமாரத்தியின் அழகெல்லாம் அவளை விட்டுப்போயிற்று...அவள் பிரபுக்கள் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி தொடருகிறவனுக்கு முன்பாகச் சத்துவமில்லாமல் நடந்து போனார்கள் !

- சீயோன் குமாரத்தியாகிய என் சபையே ! உன் முக அழகும், புற அழகும், அக அழகும், சபை அழகும், ஆராதனை அழகும், கட்டிட அழகும், கோபுர அழகும் முற்றிலும் உன்னை விட்டுப் போயிற்றே !

- உன் பிரபுக்களும், ஊழியரும், மூப்பரும், முதன்மையானவர்களும் மேய்ச்சலைக் காணாத மான்களுக்கு ஒப்பாகி, பசி மயக்கத்தோடும், கிரக்கத்தோடும் உன்னைத் தொடருகிற உன் கொடுமையான சத்துருவுக்கு முன்பாக சரீர பெலனோ, ஆவிக்குரிய பெலனோ, சத்துவமோ இன்றி தள்ளாடித் தள்ளாடி நடந்து போவதைக் காண்கிறேனே!

1:7- தனக்குச் சிறுமையும் தவிப்பும் உண்டாகிய நாட்களிலே எருசலேம் பூர்வ நாட்கள் முதற்கொண்டு தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளையெல்லாம் நினைக்கிறாள்.. அவளுக்கு உதவி செய்வார் இல்லாமல் அவளுடைய ஜனங்கள் சத்துருவின் கையிலே

விழுகையில், பகைஞர் அவளைப் பார்த்து அவளுடைய ஓய்வு நாட்களைக் குறித்துப் பரியாசம் பண்ணினார்கள்..

- **ஓ ! என் ஜனமே உனக்கு சிறுமையும் தவிப்பும் உண்டாகியிருக்கும் இந்த நாளிலே நீ உன் பூர்வ நாட்கள் முதற்கொண்டு உனக்கு உண்டாயிருந்த இன்பமான யாவற்றையும் நினைத்து நினைத்து அழுது புலம்புவதைக் காண்கிறேன்!**

- **நீ என் ஓய்வு நாட்களை எண்ணாமல் போய், என் பரிசுத்த ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்து, உன் கால் போன போக்கிலே நடந்து திரிந்து, உன் வழிகளிலே சென்று, உன் சொந்தப் பேச்சையே பேசி, ஓய்வு நாளை உன் மனமகிழ்ச்சியின் நாளாய் அல்லாது, வீக்- என்டாக நீ ஆடிப்பாடி உண்டு களித்து, உனக்காகவும் உன் நண்பர்களுக்காகவுமே கழித்து, கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்று சொல்லி அதை நீ மகிமையாக எண்ணாமல் போனபடியினால் அல்லவோ இன்று உன் சத்துரு என் ஓய்வு நாளைக் குறித்து உன்னைப் பரியாசம் பண்ணுகிறான்?**

1:8 - எருசலேம் மிகுதியாய்ப் பாவம் செய்தாள்.. ஆதலால் தூர ஸ்திரீயைப் போலானாள்.. அவளைக் கனம் பண்ணினவர்கள் எல்லாரும் அவளை அசட்டை பண்ணுகிறார்கள்.. அவளுடைய மானத்தைக் கண்டார்கள்.. அவளும் பெருமூச்சு விட்டுப் பின்னிட்டுத் திரும்பினாள்..

- **பரம எருசலேமாகிய சபையே ! நீ மிகுதியாய் பாவம் செய்யவில்லையோ ? ஆதலால் தூரஸ்திரீயைப் போல தூரம் போனாயே! உன் சத்துருக்களால் தீட்டென்று நீ புறந்தள்ளப்பட்டாயே ! அசூசி என்று அசிங்கப்பட்டுப் போனாயே!**

- **உன்னை ஒரு காலத்தில் கனம் பண்ணினவர்கள் எல்லோரும் உன்னை அசட்டை பண்ணி, உன்னை அனாதையாய் விட்டு விட்டுத் தூரம் போனார்களே ! உன்னுடைய சத்துருக்கள் உன் மானத்தைக் காணும் நிலை உனக்கு வந்ததே ! என் ஜனமே அழுது பெருமூச்சு விட்டுப் பின்னிட்டுத் திரும்பும் உன்னைக் கண்டு நான் வெகுவாய்ப் புலம்புகிறேன்!**

1:9 - அவளுடைய அசூசம் அவள் வஸ்திர ஓரங்களில் இருந்தது.. தனக்கு வரப்போகிற முடிவை நினையாதிருந்தாள்.. ஆகையால் அதிசமாய்த் தாழ்த்தப்பட்டுப் போனாள்... தேற்றுவார் இல்லை.. கர்த்தாவே என் சிறுமையைப் பாரும்! பகைஞன் பெருமை பாராட்டினானே!

- சபையே ! இதோ உன்னுடைய அசுசம் உன் வஸ்திரங்களின் ஓரத்தில் காணப்படவில்லையோ ? நீயோ உனக்கு வரப்போகும் முடிவை நினையாதிருந்தாயே ! உனக்குக் கிடைத்திருந்த நல்ல நாட்களிலே உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறியாமல் போனாயே !

- நீ முற்றிலும் எதிர்பாராவண்ணம் நீ அதிசயமாய்த் தாழ்த்தப்பட்டுப் போனாயே ! இன்றோ உன்னைத் தேற்றுவார் யாரும் இல்லையே ! உன் பகைஞன் உன் மேல் பெருமையும் கர்வமும் பாராட்டி நிற்கும் உன் சிறுமையைப் பார்த்து உன் கதறலையும் கேட்கிறேன் !

1:10 - அவளுடைய இன்பமான எல்லாவற்றின் மேலும் சத்துரு தன் கையை நீட்டினான்.. உம்முடைய சபையிலே வரலாகாதென்று தேவரீர் விலக்கிய புறஜாதியார் உமது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்ததைக் கண்டான்...

- உனக்கு இன்பமான யாவற்றின் மேலும், உன் குடும்பம், உன் பிள்ளைகள், உன் சபை, உன் விசுவாசிகள் மற்றும் உனக்கு எது எதெல்லாம் இன்பமாயிருந்ததோ, அவைகள் எல்லாவற்றின் மேலும் இன்று உன் சத்துரு தன் இரும்புக்கையை நீட்டியுள்ளானே !

- என் சபையிலே வரலாகாது என்று நான் விலக்கிய புறஜாதியாகிய ஒரு பெரும்படை எனது பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசித்து சர்வநாசம் செய்கிறதைக் கண்டு சொல்ல வார்த்தையின்றி விக்கித்து நிற்கிறேனே!

1:11 - அவளுடைய ஜனங்கள் எல்லாரும் அப்பந்தேடித் தவிக்கிறார்கள்.. தங்கள் உயிரைக் காப்பாற்ற தங்களுடைய இன்பமானவைகளை ஆகாரத்துக்கென்று கொடுத்துவிட்டார்கள்.. கர்த்தாவே, நோக்கிப் பாரும்.. எண்ணமற்றவளானேனே !

- ஓ ! என் ஜனமெல்லாம் அப்பம் தேடித் தவிக்கிறதே ! தங்கள் உயிரைக் காப்பாற்ற தங்களுடைய இன்பமான யாவற்றையும், தன் ஒரு நேர ஆகாரத்துக்கென்று கொடுத்துவிடும் நிர்க்கதியும் நிர்ப்பந்தமும் நிர்ப்பாக்கியமுமான நிலையில் கர்த்தராகிய நான் உன்னைக் காண்கிறேனே ! ஓ என் ஜனமே ! நீ எண்ணமற்றுப் போனாயே !

1:12 - வழியில் நடந்து போகிற சகல ஜனங்களே ! இதைக் குறித்து உங்களுக்குக் கவலையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னை சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு

உண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோ என்று என்னை நோக்கிப் பாருங்கள் !

- **"இப்படி ஒரு நாளும் காலமும் வரப்போகிறதென்றும், வழி நடக்கிற என் ஜனமே! இதைக் குறித்து உனக்குக் கவலையில்லையா?" என்றும் உன்னை நோக்கி நான் என் மார்பில் அடித்துப் புலம்பி நின்ற நாட்களை இன்று நினைத்துப் பார் ! இதோ ! உன்னை நான் சஞ்சலப்படுத்தின இந்த நாளிலே உனக்கு உண்டான இந்த துக்கத்துக்கு சரியான துக்கமும் நெருக்கமும் சஞ்சலமும் தவிப்பும் இது வரை எப்போதாகிலும் உனக்கு உண்டாயிருந்ததோ ? நினைத்துப் பார் !**

1 : 13,14,15 - உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினார், அது அவைகளில் பற்றி எரிகிறது .. என் கால்களுக்கு வலையை வீசினார்.. என்னைப் பின்னிட்டு விழப் பண்ணினார்.. என்னைப் பாழாக்கினார்.. நான் பலட்சயப்பட்டுப் போகிறேன்..

என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக் கிறது.. அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக் கொண்டது என் பெலனை விழப் பண்ணினார்.. நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்..

என்னுடைய பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்கள் எல்லாரையும் ஆண்டவர் மிதித்துப்போட்டார்.. என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தார்.. திராட்சத்தோட்டத்தை ஆலையில் மிதிக்கிறது போல ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தார்..

- **"உயரத்திலிருந்து என் எலும்புகளில் அக்கினியை அனுப்பினாரே, அது அவைகளில் பற்றியெரிகிறதே, ஐயோ என் கால்களுக்கு வலையை வீசினாரே, என்னைப் பின்னிட்டு விழப் பண்ணினாரே, நித்தமும் நான் பலட்சயப்பட்டுப் போகிறேனே என்றும்,"**

"..என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறதே, அவைகள் இறுக்கப்பட்டு என் கழுத்தை சுற்றிக் கொண்டதே! என் பெலனை விழப் பண்ணினாரே! நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக் கொடுத்தாரே" என்றும்..

- "..என்னிலுள்ள என்னுடைய பராக்கிரமசாலிகளாகிய என்னுடையவர்கள் எல்லாரையும் ஆண்டவர் மிதித்துப் போட்டாரே..!"

"..என் வாலிபரை நொறுக்கும்படி எனக்கு விரோதமாய் ஒரு கூட்டத்தை வரவழைத்தாரே !திராட்சப் பழத்தை ஆலையில் மிதிக்கிறது போல ஆண்டவர் யூதா குமாரத்தியாகிய கன்னிகையை மிதித்தாரே..!" என்று நீ கண்ணீர் விட்டுப் புலம்பி அழுவதைக் கேட்கிறேன்..

1:16 - இவைகளினிமித்தம் நான் அழுகிறேன்.. என் கண், என் கண்ணே, நீராய்ச் சொரிகிறது.. என் உயிரைக் காப்பாற்றித் தேற்றுகிறவர் என்னை விட்டுத் தூரமானார்.. பகைஞன் மேற்கொண்டதினால் என் பிள்ளைகள் பாழாய்ப்போனார்கள்..

- ஓ! என் ஜனமே ! கொடுமையான உன் நிலை கண்டு ஆண்டவராகிய நான் அழுகிறேன்! என் கண், என் கண்ணே நீராய் சொரிகிறது. உன் உயிரைக் காப்பாற்றித் தேற்றும் என்னை விட்டு நீ தூரம் போனதால், இன்று நானும் உனக்குத் தூரமானேன்! உன் பகைஞன் மேற்கொண்டதினால் நீ பாழாய்ப் போனாயே!

1:17 - சீயோன் தன் கைகளை விரிக்கிறாள்.. அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை.. கர்த்தர் யாக்கோபின் சுற்றுப்புறத்தாரை அவளுக்கு சத்துருக்களாகக் கட்டளையிட்டார்.. அவர்களுக்குள்ளே எருசலேம் தூரஸ்திரீக்கு ஒப்பானாள்!

- ஓ ! சீயோனாகிய என் சபை தன் கைகளை விரிக்கிறாள்.. அவளைத் தேற்றுவார் ஒருவருமில்லை.. அவளுடைய சத்துருக்களாகிய சுற்றுப்புறத்தாருக்குள்ளே என் குமாரத்தி தூர ஸ்திரீக்கு ஒப்பாகிப் போனாளே!

1:18 - கர்த்தர் நீதிபரர்.. அவருடைய வாக்குக்கு விரோதமாய் நான் எழும்பினேன்..ஜனங்களே, நீங்கள் எல்லாரும் இதைக் கேட்டு என் துக்கத்தைப்பாருங்கள்.. என் கன்னிகைகளும் என் வாலிபரும் சிறைப்பட்டுப்போனார்கள்..

- ஐயோ! நீதிபரராகிய கர்த்தராகிய என் வாக்குக்கு விரோதமாய் நீ எழும்பினாயே! உன் ஜனங்கள் எல்லாரும் இன்று உன் துக்கத்தைக் காண்கிறார்கள்... இதினிமித்தமே உன் கன்னிகைகளும் உன் வாலிபரும் சிறைப்பட்டுப் போனார்கள் அல்லவோ?

1:19 - என்னை சிநேகிக்கிறவர்களைக் கூப்பிட்டேன்.. அவர்களோ என்னை மோசம் போக்கினார்கள்.. என் ஆசாரியர்களும் என் மூப்பர்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றத் தங்களுக்கு அப்பம் தேடுகையில் நகரத்தில் மூச்சொடுங்கி மாண்டார்கள்..

- உன்னை சிநேகித்தவர்களை நீ கூப்பிட்டாய்..அவர்களோ உன்னை மோசம் போக்கினார்களே! உன் ஆசாரியர்களும் உன் மூப்பர், ஊழியர்களும் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள தங்களுக்கு அப்பம் தேடுகையில் அவர்களும் நகரத்தில் மூச்சொடுங்கி மாண்டு போனார்களே!

1:20 - கர்த்தாவே பாரும்! நான் நெருக்கப்படுகிறேன்! என் குடல் கொதிக்கிறது... நான் கடுந்துரோகம் பண்ணினபடியால் என் இருதயம் வியாகுலப்படுகிறது.. வெளியிலே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று..வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது...

- "கர்த்தாவே பாரும் ! நான் நெருக்கப்படுகிறேன்.. என் குடல் கொதிக்கிறது.. நான் கடுந்துரோகம் பண்ணினபடியால் என் இருதயம் வியாகுலப்படுகிறது.. வெளியே பட்டயம் என்னைப் பிள்ளையற்றவளாக்கிற்று.. வீட்டுக்குள்ளே மரணம் வந்திருக்கிறது.." என்று நீ ஓலமிட்டு ஒப்பாரி வைக்கிறதைக் கேட்டு நான் எனக்குள்ளே கலங்குகிறேன்!

1:21 - நான் தவிக்கிறதை அவர்கள் கேட்டாலும் என்னைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை.. என் பகைஞர் எல்லாரும் எனக்கு வந்த ஆபத்தைக்கேட்டு, தேவரீர் அதைச் செய்தபடியால் சந்தோஷமாயிருக்கிறார்கள்.. நீர் கூறின நாளை வரப்பண்ணுவீர்.. அப்பொழுது அவர்களும் என்னைப் போலாவார்கள்..

- "நீ தவிக்கிறதை உன் சத்துருக்கள் கேட்டாலும் உன்னைத் தேற்றுவார் ஒருவருமில்லையே! உன் பகைஞர் எல்லாரும் உனக்கு வந்த ஆபத்தைக் கேட்டு கைகொட்டி மகிழ்கிறார்களே !"

- "இதற்கு முந்திய நாட்களிலும் வருஷங்களிலும் நீர் எங்களைத் திரும்பத் திரும்ப எச்சரித்துக் கூறின அந்த நாளை வரப்பண்ணினீர்" என்று நீ மார்பில் அடித்து அங்கலாய்த்து அழுவதை நான் கேட்கிறேன்..

1:22- அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் முகத்துக்கு முன்பாக வரக்கடவது.. என் சகல பாதகங்களினிமித்தமும் நீர் எனக்குச் செய்தது போல அவர்களுக்குச் செய்யும்.. என் பெருமூச்சுகள் மிகுதியாயின.. என் இருதயம் பலட்சியமாய் இருக்கிறது...

- **"அவர்கள் பொல்லாப்பெல்லாம் உமது முகத்துக்கு முன்பாக வரக்கடவது.. என்றும், என் சகல பாதகங்களினிமித்தம் நீர் எனக்குச் செய்தது போல அவர்களுக்கும் செய்யும் என்றும் நீ கதறி அழுவதையும், உன் பெருமூச்சுகள் மிகுதியாவதையும், உன் இருதயம் பலட்சயமாவதையும் நான் பார்க்கிறேன்..!"**

“ஆகையால், மேகம்போன்ற
இத்தனை திரளான சாட்சிகள்
நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க,
பாரமான யாவற்றையும்,
நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற
பாவத்தையும் தள்ளிவிட்டு,
விசுவாசத்தைத் துவக்குகிறவரும்
முடிக்கிறவருமாயிருக்கிற
இயேசுவை நோக்கி,
நமக்கு நியமித்திருக்கிற
ஓட்டத்தில் பொறுமையோடே
ஓடக்கடவோம்...”

(எபிரெயர் 12:1)

ஹெரலன் பாப்போவ்

துடிக்கும் சக உதிரம்

CHAPTER - 14

அரங்கேறப்போகும் காட்சிகள்

கல்லெறியுண்டு
கொல்லப்பட்ட பர்னபா



CHAPTER-14

அரங்கேறப்போகும் காட்சிகள்

இங்கே அரங்கேறப்போகும் காட்சிகள்..

காட்சி 1 :
Ahn Ei Sook

1939..

இரண்டாம் உலகப் போர் ஒரு புறம் மும்முரமாய் நடந்து கொண்டிருக்க, சந்தடி சாக்கில் கொரியாவை ஜப்பான் கபளீகரம் செய்திருந்தது. கொரியா முழுவதும் வியாபித்திருந்தனர் ஜப்பானியர்கள்.. கொரிய அரசாங்கம் முதல், இராணுவம், காவல்துறை, வணிகம், தொழிற்சாலைகள், கல்லூரிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் என்று சகலமும் அவர்கள் பிடியில்.. வீடுவீடாய்ப் புகுந்து இராணுவத்துக்கு ஆண்களையும் இளைஞர்களையும் இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்த நாட்கள்..

அங்கே நம்ஸான் மலையடிவாரத்தில் ஒரு கிறிஸ்தவப்பள்ளி. மாதத்தின் முதல் நாள்.. பள்ளியின் சிறுபிள்ளைகளிலிருந்து ஆசிரியர், தலைமை ஆசிரியர் வரை ஒருவர் விடாமல் மலை உச்சிக்கு ஏறிச்சென்று அங்குள்ள விக்கிரக மலைக்கோவிலில் நடக்கும் பூஜையில் பங்கேற்கக் கல்வித்துறையிலிருந்து அரசாணையொன்று பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறது..

அன்று நடந்ததைத் தானே விவரிக்கிறாள் Ahn Ei Sook..(ஆன் இ சூக்) அவள் ஒரு வாலிப மகள்.. தன் ஆண்டவரை உளமாற நேசிப்பவள்..ஒரு கொரிய கிறிஸ்தவப் பள்ளியில் மியூசிக் டீச்சராக வேலை செய்பவள்..

"நான் மியூசிக் டீச்சராக வேலை செய்த அந்தக் கிறிஸ்தவ ஸ்கூலில் இருந்த அத்தனை பிள்ளைகளும் விளையாட்டு மைதானத்துக்கு வரும்படி உத்தரவிடப்பட்டனர்..

விக்கிரகத்துக்கு முன் விழுவதினால் உண்டாகும் பாவத்துக்கும் வெட்கத்துக்கும் நிந்தைக்கும் தப்பித்துக்கொள்ள பள்ளியின் வகுப்பறைக்குள்ளும் பாத்ரூம் டாய்லட்களிலும் யாராவது ஒளிந்திருக்கலாம் என்று ஆசிரியர்களை அனுப்பி ஒவ்வொருவரையும் கட்டாயப்படுத்தி அழைத்துவரச் செய்தார் பிரின்ஸிப்பல்..

கூச்சலையும் குழப்பத்தையும் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அழுகை முட்டியது. நான் இருந்த அறையில் முகங்குப்புற விழுந்து.."ஆண்டவரே" என்று அழ ஆரம்பித்தேன்..

திடீரென வகுப்பின் வெளியே ஹாலில் ஏறி வந்த ஒரு காலடி சத்தம் நின்று, ஏற்கனவே நன்கு பரிச்சயமான குரல் ஒன்று கேட்டது..

"மிஸ் ஆன்..நீ இன்னும் இங்கே தான் இருக்கிறாயா ?" - அது பிரின்ஸிப்பலின் சத்தம்..என்னைத் தேடி தானே வந்திருந்தாள்..

அமைதியாக வகுப்பறையின் கதவைத் திறந்தேன். என்னைக் கூர்ந்து பார்த்த அவளது கண்களில் கோபம் தெரிந்தது..

எனக்கு எதுவுமே தெரியாதது போல, "இன்று ஒன்னாம் தேதி..ஞாபகம் இருக்கா ? பிள்ளைகளை மலையிலுள்ள கோயிலுக்குக் கூட்டிட்டுப் போகணும்.."

எங்கள் இருவரது கண்களும் ஒன்றோடு ஒன்றை சந்திக்க மறுத்தும் மறுக்காமலும் மோதிக் கொண்டிருந்தன..

"நீ மட்டும் தான் இங்க விசுவாசி இல்ல..இது ஒரு கிறிஸ்தவ ஸ்கூல்..இங்கே இருக்கிற நிறைய பிள்ளைங்க மட்டுமில்ல, டீச்சர்களும் கிறிஸ்தவங்க தான்.. நானும் ஒரு பிலீவர் தான்.." என்று பொரிந்து தள்ளினாள்..

கேட்டுக் கொண்டு அமைதியாக நின்றேன்..

"மிஸ் ஆன்..எந்த விசுவாசியாவது விக்கிரகத்துக்கு முன்னால விழ விரும்புவார்களா ? நாம் வெறுக்கும் ஒரு காரியம் அது...ஆனால் நம்மால் தாங்க முடியாத கொடிய சித்ரவதைகள் நடப்பது உனக்குத் தெரியாமல் இல்லை..இன்று நாம் அந்த ஜப்பானிய தெய்வங்களுக்கு முன் வணங்கலன்னா நம்ம ஸ்கூலையே மூடிருவாங்க.. !"

இது எதுவுமே எனக்குத் தெரியாமல் இல்லை. ஒவ்வொன்றும் என்னை ஆழமாய் பாதித்திருந்தது. எங்களை ஆக்கிரமித்திருந்த ஜப்பானியர்கள் கிறிஸ்துவை அவமரியாதை செய்து ஜீவனுள்ள தேவனை நிந்தித்துத் தூஷித்துக் கொண்டிருந்தனர்..

ஜப்பானிய கோயில்களில் குனியாத யாராயிருந்தாலும் சரி, அது பாஸ்டரோ, மிஷினரியோ, மூப்பரோ, விசுவாசியோ யாரானாலும் துரோகி பட்டம் கட்டப்பட்டு அவருக்கு ஈவிரக்கமில்லா முடிவு தான்..

ஸ்கூல் பிரின்ஸிப்பலானதால், பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் மாணவர்கள் ஒவ்வொருவரது காரியத்துக்கும் அவரே பொறுப்பு என்பதால் அவரது இக்கட்டான நிலை புரிய முடிந்தது..

ஆனால் "நானே வழியும் சத்தியமும் ஜீவனும்.." என்ற இயேசுவின் வார்த்தையை இவர் மறந்து விட்டாரா ?

உபத்திரவம் இன்று தொடங்கவில்லை. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை மறுதலிக்காததால் ஏற்கனவே கொரியா எங்கும் அநேகர் இரத்தசாட்சிகளாகி விட்டிருந்தனர்..

அதே கொடுமையும் உபத்திரவமும் எங்கள் ஊரின் எல்லையிலும் இந்தப் பள்ளியின் வாசலிலும் இன்று வந்து கதவைத் தட்டி நிற்கிறது.. அவ்வளவு தான் !

தான், அவர்களுக்குப் பயந்து விக்கிரகத்துக்கு முன் விழுந்து வணங்கும் அளவு ஒரு கிறிஸ்தவ டீச்சர் ஏன் தன் விசுவாசத்தில் பெலவீனப்பட்டுப் போய் இப்படி சமரசம் செய்து கொள்ளவேண்டும் என்பதைத் தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை..

இந்தக்காரியத்தில் எனக்கு உடன்பாடு இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அவள், " நீ எங்களுக்கு ஒத்துழைத்து எங்களோடு வராவிட்டால், இந்த ஸ்கூலுக்கு உன் ஒருத்தியால் எவ்வளவு பிரச்சனை வரும் தெரியுமா ? உனக்கு உன்னைப் பற்றி மட்டுமே கவலை..வேறு எதையும் பற்றி உனக்குக் கவலையே இல்லை.." என்ற அந்த பிரின்ஸிப்பலின் குரலில் முதல் தடவையாக வெறுப்பையும் எரிச்சலையும் உணர முடிந்தது..

"சரி வருகிறேன்.." என்று சொல்லிவிட்டு அமைதி நிறைந்த என் மியூசிக் ரூமை விட்டு வெளியே வந்து அவளது முன்னே படிக்கட்டுகளில் இறங்க ஆரம்பித்தேன்..

அங்கே மலை மேலே பல கிறிஸ்தவப் பள்ளிகளிலிருந்தும் பெருங்கூட்டமான மாணவர்களும் ஆசிரியர்களும் மலையேறி அந்த ஜப்பானிய விக்கிரகக் கோவிலிலே கூடியிருந்தனர். பூஜை ஆரம்பமாகிறது. ஒருவர் விடாமல் எல்லாரும் தெண்டனிட்டு வணங்கி ஆராதிக்க வேண்டுமென்பது கட்டளை. கூட்டத்தை வளைத்து நிற்கும் ஜப்பானியப் போலீஸ் ஒவ்வொருவரையும் கண்கொத்திப் பாம்பாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறது.

எல்லாக் கிறிஸ்தவ ஆசிரியர்களும், பிள்ளைகளும் வளைந்து குனிந்து வணங்கிக்கொண்டிருக்க, ஒரே ஒரு உருவம் மட்டும் தலைவணங்காமல், முகத்தைக் கற்பாறையாக்கி நிமிர்ந்து நேரே நிற்கிறது.

தனது ஸ்கூல் பிரின்சிப்பலின் அழுத்தத்தையோ, தனக்கு நேரிடப்போகும் காரியங்களையோ குறித்துக் கவலைப்படாமல், அன்றைய நேபுகாத்நேச்சார் நிறுத்திய பொற்சிலையை வணங்காமல் நின்ற மூன்று எபிரேய வாலிபரைப் போன்று வணங்காமல் நின்றாள் அவள். அதின் பலனாக அவள் அடைந்த ஆறு ஆண்டு சிறைவாசக் கொடுமைகளை "செத்தாலும் சாகிறேன்" (If I perish) என்ற தன் புத்தகத்தில் பதிவு செய்கிறாள் Ann Ei Sook...

[இதோ இப்படிப்பட்ட காட்சிகள் இங்கேயும் அரங்கேறப்போகின்றன!]

காட்சி : 2
பால்லியோ

ரோம சாம்ராஜ்யத்தில் ஆதிசபையின் நாட்கள்.. ரோம் நகரின் கொலோசியம் என்ற கொலைக்களத்தில் கொல்லப்படும் கிறிஸ்தவர்களின் உடல்களை சக விசுவாசிகள் இரவிலே திருட்டளவாய் வந்து எடுத்துக் கொண்டுபோய், பூமிக்கடியில் நிலத்தடியில் கேட்டகோம்ஸ் என்று சொல்லப்படும் மண்ணறைகளின் சுவர்களுக்குள்ளே புதைத்து, அந்தச் சடலங்களோடே சகமனிதர்களாய்க் கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் அந்தக் கேட்டகோம்ஸின் மண்ணறைகளில் ஆதிசபையினர் வாழ்ந்து கொண்டிருந்த காலம்...

பல மைல் நீள அந்த நிலவறைகளின் எண்ணிக்கையில்லா வாசல்கள் ஒன்றிலிருந்து பூமிக்கு மேலே நகருக்குள் போஜன பதார்த்தங்கள் வாங்க வந்த 13 வயது சிறுவன் பால்லியோ..
அன்று ரோம சிப்பாய் ஒருவனின் கைகளில் சிக்கிக்கொள்ள, கோர்ட்டுக்கு இழுத்துச் செல்லப்படுகிறான் பால்லியோ..

"கோர்ட்டில்...
பால்லியோ"

அது ஒரு பெரிய கோர்ட் ரூம் பில்டிங்..
இம்ப்பீரியல் அரண்மனையிலிருந்து அதிக தூரமில்லை..

உயர்ந்த ஆசனங்களில் வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் அமர்ந்திருக்கின்றனர்..

அவர்களுக்கு முன் காவலர்கள் நடுவில் பால்லியோ..

முகம் சற்று வெளுத்துப் போயிருந்தாலும்..நிமிர்ந்து நிற்கும் உடல்..

தன் மேல் கூறப்படப் போகும் தீர்ப்பை நன்கு அறிந்திருந்தும்..இந்த இளங்கன்றின் முகத்தில் பயத்தின் அறிகுறியோ தீர்மானத்தில் திருப்பமோ காணப்படவில்லை..

அவனுக்குத் தெரியும்..இந்த உலகத்தோடு தன்னை ஒட்டி வைத்திருந்த ஒரே உயிரான தன் தாயின் உயிரும் அன்று காலை பிரிந்து விட்டதென்று..

மிக அன்பாய்த் தான் நேசித்த தன் தாயோடு தானும் சீக்கிரம் இணைவேன் என்ற நம்பிக்கையோடு..
விசாரணைக்குத் தன்னை தயார் படுத்திக் கொள்கிறான் அவன்..

விசாரணை துவங்குகிறது..

"நீ யார்?"
"மார்க்குஸ் செர்வில்லஸ் பால்லியோ.."

"உன் வயதென்ன?"
"பதிமூன்று.."

"நீ ஒரு கிறிஸ்தவன் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளாய்..
நீ சொல்ல விரும்புவது என்ன?"

"நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை..நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை எல்லோர் முன்பாகவும் அறிக்கை செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.."

"உன் குற்றத்தின் தீவிரத்தை நீ அறிவாயோ?"

"எனக்குத் தெரிந்து நான் ஒரு குற்றமும் செய்யவில்லை..
கடவுளுக்குப் பயந்து தேசாதிபதிகளைக் கனம் பண்ணும்படி என் வேதம் எனக்குப் போதிக்கிறது.."

"தேசத்தின் ஒவ்வொரு சட்டத்தையும் மனப்பூர்வமாய் மதிக்கும் ஒரு உண்மைப் பிரஜை நான்.."

"கிறிஸ்தவம் இந்தத் தேசத்தின் சட்டத்துக்குப் புறம்பானது..
நீ கிறிஸ்தவனானால் உனக்கு மரணம் நிச்சயம்.."

"ஆம் நான் ஒரு கிறிஸ்தவன் தான்.."
திட்டவட்டமாகச் சொன்னான் பால்லியோ..

"அப்போ நீ சாகத்தான் வேண்டும்.."

"அப்படியே ஆகட்டும்!"

"சித்ரவதை மரணம் என்றால் என்னவென்று தெரியுமா?"

"கடந்த சில மாதங்களில் எங்களில் அநேகர் கொல்லப்பட்டதை நேரில் பார்த்தவன் நான்..என்னுடைய முறை வரும் போது என்னை மகிழ்ச்சியாய் அர்ப்பணிக்க ஆயத்தமாகவே இருந்தேன்.."

"உன் வயதையும் அனுபவமின்மையும் கண்டு நாங்கள் உனக்காகப் பரிதபிக்கிறோம்..
நீ ஒரு சிறுவன்..உன் முட்டாள்தனமான மூட நம்பிக்கையை விட்டுவிட்டு ரோம மதத்துக்குத் திரும்பி விடு.."

"என்னால் முடியாது"

"தம்பி..நீ மிக உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன்..உன் மூதாதையர்கள் இந்த நாட்டுக்காக பெரிய காரியங்களையும் தியாகங்களையும் செய்தவர்கள்..

உன் தகப்பன் நேர்மையும் உண்மையுமான இராணுவ அதிகாரியாய் பணியாற்றி யுத்தத்தில் நமது தேசத்துக்காக மரித்தவர்..உன் தகப்பனாருக்காகவும் உன் குடும்ப கௌரவத்தைக் காக்கவும் உன் மனதை மாற்றிக் கொள்.."

"கனம் கோர்ட்டார் அவர்களே !
நான் என் குடும்பத்தையும் கௌரவத்தையும் மதிக்கிறேன்..ஆனால் என் நம்பிக்கையும் விசுவாசமும், சுத்தமும் பரிசுத்தமுமானது..
என்னால் என் இரட்சகருக்குத் துரோகம் பண்ண முடியாது.."

"தொலைந்து போ!
மன்னரின் கோபம் பயங்கரமானது...அதற்கு ஆளாகாதே!"

"ஆனால் ஆட்டுக்குட்டியானவரின் கோபம் அதைவிட பயங்கரமானதே!"

"பிதற்றுகிறாய் நீ..
கொலோசியத்தின் பயங்கரங்களை அறிவாயோ? சிங்கம் புலிகளின் சீற்றத்துக்கு இரையாவாயோ?
எரியும் அக்கினியின் அகோரத்தை அறிவாயோ?"

"ஐயா! நீங்கள் சொல்லும் எதுவும் என்னை ஒன்றும் செய்ய இயலாது..
என் இரட்சகர் என்னைக் காப்பார்..மரணமே நேரிட்டாலும் அவரோடு
நான் யுகாயுகமாய் வாழுவேன்..
அவர் மேல் நான் வைத்த நம்பிக்கை ஒருநாளும் வீண்போகாது.."

"எனக்காகத் தன்னையே தந்தவரல்லவா அவர்?
அவருக்காக என் ஜீவனைத் தருவது பெரிய காரியமல்ல.."

"சரி..இதோ கடைசியாய் உனக்கு ஒரு வாய்ப்பு!
முட்டாள் சிறுவனே!
ஒரு நிமிடம் சிந்தி..உனக்கு முன் ஒரு பெரிய வாழ்க்கை..
சந்தோஷமும் மகிழ்ச்சியுமாய்..
அதிகாரமும் கனமும்

செல்வமும் புகழும்
உன்னுடையதாய்..
ஒரு குறைவும் இல்லாத வாழ்க்கை.."

"நீ செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான்..
இந்த தெய்வங்களுக்கு முன் வணங்கி..பலி செலுத்திவிடு..

சீக்கிரம்..உன்னையே காப்பாற்றிக் கொள்.."

கோர்ட்டில் இருந்த அனைவரின் கண்களும் அவன் மேலேயே
பதிந்திருக்க..அவனது அசைக்க முடியாத தீர்மானத்தைக் கண்டு எல்லார்
கண்களிலும் ஆச்சரியம்..

ஆனால் அந்தக் கடைசி வேண்டுகோளையும் நிராகரிக்கிறான்
பால்லியோ..

தன் முன்னிருந்த பூஜைப் பொருட்களைக் கையால் ஒதுக்கி
விடுகிறான்..தீர்க்கமான முடிவோடு..

"நான் என் இரட்சகருக்கு ஒரு போதும் துரோகம் செய்வதில்லை.."

சற்று நேரம் கோர்ட் நிசப்தமாகிறது..

நீதிபதி தன் தீர்ப்பை வாசிக்கிறார்..

"உன் முடிவை உன் வாயே சொல்லிற்று..
சிங்கங்களுக்கு இரையாக்குங்கள்
இவனை..!"

காவலர்களால் இழுத்துச் செல்லப்படுகிறான் இளம் பால்லியோ..

[இதோ, இப்படிப்பட்ட காட்சிகள் இங்கேயும் அரங்கேறப் போகின்றன!]

காட்சி : 3
ஜஸ்டின்- "தத்துவ ஞானி "

நாளுக்கு நாள் ரோம ராஜ்யத்தில் கிறிஸ்தவர்கள் வேட்டையாடப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்..

இந்த முறை ஒரு ரோமப் பெண்- வரலாற்றில் அவள் பெயர் இல்லை..

பாவத்திலும் குடியிலும் இருந்து சமீபத்தில் தான் கிறிஸ்துவிடம் மனம் திரும்பியிருந்தாள்..

தன்னைப் போலவே பாவத்தில் ஊறிக்கிடந்த தன் கணவனையும் கிறிஸ்துவிடம் நடத்த முயற்சிக்கிறாள்..

அவளது அன்பும் சாட்சியின் வாழ்வும் எதுவும் அவனை அசைப்பதாக இல்லை..நாளுக்கு நாள் பாவத்தைத் தண்ணீராய்க் குடிக்கிறான்..

கடைசியாக வேறு வழியின்றி அவனிடத்திலிருந்து விவாகரத்து கேட்கிறாள்..

அவளது கிறிஸ்தவ சகோதரர்கள் அதை ஆதரிக்க மறுத்து அவளை சமாதானப் படுத்த முயற்சிக்கிறார்கள்..
"அவன் திருந்தி விடுவான்"
என்று..

இதற்குள் சிறிது காலம் வெளிநாடு சென்று திரும்பினவன் இன்னும் மோசமாகிறான்..

வேறு வழியின்றி விவாகரத்து கோருகிறாள்..
கேஸ் கோர்ட்டுக்கு வர..

அவன் சொல்கிறான்..
"இவள் ஒரு கிறிஸ்தவள்..
கொல்லுங்கள் இவளை.."

கோர்ட் ஜனங்களால் நிரம்பியிருக்கிறது..

"இதோ! இந்த ப்டோலியுமிஸ்..இவன் தான் இவளைக் கிறிஸ்தவளாய் மாற்றினான்..பிடியுங்கள் இவனை.."
கத்துகிறான்..

இதற்குள் ப்டோலியுமிஸின் நண்பன் லூசியுஸ் அவனுக்கு ஆதரவாகக் கோர்ட்டில் வாதாட...அவனும் கைது செய்யப் படுகிறான்..

இப்போது உள்ளே நுழைகிறார்..
ஜஸ்டின் என்ற தத்துவ ஞானி..ரோம் நகரில் எல்லோராலும் அறியப்பட்டவர்..

கோர்ட்டுக்கு சவால் விடுகிறார்..

நான் படித்த எல்லா மதங்களுக்கும் நான் அறிந்த எல்லாத் தத்துவ ஞானங்களுக்கும் மேலான ஒன்று உண்டென்றால்..
அது கிறிஸ்தவம்..
அதைப் போதித்த இயேசு கிறிஸ்து..

என்னோடு வாதிட உங்களுக்கு நியாயமிருந்தால் முன் வையுங்கள் உங்கள் நியாயத்தை..
வாதத்தை..

மனிதனின் முகத்துக்குக் கலங்காத ஜஸ்டினை எதிர்க்கத் தைரியமில்லாத ஜட்ஜ்.. ஜஸ்டினையும் கைது செய்கிறான்..

"நீங்கள் எங்கள் தலைகளை வெட்டலாம்..நித்திய நியாயத்தீர்ப்பில் எங்கே நிற்பீர்கள்?
இராஜாதி ராஜாவான அந்த நியாயாதிபதிக்கு முன்பாக உங்கள் நியாயம் நிலை நிற்குமோ..?"

உயிரைப் பொருட்படுத்தாமல் தைரியமாய் முழங்கின நால்வருடைய தலைகளும் சீவப்படுகிறது..

[இதோ, இப்படிப்பட்ட காட்சிகள் இங்கேயும் அரங்கேறப் போகின்றன!]

காட்சி 4 :
ஹெரலன் பாப்போவ்

1948..

பல்கேரியா கம்யூனிஸ்ட்டுகளின் கைகளின் விழுந்த நாட்கள்..ஒயிட் ஹவுஸ் என்ற இரகசியப் போலீஸின் தலைமைச் செயலகத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறார் பாப்போவ்...

அங்கே அவருக்கு சம்பவித்த நிகழ்வுகளில் ஒன்று அவரது வார்த்தைகளிலே..

[இங்கேயும் அரங்கேறப்போகும் காட்சிகளுக்கு முன்னான ஒரு சிறிய முன்னோட்டம்..]

ஹெரலன் பாப்போவ்

1948 செப்டம்பர் துவக்கம்..

நான் ஒரு உளவாளி என்று ஒப்புக்கொள்ளும் வரை எப்படிப்பட்ட விசாரணைக்கும் உள்ளாக்கும்படி
பீட்டர் மனாஃப் என்ற வக்கீல் ஒருவன் கைக்கு நான் மாற்றப்பட்டேன்..

நான் என்னைப்பற்றியும்
என் ஊழியம்,
என் நண்பர்கள்,
என் நண்பர்களின் நண்பர்கள்..

இது வரை நான் செய்து வந்த வேலைகள்,
எனக்குத் தெரிந்த தகவல்கள்.. ஒவ்வொன்றையும் ஒன்றுவிடாமல் உட்கார்ந்து எழுதித்தர உத்தரவிட்டான் பீட்டர் மனாஃப்..

இது எனக்கு ஒரு மாறுதலாகவும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொள்ளக் கிடைத்த வாய்ப்பாகவும் எண்ணி எழுத ஆரம்பித்தேன்...

எங்கெல்லாம் வாய்ப்பு உண்டோ அங்கெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பின்னிப் பிணைத்து, கலந்து எழுத முடிவு செய்துகொண்டேன்..

என் வாழ்க்கையில் இது வரை நடந்த எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் எழுதித்தர அந்தக் கம்யூனிஸ்ட்டுகள் சொன்னது எனக்கு ரொம்பவே வசதியாய் இருந்தது...

என் வாழ்க்கையில் கிறிஸ்து எனக்கு எவ்வளவு நெருக்கமானவர் என்பதை என் விசாரணை அதிகாரிகளுக்குச் சொல்ல எனக்கு ஏகப்பட்ட வாய்ப்பு கிடைத்தது..

நான் எழுதப் போவதையெல்லாம் அவர்கள் இம்மி பிசகாமல் படிக்கத்தான் போகிறார்கள் என்பதை அறிந்து கர்த்தருடைய வார்த்தையையும் என் சாட்சியையும் கலந்து நிரப்பி ஒன்று விடாமல் எழுதிவைத்தேன்..

மனாஃப் வக்கீலாய் இருந்தபடியால் பகலில் கோர்ட்டில் பிஸியாக இருப்பான்..

இரவில் வருவான்..
புதிதாக எனக்கு ஒரு அசைன்மன்ட் தந்துவிட்டுப் புது செக்யூரிட்டியை மாற்றி வைத்துவிட்டுப் போவான்..

அந்த ஒரு மாதத்தில் எனக்குக் கிடைத்ததெல்லாம் அவ்வப்போது கண்மூடித்திறக்க ஒரு குட்டித்தூக்கம்...

இரவு பகலாய் உட்கார்ந்து எழுத வேண்டும்..
காலை மதியம் மாலை என்று மூன்று நேரமும் செல்லில் கொண்டு வந்து போடப்படும் 15 நிமிட இடைவெளி தான் எனக்குக் கிடைத்த ரெஸ்ட்.

தினமும் எனக்குக் கிடைத்ததெல்லாம் நாலு துண்டு ப்ரெட்டும் கொஞ்சம்
"பச்சத் தண்ணி" சூப்பும் தான்..

கிடைத்த இந்தக் கொஞ்ச நேரத்தில் லேசாகக் கண்மூடிக் கொள்வேன்..
ஆகாரமும் தூக்கமும் இல்லாததால் அளவுக்கு அதிகமாகவே பெலவீனமாய் இருந்தேன்..

இரவெல்லாம் நான் எழுதியதைப் படிக்க எனக்கே இன்ட்ரஸ்ட்டிங்காக இருந்தது..

ஒரு இரவில் 40 பக்கங்கள் வீதம் கிட்டத்தட்ட 2000 பக்கங்கள் எழுதித் தீர்த்திருந்தேன்..

ஒவ்வொரு இரவும் ஒரு புது சப்ஜெக்ட் கொடுக்கப்படும்.. இதில் அவர்கள் எதிர்பார்த்தது, என்னையும் என் சபையைப் பற்றிய விபரங்களையும். என் சபையின் அங்கத்தினர்கள், அவர்கள் பெயர்,

விலாசம், அவர்களைக் குறித்த நுணுக்கமான விபரங்களையும் அவர்கள் எதிர்பார்த்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

புதுப்புது சப்ஜெக்ட்டை வைத்து எப்படி சுவிசேஷத்தை அதில் பின்னிப்பிணைத்து எழுதலாம் என்பதே எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாய் இருந்தது...

அவர்கள் என்ன சப்ஜெக்ட் கொடுத்தாலும் அதிலே சுவிசேஷத்தையும் என் சாட்சியையும் எப்படியாவது கலந்துவிடுவேன்..

அவர்கள் அதை எந்த வகையிலும் மெச்சிக் கொள்ளப்போவதில்லை என்று எனக்கு நன்றாகவே தெரியும்..

ஆனாலும் அது அந்த சப்ஜெக்ட்டோடு சம்பந்தப் படுத்தப்பட்டு மிக ஜாக்கிரதையாக நுழைக்கப்பட்டு எழுதி இருந்ததால் அவர்களால் அதைப் படிக்காமல் இருக்கவே முடியாது...

அது அவர்களுக்கு எரிச்சலை மூட்டியது உண்மை தான்..

ஆனாலும் நான் மனந்திரும்பிய நாள் முதல் கிறிஸ்து என் வாழ்வில் ஒன்றாகக் கலந்து என் வாழ்க்கையின் அங்கமாகவே மாறி விட்டிருந்தபடியால் நான் எப்படி அதைப் பிரிக்க முடியும் ?

அதை அவர்கள் வெறுத்தாலும் அது தேவனுடைய வார்த்தை அல்லவா?

அது அவர்களுக்கும் மிகவும் அவசியமல்லவா ?
அதனால் விடவே இல்லை. விடாமல் எழுதினேன்..

சரியான ஒரு வாய்ப்பு எனக்கு வந்தது..
Danzig என்ற இடத்தில் நான் படித்த Bible Training பற்றி எழுதச் சொன்னார்கள்..

அங்கிருந்த
என் ஆசிரியர்கள்,
என் நண்பர்கள்,அங்கு நான் படித்த subjects - எல்லாம் - ஒன்று விடாமல்!

அங்கு படித்த பாடங்கள் ஒவ்வொன்றையும் பற்றி விலாவாரியாக எழுத எனக்கு ஒரு மிக அருமையான வாய்ப்பு அது..

இவர்கள் தான்
"பைபிள் காலேஜ்" படிக்கும் முதல் கம்யூனிஸ்ட் விசாரணைக்காரர்கள் என்று நான் நினைத்தபோது எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்...

அதன்பின் நான் லண்டனில் பைபிள் ஸ்கூல் படித்த நாட்களைப்பற்றி எழுதச் சொன்னார்கள்..

அகல ஆழமாய்த் தோண்டித் தோண்டி எழுதினேன்..

நான் இங்கே..
அவர்களது கம்யூனிஸ்ட் ஜெயிலிலேயே...

அவர்களது சொந்த கம்யூனிஸ்ட் பேப்பரையும்
கம்யூனிஸ்ட் இங்க்கையும்
செலவழித்து..

அந்தக் கம்யூனிஸ்ட்டுகளுக்கே கர்த்தருடைய வார்த்தையை மறைமுகமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன்..

அவர்கள் சொன்னார்கள்..
" ஏய் பாப்போவ் !
எங்களுக்கு எல்லா விவரமும் வேணும்!!"

நானும் புள்ளி, கமா விடாமல் சகலத்தையும் எழுதிக் கொடுத்தேன்..

ஜெயிலில் மறக்க முடியாத நாட்கள் அவை..அது மட்டுமல்ல..
நான் எழுத எழுத..
என் பழைய பைபிள் காலேஜ் ஞாபகங்கள் வரவர அது ஒரு தனி அனுபவமாக இருந்தது..

ஒரு நாள் சொன்னார்கள்..
" ஏய் பாப்போவ் !
போதும் உன் கதையும் உன் கற்பனைக் கடவுளும்..

இதோட நிறுத்திக்க..
இதுக்கு மேல எங்களுக்குத் தேவையில்லை.."
ஆனால்..அதற்குள்ளே நான் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் சொல்லி முடித்து விட்டிருந்தேன்..

அவர்கள் விரும்பினார்களோ இல்லையோ..
மொத்தத்தில் எத்தனையோ கம்யூனிஸ்ட்டுகளுக்கு மறைமுகமாக சுவிசேஷம் இதற்குள் போய் சேர்ந்து விட்டிருந்தது..

ஆனால் நான் எவ்வளவு உஷாரா, ஸ்மார்ட்டா இந்த வேலையெல்லாம் செய்தேனோ அவர்களும் ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை..

அவங்களும் அதே அளவு ஸ்மார்ட்டாவே இருந்தார்கள்!!!

[நம் போதகர்கள், சபை மற்றும் சபையின் சகவிசுவாசிகளைக் குறித்த ஒவ்வொரு நுணுக்கமான விபரங்களையும் நம் வாயிலிருந்தே வரவழைக்கும் நாட்கள் இதோ இங்கே வருகிறது !]

குப்பைத் தொட்டியில் வேதாகமங்கள்

ஹெரலன் பாப்போவ் தொடருகிறார்...

இரகசிய சபையின் ஊழியங்களில் வேதபுத்தகம் இல்லாததால் கிறிஸ்தவர்கள் படும் பாட்டை என் கண்களால் கண்டேன்..

கர்த்தருடைய வார்த்தை இல்லாத ஒரே காரணத்தினால் அவர்கள் வாழ்க்கையிலும் இருதயத்திலுமுள்ள வெறுமையை யாரால் விவரிக்க முடியும் ?

தேவனுடைய வார்த்தை இல்லாமல் அவர்கள் தண்ணீரில்லாத மீன் தத்தளிப்பது போலவும், காற்றில்லாத வானத்தில் பறவை பறக்கத் திக்குமுக்காடுவது போலவும் தவித்துக் கொண்டிருந்தார்கள்..

ஒரு நாள் தெருவில் அழுக்கான ஆடையுடன் வயதான ஒரு மனிதன் என்னிடம் வந்து "பாஸ்டர், என்னை உங்களுக்குத் தெரியாது..ஆனால் உங்களை எனக்குத் தெரியும்.."
"என்னிடம் ஒன்று இருக்கிறது. நான் அதை உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.." என்றான்..

ஒருவேளை இரகசிய போலீசாக இருப்பானோ என்ற சந்தேகம் ஒரு பக்கம் இருந்தாலும் அவர்கள் இவ்வளவு அழுக்காக நிச்சயம் இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் அருகில் சென்றேன்..

தன் கிழிந்த கோட்டுக்குள் இருந்து பாதி கிழிந்து எரிந்திருந்த ஒரு புத்தகத்தை வெளியில் எடுத்தான். அழுக்காக இருந்த அந்தப் புத்தகத்தின் பக்கங்களை அவன் திறந்து காட்டியபோது தான் அது ஒரு வேதாகமம் என்று தெரிந்தது. அவ்வளவு மோசமான நிலையிலிருந்தது அது..

அவனைத் தனியே ஒதுக்குப்புறமாய் அழைத்துச் சென்று கேட்டேன்.." இது உனக்கு எங்கே கிடைத்தது ?" "அதோ அந்தக் குப்பைத் தொட்டியில்.."

மேற்கொண்டு நான் கேட்குமுன் அவனே பேச்சைத் தொடர்ந்தான்..

"நான் ஒரு குப்பை பொறுக்கும் தொழிலாளி..குப்பைத் தொட்டிகளில் கிடைக்கும் பொருட்களை விற்று காலம் தள்ளுகிறவன்..

ஒரு நாள் மலை போல் குவிந்து கிடந்த குப்பைகளுக்கு நடுவே தோண்டிக் கொண்டிருக்கும் போது இது கிடைத்தது..

கிறிஸ்தவர்களிடமிருந்து பிடுங்கி எரித்துக் குப்பையில் போடும் பைபிள்களில் ஒன்று என்று அறிந்து கொண்ட நான், அவர்கள் வழக்கமாக எங்கே எரிக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு அங்கேயே போய் அவர்கள் கண்களுக்கு மறைவாக பாதி எரிந்த பைபிள்களை குப்பையோடு குப்பையாக அள்ளிக் கொண்டு வருகிறேன்..

அவர்கள் கிறிஸ்தவர்களிடமிருந்து பிடுங்கி எரிக்கிறார்கள்..
நான் அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் கையிலிருந்து பறித்து மறுபடியும் கிறிஸ்தர்களுக்கு இரகசியமாய் விநியோகித்து வருகிறேன்..

இப்போதெல்லாம் நான் குப்பை பொறுக்கி சம்பாதிப்பதில்லை.
என் வேலையே குப்பைத் தொட்டிகளிலிருந்து பைபிள்களைப் பொறுக்கி எடுத்து மறுபடியும் கிறிஸ்தவர்களிடம் சேர்ப்பது தான்.." என்று சொன்னான்

அதைக் கேட்ட எனக்கு, இரகசிய சபைகளில் சிலர் கைகளில் அழுக்குக் கந்தையான, பாதி எரிந்த பைபிள்களைப் பார்த்தது அப்போது தான் ஞாபகம் வந்தது.

வேதத்தின் ஒரு பிரதி கூட காணக் கிடைக்காதோ ?

ஒரு நாள் இரகசிய சபையின் நள்ளிரவுக் கூட்டம் முடிந்து 16 வயது வாலிப சிறுமி என்னிடம் வந்தாள்..

அவள் ஒரு புதிதாக இரட்சிக்கப்பட்ட மகள் என்று அறிந்து கொண்டேன்.

என் கையிலிருந்த பாதி எரிந்து போன பைபிளைப் பார்த்து என்னிடம் கேட்டாள்..
"பாஸ்டர் நாளை காலை வரை இதை எனக்கு இரவலாகத் தருவீர்களா ?"

" நிச்சயமாகத் தருவேன்" என்று சொல்லி அதைக் கொடுத்தேன். அவள் சொன்னது போலவே அடுத்த நாள் காலை வந்து தந்து விட்டாள்.

எனக்கு நன்றி சொல்லிவிட்டு "பாஸ்டர், இன்று இரவு கூட்டம் முடிந்து எனக்கு இதைத் தருவீர்களா ?" என்று கேட்டாள்.அன்று இரவும் கொடுத்தேன்.

மறுநாள் காலை பைபிளைத் திருப்பிக் கொடுக்க வந்தவள்.. "இன்று இரவு கூட்டம் எங்கு நடக்கும் பாஸ்டர் ? அங்கு நான் வந்தால் நாளை காலை வரை தருவீர்களா" என்று கேட்டாள்.

"ஒவ்வொரு நாளும் வாங்கிட்டு போறியே? என்னம்மா செய்வ? இராத்திரியெல்லாம் உட்கார்ந்து படிப்பியா?" என்று என் ஆர்வத்தை அடக்க முடியாமல் கேட்டேன்..

"இல்ல பாஸ்டர்..நடு இரவிலிருந்து விடியற்காலம் வரை உட்கார்ந்து ஒவ்வொரு அதிகாரமாக கையால் எழுதுவேன்..

தூங்காம எழுதினா ஒரு ராத்திரியில நிறைய அதிகாரங்கள் எழுதிருவேன்..இப்படியே செய்தால் ஒரு நாள் எனக்குன்னு சொந்தமா ஒரு பைபிள் கிடைச்சிரும்ல ?" என்று சொன்னாள்..

அவள் வார்த்தைகள் என்னை உடைத்தது..
"நீ எடுத்துக்கம்மா..
பகல்ல கூட நேரம் கிடைக்கும் போதெல்லாம் எழுதிக்க..முழுதும் எழுதி முடிக்கிற வரை வச்சுக்க.." என்று சொல்லி அந்த பாதி எரிந்து போன பைபிளை அந்த மகளிடம் கொடுத்தேன்..
அவளுக்கிருந்த சந்தோஷத்தால் குதிக்காத குறையாக "நன்றி பாஸ்டர்.." என்று சொன்னாள்..

அவள் போனபின் என் இருதயம் எனக்குள்ளே சுக்குநூறாக உடைந்திருந்தது.

தனக்கென்று ஒரு சொந்த பைபிள் பிரதிக்காக இரவு பகலாக உட்கார்ந்து நாள் கணக்காக எழுதும் ஓர் ஆத்துமா !

கர்த்தருடைய வார்த்தைக்காக எவ்வளவு தவித்துக் கிடக்கும் ஒரு கூட்டம் இங்கே !

பாதி எரிந்து போன பைபிள் கூட கிடைக்காதா என்று அங்கலாய்க்கும் என் ஜனமே ! உனக்காக நான் என்ன செய்வேன் ?

என் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வடிய ஆரம்பித்தது..

இரகசிய பைபிள் தொழிற்சாலை

சோஃபியா நகருக்கு வெளியே ஒரு கிறிஸ்தவ வீட்டின் பின்பக்கம் "பைபிள் ஃபேக்டரி ஒன்று இருப்பதாகக் கேள்விப்பட்டு அதைப் பார்க்கச் சென்றேன்.

பின்வாசல் வழியாக உள்ளே நுழைந்து பேஸ்மெண்ட் மாதிரி இருந்த ஒரு நீண்ட அறைக்கு அழைத்துச் செலலப்பட்டேன். லைட் போடப்பட்டிருந்தாலும் முழுவதும் திரைகளால் மூடப்பட்டிருந்தது..

அந்த அறையில் நீளமான ஒரு மேஜை..
அதை சுற்றிலும் 7 பேர் உட்கார்ந்து நான் வந்ததில் கூட கவனம் செலுத்தாமல் மிகத் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்..

ஏறக்குறைய அனைவருமே இளம் வயதுள்ளவர்களாகவும் ஒருவர் மட்டும் வயதானவராகவும் இருந்தனர்..

அவர்களை உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்த போது தான் தெரிந்தது..அவர்கள் வேதாகமத்தைக் கையெழுத்து நகல் எடுத்துக் கொண்டிருந்தனர்..அப்படியானால் நான் ஒரு இரகசிய பைபிள் தொழிற்சாலைக்குள் வந்திருக்கிறேன்..
எப்படியோ அவர்களுக்கு ஒரு பைபிள் கிடைத்திருக்கிறது. வேதத்தின் ஒவ்வொரு புத்தகமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு அவரவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட புத்தகத்தை மிகத்தெளிவாக அழகாக நேரம் எடுத்துத் திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாளுக்கு தொடர்ந்து 12 மணி நேரம் வேலை நடந்து கொண்டிருந்தது.ஒருவர் சோர்ந்து போகும்போது அடுத்தவர் தொடர்ந்தார்..

இப்படி ரிலே ரேஸ் போல இந்தக்குழு இடைவிடாமல் வேலை செய்து கொண்டிருந்தது.

வேதாகமத்தின் எல்லா புத்தகங்களும் எழுதப்பட்டு முடிந்ததும் பைண்ட் செய்யப்பட்டு பல்கேரியாவில் ஆங்காங்கே உள்ள இரகசிய கிறிஸ்தவ சபைகளுக்கு மிகக் கவனமாகக் கடத்தப்பட்டு அனுப்பப்படுகிறது.

ஒரு வருஷத்துக்கு 25 வேதாகமங்கள் இப்படி கையால் எழுதப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது..

உடல் ஊனத்தால் வெளியே வர முடியாமல், தன் சிறிய வீட்டிலே முடங்கிக் கிடந்தாலும் தன் பழைய டைப்ரைட்டரைக் கொண்டு அந்த மனிதன் செய்து வந்த புத்தக ஊழியத்தின் மூலம் சோஃபியா நகர் மட்டுமல்லாது பல்கேரியா முழுவதும் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் எத்தனையோ ஆயிரங்கள்!!

இரகசிய சபையின் இப்படிப்பட்ட தீவிர வேலைகள் என்னை உலுக்கி விட்டன..

உயிரைப் பணயம் வைத்து செய்யப்படும் இந்தத் தியாகங்களைக் குறிப்பிட வார்த்தைகளில்லை..

இவை போன்ற வேலைகள் ஆங்காங்கே நடந்தாலும் ஜனங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவு வேத புத்தகமோ பாடல் புத்தகங்களோ ஆவிக்குரிய புத்தகங்களோ வெளியிடும் அளவுக்கு இந்த முயற்சிகள் போதுமானதாக இல்லை என்பதே வெளிப்படையாகத் தெரிந்தது.

"பைபிள் தொழிற்சாலைகள்" வருடத்துக்கு 25, 30 பைபிள் மட்டுமே வெளியிட முடிந்தது.

திரும்பத் திரும்ப ஜனங்கள் என்னிடம் கேட்டதெல்லாம் " பாஸ்டர்,எனக்கு ஒரு பைபிள் கிடைக்குமா?" என்பதே.

இரகசிய பைபிள் ஸ்டோர்

ஒரு நாள் இரகசிய சபையில் ஒரு சகோதரன் என் கையில் பைண்ட் செய்யப்பட்ட ஒரு புத்தகத்தைத் தந்தார்..

திறந்து பார்த்த போது அது ஒரு டைப் செய்யப்பட்ட புத்தகம்.. ராய் ஹெஸ்ஸன் என்பவரின் "கல்வாரிப் பாதை" என்ற புத்தகம்..

"எங்கே கிடைத்தது " என்று கேட்டேன்.

அந்த சகோதரன் சொன்னார்.." பாஸ்டர், இந்த ஊரின் அந்தப்பக்கம் ஒரு உடல் ஊனமான மனிதர் இருக்கிறார்..
கொஞ்சம் ஆங்கிலம் தெரிந்தவர்.

அவரிடம் பழைய உடைந்த ஒரு டைப் ரைட்டர் இருக்கிறது. உடல் ஊனத்தால் வேறு எங்கும் வெளியே செல்ல முடியாததால் வீட்டிலேயே இருந்து, தனக்குத் தெரிந்த ஆங்கிலத்திலிருந்து இதை பல்கேரிய மொழியில் மொழிபெயர்த்து டைப் செய்து பைண்ட் செய்து விநியோகித்து வருகிறார்.

ஒரு முறை டைப் செய்யும் போது 4,5 கார்பன் காப்பி கிடைக்கும்.முடித்ததும் அதே போல் முழுவதும் திரும்ப டைப் செய்வார்.

அவரைத் தேடிப் போன எனக்கு ஆச்சரியம்!
அந்த மனிதன் வசித்து வந்த சிறிய அப்பார்ட்மென்ட்டில் வீடு முழுவதும் ஒரு பக்கம் அடுக்கடுக்காக வெள்ளைப் பேப்பர்கள்..

இன்னொரு பக்கம் டைப் செய்யப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள்..

அவர் சொன்னார்..

"பாஸ்டர், போலீஸ் கண்களுக்கு மறைந்து எப்படி இவ்வளவு பேப்பர்களையும் சேர்க்க முடிந்தது என்று யோசிக்கிறீர்களா ?

எனக்குத் தெரிந்த கிறிஸ்தவர்கள் ஆங்காங்கே இருந்து கொஞ்சம் கொஞ்சம் ஒயிட் பேப்பர் தங்கள் தனிப்பட்ட உபயோகத்துக்கு வாங்குவது போல சந்தேகம் வராமல் வாங்கி வருவார்கள்.. அப்படியே சேர்ந்தது தான் இவ்வளவும்.."

நான் அந்த வீட்டைப் பார்த்த போது அது ஒரு இரகசிய புத்தக நிலையம் போலிருந்தது..

[இதைப் போலவே, நமது கைகளில் வேதத்தின் ஒரு பிரதியோ, ஒரு பக்கமோ, ஒரு பேப்பரோ கூடப் பார்க்கக் கிடைக்காமல், நமது சபைகளிலிருந்தும், வீடுகளிலிருந்தும் பெட்டி பெட்டியாய் வேத புத்தகங்களும், புதிய ஏற்பாடுகளும், ஆவிக்குரிய புத்தகங்களும் பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டு, நாற்சந்திகளில் குவித்து எரிக்கப்படும் நாட்கள் இதோ, இங்கே வருகிறது !]

காட்சி : 5
பிலிப்பைன்ஸ் - ஒரு சிறு பெண்

"என் ஒயிட் ட்ரெஸ்ஸை எனக்குக் குடுங்க.." அந்த சிறு பெண்ணின் வீங்கிய உதடுகளிலிருந்து வார்த்தைகள் தட்டுத் தடுமாறி முணுமுணுப்பாய் வெளிவந்தது ..

அந்தப் பிள்ளையின் படுக்கையைச் சுற்றி நின்று கொண்டிருந்த விசுவாசிகளின் முகத்தில் சோகம் அப்பியிருந்தது. அவளது அளவுக்கதிகமான உள் காயங்களினால் மருத்துவர்களும் அவளுக்கு ஒன்றும் செய்ய இயலாத நிலையிலிருந்தனர். சில வாரங்கள் முன்பு தான் கிறிஸ்து இயேசுவுக்குள் அவளது புதுப் பிறப்பையும் பரிசுத்தமான உள்ளத்தையும் கொண்டாடும் விதமாக அந்த சபையின் விசுவாசிகள், அவளுக்கு ஒயிட் கவுன் ஒன்றைப் பரிசாக அளித்திருந்தனர்.

ஆனால் அவளது தகப்பனோ, கிறிஸ்துவுக்குப் பின் செல்லத் தீர்மானித்துவிட்ட தனது மகளின் தீர்மானத்தை சற்றும் விரும்பவில்லை.

ஒரு நாள் இரவு பயங்கர குடி போதையில் வந்த அவன், தன் மகளை அடித்து உதைத்து "செத்துப்போ" என்று சேற்றில் தூக்கியெறிந்துவிட்டுப் போய் விட்டான்.

சபைக்கு அவள் வராததைக் கண்ட அவளது கிறிஸ்தவ நண்பர்கள், அவளைத் தேடிச்சென்றபோது, ஒரு சேற்றுக் குவியலுக்குள்ளே, அவளது அழகான வெள்ளை உடை, சேறும் சகதியுமாய் இரத்தத்தில் கசங்கிக் கிடக்க, அவளோ அங்கே குற்றுயிரும் குலையுயிருமாய் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தாள்..மருத்துவரிடம் அவளைக் கொண்டு வந்த போது அவளது காயங்கள் மிகவும் அதிகமாயிருந்தது.

அவளோ இப்போது "என் ஒயிட் ட்ரெஸ்ஸைக் குடுங்க..என் ஒயிட் ட்ரெஸ்ஸைக் குடுங்க.." என்றே அரற்றிக் கொண்டிருந்தாள். "ட்ரெஸ் ரொம்ப நாசமாயிடுச்சும்மா" என்று அவளது சிநேகிதிகள் சிலர் சொன்னார்கள். அழுக்கும் கந்தலுமாகிப் போன உடுப்பையே பற்றி சொல்லிக் கொண்டிருந்தால் அவள் சோர்ந்து விடுவாள் என்று நினைத்து சிலர் அவளது கவனத்தை மாற்றும் எண்ணத்துடன் பேச்சைத் திசை திருப்ப முயன்றனர்.

"என் ட்ரெஸ்ஸை மட்டும் எனக்குக் குடுங்க..என் இயேசப்பா கிட்ட காட்டணும்...அவர் எனக்காக இரத்தம் சிந்தினாரே! நானும் கூட அவருக்காக இரத்தம் சிந்தத் தயாரா இருக்கேன்னு மட்டும் அவருக்குச் சொல்லணும். கொஞ்சம் குடுங்களேன்.." என்று பத்தே வயது நிரம்பிய ஒரு சிறுபிள்ளையின் விசுவாசத்தோடு திரும்பத் திரும்ப விசும்பிக் கொண்டேயிருந்த அந்தப் பத்து வயது சிறுமியிடமிருந்து சிறிது நேரத்தில் அவளது உயிர் பிரிந்தது.

காட்சி : 6
க்யூபா - Tom White

தலை முதல் கழுத்து வரை முழுவதும் மறைக்கும் அந்தக் கறுப்பு முகமூடி கொண்டு டாம் ஒயிட்டின் தலையிலிருந்து முகம் முழுவதும் இழுத்து மூடப்பட்டபோது, தான் திரும்பவும் தன் கண் கொண்டு வெளிச்சத்தைப் பார்ப்பேனா என்று நினைத்தார் டாம் ஒயிட். அந்தக் கியூபக் காவலர்களிடம், "என்னை எங்கே கொண்டு போகிறீர்கள்? என்று கேட்க, அவர்கள் பதில் ஏதும் பேசவில்லை.

கடந்த ஏழு வருடங்களாக கியூபாவுக்குள் கிறிஸ்தவ இலக்கியங்களையும் பிரசுரங்களையும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகளையும் இரகசியமாகக் கடத்திக்கொண்டிருந்தார் Tom. அவரும் அவருடனிருந்தவர்களும் அந்தக் கம்யூனிஸ்ட் தீவைச் சுற்றியுள்ள

கடலில் மேலிருந்து ஏரோப்ளேன் மூலம் சுவிசேஷக் கைப்பிரதிகளை போட்டு வந்தனர். ஆனால் ஒரு நாளும் க்யூபாவிலுள்ள ஒரு கிறிஸ்தவர் மூலமாவாவது தங்களது கிறிஸ்தவப் பிரதிகள் வந்து சேர்ந்தன என்று அவர் ஒரு போதும் கேள்விப்பட்டதேயில்லை.

"தேவனே, எங்கள் பிரயாசங்கள் நிச்சயமாகவே கிரியை செய்கிறதென்கிற உறுதியைத் தயவு செய்து எங்களுக்குத்தாரும்" என்று ஜெபித்துக் கொண்டேயிருந்தார் டாம்.

இப்போது ஆறு வாரங்களுக்குப் பிறகு கேப்டன் ஸேன்ட்டோஸ் என்ற இன்ட்டெலிஜன்ஸ் ஆபீசருக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தப்படக் கொண்டு போகப்படுகிறார் டாம். இப்போது நடந்தது இது தான். க்யூபாவிலே இவர்கள் சென்ற ப்ளேன் விபத்துக்குள்ளாக, டாமும் பைலட் மெல் பெய்லியும் பிடிக்கப்பட்டு, நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டப்பட்டனர் இருவரும்.

"பல வருடங்களுக்கு முன் ஃப்ளைட்டிலிருந்து கியூபாவின் எல்லைகளுக்குள் போடப்பட்ட சுவிசேஷப் பாக்கெட்டுகளில் ஒன்றைத் தன் கையில் பிடித்தவனாக,"இதைப்போன்று ஆயிரக்கணக்கான பாக்கெட்டுகள் எங்கள் கடற்கரைகளிலும் வெளி நிலங்களிலும் எங்கள் ஜனங்கள் கைகளில் கிடைத்தது. யார் அதைப் போட்டது?" என்று கத்தினான் கேப்டன் ஸேன்ட்டோஸ்.

Tom சிரிப்பை அடக்கிக்கொண்டார். "நன்றி,ஆண்டவரே! என் ஜெபத்தைக் கேட்டீரே! எங்கள் பிரயாசங்கள் வீணாய்ப் போக நீர் விடவில்லையே.." என்று உள்ளூரத் துதித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் டாமின் ஜெபத்துக்கான பதிலுக்கு அவர் செலுத்திய விலை, கியூபாவின் சிறைச்சாலைகளில் அவர் செலவழித்த 21 மாதங்கள். ஆனால் அங்கே ஃபிடல் காஸ்ட்ரோவின் சிறைகளில் இரகசிய சபையின் அநேக விசுவாசிகளை அவர் சந்தித்தபோது, கேஸ்ட்ரோவின் இரும்புக்கரத்தின் கீழும் கூட கிறிஸ்துவின் சரீரமாகிய சபை வளர்ந்து பெருகிக்கொண்டிருந்ததைக் கண்டார் அவர். தேவன் அவரது ஜெபங்களுக்கு பதிலைத் தந்ததோடு அதை அவரது சொந்தக் கண்களாலும் காணும்படி செய்தார்.

காட்சி : 7
ஸாட்பெர்ரி : ஒரு தேவ பக்தியுள்ள பெண்

கிறிஸ்துவுக்காகவும் சத்தியத்துக்காகவும் பாடு அனுபவித்து மரித்த பலரில்..

மிக மேன்மையாகக் கருதப்பட்டு அவருக்காக ஜீவனைக் கொடுத்த தேவ பக்தியான ஒரு பெண் உண்டு..

ஸாட்பரி என்ற இடத்தைச் சேர்ந்தவர்..

முக்கியமாக..விட்டிங்ட்டன் என்ற நகர சான்ஸ்லருக்கு முன்னால் கர்த்தருக்காக அந்தப் பெண் காட்டின வைராக்கியம் மகிமையானது..

அவள் ஒரு தேச துரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு ஊருக்கு வெளியே தண்டனைக்கு கொண்டு செல்லப்படுகிறாள்..

பெரிய கூட்டம் கூடுகிறது..

கடைசியாகக் கேட்கப்படுகிறது..
"உன் விசுவாசத்தை விட்டுவிட்டு ரோம சபையின் கட்டளைகளை ஏற்றுக் கொள்கிறாயா?"

அவளோ தன் சாட்சியில் உறுதியாய் நிற்கிறாள்..
தண்டனை நிறைவேற்றப்பட..அவள் ஜீவன் பிரிகிறது..

பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் மெதுவாய்க் கலைகிறது..

நகருக்கு வெளியே..
சபை இப்படி ஒரு குற்றமில்லாத ஆட்டுக்குட்டியை பலியிட்டுக் கொண்டிருக்க..

அங்கே நகருக்கு உள்ளே..

ஆடு மாடு வெட்டுகிற ஒருவன் ஒரு காளை மாட்டை வெட்ட தயாராகிக் கொண்டிருந்தான்..

அதை வெட்டுமுன் அதின் தலையில் அடித்து சாகடித்து..பிறகு வெட்டலாம் என்று நினைத்து அதைத் தலையில் அடித்தவன்..

எப்படியோ குறிதவறி..மாடு தன் கட்டுகளை அறுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தது..

இதற்குள் தேவ பக்தியுள்ள அந்தப் பெண்ணின் மரணக்காட்சியைக் கண்டு முடித்த கூட்டம் ஊருக்குள் வந்து கொண்டிருக்க..

காட்டுத்தனமாய் ஓடி கூட்டத்துக்குள் புகுந்த காளை..கூட்டத்தில் யாரையும் சேதப்படுத்தாமல்..

ஒரே ஒருவனை மட்டும் நோக்கிப் பாய்ந்து குத்திக் கொன்று போட்டது..

அவன்..அந்தப் பெண்ணுக்கு மரண தண்டனை எழுதி நிறைவேற்றிய நகர சான்ஸ்லர் விட்டிங்ட்டன்..

கூட்டம் ஸ்தம்பித்து நின்றது..

காட்சி : 8
ஜப்பான்: இபாராகி குன்

அந்த 26 கிறிஸ்தவர்களும் பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு, குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டு சிலுவை மரம் போன்ற மரக்கட்டைகள் அடிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த இடம் நோக்கி வரிசையாக நடத்திச் செல்லப்பட்டனர். ஏறக்குறைய 3 மாதங்களுக்கு முன்னர் ஜப்பானிலுள்ள க்யோட்டோ என்ற இடத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றியதற்காகக் கைது செய்யப்பட்டிருந்தனர் அவர்கள். அவர்களில் ஒரு குற்றவாளி தான் 12 வயதே நிரம்பிய இபாராகி குன்.

மிகவும் சிறு பையனாகிய குனைக் கண்ட அதிகாரி, அவனைத் தனியாக அழைத்துச் சென்று உயிர் தப்பும்படியாய், தன் விசுவாசத்தை விட்டு விடச் சொன்னான். அந்த அதிகாரியை நேருக்கு நேர் பார்த்து," சார், நீங்களே ஒரு கிறிஸ்தவராகி விட்டால் உங்களுக்கு எவ்வளவு நல்லது, என்னோடு கூட நீங்களும் பரலோகம் செல்லலாமே" என்று தைரியமாகச் சொன்னான் குன்.

அந்த அதிகாரி அந்த சிறுவனின் விசுவாசத்தைக் கண்டு மலைத்துப் போய் விக்கித்து நின்றான்.. கடைசியாக இபாராகி கேட்டான்," சார், என் சிலுவை எங்கே இருக்கிறது சொல்லுங்கள்..?"

அங்கே நடப்பட்டிருந்த 26 சிலுவைகளிலேயே மிகச்சிறியதைக் காட்டினான் அந்த அதிகாரி. சிலுவையை நோக்கி ஓடிச்சென்ற சிறுவன் குன், அதற்கு முன் முழங்கால்படியிட்டு அதை அப்படியே மார்போடு அணைத்துக் கொண்டான். இராணுவ வீரர்கள் அவனது கைகளையும் கால்களையும் ஆணிகளால் அறைந்த போது, வலியினால் அவன் துடிக்கவில்லை. தேவன் அவனுக்கென்று வகுத்திருந்த பாதையை தைரியத்தோடு ஏற்றுக் கொண்டான் அவன். 26 கிறிஸ்தவர்களும் சிலுவையில் அறையப்பட்ட அந்த நவம்பர் 23, 1596 தான் ஜப்பானில் கிறிஸ்தவர்களின் கொடும் உபத்திரவத்தின் துவக்கம். அடுத்து வந்த 70 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 10 இலட்சம் ஜப்பானியக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்துக்காகக் கொல்லப்பட்டனர்.

12 வயதிலேயே மிகவும் முதிர்ச்சியான இபாராகி குன்னின் மாதிரியைப் பின்பற்றி அதன் பின் அநேகர் தங்கள் தங்கள் பாடுகளின் சிலுவையை அணைத்து முத்தமிடத் தொடங்கினர்.

[இப்படிப்பட்ட காட்சிகளும் கூட இங்கே அரங்கேறக் காத்திருக்கின்றன..]

“கர்த்தருடைய வீட்டின்மேல்
சத்துரு கழுகைப்போல்
பறந்துவருகிறான்..”
(ஓசியா 8:1)

குருதிப் பிரளயம்

CHAPTER-15

சபைக்கு ஒரு எமர்ஜென்ஸி

வாளால் தலை
வெட்டப்பட்ட பவுல்

CHAPTER-15

சபைக்கு ஒரு எமர்ஜென்ஸி

சபைக்கு வருகிறது ஒரு எமர்ஜென்ஸி !

உலகம் எங்குமுள்ள நமது சபைகளிலெல்லாம் ஒரு மாதம் முழுவதும் பிரசங்கங்கள் நிறுத்தப்பட்டு, தேச எழுப்புதலுக்காக அங்கலாய்க்க உத்தரவு பிறப்பிக்கும் ஒரு புரோட்டஸ்ட்டாண்டு போப்பாண்டவர் நமக்கு இல்லையே !" என்று, எழுப்புதலுக்கான ஒரு எமர்ஜென்ஸி வராதோ என்று அங்கலாய்த்தார் லியோனார்ட் ரேவன்ஹில்... !

அவர் ஏங்கிய எழுப்புதல் வந்தே தீரும் !

ஆனால் அந்த எழுப்புதலுக்கு முன்னால், வரும் ஒரு உபத்திரவக்காலக் கட்டத்துக்கு முன்னாகவே, சபை தன்னைத்தானே ஒரு ஆவிக்குரிய எமர்ஜென்ஸிக்கு உட்படுத்திக் கொண்டு மிகத்தீவிரமாய் அந்த நாட்களுக்கு ஆயத்தப்படும் நாட்கள் இவை !

அந்நாட்களில் அநேக அகோர, அதிபயங்கர, அக்கிரமங்கள் இங்கே அரங்கேறக் காத்துக் கொண்டிருக்கின்றன !

IT'S JUST BOILING AND WAITING TO ERUPT... !

இது சபைகளையும் விசுவாசிகளையும் பயமுறுத்த அல்ல..

1975-77 வருடங்களின் 19 மாதக்கால எமர்ஜென்ஸி காலத்தையே மிரளவைக்கும் மீண்டும் ஒரு மிருகத்தனமான மிஸா இங்கே பிரகடனப் படுத்தப்படுமுன்...இன்னொரு எமர்ஜென்ஸி எழுதப்படுமுன்...

சபை, தனக்குத் தானே ஒரு எமர்ஜென்ஸியைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, தனது வழக்கமான சகலத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, இரவும் பகலும் தேவனுக்கு முன்பாக விழுந்து கிடக்கவும்,

தேசத்தில் அப்படிப்பட்ட நாட்கள் வருமுன்னே...அந்த நாட்களுக்கு சபை தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவும், அந்த நாட்களில் சபை தன் செயல் முறைகளை எப்படி மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும், இப்போதே தன் விசுவாசிகளை எப்படி அந்தக் காலத்துக்கென்று பயிற்றுவிக்க வேண்டும் என்பதே இந்தச் செய்தியின் நோக்கம் !

(நமது "மீண்டும் ஒரு மிஸா" புத்தகத்தில் மிஸா கால நடப்புகள் விபரமாக எழுதப்பட்டுள்ளன.)

மட்டுமல்ல..சபை தன்னை, வரப் போகும் புதிய காலகட்டத்துக்கும் சூழ்நிலைக்கும் எப்படி எப்படி பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும், அப்படிப்பட்ட எதிர்மறையான சூழல்களை, சவால்களை எப்படி சந்திக்க வேண்டுமென்றும், தன்னை அது எப்படி அவசர அவசரமாய் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும் என்பதையும் எழுதித் துரிதப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம் !

அந்தக் கால மிஸாவின் இம்சைகளும் சித்ரவதைகளும் வரப்போகும் காலத்துக்கு முன்னோட்டமான ட்ரெயிலரே ! இனி சம்பவிக்கப் போகிறவைகளே முழு நீளப் படமாயிருக்கும் !

முந்தின மிஸாவையும் எமர்ஜென்ஸி நாட்களையும் அறியாத நமது சபைகளின் இந்தத் தலைமுறைக்கு அதைத் தெரியப்படுத்தவும், அதைவிட அதிபயங்கரமான ஒன்று வரக் காத்து நிற்கிறது என்னும் எச்சரிக்கை எழுத்துக்களைத் தாங்கிய எழுது பலகையாகவே நிற்கிறது இந்தச் செய்தி !

Practical Tips For The Emergency Of The Church Today

- இப்படிப்பட்ட உபத்திரவக் காலம் ஒன்றும் குருதிப் பிரளயம் ஒன்றும் இங்கு வந்தே தீரப்போகிறது என்று நீங்கள் முதலில் உங்களில் ஏற்றுக் கொண்டு, உங்கள் சபைகளை எச்சரியுங்கள் !

- திட்டவட்டமான நாட்டு நடப்புகளையும் சபையின் நிலைமையையும் குறித்த வாட்ஸப் செய்திகளை ஜெபத்துக்காகக் கிறிஸ்தவ ஆவிக்குரிய குழுக்களுக்கு ஃபார்வேர்டு செய்து எச்சரியுங்கள் !

- பல வருட விசுவாசிகளும் கூட அறிந்திராத அப்போஸ்தல இரத்தசாட்சி வரலாறுகளையும் செய்திகளையும் சபையில் பகிர்ந்து கொண்டு விசுவாசிகளை ஸ்திரப்படுத்துங்கள் !

- ஹெரலன் பாப்போவ், ரிச்சர்ட் உம்பிராண்ட் போன்ற தேவ மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்களைப் படியுங்கள்..மற்றவர்களையும் படிக்கச் செய்யுங்கள் !

- ஜெபிக்கும் ஆவிக்குரிய எமர்ஜென்ஸி குழுக்களை உருவாக்கி இப்போதிருந்தே வரப்போகும் நாட்களுக்காக ஜெபிக்க ஆரம்பித்து விடுங்கள் !

- ஆங்காங்கே அவசரக்கட்ட ஜெபக்குழுக்கள், இரவு விழிப்புகள், பகல் இரவு சந்தியா ஜெபங்கள், வரப்போகும் நாட்களை முன்குறித்தே ஆரம்பிக்கப்படட்டும் !

- பைபிள்களும் புதிய ஏற்பாடுகளும், கைப்பிரதிகளும் பெட்டி பெட்டியாய், கட்டுக்கட்டாய் தெருக்களில் எறியப்பட்டு, கூட்டி எரிக்கப்படும் நாட்கள் வரப்போகிறபடியால், முதலாவது, வசனங்களைப் படித்துப் படித்து எவ்வளவு வசனங்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ள முடியுமோ மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளுங்கள் !

ஒரு நாளுக்கு 20 அதிகாரங்கள் படித்தால் இரண்டு மாதங்களில் முழு பைபிளையும் படித்து முடித்து விடலாம்..இந்த வேகத்தில் போனால், நீங்கள் பல முறை வேதத்தைத் துரிதமாகப் படித்து முடித்துவிட வாய்ப்பு உண்டு !

- அந்த நாட்களில் உங்கள் மொபைலோ, லேப்டாப்போ கம்ப்யூட்டரோ ஒன்றும் உங்கள் கையில் இருக்கப்போவதில்லை. சகலமும் பிடுங்கப்பட்டுப் போகும் ! ஆகவே எறும்பினிடத்தில் போய் வேகவேகமாய் ட்ரெயினிங் எடுத்துக் கொண்டு, வார்த்தையாம் தானியத்தைச் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

- கூடுமானவரை சபையின் நெருக்கடி கால வரலாறுகளையும், இப்படிப்பட்ட காலங்களை அப்போஸ்தலர்கள் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதையும், நமது ஆண்டவராகிய இயேசு இப்படிப்பட்ட நாட்களைக் குறித்து என்னென்ன முன்னெச்சரித்தார் என்பதையும் மீண்டும் மீண்டும் படித்துத் தெரிந்து கொண்டு விபரங்களை சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

- கூடுமானவரை முழு வேதாகமங்களையும், கிதியோன் புதிய ஏற்பாடுகளையும், கைப்பிரதிகள், புத்தகங்கள் யாவற்றையும் உங்கள் சபையில் அல்லாது, உங்கள் விசுவாசிகளின் வீடுகளிலும், மறைவிடங்களிலும், பாதுகாப்பாய் இருக்கக்கூடிய அனைத்து இடங்களிலும் மறைவாய் வைத்து விடுங்கள் ! இப்போதே இந்த வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுங்கள் ! நெருக்கடி காலத்தில் இது மிகவும் உதவியாய் இருக்கும் !

அடுத்த நாள் கல்மழை பெய்யப் போகிறது என்று அறிந்தவுடனே, அதினால் எச்சரிப்படைந்த கர்த்தருக்குப் பயந்த எகிப்தியர்களும் பார்வோனின் வேலைக்காரர்களும், தங்கள் ஆடுமாடுகளையும் அடிமைகளையும் வீட்டிற்குள்ளே சேர்த்துக் கொண்டு பாதுகாப்பான இடத்திற்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டார்களாம் !

- உங்கள் வீடுகளில், சபைகளில் மற்றும் பைபிள் காலேஜூகளில் உள்ள லைப்ரரியில் உள்ள அருமையான கமெண்ட்ரி பைபிள்கள், ஆவிக்குரிய ஆங்கில, தமிழ் புத்தகங்கள் மற்றும் VCD, DVDக்களை தயவுசெய்து பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக மாற்றி விடுங்கள் ! இலங்கைப் போரில் முதலாவது தாக்கப்பட்டு கொளுத்தப்பட்டு சாம்பலாய்ப் போனது, மிகப்பெரிய, உலகப்புகழ்பெற்ற யாழ்ப்பாண நூலகம் தான் என்பதை மறந்து விட வேண்டாம் !

வேதாகமங்களும் அரிய ஆவிக்குரிய நூல்களுமே அல்லவோ நமது விலைமதிப்பில்லா பொக்கிஷங்கள் !

- வீட்டுப்பத்திரங்கள், சபை கட்டிடப் பத்திரங்களை பத்திரமாய் பத்திரப்படுத்துங்கள் ! முடிந்தால் கலர் ஜெராக்ஸ் காப்பி எடுத்து முக்கியமான, நம்பகமான வெவ்வேறு நபர்களிடம் கொடுத்து வையுங்கள் ! Soft Copy எடுத்து save பண்ணி வைத்துக் கொள்வது நல்லது !

- நேபுகாத்நேச்சார் எருசேலமை முற்றுகையிட்டிருக்கும் போது, எரேமியா, ஆலயத்தின் முற்றத்திலுள்ள காவல் கிடங்கில் கட்டுண்டு கிடக்கும் போது, தான் கர்த்தருடைய வார்த்தையின்படியே தன் பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேலின் கையிலிருந்து நிலத்தை வாங்கி, சாட்சிப் பத்திரம் எழுதி, அதற்கு முத்திரை போட்டு, அதைப் பிரதி எடுத்து அநேக நாள் இருக்கும்படி அந்தப் பத்திரத்தை ஒரு மண் பாண்டத்திலே பத்திரமாய் வைத்தானாம் ! (எரே 32: 1-14)

- சபையின் ரெக்கார்டுகளை வேறு இடங்களுக்கு இடம் மாற்றி பத்திரப்படுத்தி வைத்துவிடுங்கள் ! அவசியம் இல்லாதவைகளையே கண்துடைப்புக்காகக் கைவசம் வைத்திருங்கள் !

- பெரிய சபைகள், கூடுமானவரை தங்கள் சபைகளை சிறு குழுக்களாகப் பிரித்து, வீடுகளில் கூட்டங்கள் நடத்தும்படி குழுத்தலைவர்களை நியமித்து, அவர்களைப் பயிற்றுவித்து தைரியமாய் விசுவாசிகள் பொறுப்பில் கொடுத்து விடுங்கள் !

வரப்போகும் நாட்களில் மெகா சர்ச் செட்டப்பெல்லாம் காணாமல் போய்விடும் ! ஹவுஸ் சர்ச் தான் நிற்கும் ! பெருகும் ! புதிய ஏற்பாடும் கிறிஸ்தவ சரித்திரமும் சொல்லித் தருவது இதுவே ! இன்றும் கம்யூனிசச் சீனாவில் புற்றீசலாய்ப் பெருகி வருவது இப்படிப்பட்ட வீட்டு சபைகளே !

- நேரம் கிடைக்கும் போதல்ல..கட்டாயமாய் நேரத்தை ஒதுக்கி ஜெபித்து ஜெபித்து கிருபையையும் பெலனையும் அபிஷேகத்தையும் அதிகமதிகமாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

• ஜெபித்து ஜெபித்து தைரியத்தையும் விசுவாசத்தையும் உள்ளான நெஞ்சுரத்தையும் பெருக்கிக் கொள்ளுங்கள் !

• ஜெபித்து ஜெபித்து காலத்துக்குத் தேவையான ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் !

• ஜெபிக்க வாஞ்சித்தும், ஜெபிக்கவே முடியாத நாட்கள் வருகிறது ! இப்போதிருக்கும் சாதா பெலனும் தைரியமும் விசுவாசமும் அந்த நாட்களில் பஞ்சாய்ப் பறந்து போகும் !

• ஆகவே "இப்போதே" - இந்தக் கோடைக் காலத்திலேயே எறும்பைப் போல ஆவிக்குரிய சகலவற்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

"ஆலயத்துக்கு வேண்டியவைகளை "இப்போதே சேகரம் பண்ண வேண்டும்" என்று சொல்லி தன் மரணத்துக்கு முன்னே திரளாய் சவதரித்து வைத்தான் தாவீது " என்ற வார்த்தை உங்களையும் என்னையும் முகத்தில் அறையட்டும் ! (2 நாளா 22:5)

• "இப்போதே" ஜெபத்தைத் திரளாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்!

• "இப்போதே" வேத வசனங்களைத் திரளாய் மனதில் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள் !

• "இப்போதே" விசுவாசத்தைத் திரளாய் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்!

• "இப்போதே" உள்ளான பெலனைத் திரளாய்ப் பெருக்கி வைத்துக் கொள்ளுங்கள் !

• "இப்போதே" அபிஷேகத்தையும் தைரியத்தையும் திரளாய்ப் பெருக்கி வைத்துக் கொள்ளுங்கள் !

• ஆசா தனக்குக் கிடைத்த இளைப்பாறுதலின் வருடங்களிலேயே தன்னையும் தன் பட்டணங்களையும் தன் சேனையையும் திடப்படுத்தி பெலப்படுத்தி வைத்துக் கொண்டானாம் ! அவன் தன்னை பெலப்படுத்திக் கொண்ட நாட்கள் முடிந்த உடனேயே வந்தான் எகிப்திய மன்னன் சேரா..பத்து இலட்சம் பேர் கொண்ட தன் படையுடன்!

• கூடுமானவரை உபவாசத்தில் இறங்கி தானியேலைப் போல பருப்புக்கும் காய்கறிக்கும் மாறிவிடுங்கள் ! பிறந்தது முதல் நம் வயிற்றுக்குள் டன் டன்னாய் இறங்கிய நாட்டுக்கோழிக்கும், ஆட்டு

மாட்டுக்கறிக்கும், போர்க் என்ற வெள்ளைப் பன்றிக்கும், வஞ்சரத்துக்கும், எறா, நண்டுக்கும், கணவா மீனுக்கும் கருவாட்டுக்கும் ஒரு கணக்கு தான் உண்டோ ? இப்பவாவது நிலைமை அறிஞ்சு மரக்கறிக்கு மாறிவிடுவோம் !

"அந்த நாட்கள் நிறைவேறுமட்டும் துக்கித்துக் கொண்டிருந்த தானியேல் ருசிகரமான அப்பத்தை சாப்பிடவும் இல்லையாம்...இறைச்சியும் திராட்சரசமும் அவனது வாய்க்குள் போகவும் இல்லையாம்" ! (தானி 10:2, 3)

ஜெயில்ல அவன் நம்ம கழுத்தில கத்தி வைக்கிறதுக்கு முன்னால, "நீ போஜனப் பிரியனாய் இருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை !" என்று நீதிமொழிகள் சொல்லித் தருவது போல நமக்கு நாமே இந்த சாப்பாட்டு விஷயத்தில தொண்டைல கத்தி வைத்துக்கொள்ளுவோமே ! (நீதி 23:2) என்ன கெட்டுப் போச்சி ?

- ஒருவேளை இதெல்லாம் பைத்தியமாய்த் தோன்றலாம்...அநேகர் நினைக்கிறபடி, அப்படியே இப்படிப்பட்ட நாட்கள் ஒன்று வராமலே போனால் கூட, இப்போதே உபவாசத்தையும் ஜெபத்தையும் ஆவிக்குரிய பெலன்களையும் அதிகரித்துக் கொள்ளுகிறதினால் நமக்கு லாபமன்றி, நஷ்டம் எதுவுமில்லையே !

- நம்மில் வயதானவர்களும் பெண்களும் குழந்தைகளும் இப்படிப்பட்ட காலங்களை சந்திக்கவோ, சகிக்கவோ கூடாதவர்களானதால், அவர்கள் பாதுகாப்பாய் இருக்கக்கூடிய அதற்கான இடத்தையும், அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கக் கூடிய நபர்களையும் இப்போதே யோசித்து தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள் ! அவசரத்துக்குக் கைகொடுப்பார்கள் ! தாவீதை அவனது ஆபத்து நாட்களில் பராமரிக்க ஒரு பர்சிலாவை ஆயத்தப்படுத்தி வைத்திருந்த தேவன், யாரோ ஒருவரை உங்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருப்பார் !

- முக்கியமான நபர்களின் மொபைல் நம்பர்களை மனப்பாடம் செய்து வைத்துக் கொள்ளுங்கள் ! உங்கள் வீட்டு சிறு பிள்ளைகளுக்குக்கூட வரப்போகும் இந்த நாட்களைக் குறித்து கொஞ்சமாவது சொல்லிக் கொடுத்து அவர்களை இப்போதே மனதளவில் ஆயத்தப்படுத்தி விடுங்கள் !

- இருக்கிற மூட்டை முடிச்சுக்களையும் பணமுடிப்புக்களையும் எல்லாத்தையும் கட்டிக்கொண்டு சபையையும் விசுவாசிகளையும் அம்போன்னு விட்டுட்டு பாஸ்டர்கள் புள்ளகுட்டிகளோட வெளிநாட்டுக்கு எஸ்கேப் ஆமிராதீங்க !

"சிங்கத்துக்குத் தப்பினவனுக்கு கரடி எதிர்ப்பட்டது போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின் மேல் தன் கையை வைத்த போது பாம்பு அவனைக் கடித்தது போலவும்" நீங்க ஓடிப்போற இடத்திலேயும் ஏதாவது ஆகிப்போகும் ஜாக்கிரதை ! ஆமா ! (ஆமோஸ் 5:19)

" மேய்ப்பனாய் இராதவனும், ஆடுகள் தனக்கு சொந்தமல்லாதவனுமான கூலியாள், ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்..அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளை சிதறடிக்கும்.. கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப்போகிறான்..ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்.." என்று நம் ஆண்டவர் இப்படிப்பட்வர்களைக் குறித்தே சொன்னார்..(யோ 10:12, 13)

- இந்த நாட்களில் தயவுசெய்து யாரும் பெர்சனல் லோனோ, கிரெடிட் கார்டு லோனோ, அல்லது வாகனங்கள் வாங்குவதோ சபை கட்டிடங்கள் கட்டுவதோ வேண்டவே வேண்டாம். சபையையோ விசுவாசிகளையோ காணிக்கையையோ தசமபாகத்தையோ நம்பி கடன்பட்டுவிடாதீர்கள் !

- சபையின் மேல் வரப்போகும் எமர்ஜென்ஸி காலங்களில் எப்படி ஊழியம் செய்ய வேண்டும் என்று உங்களையே மனதளவில் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் ! அதற்கான பயிற்சி வகுப்புக்கள் எங்கேயாவாவது நடைபெறுகிறதென்றால், தயவுசெய்து அதில் இணைந்து உங்களையும் உங்கள் விசுவாசிகளையும் பயிற்றுவித்துக் கொள்ளுங்கள் !

இப்போது வெளிப்படையாக செய்து வரும் கைப்பிரதி ஊழியங்களையும் புதிய ஏற்பாட்டு விநியோகங்களையும் தயவுசெய்து நிறுத்தி விடுங்கள் அல்லது ஞானமாய்க் குறைத்துக் கொள்ளுங்கள். இப்படிச் சொல்லுவதால் நாம் அவர்களுக்கு பயந்துவிடுகிறோம் என்று அர்த்தமல்ல..அல்லது சமரசம் செய்து கொள்வதுமல்ல.."காலத்துக்கு முன்னால ஏன் சாக வேண்டும் ?" எல்லாவற்றுக்கும் ஒரு காலமுண்டு என்று வேதம் சொல்லவில்லையோ ?

நீங்களும் நானும் வெளியரங்கமாய் ஊழியம் செய்த நாட்கள் ஒன்று இருந்ததானால், இப்போது இருக்கும் நாட்கள் மறைந்து செய்பவை என்பதை மறக்க வேண்டாம் ! ஊழியம் செய்கிறவன் எங்கேயும் செய்து கொண்டே தான் இருப்பான் ! கால்களைத் தொழுவத்திலே மாட்டினாலும் அவன் அங்கே பாட்டாவது பாடிக்கொண்டிருப்பான் ! சிறையிலும் பூமியதிர்ச்சி வரும் ! சிறைச்சாலைத் தலைவனே குடும்பமாய் இரட்சிக்கப்படுவான் கவலையே படாதீங்க !

அதனால் ஞானமாய் நடந்து கொள்ளுங்கள் ! நீங்களும் அடிவாங்கி மற்றவர்களையும் ஏன் அடிவாங்க வைக்கணும் ??

- கம்யூனிச பல்கேரியாவில், தான் அடைக்கப்பட்டிருந்த ஜெயில் அறைகளில் மூட்டைப்பூச்சிகள் நசுக்கப்பட்டு முழுவதும் இரத்தக்கறை படிந்திருந்த சுவர்களில் எல்லாம் தைரியமூட்டும் வேத வசனங்களை எழுதிவைக்கும் பழக்கத்தை வைத்திருந்தார் ஹெரலன் பாப்போவ்!

தனக்குப் பிறகு அந்த செல்களில் அடைக்கப்படும் நபர்களுக்கு அது ஆறுதல் தரட்டுமே என்ற நோக்கத்துடன் ! அப்படியே அவைகள் அநேகரைத் தேற்றியதும் உண்டாம் !

வேறு செல்களில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளுக்குக் கம்பியில்லாத் தந்தி என்று அவரே பெயர் வைத்துக் கொண்ட (Morse Code), தகர டப்பாவை வைத்துத் தட்டித் தட்டி ஒலி எழுப்பி - ஒவ்வொரு தட்டுதலுக்கும் ஒரு alphabet வைத்து, அதின் மூலமாகவே சுவிசேஷம் சொல்லி, அநேகரை ஆண்டவரிடம் வழிநடத்தியதுமல்லாமல், ஒரு கட்டத்தில் சிறையின் சட்டதிட்டங்கள் சற்று தளர்த்தப்பட்ட போது, இங்கிலீஷ் க்ளாஸ் என்ற போர்வையில் பைபிள் க்ளாஸே நடத்தி, அந்த நிலையிலும் அநேகக் கைதிகளைத் திடப்படுத்தி வந்தார் அவர் !

- வெளியேயும் உள்ளேயும் காலத்துக்கும் சமயத்துக்கும் ஏற்ப சுவிசேஷம் அறிவிக்கும் புதுப்புது டெக்னிக்குகளைக் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள் !

அந்த நாட்களில் கைகொடுக்கப் போவது பெர்சனல் இவாஞ்சலிஸம் என்ற தனி ஆள் ஊழியம் தான் ! எருசலேம் சபை சிதறடிக்கப்பட்ட போது சமாரியாவுக்கு ஓடிச்சென்ற பிலிப்பு எகிப்தின் மந்திரியை இயேசுவிடம் நடத்தி அப்போதே ஞானஸ்நானம் வரை எடுத்துச் சென்றதும், பவுல் கூடாரத்தொழில் செய்யும் போது அங்கே சந்தித்த ஆக்கில்லா பிரசில்லாவை வழிநடத்தியதும், சிறையில் அடைக்கப்பட்டாலும் அங்கே அந்த இராத்திரியிலே சிறைச்சாலைத் தலைவனையும் குடும்பத்தையும் ஆண்டவருக்குள் நடத்தி, அந்த ராத்திரியிலேயே ஞானஸ்நானமும் கொடுத்த இப்பேர்ப்பட்ட ஊழியங்களுக்கு மூலகாரணமானதும் இந்த பெர்ஸனல் இவாஞ்சலிஸம் என்ற தனி ஆள் ஊழியம் தானே !

இயேசுவை சிலுவையில் போடுங்கள் ! அங்கேயும் அவர் ஒருவனைப் பரதீசுக்கு ஆயத்தப்படுத்தி விடுவார் என்றார் அருமை அண்ணன் R.Stanley அவர்கள் ! உண்மையிலும் உண்மை ! அது தான் பெர்சனல் இவாஞ்சலிஸம். இனிவரும் நாட்களில் பெருமளவு ஆத்துமாக்களை அள்ளித் தரப்போவதும் இந்த ஊழியமே ! பேரின்பப் பெருவிழாக்களின் நாட்களும் எழுப்புதல் திருவிழாக்களின் நாட்களின் சகாப்தமும் முடிந்து போனது !

- சபை தனக்குத் தானே இப்படி ஒரு அவசர கால எமர்ஜென்ஸியைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, இதைப் பற்றிய செய்திகளையே

பிரசங்கிப்பதும், தங்களுக்குள்ளே ஆலோசிப்பதும், ஜெபிப்பதுமாய் இருக்கட்டும் !

- போர்க்காலங்களில் தேசத்தின் ஒட்டுமொத்த கவனமும், பேச்சும், பொருளாதாரமும் அதற்கென்றே திருப்பிவிடப்பட்டு, ஒவ்வொரு வீட்டிலுள்ள குடும்பத்தலைவனும் வாலிபர்களும் இராணுவத்தில் பணிபுரிய கட்டாயப்படுத்தப்படுவது போல, சபை தன்னைக் கட்டாயமாய் இக்காரியங்களில் ஈடுபடுத்திக் கொள்ளட்டும் !

- எமர்ஜென்ஸி கூட்டங்கள் வீடுகளில் கூடட்டும் ! சபையின் முழுக் கவனமும் இந்நாட்களில் வரப்போகும் இப்படிப்பட்ட காலத்தைக் குறித்தே இருப்பதாக !

- வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார் மேலும் வரும் !

- தேசத்தில் எக்காளம் ஊதுங்கள்! உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள் !

நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகா சங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.. உன் தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்..

உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும்..

- நாசத்தின் மேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது ! தேசமெல்லாம் பாழாகிறது..அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்படுகிறது !

நான் எது வரைக்கும் கொடியைக் கண்டு எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன் !

[எரேமியா 1:14 / 4: 5-7, 20, 21]

- நீ படப்போகும் பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ! இதோ நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசு உங்களில் சிலரைக் காவலில் போடுவான்..பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள் ! ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு ! அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் !

[வெளி 2:10]

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:



இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?

இக்காலத்துக்கு
உதவும்படி...
(5 in 1 Pack)

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:



என் தகப்பனே என் தகப்பனே !
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே !



என் மகனாகிய
அப்சலோமே !
என் மகனே ! என் மகனே !

விக்கினத்தின்
மேல் விக்கினம்

சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...



நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக !

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- எழுப்புதல் ஏவுகணைகள் Vol.1-5
- தீக்கொளுத்துவேன் ! தீக்கொளுத்துவேன் !
- யோவேல் மறவேல் !
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா !
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது ?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !
- Dr. Paul Enenche Quotes
- ரேவன்ஹில் பேஜஸ் Vol- 1 & 2

மொழிபெயர்ப்புகள்:

ஒரு கைதியின் டைரி
[ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith]

கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[Martyrs of Catacombs]

நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[Thou art My battle Axe -
Dr. Paul Enenche]

கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:



ரேவன்ஹில் தீக்கணைகள்
[Powerful Quotes of
Rev. Leonard Ravenhill]



என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்]



உடைத்தெறி
[Breakthrough -
Rudy Lack]

எழுப்புதல்
எழுத்துக்கள்
[Assorted Revival Notes]

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:

இதயத்துடிப்பு
HEART BREATHING



என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்? Part - 2
[Rev. லியோனார்ட் ரேவன்ஹில்]



ரேவன்ஹில்
பேஜஸ்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மொழிபெயர்ப்புகள்:

எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 1

எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 2

எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 3

எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 4

எழுப்புதல் ஏவுகணைகள்
Vol - 5

புத்தகங்கள் கிடைக்குமிடம் :

MRS. JENIFER ROMILTON
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

மிஷன் 2024



குருதிப் பிரளயம்

அடைபட்ட அக்கினி
Pr. S.Romilton
Delhi
98106 46981

PR. ROMILTON

குருதிப்பிரளயம்

இந்திய எழுப்புதலின் பெருமழைக்கு முன்னே குருதிப் பெருமழையின் இரைச்சலொன்று இங்கே தேசத்திலே கேட்கப்படுகிறது. அதின் கையளவு மேகங்கள் மாநிலங்கள் எங்கிலும் ஆங்காங்கே காணப்படத் தொடங்கிவிட்டன... குருதிப்பெருமழையொன்று சொரிந்து, இரத்த வெள்ளம் வந்து, கலவரக்காற்று கர்த்தருடைய வீடாகிய சபையின் மேல் மோதியடிக்கப்போகும் நாட்கள் இதோ!

கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் அஸ்திபாரம் போடப்பட்ட சபைகள் மாத்திரமே இக்குருதிப் பிரளயத்துக்குத் தாக்குப்பிடித்துத் திடமாய் நிற்கும். ஆவிக்குரிய, புத்தியுள்ள, பக்தியுள்ள சிற்பாசாரிகளினாலே அஸ்திபாரம் போடப்பட்டு, ஆவியினாலும் வசனத்தாலும் கட்டப்பட்ட வேலைப்பாடுகளும் அக்கினியினாலே வெளிப்படப்போகும் நாட்கள் இதோ வருகிறது ! அது தூரத்திலில்லை...

உலக நன்மைகள், மேன்மைகள், ஆட்டபாட்டக் கொண்டாட்ட ஆராதனைகள் மற்றும் ஆசீர்வாதச் செழுமை கொழுமை வளமை இளமை என்னும் மணலின் மேல் கட்டப்பட்ட சபையாகிய வீடுகளும் ஊழியங்களும் வெந்து பொசுங்கப் போகும் நாட்கள் அவை ! அக்கினியில் அகப்பட்டுத் தப்பப்போவது எத்தனையோ அறியோம் ! உலக வரலாறு, சபை சரித்திரம், வேதவாக்கியங்கள், நாட்டின் சமகால நிகழ்வுகள் மற்றும் "சீக்கிரம் சம்பவிக்கப்போகும் இவைகளைக்" குறித்த எச்சரிப்பின் செய்திகள் அடங்கிய ஒரு புத்தகம்...

"ஜலப்பிரளயமல்ல... வரப்போவது ஒரு குருதிப் பிரளயம் !"

THE CONTENT OF THIS BOOK IS 100% TRUE ! -- BRO. D. AUGUSTINE JEBAKUMAR

"தேசத்தில் இப்படிப்பட்ட நாட்கள் வருகிறதென்று நான் என் ஆவியில் உணருகிறேன்..."

Pastor. L. Joseph (முழங்கால் யுத்தம்)

"குருதிப் பிரளயம்" என்கிற இந்த அருமையான புத்தகத்தை, விலையேறப்பெற்ற, ஒரு துலக்கமான அக்கினியாஸ்திரமாய் இந்த தேவ மனிதர் வெளியிட்டு எய்கிறார் என்றே நான் காண்கிறேன்..."

Pr. Karthi Gamaliel, Mount Church